


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடி

## கலாசார மலர் - 5

ஒற்றுமையே அபிவிருத்தி

DIVISIONAL SECRETARIAT, JAFFNA

பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

109570L

## பிரதேச செயலகம்
## யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடி

## கலாசார மலர் - 05

யாழ் நகர் - 400
சிறப்பு மலர் - 2021

**யாழ்ப்பாணப் பிரதேசக் கலாசாரப் பேரவை**
**பிரதேச செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | யாழ்பாடி, கலாசார மலர் – 05 |
| பதிப்புரிமை | : | யாழ்ப்பாணப் பிரதேசக் கலாசாரப் பேரவை,<br>பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : | யாழ்ப்பாணப் பிரதேசக் கலாசாரப் பேரவை,<br>பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். |
| பதிப்பு | : | 2021 |
| பக்கங்கள் | : | xxii + 155 |
| பக்க அளவு | : | B5 |
| பிரதிகள் | : | 150 |
| நிதி அனுசரணை | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம்<br>வடமாகாணம். |
| அச்சுப் பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ்<br>39/2, ஆடியபாதம் வீதி,<br>திருநெல்வேலி.<br>தொ.பே : 021 222 8266 / 021 221 4777 |
| ISBN | : | 978-624-6074-00-5 |


இந்நூலில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு ஆக்க இலக்கிய

கர்த்தாக்களே பொறுப்பாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து



நீராருங் கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொலுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல்திருநாடும்
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!

பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்து துடைக்கினும் ஓர்
எல்லை அறுபரம் பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்று பல வாகிடினும்
ஆரியம் போல உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!

மனோன்மணியம் – பெ. சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ் மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த அனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பிரதேசக் கலாசாரப் பேரவை
# 2020/2021

**பதவி நிலையினர்**

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு. எஸ். சுதர்சன் |
| உபதலைவர் | :- | திரு. இரா. செல்வவடிவேல் |
| செயலாளர் | :- | திரு.இ.ஜோன்சன் |
| பொருளாளர் | :- | திரு. பி. யூல்ஸ்கொலின் |

செயற்குழு உறுப்பினர்கள் :-

| | |
|---|---|
| திரு. நீ. ம. பாலச்சந்திரன் | திரு. கி. ம. நெல்சன் |
| திரு. ம. அன்ரன் யோசப் | திரு. கு. இராயப்பு |
| திரு. நா. தனேந்திரன் | திரு. க. திருவம்பலம் |
| திருமதி. ந. சேர்ச்சிலம்மா | திரு. தோ. அருள்ராசா |
| திரு. மீரா லெப்பை லாபீர் | திரு. அ. பிராங்கிளின் |
| திரு. கு. ஐயாத்துரை | திரு. க. விஜயரட்ணம் |
| திரு. அ. ரஜீவ் | திரு. கா. சுரேன் |
| செல்வி. நா. பவித்திராயனி | திரு. பெ.ஶ்ரீகந்தநேசன் |
| திரு. பா. வின்சென்ற் | திரு. அ. அல்போன்ஸ் |
| திரு. கொ. கரன்சன் | திரு. இ. விஜேந்திரன் |
| திருமதி. அப்துல் அஸீஸ் நசீரா | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பிரதேச செயலகக்கீதம்

**பல்லவி**

யாழோடுபிறந்ததெங்கள் நகரம் - யாழ்ப்பாணம்
ஈழ நாட்டினது சிகரம் - தமிழர் (யாழோடு)

**அனுபல்லவி**

கடலலைகள் தாலாட்டுக் கேட்டு
கண்ணயரநாயனமும் பாட்டும்
வடபுலத்துமக்கள் உழைப்பாளர் - எது
வந்தாலும் ஓயார், படிப்பாளர் (யாழோடு)

**சரணங்கள்**

ஒல்லாந்தர் கோட்டை ஒரு பக்கம்
உயர்ந்தமரம் ஓங்குபழம் பூங்கா
வல்லார்கள் வலைவீசுவார்கள் - கடல்
வளம் வாரிவருவார்கள், ஓயார் (யாழோடு)

கல்லூரிகள் பொலியும் நகரம் - சகல
கலைகளுக்கும் உறைவிடம், யாழ் நூலகமும்
நெல்வயல்கள், அங்காடி, கடைகள்
நெடுந்தூரப் பேருந்துவிரையும் (யாழோடு)

நான்குமதம் சமரசமாய் விளங்க
நாதசுரகானம் எங்கும் முழங்க
ஓங்குநகர் யாழ்ப்பாணம் என்போம் - இதை
உயர்த்துவதுநம் கடமை என்போம் (யாழோடு)

**ஆக்கம்**

**கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப)**

பாடல், இசையமைப்பு
திரு. தவநாதன் றொபேட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பிரதேசக் கலாசாரப் பேரவைக் கீதம்

வாழிய வாழியவே - எங்கள் யாழ் பிரதேச
கலை கலாசார ரோவை வாழியவே - 02

கடல்படு திரவியம் தரை தரு பயிர் வளம்
ஆயிரம் ஆயிரமே - உடன்
அறிவியலொடு பல கலை வளம் இங்கே
வளர்வதும் ஆனந்தமே

பாணன் கலை பாடி பெற்ற பரிசெங்கள்
யாழ் மண் என மகிழ்ந்ததே - தினம்
நாமும் கலை பாடி பாரில் நிலைபெறவே
பணி பல புரிந்திடுவோம்

வாழி

கூத்தொடு பண்ணிசை நடனமும் வளமுற
வளருது யாமுனிலே - உடன்
சேர்த்துயர் கலைஞர்கள் மனமகிழ்த்தொன்றாய்
உயர்ந்திடும் நாளிதுவே

வாழி

மண்ணின் கலையாவும் விண்ணைத் தொட நின்று
வளர்ந்திடக் கரம் தொடுத்தே - யாழ்
மண்ணின் கரை பாரில் ஓங்கி உயர்ந்திடவே
உறுதியாய் உழைத்திடுவே

வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழு

## ஆலோசனையும் வழிகாட்டலும்

### திரு. எஸ். சுதர்சன்

பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவை தலைவரும்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

## மலர் வடிவமைப்பு

### திரு. இ. ஜோன்சன்

கலாசார உத்தியோகத்தர்,
செயலாளர், கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

1. திரு. நீ. ம. பாலச்சந்திரன்
2. திரு. கு. இராயப்பு
3. திரு. மீரா லெப்பை லாபீர்
4. திரு. இரா செல்வவடிவேல்
5. செல்வி. ப. தர்மினி
6. திரு. பெ. ஸ்ரீகந்தநேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு. சாம்பசிவம் சுதர்சன்
பிரதேச செயலாளர் - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடியின் நுழைவாயில்....

01. அருளாசிச் செய்தி x
02. யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி xi
03. ஆசிச் செய்தி xii
04. அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி xiii
05. வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும், இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி xiv
06. மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி xv
07. பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி xvi
08. பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி xvii
09. கலாசாரப் பேரவைச் செயலாளரின் உள்ளத்திலிருந்து...... x
10. மலர்க்குழுவின் அறிக்கை xxi
11. யாழ் நகரில் தொன்மைமிகு ஊர்களிலொன்று "கரையூர்" 01
12. யாழ்ப்பாணம் 32
13. எமது யாழ்ப்பாணம் 33
14. அந்நியர் ஆட்சிக்காலத்தில் வண்ணார் பண்ணையின் தொன்மை 39
15. அர்த்தங்கள் ஆயிரம் 54
16. தமிழர் பண்பாட்டுத் தொன்மைகளின் அடையாள உருவாக்கம் 56
17. புரிதல் 66
18. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கர்னாடக இசை ஒரு நோக்கு 67
19. யாழ் பெரியகடை கெங்கா சத்திரம் இன்றில்லை... 77
20. கனகி புராணம் காட்டும் யாழ்ப்பாணத்தின் அடையாளங்கள் 80
21. வடக்கு மாகாண கூத்துக்கள் ஒரு கண்ணோட்டம் 83
22. எங்கே எம் யாழமுதம்? முறியுமா எம் கற்பகதரு? 89
23. யாழ்ப்பாண நகரச்சிறப்பு 91
24. மூலிகைகளின் மகத்துவம் 97
25. எமது யாழ்ப்பாணம் 101
26. நெஞ்சுக்குள் தேனூறும் 103
27. வாழிய யாழ்நகர் 106
28. மீன்பிடித்துறையில் யாழ்ப்பாணப் பொருளாதாரத்தின் வளர்ச்சியும் .......... 107
29. காலநிலை மாற்றம் 111
30. யாழ்நகர் - நானூறு 112
31. உதவுங்கள் என்றுங்கள் முன்னே வருபவர்க்குதவி செய்வீர் 114
32. ஐரோப்பியர் கால யாழ் நகர நிர்வாகம் போர்த்துக்கீசர் காலம் 116
33. யாழின் பெருமை 118
34. தொனிப்பொருள் யாழ்நகர் - 400 119
35. உயிரது உயர் பண்பாட்டிற்கு கலையே நிலை 121
36. யாழ்ப்பாணத்தில் ஆடற்கலை 123
37. யாழ்ப்பாணமும் நாட்டார் கலைகளும் 128
38. எமது யாழ்ப்பாணம் 134
39. யாழ் நகர் 400 நிகழ்காலத்தில் நிலைத்து நில் 136
40. யாழ் மாவட்டத்தை நோக்கி புதிய தொழில்களை கவரும் காரணிகள் 139
41. ஐரோப்பியர் கால யாழ்ப்பாணம் 142
42. யாழ்ப்பாணத் தமிழில் கலந்த வடமொழிச் சொற்கள் 143
43. யாழ்ப்பாணத்து இலக்கியபரப்பில் சமஸ்கிருத ஆக்கங்களும் ........ 150



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

குருபாதம்




# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)

ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 | ஸ்தாபிதம் : 1966 | பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

25/06/2019



## அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு!

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தால் ஆண்டுதோறும் வெளிவரும் யாழ்பாடி (கலாசார மலர்) வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. பல தகவல்களை உள்ளடக்கி யாழ்ப்பாண நாட்டின் பெருமையை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் (சமயம், கலாசாரம், பண்பாடு இசையும் கலையும்) அனைத்தையும் ஒழுங்கமைத்து யாழ்ப்பாண நாட்டின் பெருமையை அனைத்துப் பிரதேச மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் இம்மலர் பிரதேச செயலகத்தால் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக வெளிவருவது மகிழ்ச்சியடையச் செய்கின்றது. இம் மலரை வெளியிடும் அனைத்து அன்புள்ளங்களையும் பிரதேச செயலகரையும் வாழ்த்துவதோடு இம் மலர் சிறப்புற அமைய இறைவனை பிராா்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
ஆதீன குருமுதல்வர்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Rt.Revd.Dr.Justin B Gnanapragasam*
*Bishop of Jaffna*

*Bishop's House,*
*P.O.Box No. 02*
*Jaffna - Sri Lanka.*
**Tel: +94(0) 21 222 2649(0)**
**Email: gnanamjb48@gmail.com**

# யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் நகரமாகி நானூறு வருடம் பூர்த்தியானதை நினைவு கூரும் வகையில் அதன் கலாசாரத்தின் பெருமையினையும், சிறப்பினையும் வெளிக்கொணருகின்ற "யாழ்பாடி கலாசார மலர்-5" என்னும் சிறப்பு மலரினை யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவை மீண்டும் வெளியீடு செய்கின்றமையையிட்டு ஆசிகூறுவதில் மகிழ்ச்சிய டைகின்றேன்.

"வரலாறு காலத்தின் கண்ணாடி" என்று கூறுவார்கள். எனவே நானூறு வருடம் பழமை வாய்ந்த யாழ்ப்பாணத்தின் வரலாறுகளை அழிந்து போகாமல் எப்பொழுதும் எழுத்தில் பாதுகாக்க வேண்டியது எம் எல்லோரின் கடமையாகும். யாழ்ப்பாணத் தமிழர்களாகிய நாமும், நமது எதிர்கால சந்ததியினரும் எமது மண்ணின் அருமை பெருமைகளையும், எமது கலாசாரத்தின் பெறுமதிமிக்க அம்சங்களையும், கலைகளையும், இலக்கியங்களையும், வாழ்க்கை முறைகளையும் நன்கு அறிந்து, அதனைப் பேணிப் பாதுகாத்து, அதை வளர்ச்சியடையச் செய்வதும், அதனை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவதும் எமது தலையாய கடமையாகும். அத்தகைய ஒரு மகத்தான பணியை இம்மலர் வழியாக யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவை முன்னெடுப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். இத்தகைய மகத்தான பணியை முன்னெடுக்கின்ற ஒவ்வொருவரையும் மனதார வாழ்த்தி, இறை ஆசீர் கூறி நிற்கின்றேன்.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள
**பேரருட்திரு. கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
யாழ் ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

**பிஸ்மில்லா அஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ராஸூலிலாஹ்**

எல்லாப் புகழும் புகழ்ச்சியும், கண்ணியமும் எம்மைப் படைத்த இறைவனையே சாரும். யாழ்பாடி-5 மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினால் வருடாந்தம் வெளியிடும் யாழ்பாடி மலர் இவ்வருடமும் வெளியாகுவதை எண்ணி மிகவும் சந்தோசமடைகின்றோம்.

இலங்கை திருநாட்டில் கலை, கலாசாரத்தில் முன்னோடியாக விளங்கும் இடங்களில் யாழ்ப்பாண மாவட்டமும் ஒன்றாகும். இம் மாவட்டத்தின் கலை கலாசார உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் கடந்த ஆண்டு வெளியான யாழ்பாடி -04 மலர் எவ்வாறு மக்களுக்கு இம் மண்ணின் பெருமைகளை எடுத்தியம்பியதோ அதே போன்று இவ்வருடம் வெளி யிடப்படவிருக்கும் யாழ்பாடி-5 மலரும் இம்மண்ணின் சிறப்பியல்பை மேலும் மேம்படுத்தி மக்கள் மத்தியில் பெரும் மதிப்புக்குரிய மலராக ஆக வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறேன்.

-நன்றி-

**இப்படிக்கு**

**அஷ்ஷேக் ஐ. ரணூஸ் முஹம்மது பெரோஸ் (சிராஜி)**

பெரிய முகைதீன் ஜும்ஆ மஸ்ஜித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය
தொலைபேசி
Telephone } 021-222 2235

ෆැක්ස්
பக்ஸ்
Fax } 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු
பொது தொலைபேசி
General Telephone } 021-222 223:
021-222 223-

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தால் வருடந்தோறும் வெளியீடு செய்யப்படும் "யாழ்பாடி" கலாசார மலர் இதழ் 05 இவ் வருடம் வெளியிட உள்ளதனால் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். யாழ்ப்பாணம் நகரமாகி நன்னிலையில் மிளிரும் சிறப்புக்களை வெளிப்படுத்தும் முகமாக வெளிவரும் இம் மலர் இப் பிரதேசத்தின் கலை, இலக்கிய, வாழ்வியல், பாரம்பரியங்கள் என பல்வேறு சிறப்புக்களையும் உள்ளடக்கிய வரலாற்று ஆவணமாகவும் காலத்தால் அழியாத பொக்கிசமாகவும் அமைகின்றது.

ஒரு சமூகம் தன் சமூகம் சார்ந்த பிரதேச, கலை, கலாசார, பண்பாட்டு பாரம்பரிய அம்சங்களை அறிய வேண்டிய கடப்பாடும், ஆவணப்படுத்த வேண்டிய தேவையும் மறுக்கமுடியாத தனிப்பட்ட ஒரு பிரதேசத்தின் அடையாளங்களை மட்டுமன்றி சிறப்புக்களையும் அனைவரும் அறியும் வகையில் ஆவணப்படுத்துவது சமூகத்தின் இருப்புக்கான ஆணிவேராக அமையும் எனலாம். இந்த வகையில் கடல் வளமும், கதிர் வளமும் நிறைந்த பிரதேசமாக விளங்கும் யாழ்ப்பாண பிரதேச செயலகம் இப் பிரதேச மக்களின் வாழ்க்கை முறை, சமூக பண்பாட்டு அம்சங்கள், நகரின் சிறப்பு, அதன் வளர்ச்சி, கலை, பண்பாட்டு வளர்ச்சி, வரலாறு, பாரம்பரியம், தொல்லியல் அடையாளங்கள், காலனித்துவ ஆட்சிக்கால நிலைமைகள் என பல்வேறு விடயங்களை வெளிப்படுத்தும் வகையில் "யாழ்பாடி" இதழ் விரிப்பது போற்றுதற்குரியது. இவ் அரிய முயற்சியில் ஈடுபட்ட பிரதேச செயலாளர், மலர்க் குழுவினர் மற்றும் இம் மலர் சிறக்க காத்திரமான ஆக்கங்களை நல்கிய கட்டுரையாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை நல்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

பயன்தரும் வகையில் மலரும் இவ் யாழ்பாடி இதழ் 05 சிறந்த வரலாற்று ஆவணமாக மக்கள் மத்தியில் மகிழ்வுறவும், வளம்பெறவும் எதிர் காலத்தில் மென்மேலும் யாழ்பாடி ஒலியெழுப்பவும் எல்லாம் வல்ல இறைபரம் பொருளை வேண்டி என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி

**க. மகேசன்**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை. උතුරු පළාත් සභාව. Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.edumin.np.gov.lk
e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

# வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் பிரதேசசெயலகத்தால் வெளியிடப்படும் 'யாழ்பாடி - 05' பிரதேசமலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். வருடம்தோறும் வெளியிடப்படும் இம் மலரானது இம்முறை யாழ்ப்பாணம் நகரமாகி நானூறு வருடம் பூர்த்தியானதை நினைவுகூரும் வகையில் யாழ் மாவட்டத்தின் சிறப்புக்களை வெளிக்கொணரும் வகையில் அமைந்த சிறப்புமலராக வெளிவருவதனை இட்டுபெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மக்களின் வாழ்வும் வளமும் அவர்கள் சார்ந்த சூழலையே மையமாகக் கொண்டு அமைகின்றன. அப்பிரதேசத்தின் தொன்மைகள்சார் பாரம் பரியங்களும் வழிபாட்டுத் தலங்களும் பழக்கங்களும் வழக்கங்களாகி வாழ்வியல் சார் அம்சங்களாக மிளிர்கின்றன. 'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்' என்பர். சமூகத்தின் நிலைப்பாடும் வாழ்வு முறைகளும் அச் சமூகத்தின் நிலைபேறான தன்மைக்கு அடிப்படை யாகின்றது. ஒரு சமூகத்தின் நிலைப்பானது அதன் வாழ்க்கை முறைகளை அடுத்த தலை முறையினருக்கு வழங்குவதில் நிலைகொண்டுள்ளது.

எமது எதிர்காலத்தின் சொத்துக்களான பிள்ளைகளுக்கு எமது வாழ்வியல் அம்சங்களை எடுத்துக்காட்டுவதோடு எமது பாரம்பரியங்களை பேணிப்பாதுகாப்பதுடன் நிலைபேண்தகு அபிவிருத்திக்குமான சிறந்த செயற்திட்டங்களையும் சரியான முறையில் வழங்க வேண்டிய தார்மீகக் கடமை எம் ஒவ்வொருவருக்குமுரியது. ஒரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்கள் மற்றும் வரலாறு போன்றன காத்திரமானவை. பிரதேசத்திற்கான சிறப்புக்களும் அதன் விசேட அம்சங்களும் மறைந்திருக்கக்கூடும். அவற்றை வெளிப்படுத்தி அதனை பலரும் அறியச்செய்யும் முயற்சியாக இம் மலர்கள் அமையும் என நம்புகின்றேன். இன்றைய காலத்தின் தேவையாக எமது பண்பாடும் எங்களின் தொன்மங்களும் நமது தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்வதுடன் பாதுகாக்கவேண்டிய கடப்பாடும் காணப்படுகின்றது. அவற்றை இத்தகைய நூல்கள் மூலம் சாத்தியப்படுத்தி வலுவாக்குதல் முடியும் எனநம்புகின்றேன்.

இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேசசெயலாளர், கலாசார உத்தி யோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. இளங்கோவன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு. வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථනය
தொலைபேசி
Telephone
021-222 2235
ෆැක්ස්
பக்ஸ்
Fax
021-222 2355
E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු
பொது தொலைபேசி
General Telephone
021-222 223
021-222 223

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

# மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ் மக்களால் "மணிபுரம்" என அழைக்கப்படுகின்ற யாழ்ப்பாண நகரம் இலங்கைத் திருநாட்டின் முக்கிய நகரங்கள் வரிசையில் கலை, கலாசாரம், வரலாறு, இலக்கியம், பண்பாடு எனப் பல்வேறுபட்ட சிறப்பம்சங்களோடு முன்நிற்கின்றது. யாழ்ப்பாணம் நகரமாகி, 400 வருடம் பூர்த்தியானதை நினைவு கூரும் வகையில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தினால் வருடந்தோறும், யாழ் மாவட்டத்தின் சிறப்புக்களை வெளிக்கொணரும் வகையில் சிறப்பு மலராக வெளிவர இருக்கின்ற யாழ்பாடி-5 கலாசார மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் காணப்படும் கலாசார விழுமியங்களையும், பண்பாட்டு அம்சங்களையும், வாழ்வியல் கூறுகளையும், வரலாற்று தொன்மங்களையும், தனித்துவங்களையும் ஆவணப்படுத்தல் அவசியமானதாகும். அந்த வகையில் யாழ்ப்பாண நகரம் தனக்கே உரித்தான பண்பாட்டுப் பாரம்பரியத் தொன்மங்களை ஆவணப்படுத்தும் வகையில் யாழ்பாடி-5 கலாசார மலர் திகழ்வது பாராட்டுக்குரியதாகும்.

இந் நூலானது யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவின் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை மட்டும் கொண்டிராது, பிரதேசத்தின் அபிவிருத்தி, பொருளாதாரம், கல்வி, கலைத்துறை சார்ந்த அடைவுகளையும், தனித்துவமான ஆற்றல்களை வெளிப்படுத்துகின்ற கலைஞர்கள் சார்ந்த விடயங்களையும், முக்கிய மதவழிபாட்டுத்தலங்கள், கட்டுரைகள் என்பவற்றையும் தாங்கி வெளிவருகின்றது.

புராதன வரலாற்றுச் சிறப்புக்களுடன் கூடிய யாழ் மாவட்டத்தின் செழுமையினை அறிதற் பொருட்டு மலரும் யாழ்பாடி-5 கலாசார மலர் வெளிவருவதற்கு பக்கபலமாக இருந்து செயற்படும் பிரதேச செயலாளருக்கும், பிரதேச கலாசார பேரவை உறுப்பினர்களுக்கும் அதனோடு இணைந்து செயலாற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனம் மகிழ்கிறேன்.

நன்றி

**மருதலிங்கம் பிரதீபன்**
மேலதிக அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk
e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல. / මගේ අංකය / My No. } NP/03/09/Cul.Pro/2019    உமது இல. / ඔබේ අංකය / Your No. }    திகதி / දිනය / Date } 2019.07.10

# பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் வெளிவரும் யாழ்பாடி- 05 மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஐரோப்பியரின் குடியேற்ற ஆட்சியிலிருந்து இன்றுவரை நானூறு வருட வரலாற்றுப் பாரம்பரியத்தை கொண்ட பண்பாட்டுப் பதிவுக் களமாகவும் பூர்த்தியாவதை நினைவு கூரும் முகமாக "யாழ்பாடி - 05" சிறப்புமலர் வெளிவருவதன் மூலம் யாழ்ப்பாணத்தின் புராதன அடையாளங்களையும், மரபுரிமைகளையும், பொருளாதார முன்னெடுப்புக்களையும், வழிபாட்டு தல சிறப்புக்களையும், பண்பாட்டு விழுமியங்களையும், விவசாய வேளாண்மை மற்றும் உள்ளூர் உற்பத்தி, விளையாட்டு, கல்வி, தொழில்நுட்பம், கலை, பண்பாடு, தொழில்வளம், மீன்பிடி என அனைத்தினையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண பிரதேசத்தின் சிறப்புக்களை எடுத்துரைக்க முயல்கிறது.

யாழ்ப்பாண வரலாற்றை பிரதிநிதித்துவப்படுத்திய பல நூல்கள் இன்றளவும் வெளிவருகின்ற நிலையில் சமகால கலைபண்பாட்டுக்களத்தினை முதன்மைப்படுத்தியும் வாழ்வியல் முறைமைகளை மக்கள் மத்தியில் பேசுபொருளாக்க விளைவதன் நோக்கமாகவும் இச் சிறப்புமலர் "யாழ்பாடி - 05" அமையும் என நான் நம்புகிறேன்.

ஒரு இனத்தினுடைய மொழி, அடையாளம் என்பன அவ் இனத்தவர்களாலேயே நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதற்கு யாழ்ப்பாண சமூக, பொருளாதார அமைப்பு இன்றளவும் கட்டமைக்கப்பட்டு வலுவான போக்கை கொண்டுள்ளமை தமிழ் சமூகத்தவர் மத்தியில் வரவேற்புக்குரியதும் பெருமையுடையதுமாகும்.

எனவே பரந்த பரிமாணத்தை உள்ளடக்கிய சமுதாய பண்பாட்டுக்களம் சமகாலத்தில் தகுதியான முறையில் ஆற்றுப்படுத்தப்பட வேண்டிய தேவையினை உருவாக்குதல் நம்மவர்களின் கடமையுணர்வாகிறது. பாரம்பரியம் பழமை தொடர்புகளுடாக மரபாகி வளர்ச்சி கண்டு நவீனம் என்ற சிந்தனைக்குள் ஆட்கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்த தொடர்முறைமைகளுக்கூடாக வரலாறுகள் புனையப்படும் பொழுது ஏற்படுத்தப்படுகின்ற நம்பகத்தன்மைகள், ஆதாரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன தலைமுறைகளுக்கூடாக வலுவாக இனங்காண முற்படுகின்ற சந்தர்ப்பங்களில் இத்தகைய "யாழ்பாடி-05" போன்ற சிறப்பு மலர்கள் ஆய்வுச்செயற்பாடுகளுக்கு பேருதவியாக அமையும் என்பது திண்ணம்.

அனுபவ முதிர்ச்சியோடு பல புதிய தகவல்களை இணைத்து இம் மலர் வெளிவருவதும் வரவேற்கத்தக்கது. எனவே இதன் பயன் விளைவாகவும் எதிர்கால கலை பண்பாட்டு மரபின் பொறுப்புமிக்க செயற்பாட்டை இனங்காணும் நோக்கிலும் "யாழ்பாடி - 05" மலரின் வருகை மிக அவசியமாகும்.

இச் சிறப்பு மலரானது தகுதியான முறையில் வெளிவர உழைத்த யாழ்ப்பாண பிரதேச செயலாளர், கலாசார பேரவையினர், கலாசார உத்தியோகத்தர் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. சுஜீவா சிவதாஸ்**
உதவிப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு மாகாணம்.

செயலாளர் / ලේකම් / Secretary : 021-3202704
அலுவலகம் / කාර්යාලය / Office : 021-3202704 (Admn.), 021-3202568 (DSW), 021-3202281 (Plan), 021-3202309 (Acct)
தொலைநகலி / ෆැක්ස් / Fax : 021-2220794



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය - යාපනය

**Divisional Secretariat - Jaffna**

பிரதேச செயலாளர் / ප්‍රාදේශීය ලේකම් / Divisional Secretary — 021 222 8469 — dsjaffnadevelop@gmail.com

உதவி பிரதேச செயலாளர் / සහකාර ප්‍රාදේශීය ලේකම් / Asst. Divisional Secretary — 021 221 7386 — adsdsjaffna@gmail.com

உதவி திட்டமிடல் பணிப்பாளர் / සහකාර අධ්‍යක්ෂ සැලසුම් / Asst. Director of Planning — 021 222 7536 — adplanjaffna2016@gmail.com

கணக்காளர் / ගණකාධිකාරී / Accountant — 021 222 5425 — acctjaffna@gmail.com

நிர்வாக உத்தியோகத்தர் / පරිපාලන නිලධාරී / Administrative Officer — 021 222 2209 — dsjaffnaeb2016@gmail.com

கிராம உத்தியோகத்தர் (நிர்வாகம்) / ග්‍රාම නිලධාරී (පරිපාලන) / Grama Niladhari (Administration) — 021 221 7840

சமுர்த்தி முகாமையாளர் (தலைமைப்பீடம்) / සමෘද්ධි කළමනාකරු (මූලස්ථානය) / Samurdhi Manager (Head Quater) — 021 222 4520 — samurdhi.jaffnads@gmail.com

மேலதிக மாவட்ட பதிவாளர் / අතිරේක දිස්ත්‍රික් රෙජිස්ට්‍රාර් / Addl. District Registrar — 021 221 4103 — adrjaffna@gmail.com

பொது / පොදු / General — 021 221 7387

தொலைநகல் / ෆැක්ස් / Fax — 021 222 1035

எனது இல / මගේ අංකය / My No

உமது இல / ඔබේ අංකය / Your No

திகதி / දිනය / Date — 05.07.2019

# பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



**"பிரதேசப் பண்பாட்டைப் பதிவு செய்யும் யாழ்பாடி"**

ஒரு சமூகத்தின் அல்லது பிரதேசத்தின் பண்பாட்டு விழுமியங்களை, கலை, கலாசாரக்கூறுகளை அச்சமூகத்தின் கடந்த காலத்திலிருந்து எடுத்து நிகழ்காலத்தில் பதிவுசெய்து எதிர்காலச் சமூகவியல் ஆய்வாளர் களுக்கு அதனை ஓர் சமூக வரலாற்று ஆவணமாக இட்டுச் செல்வது ஒரு பிரதேசக் கலாசார மலரின் நோக்கம் ஆகும். அந்த வகையில் தான் எமது பிரதேசசெயலகமும் எமதுபிரதேசத்தின் சமூகப் பண்பாட்டுக் கலைக்கூறுகளைப் பதிவு செய்து யாழ்பாடி எனும் மகுடமாக வரலாற்றில் பதிவுசெய்து வருகிறது.

ஓர் இனத்தின் அடையாளங்களுள் மொழியும் பண்பாடும் தனித்துவமானவை. ஒவ்வோர் இனமும் தமக்கெனத் தனித்துவமான மொழியையும் பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டிருக்கும். ஒவ்வோர் இனத்திற்கும் இவ்விரண்டும் இரு கண்கள் போன்றன.

முன்னோர்களின் வாழ்க்கைப் பதிவேடுகளே வரலாறு. அம்மக்களைக் கருவூலமாகக் கொண்டு அவர்களது பழக்கவழக்கங்கள் பண்பாட்டுக் கோலங்கள் அவற்றால் முகிழ்ந்தெழுந்த நாகரிகங்கள் என்பவற்றை மனிதர்களுக்கு நன்மை பயக்கும் வண்ணம் எடுத்தியம்புவதே வரலாற்றின் எண்ணக்கருவாகும். அந்த வகையிலே யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையால் வெளிக்கொணரப்படும் யாழ்பாடி நூலானது யாழ்மண்ணின் பெருமைமிகுகலை, கலாசாரப் பண்பாட்டுக் கூறுகளையும் புலமைத்துவ மரபையும் யாழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் உலகிற்கே அடையாளப்படுத்தி வருகிறது.

இலங்கைத் திருநாட்டின் மணிமுடியாகத் திகழும் யாழ் மண்ணின் இத்தகைய பெருமைமிகு கலை கலாசாரக் கூறுகளையும், புலமைத்துவ மரபுகளையும் அடையாளப்படுத்தி வரும் "யாழ்பாடி - 05" கலாசாரமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

ஒரு கலையோ அல்லது இலக்கியமோ சூனியப் பிரதேசத்திலே தன்னிச்சையாகத் தோற்றம் பெறமுடியாது. அவை ஒரு சமூகச்சூழலிலேயே தோற்றம் பெறமுடியும். இவ்வாறாகத் தோற்றம் பெறுகின்ற படைப்பானது தனது சமூகத்தின் பிரதிபலிப்பாகத் தோற்றம் பெறும். சமூகத்தின் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகளையும் அப்படைப்பானது கொண்டிருக்கும். இத்தகைய படைப்புக்களை அடையாளப் படுத்துவது அச்சமூகத்தையே அடையாளப்படுத்துவதாகும். இவ்வகையில் யாழ் மண்ணின் பெருமைமிகு தனித்துவமான சமூகவியல், கலை, கலாசாரப் பண்பாட்டுக் கூறுகளையும், கலைஞர்களையும் யாழ்பாடி நூலானது வருடாவருடம் உலகிற்கு அடையாளப்படுத்தி வருகிறது.

அவ்வகையில் இம்முறை யாழ்ப்பாணம் தலைநகரமாகி 400 ஆண்டுகள் நிறைவைக் குறிக்குமுகமாக யாழ்நகர் - 400 எனும் கருப்பொருளில், மலர் பல ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது. யாழ் நகர் தலைநகரமாக 1621 இல் மாற்றம் பெற்ற பின்னர் நகரின் 400 ஆண்டு காலவரலாற்றுச் சுவடுகளையும் நீண்டகலை, கலாசார பண்பாட்டுப் பாரம்பரி யங்களையும் மீண்டும் ஒருமுறை மீட்டிப் பார்த்து ஆவணப்படுத்தும் ஒரு முயற்சியாக யாழ்பாடி கலாசாரமலர் - 5 வெளிவருகின்றது. யாழ் நகரின் பாரம்பரியத்தையும் வரலாற்றுத் தொன் மங்களையும் எழுத்துருவாகி நூல் வடிவில் அடையாளப்படுத்தும் இத்தகைய அளப்பரிய பணி யினைச் செவ்வனவே நிறைவேற்றிய யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவைக்கும், உறுப்பினர்களுக்கும், கலைஞர்களுக்கும், மலர்க்குழுவினருக்கும், கட்டுரையாளர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய அளப்பரிய பணி தொடரவேண்டும் என்பதே எனது வேணவா.

**யாழ்பாடித் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே**

**எஸ். சுதர்சன்**

பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

116, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். 116, පරණ උද්‍යාන පාර, යාපනය. 116, Old Park Road, Jaffna.
"ஊழல் இலஞ்சமற்ற வினைத்திறன்மிக்க மக்கள் சேவை" "අල්ලසින් හා දූෂණයෙන් තොර කාර්යක්ෂම මහජන සේවයක්". "Efficient public service with zero corruption and bribery"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ் - பிரதேச கலாசார பேரவை

பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

## JAFFNA DIVISIONAL CULTURAL COUNCIL

DIVISIONAL SECRETARIART, JAFFNA.

# கலாசாரப் பேரவைச் செயலாளரின் உள்ளத்திலிருந்து......



யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தினால் இவ்வருடம் வெளியிடப்படும் யாழ் பாடி - 05 மலர் யாழ்ப்பாணம் நகரமாகி நானூறு வருடங்கள் பூர்த்தியின் நினைவாக சிறப்பு மலராக வெளியிடப்படுவதனையொட்டி எனது உள்ளத்தின் பதிவுகளை உங்களுடன் பகிர்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு தொனிப்பொருளில் யாழ்ப்பாண பிரதேசத்தின் தொன்மைகளை தன்னுள்ளே கொண்டு வெளிவரும் யாழ்பாடி - 05 மலரானது அடுத்த சந்ததிக்கு எமது பண்பாட்டு பாரம்பரியங்களை எடுத்துச் செல்லும் ஓர் ஆவணப்பெட்டகமாக விளங்குகிறது.

இவ் ஆவணப்படுத்தலுக்கு எமக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய மதிப்பிற்குரிய பிரதேச செயலாளரும் கலாசாரப்பேரவையின் தலைவருமாகிய திரு.எஸ்.சுதர்சன் அவர்களுக்கும் ஆசிச்செய்திகள் வழங்கிய மதப்பெரியோர்களுக்கும், வாழ்த்துச்செய்திகள் வழங்கிய மதிப் பிற்குரிய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், கல்வி அமைச்சின் செயலாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்கள் பணிப்பாளர் அவர்களுக்கும் எமது இதயங் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மலர் வெளியீட்டுக்கு காலத்தின் தேவையறிந்து அனுசரணை வழங்கிய வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மலரினை அலங்கரிக்க ஆக்கங்கள் மற்றும் படைப்புக்கள் தந்து உரமூட்டிய கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

யாழ்நகர்- 400 ஓவியப்போட்டிக்கான படைப்புக்களை தந்து வெற்றியீட்டி மலரின் அட்டையினை அலங்கரித்த ஓவியக்கலைஞர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

இம்மலர் வெளியீட்டுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய பண்பாட்டுப்பேரவையின் நிர்வாகக்குழு மற்றும் மலர்க்குழுவினருக்கும் விளம்பரங்களைத் தந்து உதவிய அன்பர்களுக்கும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

**இ.ஜோன்சன்**

கலாசார உத்தியோகத்தர் (செயலாளர்)

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப்பேரவை,

பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்குழுவின் அறிக்கை

## யாழ்பாடி கலாசார மலர் – 5

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் கலாசாரப்பேரவையினால் “யாழ்பாடி கலாசார மலர் 5” வெளியிடப்படுகிறது. இம் முறை மலரில் இடம்பெறும் கட்டுரை, கவிதைகள், “யாழ்ப்பாணம் 400” எனும் கருப்பொருளை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் எனும் தீர்மானத்திற்கு அமைய இம் மலர் வெளியிடப்படுகிறது.

400 ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணம், கலாசார பண்பாட்டு விழுமியங்களை தன்னகத்தே கொண்டு விளங்கியது. காலமாற்றம் யாழ்ப்பாணத்தையும் விட்டு வைக்கவில்லை. மாற்றம் ஒன்று தான் நிரந்தரம் எனும் கருத்து மறுக்கமுடியாத ஒன்றாகும். நாமே நமக்கு வகுத்துக் கொண்ட வழிமுறைகள் நமது பயணத்துக்கு தடையாக அமையின் பாதைகள் புனரமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். ஆனால் விதிமுறைகள், பண்பாட்டு நெறிகளை முற்றாக மாற்றுவது என்பது எப்படிச் சரியாகும்!

இம் மலரில் இடம்பெறும் கட்டுரைகளில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் கட்டுரை யாளருக்கு உரியதாகும். சில கட்டுரைகளில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் அடுத்துவரக்கூடிய மலர்களில் விரிவாக ஆராயப்பட வேண்டியவையாகவும் உள்ளது.

யாழ்பாடி கலாசார மலரில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட விடயங்களை மட்டும் உள்ளடக்க வேண்டும் எனும் நிபந்தனையும் உண்டு. ஆனால் இம் மலரில் சில விளக்கங்களுடன் கட்டுரைகள் சில இடம்பெற்றுள்ளன. அவையும் காலத்தின் தேவையை ஒட்டியதாகும். அத்துடன் யாழ்ப்பாணம் எனும் பரப்பளவை வடமாகாணம் எனக் கருதும் போது, யாழ்ப்பாணத்தின் சுவடுகள் பலவற்றை பிற இடங்களிலும் காண முடிகிறது. இந்த வகையிலும் சில கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

“யாழ் மாவட்டத்தை நோக்கி புதிய தொழில் வாய்ப்புக்கள் எனும் கருத்துடன் இடம்பெற்றுள்ள கட்டுரை இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை உருவாக்குதல் பற்றிய சிந்தனையாகும். நமது பிரதேசத்தின் வளங்களை நமது இளைஞர்கள் அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். வெளிநாடு, அரசசேவை என அலையும் இளைஞர்கள் நமது வளத்தைப் பயன்படுத்தி புதிய சுயதொழில் முயற்சிகளை உருவாக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். யாழ்பாடி கலாசார மலர்கள் 1,2 இல் மரபுரிமைச் சின்னங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இச் சின்னங்கள் அழியும் நிலையில் உள்ளன. இவற்றைப் பாதுகாக்கத் தவறின் 400 ஆண்டுகளில் அனைத்தையும் அழித்து விட்டோம் என வரலாறு கூறும் நிலை ஏற்படும். மரபுச் சின்னங்களை பாதுகாப்பதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கை அனைத்துத் தரப்பினராலும் மேற்கொள்ள வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பாரம்பரியக் கலைகள் கடந்த 400 ஆண்டுகளில் எப்படியுள்ளது என்றால் மெழுகு உருகுவது போன்று உருகி காணாமல் போய்க் கொண்டிருக்கிறது. சில இளைஞர்கள் பாரம்பரியக் கலைகளைக் காத்து வருகிறார்கள். இவ் வகையில் நமது பிரதேசத்தின் கரையோரக் கலைஞர்கள் நாட்டுக்கூத்துக் கலையை தாங்கி நிற்கிறார்கள். அந்தக் கலைஞர்களுக்கு உரிய கௌரவம் வழங்கப்படல் வேண்டும்.

மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் பற்றிய விமர்சனங்களை வாசகர்களிடம் ஒப்படைக்கின்றோம்.

மலரில் இடம்பெற்றுள்ள கவிதை எண்ணிக்கைகளில் குறைவு. கவிதை என்பது கவி நயம்மிக்கதாகவும் நல்ல கருத்தை விதைக்கவும் வேண்டும் எனும் கவியரசர் கண்ணதாசனின் கருத்தை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறோம். எந்தக் கவிதை வடிவாக இருப்பினும் அது கவிவிதை எனும் கருத்துடையதாக அமைய வேண்டும்.

யாழ்பாடி கலாசார மலர் 5க்கு ஆதரவு தருவீர்கள் என நம்புகிறோம். இம் மலரில் இடம்பெற்றுள்ள ஆக்கங்களைத் தந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். மலர் வெளியீட்டில் பங்கு கொண்ட பிரதேச செயலக உத்தி யோகத்தர்களும் கலாசார உத்தியோகத்தரும் எமக்கு பெரும் ஒத்துழைப்பை நல்கி வரும் பிரதேச செயலாளருக்கும், மலர் சிறப்புற வெளிவருவதற்கு உதவிய குரு பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நன்றியுடன்**

மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரபேரவை 2020 - 2021




இருப்பவர்கள் இ.வ: திரு. கி. ம. நெல்சன், திரு. பா. வின்சென்ற், திரு. மீரா லெப்பை லாபீர், திரு. இரா. செல்வவடிவேல் (உபதலைவர்), திரு. எஸ். சுதர்சன் (பிரதேசசெயலாளர்/ தலைவர்),திருமதி சோ. றோய் றொபின்சன் (உதவிப் பிரதேசசெயலாளர்), திரு. கு. இராயப்பு, திரு. பி. யூல்ஸ்கொலின் (பொருளாளர்), திரு. க. திருவம்பலம், திரு.இ.ஜோன்சன் ( கலாசார உத்தியோகத்தர் / செயலாளர்)

நிற்பவர்கள் இ.வ: திரு. பெ.ஸ்ரீகந்தநேசன், திரு. அ. பிராங்கிளின், திரு. கு. ஜயாத்துரை, திரு. க. விஜயரட்ணம், திரு. அ. ரஜீவ், திரு. கா. சுரேன், செல்வி. நா. பவித்திராயனி, திருமதி. அப்துல் அஸீஸ் நசீரா, திருமதி. ந. சேர்ச்சிலம்மா, திரு. நீ. ம. பாலச்சந்திரன், திரு. ம. அன்ரன் யோசப்

வருகைதராதோர்: திரு. நா. தனேந்திரன், திரு. அ. அல்போன்ஸ், திரு. கொ. கரன்சன், திரு. இ. விஜேந்திரன், திரு. தோ. அருள்ராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்பாடி - 05 மலர்க் குழு 2020 - 2021




திரு. இ. ஜோன்சன் (கலாசார உத்தியோகத்தர்/ செயலாளர்), திரு. பா. வின்சென்ற், திரு. மீரா லெப்பை லாபீர், திரு. இரா செல்வவடிவேல், திரு. எஸ். சுதர்சன் (பிரதேச செயலாளர்/தலைவர்), திருமதி சோ. றோய் றொபின்சன் (உதவிப் பிரதேசசெயலாளர்), திரு. கு. இராயப்பு செல்வி. ப. தர்மினி, திரு. பெ. ஸ்ரீகந்தநேசன், திரு. நீ. ம. பாலச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நகரில் தொன்மைமிகு ஊர்களிலொன்று "கரையூர்"



**கலாபூஷணம் கு. இராயப்பு**
(கலையார்வன்)

**அறிமுகம்**

'யாழ் நகரம் - 400' எனும் தொனிப்பொருள் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்யத் தொடங்கிய காலத்தையே குறிக்கிறது. யாழ்நகர் அல்லது யாழ்ப்பாணம் எனச் சுட்டும் பகுதி இதற்கு முன்னராகவே தோற்றம் பெற்று மணிபல்லவம், நாகதீபம், நாகநாடு, சம்புத்தீவு, வீணாகானபுரம், உத்தரதேசம், தமிழ்ப்பட்டினம், ஈழமண்டலம், வடவிலங்கை இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் என அழைக்கப்பட்டதென பலராலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இது சார்ந்த சில தகவல்களாவன:

"யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னனாக உக்கிரசிங்கனே அறியப்படுகிறான்." [1]

"நெடுங்காலம் இழந்திருந்த உரிமையை மீட்கும் வகையில் போரிட்டு கி.பி. 785இல் 'நாகதீபத்தை' வெற்றிகொண்ட உக்கிரசிங்கன், கதிரமலை (கந்தரோடை)யினை தலை நகரமாகக்கொண்டு உத்தரதேசத்தை ஆண்டுவந்தான்". [2]

இவைதவிர, பாணன் ஒருவன் யாழ் பாடிப் பரிசுபெற்ற இடம் 'மணற்றிடர்' என்றும், அவன் தன்நாட்டு (தொண்டை நாடு) குடிகளை ஏற்றிவந்து பட்டாபிஷேகம் செய்தபோது 'யாழ்ப்பாணம்' என்னும் பெயர் வழங்கப்பட்டதாகவும் யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும் ஆரம்ப நூல்களில் காணப்படுகின்றன.

"யாழ்பாடி பரிசில் பெற்ற காலம் வையாபாடலில் கி.மு. 101 என்றும், யாழ்ப்பாணச் சரித்திரத்தில் கி.மு. 205 என்றும், யாழ்ப்பாண வைபவமாலையில் கி.பி. 800 - 815 என்றும் உள்ளன. காலமுரண்பாடாய்க் காணப்படும் யாழ்பாடியின் கதை தென் இந்தியாவிலிருந்து ஈழம் நோக்கி ஏற்பட்ட குடியேற்றங்களை எடுத்துக்காட்டும் புராணக்கதை என்றே வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்." [3]

யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னன் என்று கூறப்பட்ட கலிங்க தேசத்தவனான உக்கிரசிங்கன் மற்றும் அவன் மகன் 'ஜெயதுங்க பரராசசிங்கன்' ஆட்சியைத் தொடர்ந்து பாண்டியர் ஆட்சி, சோழர் ஆட்சி என மாற்றமடைந்து, "ஆரிய சக்கரவர்த்தி எனச் சிறப்புப் பெயரோடு விதந்தோம்பப்படும் தமிழ் மன்னர்களின் ஆட்சிக்கால ஆரம்பமாக 13ஆம் நூற்றாண்டு விளங்குகிறது. யாழ்ப்பாண இராச்சியத்தின் தொடர் வரலாற்றில் 13ஆம் நூற்றாண்டு மிக முக்கியமான காலகட்டமாகும். சுதந்திர தமிழ் இராச்சியம் நிறுவப்பட்டு நிலைகொண்ட காலமிதுவென வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுவர்." [4]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு ஆதாரமாக "விஜயகாலிங்க ஆரியச் சக்கரவர்த்தி 1242இல் சிம்மாசனம் ஏறி, 1248ஆம் ஆண்டில் யாழ்ப்பாண நகரினை உருவாக்கி அங்கு தனது இராசதானியை அமைத்துக்கொண்டான்."[5] என்ற தகவலை எடுத்துக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற அடையாளத்துடன் 'விஜயகாலிங்க ஆரியன்' முதல் 'கனகசூரிய சிங்கை ஆரியன்' வரை தொடர்ந்து பதினொரு மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர். இவர்களின் வழிவந்தவனும், யாழ்ப்பாண இராச்சியத்தின் அடையாளமாக வெளிப்படுத்தப்படுபவனுமான 'சங்கிலி செகராசசேகரன்' கி.பி. 1519ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாக முடி புனைந்துகொண்டான். இவனது மரணத்தின் பின் (1565) ஆறு மன்னர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை தொடராக ஆட்சி செய்துள்ளனர். யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னனாகவும், போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் வரை ஆட்சி செய்துகொண்டிருந்த மன்னனாகவும் 'சங்கிலி குமாரன் செகராசசேகரன்' (1616 - 1620) இருந்துள்ளான்.

இந்த வரலாற்றுத் தொடரில் 2021ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண இராச்சியம் உருவம் பெற்ற காலத்தை மூன்று கட்டங்களாக வகுக்கலாம்;

1. உக்கிரசிங்கன் மன்னனின் ஆட்சித் தொடக்கத்தில் (2021 - 785) 1,236 ஆண்டுகளாகவும்,
2. விஜயகாலிங்க ஆரியச் சக்கரவர்த்தியின் ஆட்சித் தொடக்கத்தில் (2021 - 1242) 772 ஆண்டுகளாகவும்,
3. போர்த்துக்கேயரின் ஆட்சித் தொடக்கத்தில் (2021 - 1621) 400 ஆண்டுகளாகவும் உள்ளன.

இவற்றுக்கு முந்திய காலகட்டத்தில்தான் 'கரையூர்' எனப் பெயர்கொண்ட ஊர் உருவாகியுள்ளது. இதற்கு ஆதாரமாக; ஏற்றுக்கொள்ளக்கூடிய காலத்தையும், கள நிலைமைகளையும், வரலாற்று ஆய்வாளர்களின் வெளிப்படுத்தல்களையும் கொண்டு குல. சபாநாதன் பதிப்பில் வெளிவந்த யாழ்ப்பாண வைபவமாலையில் உள்ள 'யாழ்பாடி' கதையை எடுத்துக் கொள்ளலாம்.

"செயதுங்க பரராசசிங்கன் (யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னனான உக்கிரசிங்கனின் மகன்) அரசியற்றும் நாளில் (கி.பி. 800-815) யாழ்ப்பாடி ஒருவன் பரிசு பெறவேண்டி அரச சபைக்குவந்து தனது திறமையைக் காட்டினான். அரசன் மகிழ்ந்து இப்போது 'கரையூர்', 'பாஷையூர்' என்றழைக்கப்படுவதாகிய மணல்மேட்டைப் பரிசாகக் கொடுத்தான். யாழ்பாடியும் உவகையுடன் ஏற்று தன்னூர் சென்று தன் குலத்தவருடன் வந்து திருத்திக் குடியேறினான். இவ்விடம் யாழ்ப்பாணம் என்று அழைக்கப்படுவதாயிற்று"[6]

உக்கிரசிங்கன், கதிரைமலை (கந்தரோடை)யிலிருந்த தனது தலைநகரை மாற்றி, பூநகரிப் பகுதியில் உருவாக்கப்பட்ட 'சிங்கைநகரில்' இருந்து ஆட்சி செய்த காலத்தில்தான் யாழ்பாடி கதை நிகழ்ந்துள்ளது. அக்காலம் படையெடுப்புக்களும், குடியேற்றங்களும் நிகழ்ந்த காலமாக அறியப்படுகிறது. இதற்கான எடுத்துக்காட்டாகவே யாழ்பாடி கதை அமைந்துள்ளது. இக்கதை சுட்டும் காலத்துக்கு முன்பே 'கரையூர்' என்றொரு ஊர் இருந்த காரணத்தினால்தான் 'கரையூர் என்றழைக்கப்படுவதாகிய மணல்மேட்டைப் பரிசாகக் கொடுத்தான்' என்றும், அதைத் திருத்திக் குடியேறினான் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

படையெடுப்புக்களின்போது படைவீரர்கள், மருத்துவர்கள், அரச ஊழியர்கள், ஏவலாளர்கள், கப்பலோட்டிகள், ஆயுத உற்பத்தியாளர்கள் எனப் பலரும் அவர்களது குடும்ப உறவுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறிய இடமாக 'கரையூர்' இருந்துள்ளது. இவர்களைத்தவிர, 'முத்துக் கடற்கரை' என அழைக்கப்பட்ட இந்தியா/மன்னார்க்குடா பிரதேசங்களான தூத்துக்குடி, மணப்பாடு, நரிப்பூர், ஆதியாம் பகுதிகளிலிருந்து மன்னார் ஊடாக சுயமாகப் படகுகளில் வந்தவர்களும் குடியேறியுள்ளனர். இதற்குச் சான்றாக; குருகுல மக்களுடன் குறைந்தளவிலான 'பரதவர்' குலத்தின் ஒரு பகுதியினரும், 'கமண்டலர்' குலமக்களினதும் வாழ்விடமாக கரையூர் இருப்பதைக் குறிப்பிடலாம்.

மேற்குறித்தவை தவிர, 400 ஆண்டுகளுக்கு முன்பே கரையூர் இருந்துள்ளது என்பதற்கு போர்த்துக்கேயரின் படையெடுப்புகள் சான்றாகின்றன; "இரண்டாம் முறை கி.பி. 1560ஆம் ஆண்டு கொன்ஸ் தாந்தீனு தே பிறகன்சா என்னும் தளபதியின் தலைமையில் போர்த்துக்கேயப் படை 77 கப்பல்களுடன் 'கரையூரில்' இறங்கியது." [7]

"...போர்த்துக்கேயரின் மூன்றாவது யாழ்ப்பாண படையெடுப்பு 28 ஒக்டோபர் 1591இல் நிகழ்கிறது. போர்த்துக்கேய படைத்தளபதி அந்திரே பூர்த்தாடு டி மென்டொன்சா 43 மரக்கலங்களுடனும், 250 வள்ளங்களுடனும் ஊர்காவற்றுறை ஊடாக யாழ்ப்பாண கடனீரேரியுட் பிரவேசித்தான்... கொழும்புத்துறை, 'அலுப்பாந்தி' (கரையூர்) பகுதிகள் போக்குவரத்துக்குரிய துறைகளாக விளங்கியதால் குடியிருப்புக்களைக் கொண்டிருந்தன." [8] (குறிப்பு: போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்திற்கு முன்னர் 'அலுப்பாந்தி' என்ற பெயர் பாவனையில் இருக்கவில்லை.)

"போர்த்துக்கேயரோடு சமர்புரிய சங்கிலி தஞ்சாவூர் நாயக்கர்களின் உதவியை நாடியபொழுது போர்த்துக்கேயரின் மகா விரோதியான 'வர்ணக்குலக் கரையாரை'யும் வள்ளம் வள்ளமாக அனுப்பினார்" (Queyroz P.468 Tran. S. G. Perara) அவர் அவர்களை போர்வன்மை மிக்கோர் என்றும், போரிலே வல்லவரான கரையாரை முதலியார் சேர்த்து 1619இல் தஞ்சாவூரிலிருந்து வந்தோரும் இரவிரவாக மீனவர் வீடுகளில் ஒளித்திருந்தனர். மிகப் போர் வல்லமை உடையவர்கள் 20,000இற்கும் மேற்பட்டவர்களுடன் கரையாரின் முழுக்குடிகளும் போர்த்துக் கேயர் தோற்பார்களென எதிர்பார்த்து நின்றனர். பல கரையோர வீரர்கள் போரிலே மாண்டார்கள். (P 631)[9] இதன்படி கரையூரில் வாழ்ந்த சமூகத்தவரையும் அந்நாளில் செய்திருந்த தொழில் களையும் அறியமுடிகிறது.

எனவே, வரலாற்று ஆசிரியர்கள், வரலாற்று ஆய்வாளர்கள் வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில் 'யாழ் நகரில் தொன்மைமிகு ஊர்களிலொன்று கரையூர்' என்பது வெள்ளிடைமலை.

**கரையூர்**

இந்து சமுத்திரத்தில் மிதப்பதுபோலக் காணப்படும் இலங்கைத் தீவின் வடபகுதியில், தீவின் சிகரமாய்க் காணப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்கு முன்னணியையும், கரையோரத்தின் ஒரு பகுதியையும் கொண்டமைந்ததே 'கரையூர்'. இங்கு வாழ்பவர்கள் 'கரையார்' என அழைக்கப்பட்டனர். 'கரையூர்' என்பது 'கரையார் வாழும் ஊர்' மற்றும் 'கடற்கரையோர ஊர்' என்பதேயாகும்.

"கரையார் எனப்படுவோர் 'குருகுலத்தார்' என்னும் பிராமண வர்க்கத்திலிருந்து வந்தவர்கள்" என்று சாதி நிர்ணய புராணம் தெரிவிப்பதாக பிரபல ஆய்வாளர் திரு. டி. சிவராம் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பரதவ சமூகத்தின் பெரும்பான்மையினரே கரையார். கரையோரப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் என்பதால் ‘கரையார்’ எனப் பெயர் பெற்றனர் என்றும் சொல்லப்படுகின்றது. ‘கரவர்’ என அழைக்கப்பட்ட இவர்கள், வீரத்திறன் கொண்டவர்களாகவும் ஆதிகாலத்தில் கடலாதிக்கம் செலுத்தி கடல் வீரர்களாக கடற்போர்களில் ஈடுபட்டவர்களாகவும் கருதப்படுகின்றனர். யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளின் கப்பல்களில் படைவீரர்களாகவும் மாலுமிகளாகவும் பணிபுரிந்திருக்கின்றனர். கண்ணகி காவியத்தில் ஈழத்திற்குச் சோழ அரசனால் நாகரத்தினம் பெற்று வருவதற்கென அனுப்பப்பட்ட ‘மீகாமன்’ ஒரு கடல்த் தலைவனாகவும் இச்சமூகத்தைச் சேர்ந்தவனே என்பதும் அறியக்கிடக்கின்றது.[10]

“கோட்டை அரசர்களின் காலத்திலே தென்னிந்தியாவிலிருந்து இச்சமூகத்தினர் பெரிய தொகையில் குடிபெயர்ந்தனர். போர்த்துக்கேய, டச்சு ஆட்சிக்காலங்களில் இவர்களின் அரச சேவைகள் மதிக்கப்பட்டு சமூகத்தில் செல்வாக்குடனும், அந்தஸ்துடனும் வாழ்ந்து வந்தி ருக்கின்றனர். இவர்கள் மன்னார், கற்பிட்டி, புத்தளம், சிலாபம், யாழ்ப்பாணத்தின் மேற்கு - வடக் குக் கரையோரப் பகுதிகளில் பெரும்பான்மை சமூகத்தினராக வாழ்ந்து வருகின்றனர். போர்த் துக்கேயரின் வரவுக்குப் பின்னர் இவர்களில் பலர் கத்தோலிக்கர்களாக மாறியிருந்தனர்.[11]

“... வரலாற்றின் வேறுபட்ட காலகட்டங்களில் இலங்கையில் படையெடுத்த பல்லவ, சோழ, பாண்டிய வம்சத்தினரின் சத்திரிய போர் வீரர்களின் வழிவந்தோரே இன்றைய குருகுலத்தார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. பல்லவ செப்புக் காசுகளில் குறிக்கப்பட்டிருக்கும் இரண்டு பாய்க்கப்பல்கள், மீன், இரட்டை மீன்கள், சங்கு, நண்டு, ஆமை முதலிய கடலோடு தொடர்பு படுத்தப்படும் பொருட்கள் ஐயத்துக்கிடமின்றிய முக்கிய சின்னங்களாகும்.”[12]

“...குருமண்டல கரைகளின் பட்டணங்களான காவிரிப்பூம்பட்டணம், கீழ்க்கரை, காஞ்சிபுரம் ஆகியவற்றிலிருந்தே தாங்கள் வந்ததாக யாழ்ப்பாணக் குருகுலத்தவரிடையே நிலவுகின்ற மரபு சொல்கிறது. தமிழ், சிங்கள அரசர்களினால் தங்கள் தலைவர்களான குருகுல, வர்ணகுல முதலியோரால் போர்வீரர்களாக இங்கு கொண்டுவரப்பட்டவர்கள் என்னும் கூற்று ‘கியூ. நெவிலி’னுடைய சிங்கள ஏடுகளில் எல்லா வகையிலும் ஆதாரம் பெறுகிறது. பிரிட்டிஷ் மியூசியத்தில் காணப்படும் நெவிலின் ஏடுகளிலுள்ள அவர் குறிப்புகள் இலங்கையின் சாதிகளைப் பொறுத்தவரை அதிகம் தெளிவை உண்டாக்கக் கூடியவையாக உள்ளன. ‘ஜனவம்ச’ என்ற ஏட்டில் (கி.பி. 1240) கரவர்கள் கப்பல் கட்டுபவர்களாகவும், கப்பல் ஓட்டு பவர்களாகவும், அரச பரம்பரையினரின் அல்லது மகாசம்பத்தவின் செல்வ வணிகர்களாகவும் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களின் தலைவனான ‘கரவந்தி’ இளவரசன் விஜயனின் யுவராஜனாக இருந்து பின் காஞ்சியின் அரசனானான். கரவர்கள் போதிமரத்தை இலங்கைக்கு கொண்டுவந்த கப்பலோட்டிகளாக இருந்தனர். அவர்கள் முத்துக் குடைக்கும், வெள்ளை கட்டுதலுக்கும், வெண்சாமரை பாவிப்பதற்கும் உரிமையுடையவர்களாக இருந்தனர். அரசனைத் தேர்ந்தெடுக்கும் அரசனின் உறவினராகவும் இருந்தனர். புவனேகபாகு அரசன் அவர்களின் தலைவர்களை கரையோரப் பகுதிகளின் பாதுகாவலராக ஏற்படுத்தி ஐந்து சாதியினரை அவர்களுக்கு ஊழியம் செய்யும்படி பணித்தான். ‘தப்ரபேனியன்’ 1 ஆம் தொகுதியின் 10வது குறிப்பிலும் இதைக் காண்கிறோம்.”[13]

**அடையாளம்**

குருகுல வம்சாவழியின் குறியீடாக விளங்கும் ‘குருகுலக்கொடி’ மற்றும் ‘மகரக்கொடி’ இன்று வரை இவர்களிடையே பாவனையிலுள்ளமை இவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கோட்டையை ஆட்சிசெய்த 6ஆம் பராக்கிரமபாகு மன்னனின் (கி.பி.1486 - 1509) அழைப்பின் பேரில் 7,740 வீரர்களைக் கொண்ட கரவசேனை காஞ்சிபுரம், காவிரிப்பட்டணம், கீழ்க்கரை முதலிய குருகுல தேசங்களில் (குருமண்டலத்திலிருந்து பெறப்பட்ட ‘கொறமண்டல்’ என்ற பெயரிலும் அறியப்படும்) இருந்து வந்தனர். தனது விரோதிகளைப் போராடி வென்ற பின்னர், இவர்கள் எவ்வம்சத்தினர் என வினவி, அறிந்து குருகுலத்தாரின் வழித்தோன்றல்கள் இன்றும் பாவிக்கும், அரச முத்திரையாக கருதப்படும் குருகுலக் கொடியையும், மகரக் கொடியையும் அளித்தான்” என பிரிட்டோவின் ‘யாழ்ப்பாண சரித்திரம்’ நூலில் அறியக்கூடியதாக இருக்கிறது. [14]

**குருகுலக்கொடி**

இந்தியா மற்றும் இலங்கையில் வாழும் குருகுல மக்களின் அடையாளமாக குருகுலக்கொடியே உள்ளது. இக்கொடியின் மத்தியில் கூம்பிய தொப்பியணிந்த அரசன் அல்லது தலைவன், கையில் ஒரு வாளுடன் வெள்ளை யானை மீது அமர்ந்திருப் பதைக் காணலாம். அவன் இருமருங் கிலும் முத்துக் குடைகளும், விசிறிகளும், வெண் தாமரைகளும், சந்திர - சூரிய - நட்சத்திரங்களும், ஒரு மீனும், ஒரு நாகபாம்பும், சங்குகளும், திரிகளுடன் கூடிய தீப்பந்தங்களும், வெள்ளைக் கேடயங்கள் அல்லது வட்டத் தகடுகளும், அவற்றின் நடுவே சங்கின் அடையாளங்களும், தாமரைப் பூக்களும், இரு ‘கொம்பவுன்ட்’ இலைகளும் (Compound Leaves) காணப்படுகின்றன. [15]



இக்கொடி பற்றி குறிப்பிடும் குருநகரின் முதற்குருக்களில் ஒருவரும் பிரபல ஆய்வாளருமான வண. ஏ.ஜே.பி. அன்ரனிதாஸ் அடிகள்; “இந்தியாவிலும் இலங்கையிலும் மிக உயர்ந்த அரச வம்சத்தின் தவறற்ற அடையாளங்களே இவை. சூளாமணி, நிகண்டின் 21ஆம் அதிகாரத்திலும், சதுரகராதியில் காணப்படும் அரசர்களுக்கான இருபத்தியொரு அடையாளங்களில் சில இவையாகும். (cf. Casie Chitty castes pp. 26-28) இவையே வட இந்தியாவின் சூரிய, சந்திர வம்சா வழியினரின் ராஜரீகத்துக்குரிய விசேட அடையாளங்களாகும். (cf. E.W.Perera’s Book of Banners under the name of Karawa Flags).” [16]

பொலநறுவை மாவட்டத்தில் தம்பன்கடவையில் பெறப்பட்ட குருகுலக் கொடியிலொன்று குருநகர் பாலுடையார் வீதியில் வசித்த புவிராஜசிங்கத்தின் பரம்பரையிடமும் பிரதியொன்று கட்டுரையாளரிடமும் உள்ளன.

**மகரக்கொடி (படம்)**



குருகுல மக்களின் மற்றுமொரு அடையாளம் ‘மகரக்கொடி’. 25.07.1861 இல் கரையூர் அர்ச்.சந்தியோகுமையோர் ஆலயத்திற்கு அத்திவாரமிட்டு முன்னின்றுழைத்த வண. பிதா எல்.சி.எச். மோறு. (அ.ம.தி) (Fr. L.C.H. Mauroit O.M.I) அடிகளாரின் தூரிகை கொண்டு வரையப்பட்ட உருவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


படத்தின் பின் பக்கம் மகரக்கொடி வரையப்பட்டிருந்தது. வருடந்தோறும் புனித யாகப்பர் ஆலயத் திருவிழாவின்போது இக்கொடி ஏற்றிவைக்கப்படுவது வழமை.

"இம்மகரக்கொடியானது ஆதிகாலத்தில் இந்திய மகாராசர்களின் பவனியின் முன்பாக எடுத்துச் செல்லப்படுவது வழக்கம் என வரலாறு கூறுகிறது. இந்து புராணங்களில் சிவன் தனது அவதாரங்கள் ஒன்றினுள் 'குருகுல சம்பந்த பரதர் கோமான் அதிராசன்' (மகாராஜா) என்பவரின் மகளை மணம் முடிக்கப் போகும் பொழுது மகரக்கொடியையும் தன்முன் எடுத்துச் சென்றார் என்ற குறிப்பும் உள்ளது.

'மகர' என்பது ஒரு வினோத கடற் பிராணி. இப்பிராணி யானையின் துதிக்கையையும், சிங்கத்தின் பாதங்களையும், பன்றியின் காதையும், மீனின் உடலையும், வெளித்தெரியும் பற்களையும், குரங்கின் கண்களையும், அழகான தோகையையும் உடையது. அது பிரபஞ்சம் தழுவிய ஆற்றலின் குறியீடாக அடையாளப்படுத்துகிறது. மீன் அரச அடையாளமும், குருகுலத்தாரின் அடையாளமுமாகும். விஷ்ணு புராணத்தில் குருநாடு என்பது கங்கை நதிக்கும் யமுனா நதிக்கும் இடையிலுள்ள நிலமாகும். இது மீன் வடிவத்தில் உள்ளது. இதுவே கௌரவர்களின் வேதகால இருப்பிடமாகும்.[17]

யாழ்நகர் - 400இன் முற்பகுதியில் (1625ஆம் ஆண்டு) போர்த்துக்கேயர், கட்டிமுடிக்கப்பட்ட தமது கோட்டையை மேற்கு எல்லையாகக்கொண்டு, கிழக்குப் பக்கமிருந்த கரையூர் குடியிருப்புக்களை உள்ளடக்கி தற்போதைய பழைய பூங்கா வீதியை கிழக்கு எல்லையாகவும், தற்போதைய வைத்தியசாலை வீதியை வடக்கு எல்லையாகவும், கடல் நீரேரியை தெற்கு எல்லையாகவும் கொண்டு, 'சீதாரி' எனப்பட்ட 'கடற்கரை நகரம்' (Pettah) உருவாக்கப்பட்டபோது அதன் பெயர் 'கரையூர்' என்றே அழைக்கப்பட்டது. கோட்டை முகப்பிலிருந்து கிழக்கு நோக்கி, குடியிருப்புகளை ஊடறுத்துச் செல்லும் வீதியை அண்டிய பகுதிகளில் ஆங்காங்கு கட்டப்பட்ட போர்த்துக்கேய கட்டடப் பாணியில் அமைந்த வீடுகளில் போர்த்துக்கேய இனத்தவர் வசித்த காரணத்தால் அவ்வீதி, 'பறங்கித் தெரு' என அழைக்கப்பட்டது. இது தற்போதைய பிரதான வீதியாகும்.

போர்த்துக்கேயர் காலத்து கரையூரின் அமைவிடத்தை வெளிப்படுத்தும் ஆதாரமாக அக்காலத்து படவரைஞரான 'வலன்ரைன்' என்பவரால் வரையப்பட்ட படமே உள்ளது. அதில் போர்த்துக்கேயரின் கோட்டையும், கோட்டைக்குள்ளே தென் - கிழக்கு மூலையிலிருந்த 'வெற்றி மாதா' ஆலயத்தின் கோபுரமும், கிழக்குப் பக்கத்தால் கரையூரை முற்றிலும் உள்ளடக்கி அமைக்கப்பட்ட 'சீதாரி' (கடற்கரை நகர) குடியிருப்புகளும், தெற்குப் பக்கத்திலுள்ள சிறுத்தீவு மற்றும் குறுஞ்சட்டித்தீவின் பகுதிகளும் சிறுத்தீவுக்கும் கரையூருக்கும் இடையிலுள்ள கடல்நீரேரியும் தெளிவாக வரையப்பட்டுள்ளன.



வரைபடத்தின்படி; கோட்டையிலிருந்து கிழக்கு நோக்கி கடற்கரை ஓரமாகச் செல்லும் கல்வீதி கரையூரின் தெற்கு எல்லையாகும். இது கடற்கரை வீதியென அழைக்கப்பட்டது. அவ் வீதியிலிருந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டையிலிருந்து தற்போதைய வைத்தியசாலை வீதி - 'பறங்கித்தெரு' சந்திப்பு வரை செறிவாகக் காணப்பட்ட குடியிருப்புகள், அங்கிருந்து படிப்படியாக குறைந்து சுண்டுக்குளி வரை செல்வதைக் காணமுடிகிறது. எனவே, கரையூர் மக்களின் வாழ்பகுதியையும், செறிவான இருப்பையும் இதன்மூலம் அறியலாம்.

மேலும் அப்படத்தில்; கடற்கரை வீதியும், வடக்கு நோக்கிச் செல்லும் குறுக்கு வீதியும் சந்திக்குமிடத்தில் பெரிய கட்டடம் போல காணப்படுகிறது. இக்கட்டடம் பற்றி தெளிவான ஆதாரம் இல்லாவிட்டாலும் கடற்கரையோரம் 'உப்புமால்' ஒன்று இருந்ததாக அறியப்படுவதால் அக் கட்டடம் அதுவாக இருக்கலாம். அந்தக் குறுக்குவீதி - பறங்கித்தெரு சந்திப்பில், குறுக்கு வீதிக்கு தெற்குப் பக்கத்தில் ஒரு குளம் காணப்படுகின்றது. அக்குளம் 'பட்டங்கட்டி குளம்' என அழைக்கப்பட்டதை முதியவர்கள் வாயிலாக கட்டுரையாளர் அறிந்துள்ளார். பின்நாளில் இந்தக் குளம் பற்றி சுவாமி ஞானப்பிரகாசர் தமது நூலில் 'வண்ணான் குளம்' எனக் குறிப்பிட்டுள்ளார். 1915ஆம் ஆண்டு கரையூர் வரையில் புகையிரதப்பாதை அமைக்கப்பட்டபோது இக்குளமும் மேவப்பட்டுள்ளது.

"பட்டங்கட்டி என்பது கடற்றொழில் புரியும் சமூகத்தவரின் தலைமைக்காரருக்குரிய பட்டப்பெயராகும்"[18]

"மன்னார்த் தீவிலே கரையார், பரதவ தலைவர்கள் 'பட்டங்கட்டி' என்ற பெயர் சூட்டப்பட்டு நிர்வாகிகளாக இருந்திருக்கிறார்கள்" [19]

"யாழ்ப்பாண இராச்சியத்தின் சிங்கை அரச பரம்பரையினரும், முதலிமார்களும், பட்டங்கட்டிகளும், கரையாருமே அரசியலில் செல்வாக்குள்ளவர்களாக இருந்தனர்." 20 இவற்றின்மூலம் அவர்களின் முக்கியத்துவத்தை அறியமுடிகிறது.

கடற்கரை வீதியில் கோட்டைக்கு அண்மையிலுள்ள அலுப்பாந்தி துறையிலிருந்து தொடராகக் 'கிட்டங்கிகள்' என அழைக்கப்பட்ட (களஞ்சியங்கள்) பெரிய கட்டடங்கள் பல உள்ளன. அக்கட்டடங்கள் நாட்டில் நிலவிய அசாதாரண சூழலில் அழிவடைந்தாலும் சிதைவடைந்த நிலையில் இன்னமும் சில காணப்படுகின்றன. கிட்டங்கிகளுக்கு கிழக்குப் பக்கத்தால் உப்புமால் வரை வெற்றுத் தரைபோல உள்ள இடத்தில் 'பாச்சுவலை' (பாச்சல்வலை) தொழிலாளர் தங்கிச் செல்லும் குடிலும், மீன் வாடி (மீன் சந்தை)யும் இருந்ததாக வழிவழிவந்த தகவல்கள் கூறுகின்றன. 1900இல் பிறந்த கட்டுரையாளரின் தந்தை; 'தனது பேரனுடன் (இவர் கரை வலைத் தொழில் உரிமையாளர்) தான் பல தடவைகள் மீன் வாடிக்குச் சென்று வந்துள்ளதாகவும், சம்பேதுருவானர் கோயில் இருக்குமிடத்தில் கொட்டில் இருந்ததாகவும் கூறியுள்ளார்.

சிறு தொழில்களினால் குறைந்த அளவிலான மீன்களே மதியத்துக்கு முன்னர் மீன் வாடியில் விற்பனை செய்யப்பட்டன. கடலில் தூரச் சென்று, அநேக தொழிலாளர் ஒன்றித்துச் செய்கின்ற மீன்பிடித் தொழில்கள், பி.ப. 4.00 மணிக்குப் பின்னர்தான் கரைக்குத் திரும்புவதால், இந்த மீன் வாடி 'மாலை நேர மீன் வாடியாக இருந்தது. அன்றைய கடற்றொழிலாளர் குடும் பங்கள் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் சமையல் செய்வதும் மாலை நேரமாகவே இருந்தது.

கரையூரில் பண்டுதொட்டு பிரபலம் அடைந்திருந்த வர்த்தக, மீன்பிடித்துறையான 'கரையூர் துறை' போர்த்துக்கேயர் காலத்திலிருந்து 'அலுப்பாந்தி' என்று அழைக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளது. “கடற்றுறைகளில் அறவிடப்பட்ட தீர்வை ‘அல்பந்தகோ’ எனப்பட்டது. இப்பறங்கிச் சொல்லே இன்றைக்கும் ஆயத்துறைக்கு வழங்கி வருகின்றது.”[21] இன்று வரை பயன்பாட்டிலுள்ள இத்துறை, கரையூரின் செழிப்பிற்கு சான்றாக உள்ளது. இதற்கு அருகாமை உள்ள கடற்கரைப் பகுதிகள் ‘கரிக்கோப்பு’, ‘ரேகு’ என்று அழைக்கப்பட்டதை சிறுவயதிலிருந்தே கட்டுரையாளர் நன்கு அறிவார். அதற்கான காரணம் என்னவென்றோ, அவை எந்த மொழிக்கு சொந்தமானவை என்றோ அறியப்படவில்லை. ஆனாலும், அவை இன்றுவரை சுட்டும் பெயராக நிலைத்து நிற்கின்றன.

21.06.1658இல் போர்த்துக்கேயர் வசமிருந்த யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் வசமானதும், போர்த்துக் கேயர் காலக் கரையூர் குடியிருப்புகளில் ஒல்லாந்தரால் மாற்றங்கள் எவையும் செய்யப்பட வில்லை. மாறாக, கோட்டையின் முகப்பிலிருந்து ஆரம்பமான பிரதான வீதியிலும் அதற்கு அண்மிய பகுதிகளிலும் குடியேறியிருந்த போர்த்துக்கேய இனத்தவரின் வீடுகளில் மாற்றங்களைச் செய்தும், தமது கட்டுமாணப் பாணியில் புதிதாக வீடுகள் அமைக்கப்பட்டும் அரச அதிகாரிகள், பணியாளர் சார்ந்த குடும்பங்களைக் குடியேற்றினர். அப்பகுதி ‘ஒல்லாந்த நகரம்’ என அழைக்கப்பட்டது. தற்போதுவரை அதே அமைப்பிலும் பகுதி மாற்றங்கள் செய்யப்பட்ட நிலையிலும் சில வீடுகள் உள்ளன.

1720 இல் வரையப்பட்ட ஒல்லாந்தர் கால வரைபடத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள ‘கரையூர்’ (Cereoer) கிழக்கில் நல்லூரையும், தெற்கில் சுண்டிக்குளியையும், வடகிழக்கில் வண்ணார் பண்ணையையும், தென் மேற்கில் கடல்நீரேரியையும் எல்லைகளாக கொண்டமைந்துள்ளது.[22] இதற்குள் போர்த்துக்கேயர் கால, ஒல்லாந்தர் காலக் குடியிருப்புகளும் உள்ளடக்கப்படுகின்றன. இதன் காரணமாகவே இந்த எல்லைக்குட்பட்ட காணி உறுதிகளில் ‘கரையூர் பற்று’ எனப் பதிவுகள் காணப்படுகின்றன.

28.09.1795இல் ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக்கொண்ட பின்னர், இலங்கையிலேயே நெருக்கமான குடியிருப்புகளைக் கொண்ட பகுதி ‘கரையூர்’ என அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டபோதும், அவற்றில் மாற்றம் எதனையும் செய்ய முன்வரவில்லை. 1867ஆம் ஆண்டு கரையூரில் ‘கொள்ளைநோய்’ என அழைக்கப்பட்ட ‘தொற்று நோய்’ ஏற்பட்டு பல உயிர்கள் காவுகொள்ளப்பட்ட பின்னர்தான் அவர்களுக்கு அக்கறைகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இந்நோய், கரையூர் குடியிருப்புப் பகுதிகளை முற்றாகத் தாக்கியபோதும் தற்போதைய ஓடைக்கரை வீதிக்கு கிழக்குப் பக்கமிருந்த குடியிருப்புகளையே வெகுவாகத் தாக்கியது. விரைந்து நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த அரசாங்கம், உடனடியாக ‘ஆணைக்குழு’வை அமைத்து ஆய்வுகளை மேற்கொண்டது. ஆணைக்குழு தனது அறிக்கையில் நெருக்கமான குடியிருப்புகள், சிறியதும் வளைவுகளுடனுமான சீரற்ற வீதிகள், மழைநீர் உட்புகாமல் தடுக்கக்கூடிய கட்டுகளைக் கொண்டிராத பொதுக் கிணறுகள், அதனையே குடிநீர் பெறுவதற்கும் குளிப்பதற்கும் பயன்படுத்துதல், மோசமான வடிகால்கள் போன்ற காரணிகளை முன்வைத்தது. அவற்றை ஏற்றுக்கொண்ட அரசாங்கத்தால் அக்கால குடியிருப்புப் பகுதிகளின் நடைமுறைச் சட்டங்களுக்கு அமைவாக சில தற்காலிக மாற்றங்களையே மேற்கொள்ள முடிந்தது. சில ஆண்டுகளின் பின்னர் தொலைநோக்கோடு முன்மொழியப்பட்ட தீர்வின் செயல்வடிவமே நிலத் தட்டுப்பாட்டை போக்க ஆரம்பிக்கப்பட்ட கடல் மேவும் திட்டமே ‘றெக்கிளமேஷன்’ (Reclamation).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கரையூர்', பின்னர் 'குருவூர்' எனவும் அழைக்கப்பட்டது. குருவூர்; 'குருநாடு' அல்லது 'குருகுலத்தை' முன்னிலைப்படுத்துகிறது. 1800ஆம் ஆண்டில் வாழ்ந்த ம.வி.அந்தோனிப் பிள்ளை என்னும் அண்ணாவியார் தனது 'துயரலோக ஆத்மசோக பஞ்சவர்ணத் தூது' என்னும் அம்மானை நூலில் 'குருவூர்' என ஊரின் பெயரையும் 'மெஸ்' என தான் வகித்த பதவிப் பெயரையும் சேர்த்து 'குருவூர் மெஸ் ம.வி.அந்தோனிப்பிள்ளை' என பதிவு செய்துள்ளமை சான்றாக உள்ளது. இந்நூலின் முன் கவிகளாக எழுதப்பட்டுள்ள சாத்துகவிகளில் யாழ்ப்பாணம் பிரபுநகர் வாசன் 'S.G. பொன்னையாப்பிள்ளை' புலவரின் விருத்தத்தில் பின்வருமாறு உள்ளது.

"மஞ்சுலவு யாழ்நகர மகுடமென்ன
வயங்குகுரு வூர்வதியும் மதிவம்ஸத்தோன்
கஞ்சமலர்த் தொடையான்வின் சேந்திபூ பன்
காதலித்த புத்திரனந் தோனிப்பிள்ளை
மிஞ்சுபல கலைவாய்ந்த வித்வகோமான்
மென்மதுர தமிழ்மொழியி லாத்மசோக
பஞ்சவர்ணத் தூதுஎனும் நவநற்கீதை
பாடியே யினியபுகழ் சூடினானே." [23]

"1915இல் சிங்கள, முஸ்லீம் கலவரத்தில் யாழ் கோட்டைக்கு கொண்டுவரப்பட்ட சிறைக் கைதிகள் நிரப்பிய சதுப்பு நில றெக்கிளமேசன் (Reclamation Grounds) ராணுவ கொட்டில்கள் போடவே பயன்படுத்தப்பட்டது. வணபிதா பிரான்சிஸ் அடிகளாரின் ஊக்குவிப்பில் அதில் புதிய வீடமைப்புத்திட்டம் உருவாகிற்று. மகாதேவா வீட்டுத்திட்டம் என அழைக்கப்பட்ட இத்திட்டம் கரையூர் மக்களுக்கு பெரிய ஆசீர்வாதமானது. சேரி அழிந்தது. நவீன வீடுகள் பெருகின.[24] குடியேற்றத்திட்டம் அமைக்கப்பட்டதும் 'குருநகர்' என்று மூன்றாவது பெயராக மாற்றம் பெற்றது. யாழ்ப்பாண மாநகரசபை 'குருநகர்' என்ற நாமத்தை பட்டின இடப்பெயர்களில் ஒன்றாகப் பதிவு செய் துள்ளது. இப்பெயரே தற்போது சாதாரணமாக வழங்கப்படுகிறது. குருவூரும், குருநகரும் ஒரு அடிப்படைச் சொல்லிலிருந்து பிறந்தவை.


1947இல் றெக்கிளமேஷனில் வீட்டுத்திட்ட வேலை நடைபெற்றபோது

யாழ். மாநகரசபையின் எல்லைகளின்படி குருநகரின் இன்றைய வாழ்பரப்பு வடக்கில் பிரதான வீதியையும், கிழக்கில் புனித பத்திரிசியார் வீதி மற்றும் கடல் மேவப்பட்டது வரையான எல்லையையும், தெற்கில் யாழ்ப்பாணக் கடல்நீரேரியையும், மேற்கில் முதலாம் குறுக்குத் தெருவையும் எல்லைகளாகக் கொண்டு, அடர்த்தியான சனத்தொகையுடன் கூடிய ஊராக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொழில்கள்

மிகப் பழைய நூலான வையாபுரி ஐயரின் 'வையாபாடலில்' "வருணகுலத் தார்மலைய கத்தார்" என 60ஆவது பாடலிலும், "தாவறுசீர் வசியர்கரை யார்கள்" என 77ஆவது பாடலிலும், "கவுறுமனக் கணிகையர்கள் தட்டுவாத் தியகாரர் கரையூரானோர் என 93ஆவது பாடலிலும் காணப்படுகின்றனவே தவிர அவர்கள் தொழில் சார்ந்த குறிப்புகள் காணப்படவில்லை. பண்டைய வரலாற்றைக் கூறும் நூல்களில் செ.இராசநாயகம் முதலியாரின் 'யாழ்ப்பாண சரித்திரம்' நூலிலேயே தொழில் சார்ந்த குறிப்புகள் காணப்படுகின்றன.

இயல்பான ஒரு குடியேற்றத்தின் தன்மையைக் கருத்திற்கொண்டு கரையூர் மக்களின் குடியேற்றத்தை எடுத்துக் கொண்டால்; அவர்களுக்கு உடனடியாக வசதி வாய்ப்புகள், தொழில் வளங்கள் கிட்டியிருக்காத சூழலில், தாம் முன்னர் செய்துவந்த தொழில் சார்ந்த ஏற்பாடுகளை முந்திய குடியேற்றவாசிகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும் தளமாகவே கரையூர் இருந்திருக்கும்.

### யுத்த வீரர்கள்

"ஷத்திரியர்கள் போர் புரியும் வம்சத்தை சார்ந்தவர்கள். வரலாற்றின் ஒரு கட்டத்தில் அரச உரிமை அவர்களுக்கு மாத்திரமே உரித்தானதாகக் கருதப்பட்டது. சூளாமணி நிகண்டு, ராஜரீகத்தின் அடையாளமாக இருபத்தொரு அம்சங்களைக் குறிப்பிடுகின்றது. குடை, கவரி, முரசு, சக்கரம், யானை, கொடி, மகரம், தீபம் என்பன சிலவாகும்". [25] "1067இல் பொறிக்கப்பட்ட சோழர் கல்வெட்டு ஒன்றில்; சோழ அரசன் வீர இராஜேந்திரன் படைகளுக்கு எதிராக விஜயபாகு போராடியபோது அவன் பக்கத்தில் படைத் தளபதியாகப் போர் நடத்தி, குருகுலத்தராயன் என்பான் உயிரிழந்தான்." [26]

போர்த்துக்கேயரை எதிர்த்து யாழ்ப்பாண மன்னன் போராடிய போது; "சிறிது நேரத்தால் வர்ணகுலத்தான் என்னும் கரையாரத் தலைவன் பாரிய தமிழ்ப் படையுடன் வந்தெதிர்க்க அவர்களையும் ஒலிவேரா சின்னாபின்னமாக்கினான்." [27]

"22 டிசெம்பர் 1852இல் இருந்து யாழ். அடைக்கலநாயகி கோயில் கோவைக் குருவான 'பிரான்சீஸ்கோ யோவாஓ' என்பவரது குழுவினரின் ஆக்கிரமிப்பு மையமானது. அங்கிருந்து கொண்டே கொஞ்சேஞ்சிமாதா கோவிலை (பெரியகோயில்) கைப்பற்றத் திட்டம் தீட்டினார். இவரின் திட்டத்தை அறிந்துகொண்ட கரையூர் சந்தியோகுமையோர் கோயில் கிறிஸ்தவர்கள் பெரிய கோவிலை இரவு பகலாகக் காவல் காத்து திட்டத்தை முறியடித்தனர். இவர்களுக்குப் புதுவருடம் (01.01.1853) காவல் பணியுடன் விடிந்தது. [28]

'கரையூர்' மக்களின் வீரத்துவம் பற்றி சில நூல்களில் அறியப்பட்ட தகவல்களே இவை. இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போதும் பிரித்தானியா இராணுவத்தில் இணைந்து யுத்தங்களில் பங்கேற்றதனால், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பலர் தங்கிவிட நேரிட்டது. அவ்வாறு தங்கியவர்களின் தலைமுறையினர் அந்நாடுகளிலேயே வாழ்கிறார்கள். திரும்பி வந்து இங்கு குடியேறியோர் மிகக் குறைந்த தொகையினரே. அவர்களில் மூவரிடம் கட்டுரையாளர் அனுபவங்களை கேட்டறிந்துள்ளார். அவர்கள்; மீசைக்கார பற்றிக், சிமியான் பிள்ளை, சிங்கப்பூர் பப்பா ஆகியோராகும். இதன் தொடராக இலங்கை இராணுவத்தில் இணைந்து சேவையாற்றியுள்ளனர். இராணுவத்தில் உயர் பதவிகளை வகித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிச் சிங்களச் சட்டம், தொழில் வாய்ப்பு புறக்கணிப்பு, கல்வியில் ஓரங்கட்டல், பலாத்காரக் குடியேற்றங்கள் போன்ற காரணங்களால் விரக்தி அடைந்து கிளர்ந்தெழுந்த தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் இராணுவ மயமாக்கப்பட்டதும் அதில் ஆண்களும் பெண்களுமாக இணைந்து, சிப்பாய் முதல் தரம்மிக்க பதவிகளுடன் களமாடி வெற்றியைக் குவித்தவர்களும், மடிந்தவர்களும் பலர்.

**முத்துக்குளித்தல்**

மன்னார் / 'அரிப்பு' கடற்கரையோர மணல் மேட்டில் இன்றும் சிதைவுகளுடன் காணப்படும் 'அல்லி இராணி' கோட்டையும், "தனக்கென ஒரு கோட்டையை அமைத்த 'அல்லி இராணி' அங்கிருந்து முத்துக் குளித்தலை மேற்கொண்டாள்" எனக்கூறும் வழிவழிவந்த கதைகளையும், 'முத்தரிப்பு' (முத்து அரிப்பு), 'முத்துச் சிலாவம்' என வழங்கிவரும் அழைப்புப் பெயர்களையும் சான்றாகக் கொண்டுள்ள முத்துக்குளித்தல் பற்றி அறியவருவதாவது;

இந்தியா / 'முத்துக் கடற்கரை' பகுதிகளில் முத்துக்குளித்தலை மேற்கொண்டிருந்த சில பரதவர்களுடன் இலங்கையில் கால்வைத்த அல்லிராணி (பாண்டிய மன்னன் மகள்), அரிப்பு முதல் சிலாவம் வரை ஆழமான கடற்பகுதியில் இயற்கையாய் அமைந்திருந்த முத்துப் படுக்கையை கண்டறிந்து, 'குதிரைமலை'யைத் தலைநகராகக் கொண்டு, முத்துக்குளித்தலை ஆரம்பித்துத் தன் வசம் வைத்திருந்தார். நாளடைவில் முத்துக் கடற்கரையிலிருந்து வந்து கரையூரில் குடியேறியவர்களும் அல்லிராணியின் கீழ் முத்துக்குளித்தலில் இணைந்து கொண்டனர் என்ற வாய்வழித் தகவல் உள்ளது.

1560ஆம் ஆண்டு போர்த்துகேயர் மன்னாரைக் கைப்பற்றிய சில ஆண்டுகளின் பின்னர் அல்லிராணி முத்துக்குளித்தலை கைவிட்டதும் முத்துக்குளிப்பில் ஈடுபட்டவர்களின் பரம் பரையினர் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரின் ஒத்துழைப்புடன் அதனைத் தொடர்ந்து செய்து வந்துள்ளனர். இதன் காரணமாக 'கரையூர்' மற்றும் 'மாதகல்'லைச் சேர்ந்தவர்களுக்கு முத்துச் சிலாபத்தில் காணிகளும், தென்னந்தோப்புகளும் இருந்துள்ளன.

ஆங்கிலேயர் காலத்தில் விதிக்கப்பட்ட பலதரப்பட்ட வரிகள் மற்றும் முத்துக்குளித்தல் தொழிலிருந்த ஆங்கிலேயரின் அக்கறையால் சுதேசிகளிடையே அத்தொழிலில் நாட்டம் குறைவடைந்ததால் ஆர்வமுள்ள சிலர் கடல் கடந்து இந்தியா / தூத்துக்குடிக்குச் செல்லத் தொடங்கினர். அவர்களுக்கு வரவேற்பும் நிறைவான வருவாயும் கிடைத்ததால், சில மாதங்கள் தொழில் செய்து திரும்பிவந்து மீண்டும் செல்வதை வழமையாய்க் கொண்டிருந்தனர்.

1891ஆம் ஆண்டு தூத்துக்குடியில் திடீரெனப் பரவத் தொடங்கிய 'பிளேக் நோய்' காரணமாக தொழில்கள் யாவும் முடக்கப்பட்டன. இலங்கைக்கான வள்ளப் போக்குவரத்தும் தடுக்கப்பட்டது. நோயால் இறப்பு வீதம் அதிகரிப்பதை அறிந்த கரையூர்த் தொழிலாளர்கள், அதிக கூலி பேசி வள்ளமொன்றை ஏற்பாடுசெய்து, ஊருறங்கும் நேரம் சலனமின்றி புறப்பட்டனர்.

தலைமன்னார்க் கரை நெருங்கத் தெரியும் தூரம் வரை ஏற்றி வந்த படகோட்டி அதற்கு அப்பால் செல்ல மறுத்து, 'பாக்கு நீரிணை'யை ஊடறுத்து உள்ள 'தீடை'யில் (இராமர் அணை) இறக்கிவிட்டு திரும்பி விட்டான். இடையிடையே துண்டாடப்பட்டதாகத் 'தீடை' உள்ளதால் அவ்விடங்களில் குறுக்கிடும் இயல்பான நீரோட்டங்களைக் கடந்து தலைமன்னார் வழியாக ஊர் வந்து சேர்ந்துள்ளனர். இவர்களில் ஒருவர் மூலமாக வெளிவந்ததாக பின்வரும் முத்துக்குளித்தல் தொழில்முறை அமைகிறது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சுழியோடிகள் பத்துப் பேரை வள்ளத்தில் ஏற்றிக்கொண்டுமுத்துப்படுக்கை பகுதிக்கு சென்றதும், சுழியோடுவோர் விரைவாகக் கடலடித் தரையை அடைவதற்கும், மூச்சின் அழுத்தத்தால் உடல் மேலெழுவதைத் தடுப்பதற்குமாக ஐந்து பேருக்கும் கற்கள் நிரப்பப்பட்ட ‘சாக்குப்பையும்’, சிப்பிகள் போடுவதற்கென ஒரு முழத்துக்கும் மேற்பட்ட உயரமான கயிற்றால் பின்னப்பட்ட ‘பை’யும் நாரியில் கட்டப்படும். மூக்குத் துவாரங்களை நசித்தபடி பலகையில் செய்யப்பட்ட ‘இடுக்கி’யை போட்டுக்கொள்வர். சுழியோடும்போது கடல்நீர் மூக்கில் நுழைந்து சிரமத்தைக் கொடுக்காதிருப்பதற்கும், கூடுதலான நேரம் மூச்சை அடக்கி வைத்திருப் பதற்காகவுமே இது போடப்படுகிறது.

நீளமான கயிறின் ஒருபக்க முனை வயிறைச் சுற்றியும், மறுமுனை வள்ளத்தின் விளிம்பிலும் கட்டப்படும். இது ‘மண்டைக்கயிறு’ எனப்பட்டது. இந்தக் கயிறில்தான் கடலுக்குள் இறக்கப்பட்டவரின் உயிர் தங்கியிருக்கிறது என்பதால் நம்பிக்கையின் நிமித்தம் சுழியோடுபவருக்கும், மண்டைக் கயிறைப் பிடித்திருந்து உரிய நேரத்தில் இழுப்பவர்க்கும் இடையே மச்சான் உறவு முறையானவரே இருப்பார்.

‘மண்டாடி’ உத்தரவிட்டதும் ஐவரும் ஒருமித்துக் கடலில் குதித்து, சுழியோடிக் கடலடித் தரையை அடைவர். தனித்தனியே அவர்களில் கட்டப்பட்ட கயிறின் மறுமுனைகள் வள்ளத்தில் நிற்கும் ஐந்து மைத்துனர்களின் கைகளில் இருக்க, அவர்கள்; தனித்தனியே கயிறின் அசைவை அவதானித்துக்கொண்டிருப்பர்.

கடலுக்குள் இறங்கியவர்கள் தங்களால் முடிந்தவரை மூச்சை அடக்கி சிப்பிகளைச் சேகரித்து கயிற்றுப் ‘பை’க்குள் போட்டுக்கொள்வர். தம்மால் மேலும் தாமதிக்கமுடியாத நிலையை உணரும் ஒருவர், கயிறைப் பிடித்து அசைப்பார். வள்ளத்தில் நிற்பவர் குறிப்பறிந்து கயிறை வேகமாக இழுத்து அவர் வள்ளத்தில் ஏற உதவி செய்வார். சேகரித்த சிப்பிகள் ‘மண்டாடி’யிடம் ஒப்படைக்கப்படும். சுழியோடச் சென்ற ஐவரும் வள்ளத்தில் ஏறியதையடுத்து வள்ளத்தில் நின்ற ஐவரும் உரிய ஒழுங்குடன் கடலில் இறங்க, மற்றையோர் கயிற்றுடன் நிற்பர். இவ்வாறே மாறிமாறித் தொடரும்.

இத்தகவல், தனது வாலிப வயதில் கரையூரிலிருந்து இந்தியா / தூத்துக்குடிக்கு முத்துக்குளிக்கச் சென்ற, 1840ஆம் ஆண்டளவில் பிறந்த ‘இராயப்பு’ என்பவரின் அனுபவ வெளிப்பாடாக அவரது பூட்டன் ‘நீக்கிலாஸ் முடியப்பு’ விடமிருந்து (வயது 70) 1982 ஆம் ஆண்டு கட்டுரையாளரால் பெறப்பட்டது.

**மீன்பிடி**

“பண்டைய ஷத்திரியர்களே போர்க் காலத்தைத் தவிர்ந்த ஏனைய நாட்களில் தங்கள் சாதாரண தொழிலாக மீன் பிடித்தலை வைத்திருந்தனர். வேட்டையாடுதல் போன்று மீன் பிடித்தலும் பண்டைய காலங்களில் அரச பொழுதுபோக்காகவே கருதப்பட்டது. போர்வீரர் பரம்பரையினரின் வீர மனநிலைக்கு ஒத்ததாகவே கடற்றொழிலும் கருதப்பட்டது” [29]

“யுத்த வீரராம் அஞ்சா நெஞ்சுடையோர்க்கு மீன்பிடி தக்க உரிமையான செயல்தான். இது காரணமாகவே பண, பண்டங்களில் குறைந்தோர் மீன்பிடிக்கின்றனர். பெரியோர் யுத்த முகத்திற்கு தளகர்த்தராகவும், பணம் விட்டு முயற்சிகள் செய்வோராகவும் கப்பல்களுக்குச் சொந்தக்காரராகவும், சிலர் முதலியாராகவும், அதிகாரிகளாகவும் இருக்கின்றனர். (Ancient Kaurawa or Kuru flags by H. Ds.S.)” [30]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மீன்பிடியில் பல்வகை முன்னேற்றத்தைக் கண்டுள்ள கரையூர் (குருநகர்) தோற்றம் பெற்றபோது பாண்டிய, சோழ மன்னர்களின் படையெடுப்பில் போர்வீரர்களாக, பணியாளர் களாக இருந்தவர்களின் ஒன்றிப்பாகவே இருந்துள்ளது. எனவே, அவர்கள் வாழ்ந்த பிரதேசங் களில் அறியப்பட்ட மீன்பிடித்தொழில் முறைகளே கரையூரிலும் விதைகளாக இருந்திருக்க முடியும். அதற்குக் கரையூரின் நிலையம் இசைவாக இருந்திருக்குமா என்பது கேள்விக்குறி.

1982 ஆனி மாதம் வயதில் முதுமையும், அனுபவமும் உள்ள கரையூர் வாழ் மீன்பிடித் தொழிலாளர் பலரிடம் கட்டுரையாளரால் மேற்கொள்ளப்பட்ட சந்திப்புக்களில், பாரம்பரியமாய் அறியப்பட்ட தகவல்களென அவர்களால் கூறப்பட்டவற்றில் ஞாபகத்தில் இருப்பவை பின்வருமாறு:

1. நீரோட்டத்தில் செல்கின்ற மீனைக் கல்லெறிந்து வீழ்த்திப் பிடித்தல்
2. பரவைக்கடலில்; கடற்கரையை ஒரு பக்கமாகக்கொண்டு அரைவட்ட வடிவில் நெருக்கமாக கற்களை அடுக்கி, மத்தியில் ஒடுங்கிய வாசல் விட்டு, வாசலுக்கு தடையில்லாத வகையில் கடலை நோக்கி 'V' வடிவில் கற்களை நெருக்கமாக அடுக்கி, கடல் வெள்ளம் வருகையில் தடிகளால் நீரில் அடிக்கையில் வெருட்சியடைந்து வாசலினால் அரை வட்டத்துக்குள் புகுந்திடும் மீன்களைப் பிடித்தல்.
3. கடற்கரை ஓரத்தில் பள்ளம் வெட்டிப் பெறப்படும் மண் புழுக்களை மீனுக்கு இரையாகத் தூண்டிலில் சொருகி, அதனைக் கடலோரங்களிலும் வள்ளத்தில் சற்றுத் தூரம் சென்றும் கடலில் எறிந்து மீன் பிடித்தல். குடியேற்றத்தின்போது சிலர் பயணித்து வந்த வள்ளங்கள் இதற்குக் கைகொடுத்தன. இத்தொழிலைத் தொடர்ந்தும் செய்து வந்தவர்களின் பரம்பரையினர் 'புழு வெட்டிப் பிரிவு' என இப்போதுகூட அழைக்கப்படுகின்றனர்.
4. மூன்று அடி நீளமான இரும்புக் கம்பியின் முனை கூராக்கப்பட்டு, ஒரு அங்குல உயரத்திற்கு தடை ஏற்படுத்தப்பட்ட 'மண்டா'வால் பதுங்கியிருக்கும் மீனைக் குத்தியும், ஓடுகின்ற மீனைக் குறிவைத்து எறிந்தும் பிடித்தல்.
5. மையத்தில் நீளமாகவும், ஆளளவு உயரத்தில் வலை கட்டப்பட்டதுமான வள்ளத்தில், இரவில் இரண்டு தீப்பந்தங்களை ஏற்றித் தாங்கிச் செல்ல, பந்தங்களின் ஒளியைக் கண்ட மீன்கள், வெருட்சியில் ஒளியைக் கடக்க உயர எழுகையில் குறுக்கிடும் வலையில் தட்டுப்பட்டு வள்ளத்திற்குள் வீழ்த்திப் பிடித்தல்.
6. குடை போன்ற அமைப்பில் சணல் நூலால் பின்னப்பட்டு, முனைகளில் சிறிய கற்களைக் கட்டி தயாரித்த வலையை, மீன்களின் நடமாட்டம் கண்டதும் வீசிட அவ்வலை குடைபோல விரிந்து மீன்களின் மேலாக மூடிக்கொள்ளப் பிடித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவைதவிர காலத்தின் தேவைகருதி, கரையூர் கடற்பகுதிக்கு ஏற்ற வகையில் 'மரவள்ளங்களை' உருவாக்கினர். நெடுங்காலமாக கப்பல் கட்டுபவர்களாகவும், கப்பலோட்டிகளாகவும் இருந்தவர்களின் பரம்பரையினர் என்பதால் புதிய மரக்கலங்களை கட்டுவதில் அவர்களுக்குச் சிரமமிருக்கவில்லை. ஓரளவு பணவசதி உள்ளவர்கள் இதற்கு ஆர்வம் காட்டிட வள்ளங்கள் பெருகின. மேலும், தொழில்களின் விரிவாக்கத்திற்காக வள்ளத்தின் சாயலையொத்த சாதாரண அளவிலான தோணிகள் உருவாக்கப்பட்டன. இதனால், மீன்பிடித்தொழில் புதிய பரிமாணத்தைப் பெற்றது. 1560ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, திறைபெற்று நிழல் நிர்வாகத்தை ஆரம்பித்துச் சென்றபின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது பயன்பாட்டிலிருந்த கடற்கலத்தின் மாதிரியில் 'தோணி' அல்லது 'வத்தை' என அழைக்கப்பட்ட 'வணிகக் கலங்களை' உருவாக்கினர். தொடர்ந்த காலங்களில் இக்கலங்கள் பெரிதும் பயன்பட்டன.

"... 1560 ஆம் ஆண்டு டொண் கொன்ஸ்ரன்ரைன் பிறகன்சா தலைமையில் 92 கப்பல்களில் படையெடுத்து வந்தனர், இக் கப்பலில் போர்வீரர்களுடன், இலங்கைக்கு ஞான அதிகாரியாயிருந்த கொச்சி மேற்றிராணியார் ஜோர்ஜ் தெமுடோ ஆண்டகை அவர்களும், யேசு சபை மூப்புச் சுவாமியாரும், பல பிரான்ஸிஸ்கன் குருமார்களும் வந்திருந்தனர்..." [31]

"பிரான்ஸிஸ்கன் சபைக் குருக்களே சமய போதனையின் நிமித்தம் யாழ்ப்பாண மண்ணில் திருப்பாதம் ஊன்றிய முதலாவது குருப்பிரசாதிகளாவர். இவர்களின் அயராத உழைப்பாலும் போதனையாலும், அதே ஆண்டிலே நாலாயிரத்துக்கு மேற்பட்ட யாழ்ப்பாண மக்கள் ஞானத்தீட்சை பெற்றுக் கத்தோலிக்கரானார்கள். ஏனைய van F. X. C. NADARAJA Portugese Period, Rev. Fr. S. A. GNANAPRAGASAR" [32]

"பிரான்ஸிஸ்கன் சபை குருவான 'மொறுவே' அடிகள் கற்றுக்கொடுத்த ஐரோப்பிய மற்றும் கேரள மீன்பிடி முறைகளான 'பாச்சல்வலை', 'கொண்டோடி'யுடன், 'கரைவலை'யைப் பிரதான தொழிலாக கொண்டனர். இவர்களில் பெரும் வணிகக் கலங்களை வைத்திருந்தோர் இந்தியா, பர்மா, சயாம் துறைமுகங்களிலிருந்து அரிசி, சர்க்கரை, பருப்பு முதலிய உணவுக ளையும் சேலை, ஆபரணங்கள், முத்து, வைரக்கல் முதலியவற்றையும் கொண்டு பண்டமாற்று வியாபாரம் செய்துவந்தனர்." [33]

இவை, பலர் இணைந்து மேற்கொள்ளும் தொழில்களாக தோற்றம் பெற்றன. கரையூரின் அடையாளமாக மாறிய இத்தொழில்கள் செய்யப்படும் கடல்பகுதி 'பாடு' என பொதுவாகக் கூறப்பட்டாலும். ஒவ்வொரு 'பாடு'க்கும் தனித்தனி பெயருண்டு.

**1. பாச்சல்வலை (பாச்சுவலை)**

இதற்கு தோணி பயன்படுத்தப்பட்டது. சிறிய வெளிகள்விட்டு தொடராக பனை ஓலைகள் சொருகப்பட்ட மொத்தமான ஈச்சம் நார்க் கம்பான் கயிறுகள் சிலவற்றைத் தொடராக இணைத்து கடலில் குறுக்காக இறக்கி, ஒருசாரார் இருபக்க முனைகளிலும் பிடித்திழுத்து விரித்த நிலையில் கரைநோக்கி இழுத்துச் செல்ல, மறுசாரார் கயிற்றின் பின்னால் நெருக்கமாகவும் தொடராகவும் சணல் நூலால் பின்னப்பட்ட, 40 அடிகள் வரை நீளமானதும் 8அடிகள் வரை அகலமான விரிந்த சாக்குப் பையைப் போன்ற பல வலைகளை விரித்துப் பிடித்தவாறு பிறை வடிவில் செல்ல, பனை ஓலையை நெருங்கியதால் அச்சமடைந்த மீன்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள ஓலையைக் கடக்கும்போது வலைகளில் விழுந்துவிடும். இத்தொழிலுக்குரிய வலைகள் தொழிலாளர் பலருக்கு சொந்தமானவை என்பதால் அவர்களுக்கென ஒரு பகுதி நிதி ஒதுக்கப்படும்.

**2. கொண்டோடிவலை (கொண்டடிவலை)**

இதற்கு வள்ளம் பயன்படுத்தப்பட்டது. கூம்பு போன்ற அமைப்பில் சணல் நூல்களால் பின்னப்பட்ட 'மீன்பொறி'யை ('மடி') குறித்த பாடில் இறக்கியதும், முகப்பின் கீழ்ப்பக்கம்; ஓட்டைக் கற்கள் பல கட்டப்பட்டதால் கடலடித் தரையை மருவியதாய் விரிந்திருக்க, மேற்பக்கம் மிதக்கும் தன்மை வாய்ந்த 'தில்லை' மரத்தின் வேர்த்துண்டுகள் ('புணைகள்') கட்டப்பட்டதால் மிதந்திருக்க, பொறியின் இருபக்க வெளி முனைகளில் ஒவ்வொரு கம்பு ஊன்றி அவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலைகள் சொருகப்பட்ட சாதாரண அளவிலான 'ஈச்சம் நார்' கயிறின் ஒவ்வொரு பக்க முனையையும் கட்டி, மறுமுனைகளை இருபக்கத்தாலும் விரித்து இழுத்தவாறு கணிசமான தூரம் ஓடிச்சென்று, வட்டமடித்து மடியை நோக்கி ஓடிவர, ஓலைக் கயிறுகளுக்குள் சிறைப்பட்ட மீன்கள் மடிக்குள் நுழைந்துவிடும்.

**3. கரைவலை**

கரையோடு சேர்ந்த ஆழ்கடலை உள்ளடக்கித் தொழில் செய்யப்படுவதால் 'கரைவலை' எனப் பெயர் வரலாயிற்று. தற்போதுவரை பாவனையிலுள்ள ஒரேயொரு பண்டைய தொழிலான இத்தொழில், கரையூரின் நீண்டகால அடையாளமாகவும் உள்ளது. இத்தொழிலுக்கு தோணி பயன்படுத்தப்பட்டது.

சணல் நூலால் பின்னப்பட்ட மாறுபட்ட அளவுகளிலான வலைத்தட்டுகளைக் கொண்டு, பின்பக்கம் கூம்பின் அமைப்பிலும், வாய்ப்பக்கம் முதலையின் திறந்த வாய்போன்ற அமைப்பிலும் உருவாக்கப்பட்ட பெரிய 'மடி'யின் கீழ்ப்பக்க வாய்ப்பகுதி அமிழ்ந்திருக்கும் வகையில் கற்களும், மேற்பக்க வாய்ப்பகுதி நீர் மட்டத்தில் மிதந்திருக்கும் வகையில் 'புணை'களும் கட்டப்பட்டிருக்கும்.

தொழில் செய்யத் தீர்மானித்த 'பாடின்' கரையில் ஒருபகுதி தொழிலாளரை இறக்கிவிட்டு ஆழ்கடல் நோக்கி ஈச்சம் நார்க் கம்பான் கயிறுகளை இறக்கியவாறு சென்று, அக்கயிறின் முனையை மடியின் வலப்பக்க முனையிலும், வேறு கம்பான் கயிறின் முனையை மடியின் இடப்பக்க முனையிலும் கட்டி, மடியை ஆழ்கடலில் இறக்கிவிட்டு கட்டிய கயிறுகளை இறக்கியவாறு பாடின் இடதுபக்க கடற்கரையை பாதி வட்ட வளைவில் அடைந்ததும் அதிலிருந்த தொழிலாளர் இறங்கி கயிறின் முனையை பிடித்து இழுத்தவாறு செல்வர்.

இப்போது முன்னர் இறக்கிவிட்ட தொழிலாளருக்கும் தற்போது இறக்கிய தொழிலாளருக்கும் இடையே 100 யார் வரையிலான இடைவெளி இருக்கும். 'மேலாப்பாச்சி' (தொழில் நுணுக்கங்களை அறிந்தவர்) அனுமதி கொடுத்ததும் இரு பக்கத்தாலும் அம்பா பாடியவாறு உற்சாகமாகக் கயிறை இழுத்துச் சுருக்குவார்கள். இதனால் மடி இழுபட்டு கரையைத் தேடி வரும். மடி கரையை நெருங்குகையில் இருபக்க கயிறின் எல்லைக்குள் சிக்குண்ட மீன்கள் மடிக்குள் நுழைந்துவிடும். தொடர்ந்து கரைவரை மடியை இழுத்து, அதற்குள் சிறைப்பட்டிருந்த மீன்களை எடுத்துக்கொள்வர்.

**தொழிற் பண்புகள்**

கரைவலைத் தொழிலுக்குரிய பண்புகளே விளக்கத்துக்கு எடுக்கப்படுகிறது. இவை; பெரும்பாலும் பாச்சுவலை, கொண்டோடிவலைத் தொழில்களுக்கும் பொருத்தம்.

கரைவலை ஆரம்பத்தில் பெரிய முதலீடாகவும், முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் இணைந்து செய்கின்ற தொழிலாகவும் இருந்ததால் பலர் கூட்டாக இணைந்து குறிப்பிட்ட பங்குப்பணத்தை சமமாகப் போட்டு, தோணி மற்றும் தொழில் உபகரணங்களை தயார்செய்து தொழிலை உருவாக்கினர். அதன் வருவாயில் அன்றைய செலவு போக மிகுதிப்பணமும், வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்கான மீன்களும் பங்குத்தாரருக்குச் சமமாகப் பகிரப்பட்டு வந்ததை வாய்மொழித் தகவல்களாக அறியமுடிகிறது. தற்கால கூட்டுறவுக்கு ஒத்ததாகவுள்ள இந்நடைமுறையே இன்றுவரை குருநகர் மக்களிடையே கூட்டுக் குடும்பமுறை கடைபிடிக்கப்பட்டு வருவதற்கு காரணியாக இருந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்காளராய் இணைந்து பணம் தேடிக்கொண்டவர்கள் குழுக்களாக இணைந்து கரைவலைத் தொழில்களை ஆரம்பித்தனர். இவை 'கொம்பனிப் படகுகள்' என அழைக்கப்பட்டன. ஜேர்மன் கொம்பனி, ஜப்பான் கொம்பனி, மரையன் கொம்பனி, பெரிய கொம்பனி போன்ற பெயர்களில் பல கரைவலைத் தொழில்கள் இருந்துள்ளன. தொழிலில் பங்காளிகளல்லாத தொழிலாளர்கள் கொம்பனி படகுகளில் தொழிலுக்குச் சென்றுவந்தனர். தொழிலாளர்களுக்குத் தினமும் வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்காக மீன்கள் வழங்கப்படும். இது அவர்களது உழைப்புக்கான ஊதியத்தின் ஒரு பகுதியாகும். மிகுதி மீன் விற்பனையின் மொத்த வருவாய் மூன்றாகப் பிரிக்கப்பட்டு செலவுகள் உள்ளடக்கப்பட்ட இரண்டு பகுதி கொம்பனிக்கும், ஒரு பகுதி தொழிலாளருக்கும் பகிரப்பட்டது.

காலப்போக்கில் பண வசதி உள்ளவர்கள் கூட்டின்றி தனித்தனி தொழிலை ஆரம்பித்தனர். வருமான பங்கீட்டில் கொம்பனிப் படகுகளில் நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. தனியாள் தொழிலுக்கு உரிமையாளனாக மாறிய பின்னரே 'சம்மாட்டி' என்று அழைக்கும் முறை தோற்றம் பெற்றது.

துறையிலிருந்து தோணி தொழிலுக்குப் புறப்பட ஆயத்தமாகும் நேரம், வழமையான தொழிலாளர்களைவிட தொழிலுக்குச் செல்வதற்கென எவரேனும் வந்திருப்பார்களேயானால் அவர்களும் அழைத்துச் செல்லப்படுவார்கள். 'உழைக்கவென வந்த எவரும் திரும்பிச் செல்லக்கூடாது' என்பது வழிவழி வந்த மனிதாபிமானக் கொள்கையாகத் தொடர்கிறது. புதிதாக வருபவர்களில் தொழில்முறை தெரிந்தவர்களும், தெரியாதவர்களும் இருப்பார்கள். கரையூரைச் சார்ந்தவர்களும், சாராதவர்களும் இருப்பார்கள். எவராயினும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் மாலையில் தொழில் முடித்து வீட்டுக்குச் செல்கையில் இவர்களுக்கும் கறிக்கென மீன்கள் வழங்கப்படும். சில சந்தர்ப்பங்களில் தொழில் புறப்படுகையில் வழமையைவிட அதிகமான தொழிலாளர் வந்திருப்பாராயின் தேவைக்கு மீறிய சிலர் ஏற்றாமல் விடப்பட்டாலும் சாயந்தரம் அவர்களுக்கு 'உழைப்புக் காசு' வழங்கப்படும். கறிமீன் வழங்கப்படமாட்டாது.

தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் பணம் தினமும் ஒரே அளவாக இல்லாமல் அன்றைய வருவாய்க்கு ஏற்ப பங்கிடப்பட்டதாகவே இருக்கும். இவ்வாறு வருவாய் பங்கிடப்படுவதால் தொழிலாளியின் ஊதியத்தை 'பங்கு' என்று தொழில் நடத்துனர்கள் அழைப்பார்கள். 15 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு அரைப் பங்கும், ஏனையோருக்கு ஒரு பங்கு அல்லது முழுப்பங்கு எனப் பங்கு பிரிக்கப்படும். ஆரம்பத்தில் கூட்டாகத் தொழில் செய்கையில் பயன்படுத்திய வார்த்தைப் பிரயோகமாக இருக்கலாம். தொழிலாளர் பொதுவாக 'உழைப்புக்காசு' அல்லது 'கிடைச்சகாசு' என்றே கூறுவர்.

சிறுவர், தற்காலிகத் தொழிலாளர் தவிர்ந்த ஏனையோருக்கு நாள்தோறும் உழைப்புக்காசுடன் மேலதிக கொடுப்பனவாக குறித்த தொகை வழங்கப்படும். இதனைப் 'போடு காசு' என்பர். தற்காலிகத் தொழிலாளி வாரத்தில் மூன்று நாட்களுக்கு மேல் வருகைதருவாராயின் அவரும் உள்வாங்கப்படுவார். தொழிலில் நிறைவான அனுபவத்தைப் பெற்றவர்கள், நீண்டகாலத் தொழிலாளர்கள், பொறுப்புகளை ஏற்பவர்களுக்கும் சாதாரண தொழிலாளருக்குமிடையே போடுகாசில் வேறுபாடு இருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை தோறும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இதனைத் 'தனிப்பங்கு' என்பர். நிரந்தரத் தொழிலாளர்களுக்கே தனிப்பங்கு வழங்கப்படுகிறது. தொழிலாளியின் வரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிக்கப்படுவதுடன் போடுகாசு கொடுப்பனவின்போது இருக்கிற வேறுபாடு தனிப்பங்கிலும் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஒரு வருடத்தை; தை முதல் ஆடி வரை ஒரு தொழிற்காலமாகவும், ஆவணி முதல் மார்கழி வரை இரண்டாவது தொழிற்காலமாகவும் வகுத்துள்ளனர். இவ்விரண்டு தொழிற் காலங்களின் இறுதியில் அதாவது ஆடி மாதத்தில் புனித யாகப்பர் ஆலயத் திருவிழா, மார்கழி மாதத்தில் நத்தார் பண்டிகை ஆகியவற்றை முன்னிட்டு மேலதிக கொடுப்பனவு கொடுக்கப்படுகின்றது. இதனை 'சதக்காசு' என்பர். இந்நிதியானது குறித்த தொழிற்காலத்தில் கிரமமாக தொழிலுக்குச் செல்பவர்களுக்கு முழுமையாகவும் ஏனையோருக்கு பகுதியாகவும் வழங்கப்படும். தொழிலுக்குச் சென்ற காலங்களிற்கேற்ப கணக்கிட்டு வழங்கப்படுவதால் பண்டிகை காலங்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும். பெரும்பாலும் தொழிலாளர் குடும்பங்கள் இந்நிதியை எதிர்பார்த்திருப்பார்கள்.

தொழிலில் விபத்து மற்றும் 'திருக்கை', 'கெளிறு' போன்ற மீன்களின் முள்ளு குத்துதல், 'நெடுமுரலின்' கூர்மையான சொண்டு குத்துதல், 'ஆஞ்சாளை' என்னும் கடற்பாம்பு கடித்தல், 'ஆர்க்கு' என்னும் கடற்தாவரம் வெட்டுதல் போன்றவற்றால் ஏற்படும் காயங்கள். 'நச்சுநீர்' பட்டதால் உடலைத் தாக்கிய விஷம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட தொழிலாளரால் சில நாட்கள் தொழில் செய்யமுடியாத நிலை ஏற்படும்போது தினமும் வழமைபோல உழைப்புக்காசு வழங்கப்படும் கறிமீன் வழங்கப்படமாட்டாது.

**குத்தகை**

'தீர்வைப் பணம்' எனப்படும் உரிமைக் கோவிலுக்கான பராமரிப்பு நிதியை வருடாவருடம் தொழில் உரிமையாளர்களிடம் சேகரித்து, கோவிலில் ஒப்படைப்பதற்குரிய யுக்தியைக் கொண்டதாக குத்தகை இருந்தது. தெரிவு செய்யப்படுவோர் குத்தகை உரிமையைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை கரைவலையின் தோற்றத்துடனே ஆரம்பமாகியுள்ளது.

கேள்வி முறையில் தீர்மானிக்கப்படும் தீர்வைப் பணம் வருடாவருடம் மாறுபட்டுக் காணப்படலாம். வருட இறுதி நாளில் உரிமைக் கோவிலின் சார்பாக (உதாரணம்; அர்ச். சந்தியோகுமையோர் அப்போஸ்தலர் கோவில்) ஓர் அறிவிப்பாளர் குறித்த வீதிகளால் சென்றும், சந்திகளில் நின்றும் தீர்வைப் பணத்துக்கான ஆரம்பத் தொகையைப் பகிரங்கமாக அறிவிப்பார். இது மொத்தத் தொழில்களுக்குமான குத்தகை அறிவிப்பு அல்ல. ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனியாக குத்தகை கோரப்படும். குத்தகை எடுக்க விரும்பும் ஒருவர் அறிவிப்பாளரை அணுகி, தான் குத்தகை எடுக்கவுள்ள தொழிலின் பெயரைக் குறிப்பிட்டு (உதாரணம்; ஜேர்மன் கொம்பனி) தமது கேள்வித் தொகையைக் கூறிட, அறிவிப்பாளர் அதனைப் பகிரங்கமாக அறிவிப்பார். அவ்வேளை குத்தகையாளரிடையே போட்டி ஏற்பட கேள்வித் தொகை அதிகரித்தும் செல்லும்.

கேள்விக்கு உட்படுத்தப்படும் தொழிலில் தொழில் செய்பவர்கள் மற்றும் சம்மாட்டியின் ஊக்கம், கடந்த ஆண்டில் அவர்களது மீன்பிடி வருவாய் போன்றவற்றை குத்தகையாளர் கருத்திலெடுத்து கேள்வி கேட்பதால் தொழிலுக்குத் தொழில் கேள்வித் தொகையில் மாற்றம் இருக்கும். குறித்த தொழிலுக்காக கூடுதலான கேள்வியைக் கேட்டவருக்கு குத்தகை உரிமை வழங்கப்படும். அறிந்தவரை குத்தகைக்கான கேள்வி அறிவிப்பாளராக பல வருடங்களாக 'கருகர் அப்பு'வும், அவரைத் தொடர்ந்தும் இறுதியாக 'ஆண்டவன் சின்னத்துரை'யும் செயற்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தகையாளர், தீர்வைப் பணத்தை பகுதியாகவோ மொத்தமாகவோ கோவிலுக்குச் செலுத்துவர். ஆரம்பத்தில் தீர்வைப் பணம் மேற்றிராசனக் கோயிலுக்கு வழங்கப்பட்டது. அர்ச். சந்தியோகுமையோர் கோயில் (புனித யாகப்பர் ஆலயம்) தனிப்பங்காக இயங்கத் தொடங்கிய பின்னர் கரைவலைத் தொழில் அர்ச். சந்தியோகுமையோர் கோயிலுக்கும் கொண்டோடிவலை, பாச்சுவலைத் தொழில்கள் தொடர்ந்து மேற்றிராசனக் கோயிலுக்கும் வழங்கிவந்தன. குத்தகையாளர் தமது குத்தகைக்குரிய தொழில்களின் நாளாந்த மொத்த விற்பனையில் இரண்டு சத வீதத்தை தமக்குரிய தரகுப் பணமாகக் கழித்துக்கொள்வர். இந்நிதியிலிருந்து வருடத்தில் இரண்டு தடவைகள் ஒரு தொகைப் பணத்தை குத்தகைத் தொழில்களுக்கு வழங்குவர்.

**உழைப்பு பகிர் குடில்**

தொழிலாளருக்குரிய உழைப்பை 'பொது இடத்தில் பகிர்வதே நல்லது' என்ற நோக்கத்தில் ஒவ்வொரு தொழில் உரிமையாளரும் தமக்குப் பொருத்தமான இடத்தில் குடில் அமைத்து அதிலிருந்து பகிர்ந்தளித்தனர். அவற்றிலொன்று சிதைவுற்ற நிலையில், புதுமை மாதா கோவில் கிழக்கு வீதியில் கட்டுரையாளர் இருந்த வீட்டுக்கு அருகாமை உள்ள வளவில் 1960ஆம் ஆண்டு வரை இருந்தது. சிறு வயதில் அக்குடிலில் நண்பர்களோடு விளையாடியதை நினைவுகூரும் கட்டுரையாளர், அது 'மாதர் படகு'த் தொழிலாளருக்காகக் கட்டப்பட்டதை தனது பெற்றோர் வாயிலாக அறிந்துள்ளார். 'மாதர்' கட்டுரையாளரின் பேரனாவார்.

கிட்டதட்ட 10 அடி நீளம் 6 அடி அகலத்திலும் காணப்பட்ட அக்குடிலின் நீண்ட இரு பக்கங்களிலும் மும்மூன்று மரக் கப்புகள் நடப்பட்டு, ஓலையால் வேயப்பட்டதற்கு அடையாளமாக கூரை அமைப்பில் பொருத்தப்பட்ட பனை மரங்கள் சிலவும் இருந்தன. குடிலின் உள்ளே மரக் 'கப்பு'களை மூடி, செங்கற்களும் - சுண்ணாம்புங்கொண்டு மூன்று பக்கமும் அரைச்சுவர் கட்டப்பட்டிருந்ததை சிதைவுற்ற பகுதி அடையாளப்படுத்தியது. அரைச்சுவரின் உட்புறம் இருபது பேர்வரை அமரக்கூடிய வகையில் மூன்றுபக்கமும் சுவரோடு சேர்த்து 'குந்து' கட்டப்பட்டிருந்தது. அரைச்சுவரின் வெளிப்பக்கம் சிதைவுற்றதால் செங்கற்கள் வெளித்தெரிந்தன. குந்தின் மேற்பக்க பூச்சும், அதன்மேல் போடப்பட்டுள்ள வரி வடிவக் கோடுகளும் சேதமின்றி இருந்தன. முன்பக்கம் திறந்தபடி காணப்பட்டது. கதவு இருந்ததற்கான அடையாளம் இருக்கவில்லை.

**ஏனைய தொழில்கள்**

**வள்ளம் செலுத்துதல்**

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் ஊர்காவற்றுறையில் தரித்து நிற்கும் தமது பாரிய கப்பல்களில் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கும், குறித்த பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்கும் வள்ளங்களும், வள்ளமோட்டிகளும் தேவைப்பட்டனர். போர்த்துக்கேயர் தாம் கூடவே எடுத்துவந்த நாவாய்களுடன், கரையூரில் பாவனையிலிருந்த வள்ளங்களையும் தொழிலாளர்களையும் கூலிக்கமர்த்தி பயன்படுத்தியதால் ஒரு பகுதியினருக்கு வருவாயுள்ள தொழிலாக இருந்தது. "சமாதான காலங்களில் யாழ்ப்பாண வள்ளங்களே வர்த்தக உயிர்நாடியாயின"[34] என்ற கூற்று இதை உறுதிப்படுத்துகின்றது.

**பொருட்கள் வத்தை சேவைகள்**

கரையூரில் பிரபலம் பெற்றிருந்த வத்தைசேவை, சாதாரணமாக கரையூர் துறையிலிருந்து ஊர்காவற்றுறை, கிளாலி, பூநகரி, கந்தரோடை, மாதோட்டம் (மாதோட்டத்திலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திருக்கேதீச்சரம்' முன்னர் செல்வ நகரமாயிருந்தது. உரோமர், கிரேக்கர் எனப்படும் யவனர் தம் மரக்கலங்களோடு அங்கு வந்து தந்தம், முத்து, இலவங்கப்பட்டை முதலியன பண்டமாற்று செய்துவந்தனர்.) போன்ற பல துறைமுக நகரங்களுக்கிடையே நடைபெற்று வந்ததாக வாய்வழித் தகவல்கள் கூறுகின்றன.

போர்த்துக்கேயர் காலத்துக்கு முன்னர் வத்தைசேவை தொடர்ந்த காரணத்தாலே அவர்களது ஆட்சிக்காலத் தொடக்கத்தில் கரையூரில் 'அல்பந்தகோ' எனப்படும் 'துறைமுக தீர்வை' நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அப்பெயரே திரிவுபட்டு 'அலுப்பாந்தி' என கரையூர் துறைக்கு அழைப்புப் பெயராக மாறியது.

"வடக்கில் வணிகம்; கரையூர், மாதகல், சுதுமலை முதலான வணிக முதலாளிகளினூடாக பெருகி வளர்ந்தது. அதனால், கரையூர் கத்தோலிக்கர்களுக்கு மாதகல் வணிக குடும்பங்களோடும், சுதுமலையில் 'கொத்தால் முத்தளந்த' முத்து வியாபாரிகளோடும் திருமண உறவுகள் ஏற்பட்டன. சிலாவத்துறை, நீர்கொழும்பு திருமண உறவுகளும் கரையூரில் நடைபெற்றதனால் பல்லுறவுகள், பல திறமைகள்கொண்ட சமூகம் உருவாகிற்று.[35]

ஒல்லாந்தர் காலத்தில் தங்களதும், மக்களினதும் தேவைகருதி கரையூரில் ஏற்கனவே நடைபெற்று வந்த வத்தை சேவையை ஊக்குவித்தனர். இச்சேவைக்காக வர்ணம் தீட்டப்படாத பல வத்தைகள் கரையூரில் பாவனையில் இருந்துள்ளன. "கரையூர் குடும்பங்களின் 23 பெருங்கலங்கள் 'ரேகடி'யிலிருந்து (ரேகு - கரையூர் துறைப்பகுதி) இராமேஸ்வரம், தூத்துக்குடி, நாகப்பட்டணம், ரங்கூன் முதலாய இடங்களுக்கும், உள்நாடு; பூநகரி, மன்னார், புத்தளம், சிலாபம் முதலாய இடங்களுக்கும் திரைகடலோடி திரவியம் சேர்த்தன."[36]

"பாய்மரக் கப்பல்கள் (பாரிய வத்தையையும் கப்பல் என அழைத்தனர்) ஆனையிறவு ஊடாக வங்காள விரிகுடாவை அடைந்து தென் கிழக்காசிய நாடுகளுக்கான வர்த்தகத்தில் ஈடுபட்டன. யானைகள், யானைத் தந்தங்கள், சங்குகள், சாயமிடும் ஜவுளிகள் முதலிய பொருட்களை ஏற்றிக்கொண்டு சென்று பர்மா, சீயம், கம்போடியா, யாவா போன்ற நாடுகளில் விற்று அங்கிருந்து கடற்கலங்கள் உருவாக்கவும், கட்டடத் தேவைகளுக்குப் பயன்படுத்தவும் ஏதுவான ரங்கூன் தேக்கு மரம் மற்றும் முத்துச் சம்பா, சீரகச் சம்பா போன்ற தானிய வகைகளையும் கொள்வனவு செய்து வந்ததாக சரித்திர சான்றுகள் தெரிவிக்கின்றன."[37]

கரையூரைச் சேர்ந்த 'ஆசீர்வாதம்' என்பவரின் வத்தை இந்தியாவுக்கு 'கொப்பறா' ஏற்றிச் சென்றபோது வேகமாக வீசிய காற்று மற்றும் நீரோட்டத்தில் சிக்குண்டு மன்னார் 'தீடை'க்கு (இராமர் அணை) அண்மையில் கடலில் மூழ்கிய சம்பவத்தையும், பாலுடையார் என்பவர் நெடுந்தீவிலிருந்து தனது தோணியில் குதிரைகள் ஏற்றிவருகையில் புரட்டாதி மாதம் எட்டாம் திகதி வீசிய வேகமான காற்றால் தோணி கடலில் அமிழ்ந்ததில் அவரும் இறந்தார். அன்றைய தினம் வீசும் காற்றை 'பாலுடையார் காற்று' என்று இன்றும் சொல்லப்படும் சம்பவத்தையும் உதாரணமாகக் கொள்ளலாம்.

மன்னார் 'தேவன்பிட்டி'யிலிருந்து 'பாலியாற்று' மணலும், பூநகரி 'கௌதாரிமுனை' பகுதியிலிருந்து வெள்ளை மணலும் ஏற்றிவரப்பட்டு அலுப்பாந்தி துறைமுக் கரையோரமாக இருந்த வெளிகளில் குவியல்களாகப் போடப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. இவை தரமானவை மட்டுமல்ல தூய்மையானவை என்பதால் கட்டடத் தேவைக்கு மக்கள் பெரிதும் விரும்பிப் பயன்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபாடங்கள், கதவு, நிலைகள் மற்றும் விறகுகளுக்குப் பயன்படும் காட்டு மரங்கள் வன்னியிலிருந்து ஏற்றி வரப்பட்டன. 1861இல் அர்ச் சந்தியோகுமையோர் ஆலய கட்டுமானப்பணி நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில், நெடிதுயர்ந்த தூண்களுக்கான பாலை மரங்கள் முல்லைத்தீவு காட்டில் சேகரிக்கப்பட்டு, வத்தைகள் மூலம் எடுத்துவரப்பட்ட நிகழ்வு பரம்பரையாகப் பேசப்படுகிறது. அர்ச் சந்தியோகுமையோர் ஆலய நூற்றாண்டு விழா (1961) மலரிலும் இப்பதிவு உள்ளது.

**பயணிகள் வத்தைச் சேவை**

பயணிகள் சேவைக்கென 75அடி வரை நீளமானதும், புனித யாகப்பரின் அடையாளத்தைக் குறிக்கும் சிவப்பு, மஞ்சள் நிறங்கள் தீட்டப்பட்டதுமான 14 இற்கும் மேற்பட்ட வத்தைகள் கரையூரில் பாவனையில் இருந்துள்ளன. இவை 'அலுப்பாந்தி'யில் தரித்து நின்று பயணிகளை ஏற்றிக்கொண்டு கொழும்புத்துறை சென்று, அங்கிருந்து கொழும்பு செல்வதை வழமையாகக் கொண்டிருந்தன.

2001ஆம் ஆண்டு தை மாதம் கட்டுரையாளரைச் சந்தித்த, வயதில் முதிர்ந்த திருக்குடும்ப 'அருட்சகோதரி யுஸ்ரீனா' என்பவர், அலுப்பாந்தியிலிருந்து புறப்பட்ட தோணியில் கொழும்பு சென்று வந்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ளார். அவ்வாறே சில தடவைகள் பயணம் செய்துள்ள தாகவும் கூறியுள்ளார்.

புத்தளம் 'தலவில'விலுள்ள 'தூய அன்னம்மாள்' ஆலயத் திருவிழாவுக்கு புத்தளத்திலிருந்து கடல் மார்க்கமாகவே பக்தர்கள் செல்வர். வருடந்தோறும் ஆவணிமாதம் திருவிழாவுக்கு முன்னர் புத்தளத்திற்குத் வத்தைகளைச் செலுத்திச்சென்று, அங்கு தங்கியிருந்து பக்தர்களை ஏற்றிக்கொண்டு 'தூய அன்னம்மாள்' ஆலயம் வரை வத்தை சேவை செய்தனர். அந்நாளில் ஒவ்வொரு பக்தரிடமும் 'ஐந்து சதம்' அறவிடப்பட்டதென, இந்தச் சேவைக்குச் சென்றுவந்த உறவினர் வழிவந்தவர் மூலம் கட்டுரையாளர் அறிந்திருக்கிறார்.

கரையூர் அர்ச். சந்தியோகுமையோர் அப்போஸ்தலர் ஆலயத் திருவிழாவுக்கான 'நொவின' (நவநாள்) வழிபாடுகள் வருடந்தோறும் ஆடி மாதம் 16 - 24ஆம் திகதி வரையான நாட்களில் நடைபெறுகின்றன. இவற்றை தினமும் ஒரிரு குழுவினர் பொறுப்பேற்று நடத்துவர். வழிபாடு நடத்துவோர் பட்டியலில் 'யாழ். - கொழும்பு வத்தை சேவை', 'பொருட்கள் வத்தை சேவை' என்ற பெயர்களில், 1958ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு 'நொவின' நடைபெற்றுள்ளது. இதே பெயர்களில் 25 ஆம் திகதி (திருவிழாவன்று) புனித அன்னம்மாள் திருவிழாவுக்கான 'வெஸ்பஸ்' (நற்கருணை வழிபாடு) நடைபெற்றுள்ளது. இவை 'வத்தைகள் சேவையை' உறுதிப் படுத்துகின்றன.

**'அம்பா' பாடல்கள்**

கரையூரில் கடற்றொழிலாளர்களால் நெடுங்காலமாக பயன் படுத்தப்படும் பாடலாக 'அம்பா' காணப்படுகிறது. 'அழகிய' என்று பொருள்படும் 'அம்' என்னும் சொல்லும், 'பாடல்' என்று பொருள்படும் 'பா' என்னும் சொல்லும் ஒன்றித்து ஒலித்து நிற்பதே அம்பா'வாகும். அதாவது 'அழகிய பாடல்' என்று பொருள்.

வெயில், மழை, வேகமான காற்றின் மத்தியில் தமது ஜீவனோ பாயத் தொழிலான மீன்பிடியை செய்துவரும் தொழிலாளர்கள், கூட்டாகத் தொழில் செய்கையில் ஒத்திசைந்து செய்வதற்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப்புத் தெரியாமல் இருப்பதற்குமாக அவ்வப்போது எண்ணத்தில் தோன்றியவற்றை பாடல் களாய் வெளிப்படுத்தினர். அதனால் அவர்கள் உரிய இலக்கை அடைந்தது மட்டுல்ல தொழிலில் உள்ள கடுமையையும் மறந்தனர்.

இப்பாடல் பலர் ஒன்றித்த மீன்பிடியை இலக்காகக்கொண்ட 'மீனவர் பாடலாக' தோற்றம் பெற்றாலும்கூட, இதனை ஒத்தியதாக தோணிகள், வள்ளங்கள், கப்பல்களைச் செலுத்துகையில் ஏற்படும் கடினத்தை மறப்பதற்கேற்ற பாடல்களும் தோற்றம் பெற்றன.

இலக்கண வரப்பிற்குள் அடக்கப்படாத நாட்டார் பாடல்களான அம்பா; கேட்ட, பார்த்த, நிகழ்ந்த, எதிர்பார்த்த சம்பவங்களின் தொகுப்பாக, சூழ்நிலையின் தேவைக்கேற்ப பாடல்களக வெளிவந்துள்ளன. இவற்றில் நகைப்பு, வசை, காதல், பக்தி, வரலாறு போன்ற பல சுவைகள் கலந்திருக்கின்றன.

தொழில் சார்ந்த பலதரப்பட்ட தேவைகளினாலும், தொழிற் களங்களின் தன்மையாளும், ஏற்படக்கூடிய இடையூறுகளால் ஒன்றுபட்டு பாட வேண்டிய அவசியத்தினாலும், பல்தொழில் களின் தன்மையினாலும் பலநூறு பாடல்கள் பிறந்திருக்கின்றன. இவற்றில்; உற்சாகத்திற்காக ஒரு சொல் பாடல் வரி திரும்பத் திரும்ப வருகின்ற பாடல்களும், பல பிரிவுகள் - பல வடிவங்களை உள்ளடக்கியதான பாடல்களும் உள்ளன.

**குழுமங்கள்**

பலர் இணைந்து செய்கின்ற 'கரைவலை', 'பாச்சுவலை', 'கொண்டோடிவலை'த் தொழில்களைச் செய்பவர்களுக்கு; தொழில்த் தேவை மற்றும் வசதியின் நிமித்தம் பகுதி பகுதியாக இணையவேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால், செய்துவந்த தொழில்களைச் சார்ந்து குழுமம் குழுமமாக இணைந்து கொண்டதுடன், வாழ்விடங்களையும் ஒன்றித்தே அமைத்துக் கொண்டனர். கடற்றொழில் தவிர்ந்த தொழில்களைச் செய்துவந்த உறவினர்களும் இவர்களுடன் ஒன்றித்து வாழத் தலைப்பட்டனர்.

இக்குழுமங்கள் 'கரைவலை'க்காரர், 'பாச்சுவலை'க்காரர், 'கொண்டோடி'க்காரர் (கொண்ட டிக்காரர்) என அழைக்கப்பட்டதுடன் வீதிகளும் 'கொண்டடி வீதி', 'பாச்சுவலைத்தெரு', கரை வலைத்தெரு என அழைக்கப்பட்டன. குழுமங்களின் வளர்ச்சியில், பணத்தேக்கங்களில் ஏற்ற இறக்கங்கள் காணப்பட்டதுடன் தொழில்களின் வருவாயிலும் வேறுபாடுகள் இருந்தன. கடற்றொழிலோடு கல்வியில் நாட்டம் கொண்டவர்களாகவும், அரச பதவிகளை வகித்தவர் களாகவும் சிலர் இருந்துள்ளனர். இதற்கு எடுத்துக்காட்டாக, "1789 இல் தொம்மைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை என்பவர் ஒல்லாந்தர் கோட்டை இராணுவத்தின் காசாளராக இருந்துள்ளார். தொன்தியோகு வர்ணகுலசூரியமுதலியார் ஒல்லாந்த அரசில் 'றெஸ்பிடோர்' என்னும் மேன்மையான உத்தியோகத்தில் இருந்துள்ளமை"யைக் குறிப்பிடலாம்.[38]

1580இல் கரையூர் குடியிருப்புகளுக்கு மத்தியில் கட்டப்பட்டு, மேற்றிராசனக் கோவிலாக இருந்த யாழ். கொஞ்சேஞ்சி மாதா கோவில் திருநாள் ஆவணி 15ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இந்தத் திருநாளையொட்டி 14 நாட்கள் நடைபெறும் 'நொவின'களை தினமும் ஒரு குழுவினர் பொறுப்பேற்று நடத்திவந்தனர். வழிபாடு நடத்துவோர் பட்டியலில் கரைவலைக்காரர் 11ஆம் நொவின, கொண்டடிக்கார் 12ஆம் நொவின, பாச்சுவலைக்காரர் 13ஆம் நொவின என நடைமுறை தொடர்ந்துள்ளமை குழுமங்களின் இருப்புக்குச் சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்றிராசனக் கோவிலில் பல ஆண்டுகளாகக் காண்பிக்கப்பட்ட 'உடக்குப்பாஸ்' காட்சிப் படுத்தல், ஒன்பது 'வியாகுல பிரசங்கங்களின் வாசிப்புக்கு ஏற்றவிதமாகவே ஒழுங் கமைக்கப்பட்டது. ஒவ்வொரு பிரசங்கமும் வாசிக்கப்படும்பொழுது அதில் கூறப்படும் நிகழ்வுகள் காட்சிகளாக உடக்குகள் மூலம் நிகழ்த்திக் காண்பிக்கப்படும். இவற்றில் பாச்சுவலைக்காரர் 1ஆம் 4ஆம் பிரசங்கங்களுக்கும், கரைவலைக்காரர் 7ஆம் 8ஆம் பிரசங்களுக்கும், கொண்டடிக்காரர் 9ஆம் பிரசங்கம் மற்றும் 'மரித்த யேசுவின் வீதி வலப்' பாடல்கள் பாடுதல் போன்றவற்றுக்கும் பொறுப்பாக நின்று, உரியவற்றை நிகழ்த்திக் காண்பித்துள்ளனர். இவற்றின் மூலம் பின்னாளில் கூட குழுமங்களாகவே வாழ்கிறார்கள் என்பதை அறியமுடிகிறது. இக் குழுமங்களிடையே வாழ்வியல் நிகழ்வுகளான கொண்டாட்டங்கள், திருமணங்களில் கலப்பு நிலை காணப்பட்டாலும் குழும வேறுபாட்டில் முனைப்புக்காட்டுவது தொடரவே செய்கிறது.

காலப்போக்கில், அரச உத்தியோகங்கள், கடற்றொழில் அல்லாத தொழில்களைச் செய்தவர்கள் குழுமமாக பிரதான வீதிக்கு (பறங்கித்தெரு) வடக்கில் குடியேறிக்கொண்டனர். உதாரணமாக; முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.எக்ஸ்.மார்ட்டின், செல்லத்தம்பி இவர்களின் தந்தை மாரைக் குறிப்பிடலாம். 'மார்ட்டின் வீதி' எனப் பின்னாளில் பெயரிடப்பட்ட வீதியில் இவர்களுக்கு மட்டுமல்ல உறவினர்களுக்கும் வீடுகள், காணிகள் இருந்துள்ளன. இவர்கள், உத்தியோகங் களுக்காக உடலின் மேற்பகுதியில் அங்கி (மேலாடை) அணிந்து கொள்வதால் தம்மைத்தாமே 'மேலங்கிக் கரையார்' எனக் குறிப்பிடுவர். இச்சொல் திரிவுபட்டு 'மேலோங்கிக் கரையார்' எனச் சொல்பவர்களுமுண்டு. அதேவேளை, பிரதான வீதிக்கு தெற்கில் வாழ்ந்த கடற்றொழில் செய்பவர்களை 'கீழங்கிக் கரையார்' என்று குறிப்பிடுவதுண்டு. கடற்றொழில் செய்வதற்காக உடலின் கீழ்ப்பகுதியில் (வயிற்றோடு இணைந்த கீழ்ப்பகுதி) அங்கி அணிவதால் அவ்வாறு குறிப்பிட்டு அழைத்தார்கள். இச்சொல் திரிவுபட்டு 'கீழோங்கிக் கரையார்' என அழைப்பதுண்டு. 'ஓங்கு' உயருதலைக் குறிப்பதால் 'கீழே உயருதல்' என்று சொல்வது பொருத்தமற்றது.

கொண்டாட்டங்களில் இடம்பெறக்கூடிய விருந்துகளில் மூன்று குழுமங்களைச் சேர்ந்தவர்களைத் தவிர ஏனைய சமூகத்தவரை அனுமதிக்காத நடைமுறை இருந்திருக்கிறது. கொண்டாட்டங்களின் போது விருந்து பரிமாறப்படுவதற்குமுன் பந்தியில் அமர்ந்திருப்பவர்களை நோட்டமிட்டு இனங்கண்டு கொள்வதற்கென ஒரு 'குடிமகன்' இருப்பார். அவர், மூன்று குழுமங்களைச் சார்ந்தவர்கள் மட்டும் பந்தியிலிருந்தால் விருந்து பரிமாற அனுமதி கொடுப்பார்.

**கத்தோலிக்கம்**

மன்னாரில் ஏற்பட்ட மதமாற்றமும், அதைத்தடுக்க மார்கழி 1544இல் மதம் மாறியவர்களில் 600-700 பேர் வரை சிரச்சேதம் செய்யப்பட்டதுமே யாழ்ப்பாணத்தில் விரைவாக கத்தோலிக்கம் வளரக் காரணமாய் அமைந்தது. 'சங்கிலியனைத் தண்டிக்கும் போர்' என்று ஆய்வாளர்களால் கூறப்படும் 1560ஆம் ஆண்டு நிகழ்ந்த போர்த்துக்கேயரின் யாழ்ப்பாண படையெடுப்பில் போர்த்துக் கேயருடன் வருகைதந்த பிரான்ஸிஸ்கன் சபைக் குருக்களே சமய போதனையின் நிமித்தம் யாழ்ப்பாண மண்ணில் திருப்பாதம் ஊன்றிய முதலாவது குருப்பிரசாதிகள் என ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை, "சத்தியவேத தேவாலயம் முதன் முதல் யாழ்ப்பாணத்திலே 1580ஆம் வருடம் கட்டப்பட்டது. 1591ஆம் வருடம் அந்திரே பூர்த்தாடு டி மென்டோசா என்னும் போர்த்துக்கிஸ் தளகர்த்தனால் யாழ்ப்பாணக் குடாநாடு முழுமையும் கீழ்ப்படுத்தப்பட, குடிசனங்கள் ஞானஸ்நானம் பெற்றுச் சத்தியமறையைக் கையேற்றார்கள்." [39] என்ற தகவல் உறுதிப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சம்பவம் பற்றி மேலும் அறியவருவது; "... புவிராசபண்டாரத்திடமிருந்து (பரராசசேகரன்) கைப்பற்றிய பூமியை (யாழ்ப்பாணத்தை) தொடர்ந்து போர்த்துக்கேயரின் கீழ் வைத்திருப் பதிலுள்ள இடர்ப்பாட்டை அந்திரே பூர்த்தாடு டி மென்டோசா நன்குணர்ந்தான். அதனால் ஊர்ப்பிரமுகர்களைக் கூட்டி, எதிர்மன்ன சிங்ககுமாரன் (பெரியபிள்ளையின் மகன்) என்ற அரசகுலத்தானை யாழ்ப்பாணத்தில் மன்னனாக நியமித்து, போத்துக்கேயரின் மேலாதிக்கத்தை ஏற்று அரசாளும்படி பணித்துப் பெரும் திரவியத் திறைகளுடன் மரக்கலமேறினான்."[40] போர்த்துக்கேயரின் மேலாதிக்கத்தை ஏற்று அரசாளும் புவிராசபண்டாரத்தால் கத்தோலிக்க சமயத்துக்கு எதிராக செயற்பட்டிருக்க முடியாது.

"1580இல் (கரையூர் குடியிருப்புகளுக்கு மத்தியில்) கட்டப்பட்ட தேவாலயம் விரிவாக்கம் செய்யப்பட்டபோது 11ஆம், 12ஆம், 13ஆம் நொவினகளை தற்காலம் நடத்தி வருபவர்களின் முன்னோர்களால் (கரையூர் மக்கள்) விலைக்கு வாங்கப்பட்ட காணிகளின் கிரயம் சேர்த்துக் கொடுக்கப்பட்டதுடன் சிலர் தாங்கள் குடியிருந்த காணிகளையும் கோயிலுக்கு நன்கொடையாகக் கொடுத்தார்கள்"[41] எனக் காணப்படும் பதிவின் மூலம் கரையூர் மக்களின் வகிபாகம் தெளிவாகிறது.

"கரையூர் மக்கள் தமக்கென "1892ஆம் ஆண்டு அர்ச். சந்தியோகுமையோர் அப்போஸ்தலர் ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டு தனிப்பங்காக பிரியும் வரை அவர்களின் ஞானஸ்நானம், முதல் நன்மை, உறுதிபூசுதல், திருமணம் மற்றும் மரணப்பதிவுகள் மேற்றிராசனக் கோயிலிலேயே செய்யப்பட்டுள்ளன."[42]

எனவே, மேற்குறித்த குறிப்புகளின் பிரகாரம் கரையூர் மக்கள் 1580இற்கு முன்னரே கத்தோலிக்கர்களாக மாறியுள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

**மெய்விவாகம் (திருமணம்)**

கத்தோலிக்கராக மாறிய கரையூர் மக்களின் மரபுவழி திருமணங்கள் வாரத்தில் சனிக்கிழமை காலையில் மட்டுமே நடைபெற்றன. திருமணத்திற்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் நிறை வேறியதும் புதன்கிழமை மதியம் திருமணப் பந்தலுக்கான முதற் கம்பு நடப்படும். இக்கம்பின் நுனியில்; மஞ்சள் தோய்த்த துணியால் ஒரு சதம், குங்குமம், மூன்று மா இலைகள் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். இக்கம்பு 'கன்னிக்கால்' என அழைக்கப்பட்டது.

திருமணமன்று மணப்பெண்; தூய வெண்மை நிறத்தில் கைக்கு சுருக்கு வைத்த மேற்சட்டை, மற்றும் சேலை அணிந்து, கைகள் மறைக்கப்பட்ட வெள்ளைநிற கையுறையுடன் தலையில் வெள்ளைக் கீரிடமும், கீரிடத்திலிருந்து முதுகுப்பக்கமாக நீளமான துப்பட்டாவும் அணிந் திருப்பார். முகம் துப்பட்டாவால் மூடப்பட்டிருக்கும். இவற்றில் சில போர்த்துக்கேய குருக்களின் ஆலோசனையாக இருக்கலாம்.

மணமகன்; வெள்ளை நிறப் பட்டுவேஸ்டி, 'நைஸனல்' அணிந்து, சால்வையை நீளப்பாக்கில் ஒடுக்கமாக மடித்து கழுத்தைச் சுற்றி போட்டிருப்பார்.

அலங்கரிக்கப்பட்ட இரட்டைக் குதிரை வண்டிலில் தனித்தனியாக மணமகனும், மணப் பெண்ணும் ஆலயத்துக்கு ஏற்றிச் செல்லப்படுவர். ஒரே நேரத்தில் ஐந்து வரையான மணமக்கள் ஒன்றாக இருத்தப்பட்டு திருமணத் திருப்பலி நடைபெறும். திருப்பலியின் இடையில் குருவானவ ரின் முன்னால் மணமக்கள் தனித்தனியாக தமது சம்மதத்தை பகிரங்கமாகத் தெரியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியதையடுத்து திருமணத்தின் அடையாளமாக குருவானவர் இருவரது கைகளையும் இணைத்து ஆசீர் வழங்குவதுடன், மணமகன் மணப்பெண்ணுக்கு மஞ்சள் நூலில் கத்தோலிக்க அடையாளம் பொறிக்கப்பட்ட 'வட்டப் பென்ரன்' அமைப்பிலான தங்கத் தாலி அணிவிப்பார். இதனைக் 'கைப்பிடித்தல்' என்பர்.

மணமக்கள் குதிரை வண்டிலில் ஏற்றப்பட்டு மணப்பெண்ணின் வீட்டுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவர். அங்கு சிற்றுண்டி வழங்கப்படும். அங்கிருந்து ஒரு குழுவினர் மணமகன் வீட்டுக்கு அவரை அழைத்துச் சென்று 'கூறை'ச்சேலை எடுத்துக்கொண்டு திரும்பியதும், மணப்பெண் மணமகனின் காலடியில் முழங்காலில் இருக்க, மணமகன் அவளுக்கு கூறையை மொட்டாக்காக அணிவிப்பார். தொடர்ந்து மணப்பெண் உள்ளே சென்று கூறை அணிந்து வந்த பின்னர் அனைவருக்கும் உணவு பரிமாறப்படுவதுடன் திருமணவிழா நிறைவுபெறும்.

தம்பதிகளின் இரவுப் படுக்கையில் வெள்ளைச் சேலை விரிக்கப்பட்டிருக்கும். வயதில் முதியவர் அல்லது பெண்ணின் தாய் இதனைச் செய்வார். மறுநாள் காலை 'வெள்ளாப்பு' (விடியலுக்கு முன்) நேரம் மாப்பிள்ளையின் வீட்டிலிருந்து அவரது தாய் வந்திருப்பார். அவரை வரவேற்ற பெண்ணின் தாய், அவருடன் சேர்ந்து தம்பதிகளின் அறைக் கதவைத் தட்டுவர். தம்பதிகள் எழுந்து கதவைத் திறக்கும்போது தாய்மாரின் முகத்திலேயே விழிப்பர். தம்பதிகள் வெளியேற; பெண்ணின் தாய் மாப்பிள்ளையின் தாயை அறைக்குள் அழைத்துச் சென்று தன் மகளின் 'கன்னித்தூய்மை'யை காண்பிப்பார்.

மகிழ்ச்சியடைந்த மாப்பிள்ளையின் தாய் விடைபெறும்போது, மகனின் கையில் 'சுருட்டு'ம், தீப்பெட்டியும் கொடுத்து வீட்டுக்கு அழைத்துச் செல்வார். பின்னர் பெண்ணின் சகோதரன் அங்கு சென்று மைத்துனரை அழைத்து வருவார். இடைப்பட்ட நேரத்தில் தம்பதிகளின் அறை துப்பரவு செய்யப்பட்டுவிடும்.

வாய்வழிவந்த தகவல்களையும், 1965ஆம் ஆண்டளவில் குருநகர், தண்ணீர்த்தாங்கி 4ம் குறுக்கு வீதியில் உள்ள வீட்டில் கட்டுரையாளரால் பார்வையிப்பட்ட 'அலங்கரிக்கப்பட்ட இரட்டைக் குதிரைவண்டிலின் முன்னால் மணமக்கள் நிற்பதை வெளிப்படுத்தும் வரைபடத்தையும்' ஆதாரமாகக் கொள்ளலாம்.

**மரணச்சடங்கு**

'மரணத்தை' ஒரு சடங்காகவே பேணிக் கடைப்பிடித்தனர். மரணம் நிகழ்ந்த தகவல் கோயில் குருவானவருக்கு அறிவிக்கப்பட்டதும் அதனை ஊருக்குத் தெரியப்படுத்துவதற்காக கோயில் மணியை உரிய முறையில் அதாவது 'டாண், டாண் - டாண், டாண்,' என தனித்தனி ஒலியாக சிறிதுநேரம் தொடராக அடிக்க ஏற்பாடு செய்வார். இதனை 'இறப்பாரித்தல்' என்பர். மேலும் தகவல் தெரிவிப்பதற்காக வீட்டில் 'பறைமேளம்' அடிக்கப்படும். மேளம் அடிப்பதில் மாறுபட்ட முறைகள் கையாளப்படுவதால் உறவினர், நெருக்கமானவரின் வருகையை மரணவீட்டாரால் கிரகித்துக்கொள்ள முடியும். இதனை மரண வீட்டாரின் உறவினர் நெறிப்படுத்துவார்.

மரணம் நிகழ்ந்த அன்று இரவானதும் பலர் இணைந்து அதிகாலை வரை 'ஒப்பாரி' பாடுவர். மறுநாள்; அது எந்நாளாக இருந்தாலும் பிற்பகல் 4.00 மணியளவில் நல்லடக்கம் செய்வதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதவுடல் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இதற்கு மர வேலைப்பாடுகளுடன் கூடிய 'ஒற்றைக் குதிரைவண்டி' பயன்படுத்தப்பட்டது. கோயில் நிர்வாகத்தினரின் பொறுப்பில் இருந்த வண்டிலின் மத்தியிலுள்ள பீடத்தில் வெள்ளைத்துணி விரிக்கப்பட்டும், வெள்ளை நூல் வேலைப்பாட்டுடன் கூடிய ஒடுங்கிய கறுப்பு நிற துணியினால் வண்டில் அலங்கரிக்கப்பட்டும் இருக்கும். குதிரை வாடகைக்கு விடப்படுவதால் குதிரையின் உரிமையாளர் அல்லது குதிரையை வாடகைக்குப்பெறும் ஒருவர் வண்டிலைக் கோவில் நிர்வாகத்திடமிருந்து பெற்றுப் பயன்படுத்துவார்.

ஊர்வலம் ஆரம்பமாகும் நேரம் கோவில் மணி தொடராக இறப்பாரிக்கும். ஆலயப் பணியாளர்கள், தமக்குரிய சீருடை அணிந்து, சிலுவை மற்றும் மெழுகுதிரி தாங்கிகளை ஏந்தியபடி சிறிய மணியை அடித்தவாறு முன்செல்ல, கோவில் சங்கிலித்தாம் நல்மரணச் செபத்தை உரத்து வாசித்தவாறு அவர்களோடு செல்வார். பூதவுடலுக்கு முன்னால் 'ஒப்பாரி' பாடியவாறு பாடகர்கள் செல்வர். பின்னாளில் குதிரை வண்டிலில் மட்டுமல்லாமல் 'பாடை'யில் ஏந்திச் செல்வதும், ஊர்வலத்திற்கு முன்னால் வெள்ளை உடை அணிந்த போர்த்துக்கேய இனத்தவரால் 'பான்ட்' இசை வழங்கிச் செல்வதும் நடைமுறையிலிருந்தது.

1959ஆம் ஆண்டு தனது பேர்த்தியின் மரணச்சடங்கின்போது குதிரைவண்டில் மற்றும் வெள்ளை உடை அணிந்த 'பான்ட்' குழுவினர் பங்குகொண்டதையும், நெடுநாளாக புனித யாகப்பர் ஆலய வளவின் ஒற்றைக் குதிரை வண்டில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதையும் கட்டுரையாளர் உறுதிப்படுத்துகிறார்.

மேற்றிராசனக் கோயில் நிர்வாகத்தின் பொறுப்பிலிருந்த சேமக்காலையில் மத அனுஷ்டானத்தோடு இறந்தவரின் பூதவுடல் அடக்கம் செய்யப்படும். இதில் கலந்துகொண்டு திரும்பியவர்களுக்கு வீட்டில் தேநீர் வழங்குவதுடன் உடன் சோறுக்கும், 'ஏழுச்செலவு'க்கும் அழைப்பும் விடுவதுடன், தவறியவர் வீடுகளுக்குச் சென்றும் அழைப்பு விடப்படும்.

'ஏழுச்செலவு' அல்லது 'பிச்சை' என்று அழைக்கப்படும் விருந்து, மரணம் நிகழ்ந்த ஏழாவதுநாள் நடைபெறும். அன்றையதினம் இறந்தவரின் பிரேதம் கிடத்தப்பட்ட இடத்தில் பெரிய 'பனையோலைப் பாய்' விரிக்கப்பட்டு அதன்மேல் கணிசமான சோறு பரவப்பட்டிருக்கும். பாயைச் சுற்றிவர உறவினர்களால் வைக்கப்பட்ட ஓலைப்பெட்டிகளிலும் சோறு போடப்பட்டிருக்கும். இறந்தவர் வாழ்ந்தபோது அருந்திய உணவு வகைகள், கறிகள், சிற்றுண்டிகள், பழங்கள், பலகாரங்கள், பானங்கள் போன்றவை பெட்டிகளில் பங்கிட்டு போடப்பட்டு மிகுதி பாயில் பரவிக்கிடக்கும் சோறில் கொட்டப்படும்.

மதியம் உறவினர் கூடியிருந்து விசேட இரங்கல் வழிபாடு நடத்திய பின்னர் இறந்தவரின் பிள்ளைகள், சகோதரர்கள் பாயில் கிடந்தவற்றைக் குழைத்து ஆரம்பித்துவைக்க தொடர்ந்து அனுபவமுள்ளவர்களால் குழைக்கப்பட்டதும் உறவினர் தாமாகக் கோலி அருந்துவார்கள். இதனை 'உரிமைச்சோறு' அல்லது 'மேசைச்சோறு' என்பர். இதை அருந்துவதன் மூலம் அவர்கள் மனநிறைவு அடைகின்றனர். தத்தமது பெட்டிகளையும் எடுத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுவர்.

வசதி கருதி வீட்டுக்கு முன்னால் போடப்பட்டுள்ள பந்தலில் யாசிப்பவர் மற்றும் வறியவர்களால் ஓலைப் பெட்டிகள் பல வைக்கப்பட்டிருக்கும். இவற்றில் சோறுடன், ஐந்து வகையான கறிகள் போடப்படும். இதன் காரணமாகவே ஏழாம் நாள் விருந்தை 'பிச்சை' என அழைக்கும் வழக்கம் உண்டானது. தொடர்ந்து; அழைப்பை ஏற்று வருகைதந்தவர்களுக்கு உலர்ந்த 'வாழைத்தடலில்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவும், உரிமைச்சோறில் ஒரு பிடியும் பரிமாறப்படும். நிகழ்வு முடிந்ததும், உறவினர், நெருக்கமானவர்களில் சிலர் மரணவீட்டாரை அணுகி பணம் வழங்கிச் செல்வதுமுண்டு. இதனை, மீளளிக்கபடவேண்டிய பணமாகவே மரணவீட்டார் குறித்துக்கொள்வர். இறுதியாகப் பந்தல் அவிழ்க்கப்படும்.

**ஒப்பாரி**

காலத்தால் அழியாது தொடர்ந்துகொண்டிருக்கும் மரபுவழிப்பட்ட நாட்டார் இலக்கியங்களில் ஒன்று 'ஒப்பாரி'. கரையூரில், கத்தோலிக்க மதத்தின் வருகைக்கு முன்னரே மரண வீடுகளில் ஒப்பாரி பாடும் முறை இருந்துள்ளது. அந்நாளில் 'வைகுந்த அம்மானை' பாடப்பட்டதாக அறியப்படுகிறது. மறைபரப்பு நோக்கோடு வருகைதந்த மதபோதகர்கள் மக்களால் பெரிதும் விரும்பிப் பாடப்பட்ட நாட்டார் இலக்கியங்களின்பால் தமது கவனத்தைச் செலுத்தி, அவற்றை ஆக்கும் ஆற்றலையுடையவர்களாக இனங்காணப்பட்ட மதம்மாறிய கிறிஸ்தவர்களைக்கொண்டு, 'வைகுந்த அம்மானை'க்கு மாற்றீடாக 'மரணத்தின் திறவுகோல்', 'இயேசுநாதர் அம்மானை'யை உருவாக்கினார்கள். இவை மரண வீடுகளில் பாடப்பட்டமையால் 'ஒப்பாரி' என அழைக்கப்பட்டது.

துன்பியல் இலக்கியமான இது, கிறிஸ்தவ மதத்தின் கருப்பொருளாக விளங்கும் கிறிஸ்துவின் பாடுகள், மரணம் பற்றியதாகவும், மரியன்னையின் புலம்பலாகவும் அமைந் துள்ளது. ஆலய வழிபாடுகளைக் கருத்திற்கொண்டு இயற்றப்பட்ட இலக்கியங்கள் சில, காலப் போக்கில் கிறிஸ்தவ மக்களின் மரணவீடுகள், சவஅடக்கப் பவனி போன்றவற்றிற்குப் பயன்படுத்தத் தொடங்கியபோது பாமர மக்களையும் இலகுவாகச் சென்றடைந்ததுடன் பிரபல்யமும் பெற்றது.

கரையூரைப் பொறுத்தவரை மரணம் நிகழ்ந்த இரவு 'ஒப்பாரி' பாடுதல் முக்கியதொரு நிகழ்வாகும். இரவு மரணவீட்டில் இருப்பவர்கள் விழித்திருப்பதற்காகவும், ஊருக்குத் தகவலைத் தெரியப்படுத்துவதற்காகவும் ஒப்பாரி பாடப்படுகிறது. இப்பாடல்கள் கிறிஸ்துவின் பாடுகளோடு பின்னப்பட்டவையாக இருந்தாலும் அவை, மரணத்தின் பயங்கரத்தை, 'மரணம் ஒவ்வொருவருக்கும் நிகழும்' என்ற உண்மையை வெளிப்படுத்துகின்றன.

ஒருவர் மாறி ஒருவர் ஒப்பாரிப் பாடல்களை ஒசை நயத்துடன் பாடுவதும், ஏனையோர் ஒருமித்து கோரஸ் எழுப்புவதும் கேட்பவர்களின் உள்ளத்தை உருக்காமல், உணர்வைக் கிளறாமல் இருக்கமாட்டாது. கரையூர் மக்கள் நெடுங்காலமாக நாட்டுக்கூத்து பாடுவதில் உச்சநிலையில் இருந்தமையால் இராகம் மாறாமல், தாளம் பிரளாமல் பாடலைப் பாடக் கூடியதாக இருந்தது. கட்டுரையாளரால் 16 ஒப்பாரி இலக்கியங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**உடக்குப் பாஸ்**

சாதாரண மனிதனின் அளவில், ஒரு காலத்து வரலாற்று மனிதனின் தோற்றத்தில், மரத்தினில் செதுக்கப்படும் உருவமே 'உடக்கு'. வரலாற்று நிகழ்வுகளைக் காட்சிப்படுத்துவதற்கு ஏற்றவாறு நூல்களின் துணைகொண்டு, மனிதர்கள் இயக்குவதற்கு ஏதுவாக உடக்குகளின் உடற்பாகங்கள் அசையக்கூடிய வகையில் பொருத்தப்பட்டிருக்கும். இயேசு வாழ்ந்த காலத்து மனிதனை வெளிப்படுத்தி நிற்கும் உடக்குகளில் பாத்திரத்திற்கு ஏற்ற உணர்ச்சிகள் முகத்தில் பிரதி பலிப்பதைக் காணலாம். உதாரணமாக; சாட்டையால் அடிக்கப்படும் இயேசுவின் உருவத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபட்டதால் உடலில் ஏற்பட்ட சதைக் கிழிவுகள், வீக்கங்கள், தசை இறுக்கங்கள், இரத்தம் வழிதல் மற்றும் சிலுவையில் அறையுண்ட இயேசுவின் உருவத்தில் நரம்புகள் புடைத்து, மார்பு எலும்புகள் வெளித்தெரிதல் போன்றவை தத்ரூபமாகச் செதுக்கப்பட்டு உரிய வர்ணம் பூசப்பட்டிருக்கும்.

'உணர்ச்சி ததும்பும் காட்சி' எனப்பொருள்படும் 'பாசோ' என்ற போர்த்துக்கேய சொல்லிலிருந்து மருவியதே 'பாஸ்'. இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை, அவர்பட்ட துன்பங்களை சித்திரிக்கும் வகையில் உடக்குகள்கொண்டு இயங்கு நிலையில் காண்பிக்கப்பட்டதால் 'உடக்குப்பாஸ்' என்று அழைக்கப்படலாயிற்று. இயேசுவின் திருப்பாடுகள் வியாகுலப் பிரசங்கத்துடன் இணைந்தே காட்சிப்படுத்தப்படுவதால் காட்சியோடு பின்புலமாக ஒலிக்கும் வியாகுல பிரசங்கம் பாஸிற்காகவே எழுதப்பட்டுள்ளதென்ற எண்ணத்தை தோற்றுவிக்கும்.

இந்தியாவில் கோவா மாநிலத்தில் பிறந்து, நன்கு தமிழ் கற்ற, ஆரம்பப் பணியை யாழ்ப் பாணத்தில் ஆற்றிய 'யாக்கோமே கொன்சால்வேஸ்' அடிகளாரால் 1730இல் எழுதப்பட்டதே வியாகுல பிரசங்கம். இது உடக்குபாஸிற்கு அத்தியாவசியமான ஒன்றாக இருப்பதாலும், உடக்குப்பாஸ் 'யாழ்ப்பாண மரபு' என்று ஆய்வாளர்களால் கூறப்பட்டிருப்பதாலும் யாழ்ப்பாண மேற்றிராசனக் கோயிலில் சமகாலத்தில் தோற்றம் பெற்றுள்ளது எனக் கருதலாம்.

தோணிப் பாய்மரங்கள், பாய்கள், பருமல்களைக்கொண்டு மூன்று காட்சிகளை நிகழ்த்திக் காண்பிக்கும் வகையில் பாஸிற்கான பிரமாண்டமான கொட்டகையும், ஒருவர் நின்று பிரசங்கத்தை உரத்து வாசிப்பதற்கு ஏதுவாக கொட்டகையிலிருந்து ஐம்பது அடிக்கு முன்னால் சிறு மேடை அமைக்கப்பட்டும், ஆள் உயரத்திற்கு மேலாக காட்சிப்படுத்தல்கள் தெரியுமாறு கொட்டகையின் முன்பக்கம் கிடுகால் மறைக்கப்பட்டும், கொட்டகையின் பின்புறம் காட்சிச் சூழலுக்கேற்ப வரையப்பட்ட 'சீன்'கள் கட்டப்பட்டும் இருக்கும். உடக்குகளைத் தாங்கியோரும், இயக்குவோரும், ஒழுங்குபடுத்துவோரும் கொட்டகையில் மறைந்துபோக காட்சிகளைப் பின்புலமாகக்கொண்டு உடக்குகள் மட்டும் உயிருள்ள மனிதர்கள்போல நடமாடும்.

கொட்டகையில், ஒருவர் அல்லது இருவர் இணைந்து தூக்குவதற்கு ஏற்றவாறு உடக்குகளுக்கான மேடை பயன்படுத்தப்படும். உடக்கின் தலை, கண்கள், கைகளை அசைத்துப் பாவனை செய்வதற்கென அவற்றில் நூற்களின் ஒருபக்க முனைகள் கட்டப்பட்டு, உயரத்திலுள்ள 'கப்பி'கள் ஊடாக மறுபக்க முனைகள் செலுத்தப்பட்டு இயக்குபவர்கள் இருக்குமிடம்வரை கொண்டுவந்து விடப்பட்டிருக்கும். காட்சிக்கேற்ப உடக்குகள் ஒவ்வொன்றையும் ஒருவர் அல்லது இருவர் தூக்கிவர, இயக்குபவர்கள் உடலுறுப்புகளை நூற்களின் மூலம் இயக்கி உரிய காட்சியை வெளிப்படுத்துவர்.

வியாழக்கிழமை இரவு இயேசு யூதர்களால் பிடிக்கப்பட்டது முதல் சிலுவை தோளில் வைக்கப்படும் வரை காட்சிகள் நடைபெறும். வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு 'வயல்பாஸ்' என அழைக்கப்படும் கோயிலுக்கு கிழக்குப்பக்கமிருந்த வயல்வெளியில் நடைபெறும் காட்சிப்படுத்தல்களில் சிலுவை சுமக்கும் இயேசு, இயேசுவின் தாயான மரியாள், வெரோணிக்கா என்னும் ஒரு பெண், சீரேன் ஊரவரான சீமோன், ஜெருசலேம் நகரப் பெண்கள் ஆகியோரின் உடக்குகளை சுமந்தவாறு வரும் குழுவினர் அங்காங்கு பிரிந்து செல்லத் தொடங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாகுல பிரசங்கம் வாசிப்பவர், ஒப்பாரி, தேவாரப் பாடல்களைப் பாடுபவர்கள் உடக்குகளின் பின் செல்வார்கள். சிலுவை சுமத்தப்பட்ட இயேசுவின் உடக்கைத் தாங்கிய மேடை நீளமாக இருப்பதுடன் அவர், மூன்று முறைகள் தரையில் முகங்குப்புற விழும் காட்சிப்படுத்தலை மேற் கொள்வதற்கு விசேட ஏற்பாடாக மரக்குத்தியிலான 'அச்சு' மேடையில் பொருத்தப்பட்டிருக்கும். பிரிந்துசென்ற உடக்குகள் பின்வரும் நிகழ்வுகளுக்காக குறித்த இடங்களில் ஒன்றையொன்று சந்திக்கும்.

1. இயேசுவை அவரது தாயார் மரியாள் சந்தித்தல்.
2. இயேசு சிலுவை சுமக்க சீரேன் ஊரவரான சீமோன் உதவிசெய்தல்.
3. வெரோணிக்கா என்னும் பெண் இயேசுவின் முகத்தைத் துடைத்தல்.
4. இயேசுவைப் பார்த்து ஜெருசலேம் நகரப் பெண்கள் அழுதல் என்பனவாகும்.

இவற்றைத் தொடர்ந்து இயேசு தரையில் முகங்குப்புற விழுகிற நிகழ்வு மூன்று இடங்களில் காட்சிப்படுத்தப்பட்ட பின்னர் ஐந்து உடக்குகளும் தொடராக கொட்டகைக்குச் செல்லும். இவற்றில் கலந்துகொள்ளும் மக்கள் 'கிறிச்சான்' (துக்கப் பறையின் ஒலியை எழுப்பும் மரத்திலான கருவி) ஒலி எழுப்பியவண்ணம் தொடருவர்.

அன்றைய இரவுக் கொட்டகை காட்சிப்படுத்தலில்; இயேசுவின் கை, கால்கள் சிலுவையில் அறையப்படுதல், சிலுவையில் தொங்கும் இயேசுவுக்கு உண்டான உடல் வேதனைகள், அவரது இறுதி வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் மரியாளின் இதயம் வாள் ஊடுருவது போன்ற வேதனையை அநுபவிக்கிறது என்பதை வெளிப்படுத்த ஏழு வாள்கள் ஒவ்வொன்றாய் இதயத்தில் குத்துவது, இயேசு மூன்று தடவைகள் ஏகி (சற்று உயர எழுந்து) மூன்றாவது தடவை கண்களை மூடி மரணத்தை தழுவிக்கொள்வது, சிலுவையிலிருந்து இயேசுவின் திருவுடல் இறக்கப்பட்டு தூக்கிச் செல்லப்படுவது போன்ற காட்சிகள் துன்பம் நிறைந்ததும், உணர்ச்சிகரமானதுமாக இருக்கும். மனிதர்களால் நடிக்கப்படும் திருப்பாடுகளின் காட்சிகள் முன்னிலைப்பெறத் தொடங்கியதும் உடக்குப் பாஸீம் மரணத்தின் வாசலை நோக்கிச் சென்றது. இயேசுவை சிலுவையில் அறைந்து, இறக்கும் காட்சிகள் தற்போதுவரை புனித யாகப்பர் ஆலயத்தில் வருடந்தோறும் நிகழ்த்திக் காண்பிக்கப்படுகின்றன.

### பாடசாலைகள்

#### திருஇருதயப் பாடசாலை

1873ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆறு 'திருக்குடும்ப சபை சகோதரிகள்', ஆனி 1873இல் தமது சபைத் தலைவி 'காடி முஆசான்' (Hardy moison) இற்கு எழுதிய கடிதங்களில் பின்வரும் தகவலை அறியக்கூடியதாக இருக்கின்றது. கடிதங்கள் உரோமாபுரியிலுள்ள ஆவணக் காப்பகத்திலிருந்து பெறப்பட்டு 'அருட் சகோதரி பிறிஜிற் மல்லிகா' அவர்களால் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டவை.

"மீன்பிடிப்பவர் பகுதியில் கட்டுமானப்பணி நடைபெற்றுக் கொண்டிருந்த அர்ச்.சந்தியோகுமை யோர் கோயிலின் கிழக்குப் பக்கம் 'திருக்குடும்ப சபை' சகோதரிகளால் பெண்கள் பாடசாலை நிர்மாணிக்கப்பட்டது. 'திரு இருதயப் பாடசாலை' என்று பெயரிடப்பட்ட இப்பாடசாலை, 14.04.1873 அன்று (உயிர்த்த ஞாயிறின் மறுநாள்) ஆயர் கிறிஸ்ரோப்பர் பொன்ஜீன் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. அவ்வேளை பெற்றோரும் அதிகாரிகளும் வந்திருந்தார்கள். மூன்றாம் நாள் புதன்கிழமை பாடசாலை ஆரம்பமானது. அன்று 80



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் இணைந்துகொண்டனர். பின்னர் மேலும் 76 பேர் இணைந்து கொண்டனர். ஒவ்வொரு ஞாயிறும் எம் சகோதரிகள் மறைக்கல்வி வகுப்புக்குச் செல்வார்கள். திரு இருதயப் பாடசாலையில் வகுப்பு நடைபெறும்.

23 புரட்டாதி 1873இல் எழுதப்பட்ட கடிதத்தில்; "திரு இருதயப் பாடசாலை நன்றாக நடைபெறுகின்றது. முன்னேற்றம் அடைந்து வருகின்றது. பலருக்குச் செபம் தெரியும். வாசிக்க எழுதத் தெரிந்த பிள்ளைகளுக்கு கணிதமும் தையலும் படிப்பிக்கிறோம். மற்றப்பிரிவு கரும்பலகையில் வாசித்து நிலத்தில் எழுதுகிறார்கள். இதுவரை 160 பிள்ளைகள் சேர்ந்துள்ளனர்." [43] என உள்ளன.

திரு இருதயப் பாடசாலை 03.10.1909 இல் அர்ச் சந்தியோகுமையோர் கோயில் பங்குத்தந்தை வண. பி.ஏ.மருசலீன் அடிகளாரின் மேற்பார்வைக்குள் கொண்டுவரப்பட்ட பின்னர் 'சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அடிகளாரின் மேற்பார்வைக்குள் கொண்டுவரப்பட்டபோதும் திருக்குடும்ப சபை சகோதரிகளின் கல்வி நடவடிக்கைகளில் மாற்றம் இருக்கவில்லை.

**சவிரியப்பா ஆண்கள் பாடசாலை**

வண. ஹென்றி யூலன் ஆண்டகையின் அனுமதியுடன், கத்தோலிக்க சமய தொண்டாற்றுவதற்கென 'உத்தரியமாதா கூட்டம்' 1906இல் உருவாக்கப்பட்டது. உத்தரியமாதா கூட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் 'சவிரியப்பா' என்பரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் ஓலையால் வேயப்பட்ட மண்டபத்தில் 'சவிரியப்பா பாடசாலை' என்ற பெயரில் ஆண்களுக்கான பாடசாலை நடைபெற்றது. கரையூரில் ஆரம்பிக்கப்பட்ட ஆண்களுக்கான முதல் பாடசாலை இதுவாகும். அன்றைய தேவைக்கு அப்பாடசாலை பெரும் வரப்பிரசாதமாக இருந்ததால் பலரும் வயது வேறுபாடின்றி இணைந்து கல்வி கற்றனர். கட்டுரையாளரின் தந்தை தான் மூன்றாம் வகுப்பு வரை 'சவிரியப்பா பாடசாலை'யில் படித்தாகக் கூறியுள்ளார்.

**நிறைவாக**

யாழ்நகரில் தொன்மைமிகு ஊர்களிலொன்று 'கரையூர்' என்பதை தெளிவுபடுத்தும் வகையில் கிடைக்கப்பெற்ற தகவல்கள் எடுத்துக்காட்டுக்களாக முன்வைக்கப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளை உள்ளடக்கிய கரையூரின் வரலாற்றுத்தொடரை வாய்வழித் தகவல்களாய் நினைவுகூரக்கூடிய மனிதர்களை, அடையாளங்களை நாட்டில் கோலோச்சிய அசாதாரண சூழல் துவம்சம் செய்துவிட்டது. மிகச் சிறிய வயதிலிருந்தே முன்னைய, முன்னையோர் பற்றிய பல்வகைத் தகவல்களை பலரிடமும் கேட்டு அறிந்துகொள்வதில் ஆர்வம் மிகுந்தவனாய் இருந்த என்னால் இதனைப் பேரிழப்பாகவே கருதமுடிந்தது.

1964ஆம் ஆண்டு முதல் சிறுகச் சிறுக எழுத்துத்துறையில் ஈடுபடத் தொடங்கியபோது தகவல் சேகரிப்பதில் மேலும் ஆர்வம் ஏற்பட, சிலவற்றை அவ்வப்போது எழுத்தில் பதிவுசெய்துகொள்ள முடிந்தது. 1985ஆம் ஆண்டு வீடு தகர்க்கப்பட்டபோது சேகரிப்புகளும், பல நூல்களும், 40இற்கும் மேற்பட்ட எனது நாடகப் பிரதிகளும் முற்றாகவே அழிந்துவிட்டன. 1993ஆம் ஆண்டு 'தடுமாறும் சாஸ்திரங்கள்' என்ற கவிதை நூல் எழுதப்பட்டதிலிருந்து தொடராக 21 நூல்கள் எழுதி வெளியிடப்பட்டபோது எனது ஞாபகத்திலிருந்த சேகரிப்புகளை பதிவுசெய்துகொள்ள முடிந்தது. அவற்றில் ஒன்றாகவே இக்கட்டுரை அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்குறிப்புகள்:**

1. குணராசா, க, யாழ்ப்பாண அரச பரம்பரை, கொழும்பு, மீள் பதிப்பு ஒக்ரோபர் 2004, ப.57.
2. மாதகல் மயில்வாகனப் புலவர், யாழ்ப்பாண வைபவமாலை, குல.சபாநாதன் பதிப்பு, சுன்னாகம் - 1949.
3. கலையார்வன், யாழ்பாடி கலாசார மலர் ii, யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை, 2018
4. குணராசா, க, யாழ்ப்பாண அரச பரம்பரை, கொழும்பு, மீள் பதிப்பு ஒக்ரோபர் 2004, ப.66.
5. மேலது நூல், பக்.74.
6. மாதகல் மயில்வாகனப் புலவர், யாழ்ப்பாண வைபவமாலை, குல.சபாநாதன் பதிப்பு, சுன்னாகம் - 1949.
7. கலாநிதி க. குணராசா, யாழ்ப்பாண அரச பரம்பரை, கொழும்பு, மீள்பதிப்பு ஒக்டோபர் 2004, ப. 98.
8. நீலவண்ணன், களம் பல கண்ட யாழ் கோட்டை, கல்வியங்காடு, பெப்ரவரி, 1995. ப.4).
9. அன்ரனிதாஸ், ஏ.யே.பி. யாழ்ப்பாணக் குருகுலத்தவர் என்பவர் யார், மொழிபெயர்ப்பு, மீள்பதிப்பு, யூலை 2005, ப.48.
10. சிற்றம்பலம், யாழ் தொன்மை வரலாறு, 1993, ப.137-138.
11. M.D.Raghavan, Tamil Culture in Ceylon, 1973, P. 139-143.
12. CF. The Pallavas and their title 'Videlvidugu' in Tamil Culture Vol, Iv No. 3 July 1955 p. 257.
13. அன்ரனிதாஸ், ஏ.யே.பி. யாழ்ப்பாணக் குருகுலத்தவர் என்பவர் யார், மொழிபெயர்ப்பு, மீள்பதிப்பு, யூலை 2005, ப.40.
14. மேலது நூல், ப.41.
15. மேலது நூல், ப.43.
16. மேலது நூல், ப.44.
17. மேலது நூல், ப.44.
18. புனித யாகப்பர் ஆலயம், புனித யாகப்பர் ஆலய 125ஆவது ஆண்டுமலர், குருநகர், 1986, ப.111.
19. Pieris: 1920:34
20. Bastiampillai: Magazine:58.
21. வேலுப்பிள்ளை. க, யாழ்ப்பாண வைபவ கௌமுகி, 1918, ப.41.
22. CF. earliest Dutch Topographical Map (1720) in Land, Maps & Surveys p. 142 by Brohier and Paulusz published 1951.
23. அந்தோனிப்பிள்ளை. ம.வி. (குருவூர் மெஸ்), யாழ்ப்பாணம், அர்ச். சூசைமாமுனிவர் அச்சுக்கூடம், 1923
24. ஜெயசீலன் யோ.அ., யாழ்ப்பாண திருச்சபை வரலாறு 1997 - பக் 150.
25. Cf. the castes by Casie Chitty p. 27,28.
26. இந்திரபாலா.கா, இலங்கையில் தமிழர், சென்னை- கொழும்பு குமரன் பத்தக இல்லம், 2006, பக்.283.
27. இராசநாயகம்.செ, யாழ்ப்பாணச் சரித்திரம், புதுதில்லி - சென்னை, ஏசியன் எடுகேஷனல் சர்வீசஸ், 1999, பக். 125.
28. சுவாமி J.E. ஜெயசீலன் அடிகள், யாழ் திருச்சபை வரலாறு, 1997, பக். 106.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. எ.ஜே.பி.அன்ரனிதாஸ் அடிகளார், யாழ்ப்பாண குருகுலத்தவர் என்பவர் யார்?, தமிழாக்கம் மீள்பதிப்பு, ப.
30. சந்தியோகு அப்போஸ்தலர் ஆலயத்தின் நூற்றாண்டு நிறைவு மலர், 25.07.1961, ப.19.
31. செல்வராஜ் ஞா.ம., பருசுத்த புதுமை மாதாவின் ஆலய சரித்திர வரலாறு, ஆனி 1958, ப.12.
32. பத்திமா மாதா - யாழ்ப்பாணப் புதுமைமாதா துண்டுப் பிரசுரம்.
33. ஜெயசீலன் யோ.அ., குருநகர் புனித யாகப்பர் ஆலய 150ஆவது ஆண்டுவிழா மலர், 2011, பக் 72.
34. இராசநாயகம் (முதலியார்), பண்டைய யாழ்ப்பாணம், ப. 211.
35. ஜெயசீலன் யோ.அ., குருநகர் புனித யாகப்பர் ஆலய 150ஆவது ஆண்டுவிழா மலர், 2011, பக் 72.
36. மேலது நூல்,பக் 71.
37. த ஐலன்ட்' செய்தித்தாள், 1929 ஜூலை 12.
38. யாழ்ப்பாண மேற்றிராசனக் கோவிற் பிரதிட்டையான நூறாம் வருடோற்சவ பிரசுரம் - 1894, ப.4
39. மேலது நூல்,ப.2
40. நீலவண்ணன், களம் பல கண்ட யாழ் கோட்டை, கல்வியங்காடு, பெப்ரவரி, 1995. ப.5).
41. யாழ்ப்பாண மேற்றிராசனக் கோவிற் பிரதிட்டையான நூறாம் வருடோற்சவ பிரசுரம் - 1894, ப.04
42. சந்தியோகுமையோர் அப்போஸ்தலர் ஆலயத்தின் நூற்றாண்டு நினைவு மலர், 25.07.1961, ப.5.)
43. அருட்சகோதரி யுஸ்ரீனா, முத்தான சொத்து (கடிதங்களின் தொகுப்பு), ஜூன் 12, 2009, ப.153

**உசாத்துணைகள்:**

1. கலையார்வனின் கடலலைகள் கொஞ்சும் நகர், டிசெம்பர் 2005
2. கலையார்வனின் ஆன்மீகத்தில் குருநகர் மக்கள், வைகாசி 2008
3. நாளிதழ் தகவல்கள்
4. பலருடனான உரையாடல்கள்


ஒரு பொழுது போக்கு தெரிவு செய்ய வேண்டுமா? சிறிய தோட்டத்தை ஆரம்பியுங்கள் நியூசிலாந்தில் ஆயிரம் நபர்களில் மேற்கொண்ட ஆய்வில், தொடர்ந்து தோட்டச் செய்கையில் ஈடுபட்டவர்கள் குறைவாகவே இந்நோய்த்தாக்கத்திற்கு ஆளாக வாய்ப்புண்டு என கண்டறியப்பட்டது.

பயிர்செய்கை மன அழுத்தத்தை குறைப்பது மட்டுமல்ல, பயிர்செய்கையில் தோட்டத்தை வடிவமைக்கும் போது பார்வைக்கு அழகாகவும், நியாயமான இடவசதியை கருத்திற்கொள்ளும் பொருட்டும் தமது மூளையைப் பிரயோகிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்



**கிருஷ்ணபிள்ளை ஜெயபாலன்**
சாரையடி, புலோலி தெற்கு,
புலோலி.

பாணன் என்பவன் அந்தகன் அவன்
பாடல் இசைக்க இச்சை கொண்டு
ஆசையால் உந்தப்பட்டு அரசரவையில்
இசை இசைக்க ஆர்வம் கொண்டான்.

பாணன் ஆசை நிறைவேற அரசரவை
ஆணை வழங்க அதை அவன் சிரமேற்கொண்டு
நிறை விழா ஆக்க அறை கூவி அவன்
பிறை நுதழ் சுருங்க பறைசாற்றி எழுந்தான்.

அந்தகன் பார்வை அரசன் மேல் படலாகாது
ஆன்றோர் மரபென அச்சம் கொண்டு
சான்றோர் அதைத் தவிர்க்க என்று
மன்றோரும் மறுப்பின்றி நிறைவாக்கினர்.

திரை மறைவில் தன்னிசை யாழில் மீட்க
விரல் கொண்டு யாழ் நரம்பை வருட
சுரம் கொண்ட இசை அரசன் மகிழ்வை அதிகரிக்க
பிறந்தது பாணன் யாழ் இசையால் யாழ்ப்பாணம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது யாழ்ப்பாணம்



யே. ஹேரோசினி
உதவி விரிவுரையாளர்,
கிறிஸ்தவ நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



## 1.0 அறிமுகம்

யாழ்ப்பாணத்தில் 429 ஆண்டுகள் ஐரோப்பியரது மேலாதிக்கம் நிலவியதன் அடையாளமாக காணப்படும் மரபுரிமைச் சின்னங்களுள் யாழ்ப்பாணக் கோட்டைக்குத் தனித்துவமான வரலாறு உள்ளது. இக்கோட்டை யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கு தெற்கே, கடல் நீரேரியுடன் அமைந்த இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய கோட்டையாகத் திகழ்கின்றது. யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற இடமாக கோட்டை காட்சியளிக்கின்றது. யாழ்ப்பாண கோட்டையானது கி.பி. 1619ம் ஆண்டு போர்த்துக்கேயரால் கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. சமகால கோட்டையானது கி.பி. 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், கி.பி. 18ம் நூற்றாண்டிலும் ஆட்சி செலுத்திய ஒல்லாந்தரால் மீளக் கட்டப்பட்ட தோற்றத்துடன் காணப்படுகின்றது. பிரித்தானியர் ஆட்சியில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், ஒல்லாந்தர் காலக் கோட்டையின் அடிப்படைத் தோற்றத்தில் பெரிதளவான மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. எனவே தான் யாழ்ப்பாணக் கோட்டையானது "ஒல்லாந்தர் காலக்கோட்டை" என அழைக்கப்படுகிறது.

போர்த்துக்கேயர் நான்கு பக்கச் சுவர் கொண்டதாக அமைத்தார்கள். ஒல்லாந்தர் நட்சத்திர வடிவில் ஐந்து பக்கங்களைக் கொண்ட சுவர்களாக மாற்றியமைத்தார்கள். இவ்வாறான வடிவில் அமைந்த முதல் கோட்டையாக யாழ். நகரில் அமைந்த கோட்டை திகழ்கின்றது. இவ்வாறான மரபுரிமைச் சின்னம் யாழ்ப்பாண நகரின் சிறப்பினை, கட்டிடக் கலை நுட்பத்தினை வெளிக் காட்டுகின்றது. யாழ்ப்பாணக் கோட்டையானது 62 ஏக்கர் பரப்பினைக் கொண்டமைந்துள்ளது. கோட்டையின் வெளிப்புறச் சுவர்களின் கீழ்ப் பகுதி 40 அடி அகலமும், மேற்பகுதி 20 அடி அகலமும், 30 அடி உயரமும் கொண்டவை. யாழ்ப்பாணக் கோட்டையின் சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையெடுத்து வருகின்ற எதிரிகளை இலகுவாக அடையாளம் காண்பதற்கு ஏற்ற வகையில் சுவரின் உயரமானது மேலிருந்து கீழ் நோக்கி பதிந்து காணப்படுகிறது. இதனுடைய வெளிப்புறச் சுவர்களைச் சுற்றி ஆழமான அகழிகள் காணப்படுகின்றன. நான்கு பக்கங்களும் பீரங்கி களங்கள், பாதுகாப்பு அரண்கள், கற்கோபுரங்கள், சுடுகள தளங்களையும் கொண்டமைந்துள்ளது.


## 2.0 மரபுரிமை என்றால் என்ன?

முன்பு வாழ்ந்த சந்ததிகளில் இருந்து கொண்டுவரப்படுவதாகும். வரலாற்று சூழலின் ஒரு உள்ளீட்டு அங்கமாக கருதப்படும். கலாசார மரபுரிமை என்பது ஒரு குழு அல்லது சமூகத்தால் கடந்த காலத்தில் பின்பற்றப்பட்டதும், நிகழ்காலத்தில் தொடர்ந்து பராமரிக்கப்படுவதும், எதிர் காலத்தில் வருகின்ற சந்ததியினரின் நலனுக்காக பாதுகாக்கப்பட வேண்டியதாகும். இது கட்டிடங்கள், நினைவுச் சின்னங்கள், தொல்பொருட்கள் போன்றவற்றை குறித்து நிற்கின்றது.


## 2.1 யாழ்ப்பாணத்தில் உள்ள மரபுரிமைச் சின்னங்கள்

பல்லினப் பண்பாடு கொண்ட யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மை இனமாக தமிழரும் இந்து மதமும் காணப்பட்டாலும், பல்வேறு பண்பாட்டு தொடர்பு கொண்ட மரபுரிமைச் சின்னங்கள் காணப்படுகின்றன. ஈமச்சின்னங்கள், பாரம்பரிய வீடுகள் வீதிகளில் அமைந்த மடங்கள், கேணிகள், ஆவுரஞ்சிக் கற்கள், சுமை தாங்கிகள், ஆலயங்கள், இயற்கைத் துறைமுகங்கள், அரச தலைநகரங்கள், ஐரோப்பியர் கால கோட்டைகள், வெளிச்ச வீடுகள், நிர்வாக மையங்கள் போன்ற மரபுரிமைச் சின்னங்களைக் குறிப்பிடலாம்.









## 3.0 யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு


கி.பி. 1591ம் ஆண்டு போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரான நல்லூரினை கைப்பற்றுவதற்கு முன்வந்தார்கள். யாழ்ப்பாணத்தின் மீது போர்த்துக்கேயருடைய மூன்றாவது படையெடுப்பாக அமைந்திருந்தது. போர்த்துக்கேய படைத்தளபதி அந்திரே பூர்த்தாடு டி மென்டொன்சா 43 மரக்கலங்களுடனும், வள்ளங்களுடனும் ஊர்காவற்துறை ஊடாக யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்தார்கள்.


யாழ்ப்பாணக் கோட்டை கம்பீரமாக உள்ள இடத்தில் இஸ்லாமிய வர்த்தகர்களின் இரண்டு வர்த்தகசாலைகள் காணப்பட்டன. இவ்விடத்தில் கோட்டை கட்டுவதற்கு திட்டமிடப்பட்டது. போக்குவரத்திற்கு வாய்ப்பான கடல்நீரேரி, அருகில் இருந்த கொழும்புத்துறை, அலுப்பாந்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை, அகழிகளுக்கு நீர் தரக் கூடிய கடல், பகைவர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு வழங்கக் கூடிய இடவமைப்பு என்பன ஒலிவேறாவுக்கு திருப்தியை அளித்தன.





## 3.1 யாழ். கோட்டை கட்டுவதற்கான கற்கள்

நல்லூர் ஆலயத்தினை இடித்து பெறப்பட்ட கற்கள் இவ்விடத்திற்கு கொண்டு வரப்பட்டன. முருகைக்கற்கள், சுண்ணாம்புக்கற்கள், செங்கல் போன்றன கூடார வண்டிகளில் முதலில் ஏற்றப்பட்டு பண்ணைக் கரையில் சேர்க்கப்பட்டன. இச்செயற்பாடானது கால தாமதமாவதை உணர்ந்த பிலிப் தே ஒலிவேறா, யாழ்ப்பாண மக்களையும், தனது படை வீரர்களையும் நல்லூரிலிருந்து பண்ணை வரை மனிதச் சங்கிலியாக வரிசையாக நிற்க வைத்தார். அத்தோடு கற்களை வேகமாக கரம் மாற்றி அனுப்பிப் பண்ணைக் கரையில் குவித்தார். அத்தோடு யாழ்ப்பாணத்தில் இடிக்கப்பட்ட சைவ ஆலயங்களின் கற்களையும் குவித்தார். குவிக்கப்பட்ட கற்கள் கோட்டை கட்டுவதற்கு போதுமானதாக காணப்படவில்லை. ஏனைய வீடுகள், ஆலயங்களை இடித்துவிடுவார் என்ற பயத்தினால் கோட்டை கட்டுவதற்கு தேவையான முருகைக்கற்களை யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள தீவுகளிலிருந்து தோணிகள் மூலம் சேகரித்து தருவதாக முதலிமார்களும், வன்னிமைகளும் வாக்குறுதி வழங்கினார்கள். அதற்குரிய செலவினை பிலிப் தே ஒலிவேறா ஒப்புக்கொண்டார். வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு முதலான தீவுகளைச் சேர்ந்தவர்கள் முருகைக்கற்களை சேகரித்து வழங்கினார்கள். கோட்டையை கட்டுவதற்கான மேற்பார்வை யாளர்கள் "பண்டாரப்பிள்ளை" என அழைக்கப்பட்டார்கள்.

## 3.2 போர்த்துக்கேயர் அமைத்த யாழ். கோட்டையின் வடிவமைப்பு


போர்த்துக்கேயருடைய கோட்டை சதுர வடிவக் கோட்டை ஆகும். உயர்ந்த அரண்களைக் கொண்டிருந்தது. நான்கு மூலைச் சுவர்களிலும் பலமான கொத்தளங்கள் அமைந்திருந்தன. அவற்றில் வட கிழக்குக் கொத்தளமும், தென்மேற்குக் கொத்தளமும், வடமேற்குக் கொத்தளமும் முக்கால் வட்ட வடிவிலும் அமைந்திருந்தன. இக்கொத்தளங்களை இணைக்கின்ற அரண் சுவர்கள் அடித்தளத்தில் 40 அடிகள் அகலமானதாகவும், மேற்புறத்தில் 20 அடிகளாக ஒடுங்கி, 30 அடிகள் வரை அகழி மட்டத்திலிருந்து உயர்ந்து நின்றன. அரண்சுவர்களின் மையப் பகுதிகள் நான்கிலும் 20 அடிகள் அகலமான பகுதி வெளிப்புறமாகப் புடைத்து, மேலதிக சிறிய கொத் தளங்களாகக் காட்சி அளித்தன. அவற்றில் மூன்று அரைவட்ட வடிவிலும், ஒன்று "ப" வடிவிலும் புடைத்து இருந்தன. "ப" வடிவப் புடைப்பினை கோட்டையின் தென் அரண்சுவர் கொண்டிருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3 யாழ். கோட்டை பீரங்கிகள், அகழிகள், காவல் கோபுரங்கள்

கடலை நோக்கிய அரண்சுவரின் இரண்டு பெரிய கொத்தளங்களில் மும்மூன்று பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. கிழக்குபுற அரண்சுவர் 10 பீரங்கிகளைக் கொண்டிருந்தது. இக்கிழக்கு புறம் தரைப்புறமான கோட்டை வாயிலைக் கொண்டிருந்தது. யாழ். கோட்டையைச் சுற்றி ஒரு புறம் கடலும் ஏனைய மூன்று பக்கங்களும் 20 அடி அகலமான அகழியைக் கொண்டிருந்தன. ஓர் இணைப்புப் பாலம் தேவைக்கேற்ப இறக்கி, தூக்கக் கூடிய விதமாகக் கிழக்கு அகழிக்கும் கோட்டை வாயிலிருக்கும் இடையில் அமைந்திருந்தது. கிழக்கு அரண் சுவரில் காவல் கோபுரங்கள் ஆறு அமைக்கப்பட்டிருந்தன. துப்பாக்கி ஏந்திய வீரர்கள் தரைப்புறமான கோட்டை வாயிலை எதிரிகள் அணுகாது காப்பதற்கு உதவின. கடலிருந்து அகழிக்குள் நுழைந்து விடாதவாறு பலமான கம்பிக் கிறாதிகள் வைத்து அமைக்கப்பட்டிருந்தன. எனவே யாழ்ப்பாணக் கோட்டை பலமும் கம்பீரமும் கொண்ட கட்டமைப்பினை உடையது. பல்வேறு தடைகளுக்கு மத்தியில் போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை கட்டுமானப் பணி கி.பி. 1625ம் ஆண்டு நிறைவுபெற்றது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோட்டை போன்று வேறு பகுதிகளிலும் அமைத்துள்ளார்கள். உதாரணமாக காங்கேசன் துறை ஊர்காவற்றுறை பருத்தித்துறை வெற்றிலைக்கேணி இயக்கச்சி ஆனையிறவு போன்றவற்றில் காணலாம். ஆனால் யாழ். கோட்டையின் சிறப்புக்கள் இவ்வாறான கோட்டைகளில் காணப்படவில்லை. யாழ். கோட்டையே பெரிய கோட்டையாக திகழ்கின்றது.









## 4.0 ஒல்லாந்தர் யாழ். கோட்டையை சூழ்ந்து கொள்ளல்

கி.பி. 1658ம் ஆண்டு யூன் மாதம் 21ம் திகதி ஒல்லாந்தர் யாழ்ப்பாண கோட்டையை சூழ்ந்து கொண்டனர். கொமுசாறி வன்ஹூன்ஸ் கோட்டையை முற்றுகையிடுவதற்கு காலம் தாழ்த்தினார். போர்த்துக்கேயருக்கு உணவினைப் பெற வெளியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. முற்றுகை தொடங்கி 107 நாட்கள் கோட்டைக்குள்ளிருந்த உணவுப் பொருட்கள் நிறைவு பெற்றன. யாழ்ப்பாணக் கோட்டையின் கிழக்கு பக்க உயர் கொத்தளத்திலிருந்து முதலாவது பீரங்கி ஒல்லாந்தப் படைவீரர்களை நோக்கி வெடித்தது. எனவே யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பீரங்கிக் குண்டுகள் முடிவடைந்துவிட்டன. அதன் பின்னர் போர்த்துக்கேயர் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.1 ஒல்லாந்தரால் மீள அமைக்கப்பட்ட யாழ். கோட்டை

யாழ். நகரில் அமைக்கப்பட்ட கோட்டை சிறப்பான தொழில்நுட்பத்துடன் கட்டப்பட்டது. கீழைத்தேசத்தில் அமைக்கப்பட்ட கோட்டைகளுள் முதலிடம் பெறுவது யாழ். கோட்டை ஆகும். ஒல்லாந்தர் யாழ்.கோட்டையை ஐங்கோண வடிவில் வடிவமைத்தார்கள். கோட்டையின் உட் புறத்தில் ஐங்கோண வடிவமானது கி.பி. 1680ம் ஆண்டு நிறைவுபெற்றது. இவ் ஆண்டு கோட்டை வாயிற் கதவில் பொறிக்கப்பட்டுள்ளது. ஒல்லாந்தரின் ஐங்கோணக் கோட்டையை கி.பி. 1792இல் அதாவது பிரித்தானியரிடம் கோட்டையைப் பறிகொடுப்பதற்கு மூன்றாண்டுகளுக்கு முன்பு பூரணமானது. இம்மாபெரும் கோட்டையை கி.பி. 1795.9.28ம் திகதி பிரித்தானியரிடம் பறிகொடுத்தார்கள்.



யாழ்ப்பாண கோட்டை ஐந்து கொத்தளங்களைக் கொண்டிருந்தது. கடல்நீரேரி பக்கமாக இரண்டு கொத்தளங்களையும், நிலப்புறமாக மூன்று கொத்தளங்களையும் கொண்டிருந்தது. ஐந்து கொத்தளங்களும் பெயரிடப்பட்டிருந்தன. கோட்டையின் வடபுறக் கொத்தளம் "உற்றெச்" எனவும், வட கிழக்குப் புறக் கொத்தளம் "ஹெல்டர்லாந்து" எனவும், தென் கிழக்குப் புறக் கொத்தளம் "ஒல்லாந்து" எனவும், தென் மேற்குப் புறக் கொத்தளம் "சீலாந்து" எனவும், வட மேற்குப் புறக் கொத்தளம் "பிறிஸ்லாந்து" எனவும் அழைக்கப்பட்டன. ஐந்து கொத்தளங்களும் நெடும் மதில்களால் இணைக்கப்பட்டிருந்தன. கொத்தளங்களை இணைக்கின்ற மதில் ஒவ்வொன்றினதும் நீளம் ஏறத்தாழ 554 அடிகளாகும். சுற்றுமதிலின் மொத்த நீளம் 3960 அடிகளாகும். மதிலின் வெளிப்பக்கம் ஏறத்தாழ ஆறு அடி அகலத்தில் முருகைக்கற்களினால் கட்டப்பட்டுள்ளது. மதில்கள் அகழி மட்டத்திலிருந்து ஏறத்தாழ முப்பது அடிகள் உயரமாக உள்ளன. 19 காவலரண் கூடுகள் கோட்டையில் இருந்தன.

அகழி வெளிச் சுவரின் மத்தியில் முற்றவெளியோடு அமைந்த பாதுகாப்பற்ற தாழ் கொத்தளங்கள் எதிரிகளின் வருகையை முதலில் தடுக்கும் நிலையாக அமைந்தது. தாழ் கொத்தளங்களினால் தடுக்க முடியாத நிலையில் உயர் கொத்தளங்கள் பின்னர் செயற்படும். தாழ் கொத்தளங்கள் நில மட்டத்தோடு அமைந்தவை. உயர் கொத்தளங்கள் முப்பது அடி உயரமான இடத்தில் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருப்பவை ஆகும். மதிலில் பத்தடிக்கு ஒரு பீரங்கி பொருத்தக் கூடிய இடைவெளி வைக்கப்பட்டிருந்தது.

## 4.2 யாழ். கோட்டையின் வாயிற் கதவு

கோட்டையின் வாயிற் கதவு ஆறு அங்குலங்களுக்கு மேற் தடிப்பான பாரிய மரக்கதவு ஆகும். அதில் கூராக ஈட்டி முனைகள் பொருத்தப்பட்டடிருந்தன. வில் வளைவான வாயிற் கடவையிலிருந்து அகழியைக் கடப்பதற்கு தொங்கு பாலம் அமைக்கப்பட்டிருந்தது. ஒல்லாந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பனியின் 'VOC' சின்னமும் பொறிக்கப்பட்டிருந்தது. கேடயச் சின்னத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கற்பக தருவான பனை மரம் வரையப்பட்டிருந்தது. கி.பி. 1795ம் ஆண்டு புரட்டாதி மாதம் கோட்டையினை ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டார்கள்.

### 5.0 முடிவுரை

எனவே கடந்த காலத்தில் யாழ்ப்பாண நகரப் பண்பாடு எப்படியிருந்தது என்பது பற்றி அறிவதற்கு மரபுரிமைச் சின்னமான யாழ். கோட்டை உதவிபுரிகின்றது. இவற்றினைப் பாது காப்பதன் மூலமாக எதிர்கால சந்ததியினருக்கு யாழ். நகரின் கலாசாரம் பற்றி அறியக் கூடியதாக உள்ளது. யாழ்ப்பாணம் நகரமாகி 400 ஆண்டுகள் நிறைவடைகின்றன. யாழ். நகரம் பல்வேறு மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு, புதிய செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் முன்னிலை பெறுகின்றது.

## அறிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| நாம் | - | முதல் தலைமுறை |
| தந்தை + தாய் | - | இரண்டாம் தலைமுறை |
| பாட்டன் + பாட்டி | - | மூன்றாம் தலைமுறை |
| பூட்டன் + பூட்டி | - | நான்காம் தலைமுறை |
| ஓட்டன் + ஓட்டி | - | ஐந்தாம் தலைமுறை |
| சேயோன் + சேயோள் | - | ஆறாம் தலைமுறை |
| பரன் + பரை | - | ஏழாம் தலைமுறை |
| பரன் + பரை | - | பரம்பரை |
| ஒரு தலைமுறை | - | சராசரியாக 60 |
| **வருடங்கள் என்று கொண்டால்** | | |
| 7 தலைமுறை | - | 480 வருடங்கள் |
| ஈரேழு தலைமுறை | - | 960 வருடங்கள் |

(கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்கள்) ஆக.

பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதன் பொருள் ஈரேழு பதினான்கு தலைமுறையாக என்று பொருள்படும். வேறெந்த மொழிகளிலும் இப்படி உறவு முறைகள் இல்லை.

இதுவும் தமிழுக்கு ஒரு தனிச்சிறப்பு..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நியர் ஆட்சிக்காலத்தில் வண்ணார் பண்ணையின் தொன்மை



கலாபூஷணம்.
செல்வி விஜயலட்சுமி சண்முகராஜா

யாழ்ப்பாண மாநகரம் பத்தாம், பதினொராம், பன்னிரெண்டாம் நூற்றாண்டு காலப் பகுதிகளில் "ஐ நூற்றுவன் வளவு" என அழைக்கப்பட்டிருந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. திசையையாயிரத்து ஐ நூற்றுவர் என்ற சோழ வணிகர்கள் இந்த நகரத்தில் தங்கியிருந்து வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை அறியப்படுகின்றது.

அதன் பின்னர் கி.பி பதினாறாம் பதினேழாம், பதினெட்டாம், நூற்றாண்டுகளில் "யாழ்ப்பாணாயன பட்டினம்" என அழைக்கப்பட்டது. இன்றைய யாழ்ப்பாணப் பட்டினம் ஆகும். யாழ்பாடி பெற்ற பரிசில் காரணமாக யாழ்ப்பாணம் எனப் பெயர்சூட்டப்பட்டதாகச் சொல் லப்பட்ட போதும் பதின் மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்தே "யாழ்ப்பாண இராச்சியம்" என அழைக்கப்பட்டுள்ளது என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் "வண்ணார் பண்ணை" என்ற பெயருடன் பிரதேசத்தின் நடுப்பகுதியோடு சில கரையேயாரப் பிரதேசங்களையும் இணைந்து கொண்டு ஒரு சிறிய கிராமம் அமைந்துள்ளது.

வண்ணார்பண்ணை கிராமமானது இன்றைய காலகட்டத்தில் யாழ் பிரதேச செயலக கிராமசேவையாளர்கள் பிரிவுகளின்படி J-82 வண்ணார்பண்ணை, J-83 கொட்டடி, J-84 நாவாந்துறை தெற்கு, J-85 நாவாந்துறை வடக்கு, J-86 சோனகதெரு தெற்கு, J-87 சோனக தெரு வடக்கு J-88 புதிய சோனகதெரு போன்ற கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக உள்ளது.

எனினும் பண்டைக்காலத்தில் சத்திரத்துச் சந்தி, கொட்டடி, வில்லூன்றி, நாவாந்துறை, சோனகதெரு, ஆறுகால்மடம், நாச்சிமார் கோயிலடி, கடைத்தெரு போன்ற இடங்களை எல்லைக் கிராமங்களாகக் கொண்டு வண்ணார் பண்ணைக் கிராமம் அமைந்துள்ளதை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

வண்ணார்பண்ணைக் கிராமத்தில் அக்காலத்தில் பல வண்ணத் தொழில்சார்ந்த தொழிலாளர்கள் செறிந்து இக் கிராமத்தில் வாழ்ந்து வந்துள்ளனர். அதாவது தட்டார், செம்மார், சேணியர், கன்னார், தச்சர், வண்ணார், சாண்டார், வாணிபர் போன்ற பல்துறை சார்ந்த தொழில்கள் செய்பவர்கள் செறிந்து வாழ்ந்து வந்துள்ளனர். இதன் காரணமாக "வண்ணர் பண்ணை" என வழங்கப்பட்டு வந்து பின்னர் வண்ணார்பண்ணை என மருவி வழக்கத்தில் வந்துள்ளதாகவும் சில தரவுகள் மூலம் வெளிப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது ஒல்லாந்தர் படையினருடன் சேர்ந்து வந்த பால்டியஸ் பாதிரியார் (Philip- Baldeus) வண்ணார்பண்ணை பற்றி எழுதிய குறிப்பின்படி பின்வருமாறு எழுதியுள்ளார்.

வண்ணார்பண்ணைத் தேவாலயம் யாழ்ப்பாண நகரத்திற்கு அண்மையில் உள்ளது. இங்கு சலவைத் தொழிலாளர்கள் அதிகமாக வாழ்கின்றனர். சலவைத் தொழிலாளர்களை தமிழில் வண்ணார் என அழைப்பார். இதன் காரணமாக இந்த இடம் வண்ணார்பண்ணை என அழைக்கப்படுகின்றது. இங்கு அமைக்கப்பட்டுள்ள தேவாலயம் சிறிதுமன்று, பெரிதுமன்று. இத் தேவாலயம் களிமண்ணால் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 200 மாணவர்களும், 600 நற்செய்தியாளர்களும் உள்ளனர். (நற்செய்தியாளர்கள் எனப்பவோர் வீடுவீடாகச் சென்று கிறிஸ்தவமத பிரசாரத்தில் ஈடுபடுபவர்களைக் குறிப்பிடுவர்)

பிரித்தானியர் காலத்தில் இத்தேவாலயம் வெஸ்லியன் மிசன் சபையால் கொள்வனவு செய்யப்பட்டு யாழ்- மத்திய கல்லூரி ஸ்தாபகர் பேர்றிவல் அடிகளாரால் 1837ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது. (ஆதாரம். பார்டியஸ் பாரதியாரின் டயறி, ந. பரமேஸ்வரன் எதிரொலி (5 June 2019)

எனவே அக்காலத்தில் வண்ணார்பண்ணைக் கிராமத்தில் குளங்கள் அதிகம் காணப் பட்டுள்ளதுடன் சலவைத் தொழிலாளர்கள் அதிகமாக குளங்களை அண்டி வாழ்ந்து வந்ததனால் இக்கிராமம் வண்ணார்பண்ணை என அழைக்கப்பட்டு வந்தது. எனவும் அறியமுடிகிறது.

வண்ணார்பண்ணைக் கிராமத்தில் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களும், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களும், இஸ்லாம் மதத்தைச் சார்ந்த சமூகத்தினரும் வாழ்ந்து வருகின்றார்கள்.

முற்காலத்தில் வண்ணார்பண்ணையில் அநேக குளங்கள் நீர்த்தேக்கத்திற்காக இருந்துள்ளன. அக் குளங்கள் சில இடங்களில் இன்றும் பகுதியாக சிதைவடைந்த நிலையிலும் , முழுமையாகவும், அழிவுற்றும் காணப்படுகின்றன. இவற்றில் வண்ணான் குளம் வின்ஸர் தியேட்டர் சந்தியில் மாநகர சபைக் கட்டிடத்தின் பின்புறம் சிதைவடைந்த நிலையில் உள்ளது. யாழ்ப்பாணம் கொட்டடிப்பகுதியில் கற்கட்டுக்குளம், கற்குளம், தாமரைக்குளம் போன்ற குளங்கள் பகுதியாகச் சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. சோனக தெருவில் குளத்தடி என அழைக்கப்படுகின்ற இடத்திலும் குளம் ஒன்று இருந்ததாக கூறப்படுகிறது. வண்ணார்பண்ணையில் காமாச்சி அம்மன் (நாச்சிமார் கோயில்) ஆலயத்திற்கும் கொக்கு விலுக்குமிடையிலுள்ள தலையாழி என்ற கிராமத்தில் வடக்குப் புறமாக ஒரு ஆழமான குளம் இருந்து வெள்ள அபாயத்திலிருந்து பெரும்பகுதி மக்களைக் காப்பாற்றியது. கிராமத்தின் வடக்கே தலைப்பகுதியில் இந் நீர்ப்பரப்பு இருந்ததனால் தலையாழி எனப் பெயர் பெற்றிருக்கலாம் என கருத இடமுண்டு. வண்ணார்பண்ணை நீராவியடிப் பகுதியில் நீராவியடிக் குளம் அமைந்துள்ளது. இக் குளம் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் கேணியாகக் கருதப்படுகிறது.

வண்ணார் பண்ணையில் பழமைவாய்ந்த பொதுக் கிணறுகள் சில காணக்கூடியதாக உள்ளது. அவற்றுள் சத்திரத்துச் சந்திப்பகுதியில் ஆலயத்திற்கு அருகாமையில் பழையமை வாய்ந்த பொதுக்கிணறு இன்றும் காணப்படுகின்றது. வண்ணார்பண்ணை சிவன் ஆலயப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியிலும் ஒரு பொதுக்கிணறு அமைந்துள்ளது. அத்துடன் காங்கேசன்துறை வீதியில் மனோகராச் சந்தியிலும் ஒரு பொதுக்கிணறு அமைந்திருந்தது. தற்சமயம் அக்கிணறு மூடப்பட்டுள்ளது. காங்கேசன்துறை வீதியில் இந்துக் கல்லூரிக்கு அருகாமையிலும் ஒரு பொதுக்கிணறு அமைந்துள்ளது. ஆறுகால் மடப்பகுதியிலும் பயணிகள் தங்கி இளைப் பாறுவதற்காக ஒரு மடமும் கிணறும் அத்துடன் வியாபாரத்தை மேற்கொள்வோர் தங்களது குதிரை வண்டிகள், மாட்டு வண்டிகள் போன்ற வண்டிகளின் மிருகங்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு கல்லினான தொட்டியும் ஆவுரஞ்சிக் கல்லும் அமைக்கப்பட்டுள்ளன.

## வண்ணார்பண்ணையில் இடம்பெற்ற வரலாற்று நிகழ்வுகள்

1011ம் ஆண்டு ஏப்ரல் 24ம் திகதி சிவக்கொழுந்து வித்தியாசாலை வண்ணார்பண்ணை தட்டாதெருவில் ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலைக்குரிய நிலத்தைக் கொள்வனவு செய்வதற்கு தட்டாதெருவில் வசித்த பொற்கொல்லர்கள் நிதி சேகரித்து வழங்கியிருந்தனர. சட்டத்தரணி சிவக்கொழுந்து பாடசாலையின் தலைவராகவும், பொருளாளராகவும் நியமிக்கப்பட்டார்.

1834ம் ஆண்டு காலப்பகுதியில் வண்ணார்பண்ணையில் ஜோன் கில்னர் பாதிரி யாரினால் மேற்பார்வை செய்யப்பட்ட கல்லூரியாக வண்ணார்பண்ணை கில்னர் கல்லூரி இயங்கி வந்துள்ளது.

1842ம் ஆண்டு ஒக்டோபர் 22ம் திகதி சைவப்பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்த பாடசாலை ஆரம்பித்த இடத்தைப் பற்றிய விபரம் சரிவரக் கிடைக்கப் பெறவில்லை.

1847ம் ஆணடு டிசெம்பர் 31ம் திகதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் தனது கன்னிப் பிரசங்கத்தை ஆரம்பித்தார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வண்ணார்பண்ணை சிவன்கோயிலில் நாவலரின் பிரசங்கம் இடம்பெற்றது.

1848ம் ஆண்டு (கீலக ஆண்டு ஆவணி) 5ம் நாள் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயருடன் ஒரு பாடசாலையை ஆறுமுகநாவலர் நிறுவினர்.

1849ம் ஆண்டு இந்தியாவிலிருந்து அச்சு யந்திரம் கொண்டு வந்து வண்ணார் பண்ணையில் “வித்தியாநுபாலன யந்திரசாலை” என்னும் அச்சகம் ஆறுமுகநாவலரால் நிறுவப்பட்டது.

1866ம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் வண்ணார்பண்ணையில் விக்டோரிய வாசிகசாலை அல்லது நூலகம் (victoria Reading Room) என்ற பெயரில் ஒரு நூலகம் இருந் துள்ளது. இந்த நூலகத்தில் அந்தக்காலத்திலிருந்த புகழ் பூத்த கல்விமான் நெவின் செல்லத்துரை போன்றவர்கள் அரசியல் கருத்தரங்கை நடத்தினார்கள்.

1872ம் சைவப்பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதற்கு சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றை ஆறுமுக நாவலர் அவர்கள் வண்ணார்பண்ணையில் நிறுவினார் இப்பாடசாலையைக் கொண்டு நடத்தப் போதிய மூலதனம் சேராமையால் சிறிது காலத்தில் நின்று விட்டது.

1888ம் ஆண்டு சர்வதாரி ஆண்டு சித்திரை மாதம் 29ம் திகதி யாழ்ப்பாணம் “சைவபரிபாலன சபை” வண்ணார்பண்ணையில் ஸ்தாபிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1889ம் ஆண்டு முதலாக யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலிருந்து சைவபரிபாலன சபை "இந்துசாதனம்" என்னும் தமிழ்ப் பத்திரிகையையும் வெளியிட்டு வந்துள்ளது. 1889ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பதினோராம் திகதி முதல் வெளியீடு வந்துள்ளது. அப்பொழுது "டெமி" பிரமாணம் கொண்ட தாளிலே அகத்திற்றமிழும் புறத்தில் ஆங்கிலமும் கொண்ட ஒரு கூட்டுப் பத்திரிகையாக புதன்கிழமைகளில் வெளிவந்தது. இப் பத்திரிகை சைவப் பிரகாச அச்சுயந்திர சாலையில் பிரசுரிக்கப்பட்து.

1890ம் ஆண்டில் சைவப்பிள்ளைகள் உயர் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வண்ணார்பண்ணையில் ஆரம்பிக்கப்பட்டது.

1895ல் யாழ்ப்பாண மணியகாரர் பிரிவு (தற்போது பிரதேசசெயலாளர் பிரிவு பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்தில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மணியகாரன் பிரிவு என அழைக்கப்பட்டது.) மூன்று பதிவாளர்களின் பிரிவுகள் எனப் பிரிக்கப்பட்டது. அவையாவன வண்ணார்பண்ணை மேற்கு, முஸ்லிம் பதிவாளர் பிரிவு, வண்ணார்பண்ணை கிழக்கு, புரட்டஸ்தாந்து பதிவாளர் பிரிவு, சுண்டிக்குளி- கத்தோலிக்க பதிவாளர் பிரிவு ஆகும்.

1906ம் ஆண்டு ஜனவரி 16ம் திகதி யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் பெண்கள் ஒன்று கூடிய நிகழ்வு வண்ணார்பண்ணையில் இடம் பெற்றது. அக்காலத்தில் வண்ணார்பண்ணையில் வசித்து வந்த மாசிலாமணி என்பவரின் இல்லத்தில் திருமதி மாசிலாமணியின் தலைமையில் யாழ்ப்பாண பெண்களுக்கான ஒன்று கூடும் நிகழ்வு ( Social gathering) நடைபெற்றது.

1917ம் ஆண்டு யூலை 21ம் திகதி வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியா சாலையில் சேர் பொன் அருணாச்சலம் தலைமையில் தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி செந்தமிழ் பரிபாலன சபை என்ற அமைப்பை உருவாக்கினர்.

1920ம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைநாவலர் கோட்டம் ஆ முத்துத்தம்பிப் பிள்ளை அவர்களினால் திருவாசகம் என்ற நூல் யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக் கூடத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

1897ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் திகதியில் சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு வருகை தந்துள்ளதோடு பொதுக் கூட்டமொன்றில் தனது உரையை நிகழ்த்தியுள்ளார்.

1927ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் திகதியில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் அழைப்பின் பேரில் மோகன்தாஸ் காந்தி (மகாத்மா காந்தி) அவர்கள் இந்துக்கல்லூரிக்கு விஜயம் செய்து உரையாற்றியுள்ளார்.

1927ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் திகதியில் மகாத்மா காந்தியுடன் வருகை தந்திருந்த ராஜகோபாலச்சாரியார் அவர்கள் யாழ் இந்துக்கல்லூரியில் சிறந்ததோர் உரையாற்றினார்.

நன்றி : (JAFFNA HINDU COLLEGE, OBA, SYDNEY)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணார்பண்ணையில் வாழ்ந்த பெரியார்கள்.

**N.S இராமலிங்க முதலியார் :-**

இவர் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணக் கச்சேரியில் தலைமை முதலியாராகக் கடமையாற்றியுள்ளார்.

**Dr. இராமுப்பிள்ளை:-**

அவர் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் வண்ணார்பண்ணையில் பிரபல வைத்தியராகத் திகழ்ந்தார்.

**மிட்டாசுக்கடை வல்லிபுரம்:-**

யாழ்ப்பாணத்தில் தேநீர்க்கடையை அறிமுகம் செய்தவர் வல்லிபுரம் என்பவராவார். இவர் தேனீர்க்கடை நடத்திய இடம் இப்போதும் மிட்டாசுக்கடைச் சந்தி என அழைக்கப்படுகிறது. தீவுப்பகுதியிலிருந்து வரும் மக்கள் இளைப்பாறுவதற்கென கங்கா சத்திரம் என்ற பெயரில் சத்திரம் அமைத்தார். இந்த இடம் இப்போதும் சத்திரத்துச் சந்தியென அழைக்கப்படுகிறது. கீரிமலைக் கேணியைக் கட்டுவித்தவரும் இவரே ஆகும் ( ஆதாரம் - Notes on Jaffna page -95)

**டொன் பிலிப் சிற்றம்பல முதலியார்**

ஒல்லாந்தர் காலத்தில் வன்னியில் இருந்து யானைகள் பிடித்து வரப்பட்டு ஊர்காவற்றுறைத் துறைமுகத்திலிருந்து இந்தியாவிற்கு அனுப்பப்பட்டன. யானை வியாபாரத் தரகராக டொன் பிலிப் சிற்றம்பல முதலியார் ஒல்லாந்தர் அரசால் நியமிக்கப்பட்டிருந்தார். இவருக்கு ஒல்லாந்து அரசால் தலைப்பாகை, குடைபல்லக்கு என்பன வழங்கப்பட்டிருந்தன. பல்லக்குத் தூக்குவதற்கும் 12 பேர் ஒல்லாந்த அரசால் ஊழியர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். ( ஊழியம் என்பது அரசாங்கத்திற்கு வரி செலுத்த இயலாதவர்கள் இலவசமாக வேலை செய்வது)

டொன் என்பது பிரித்தானிய அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற சேர் (sir) பட்டம் போன்று ஒல்லாந்த அரசால் வழங்கப்பட்ட கௌரவப் பட்டம். ஆதாரம்- Report on the dutch records 26 june 1758)

**அருளம்பல சுவாமிகள்:-**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலேயே பிறந்தவர் மற்றிக்குலேசன் சித்தி பெற்று இளம் வயதிலேயே அரசாங்க உத்தியோகம் பெற்றவர். யாழ்ப்பாணக் கச்சேரியில் லிகிதராகக் கடமைபுரிந்தவர். குழந்தைவேற் சுவாமிகளின் சீடராய் இருந்ததுடன் சுத்தாத்வைத அச்சுயந்திர சாலையை நிறுவி நற்பணியாற்றினார்.

வண்ணை ஸ்ரீ.சி.எஸ்.எஸ் மணிஜயர் (மணி பாகவதர் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாததேவிகசிகர் ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்)

இவர் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன் கோயில் வடக்கு வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1918ம் ஆண்டில் பிறந்த இவரது இயற்பெயர் சிவசுப்பிரமணியஐயர். இவர் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலையிலும், யாழ் இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்று தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது 18 வது வயதில் வண்ணார்பண்ணை சிவன் ஆலயத்தில் இன்னிசை விரிவுரைகளை நடத்தத் தொடங்கியதுடன் வண்ணை ஐ சி.எஸ்.எஸ் மணி ஐயர் என்னும் பெயரில் புகழ் பெற்ற இவர் நாடகம், ஒப்பனை, நடனம், ஓவியம், இன்னிசை ஆகிய பல் துறைகளிலும் விற்பன்னராயிருந்தார். சாவித்திரி சத்தியவான், கண்ணகி, கிருஸ்ணவேணி, இராமன் கருப்பாகி போன்றவற்றைக் குறிப்பிடலாம். நாடகங்களில் வசனம், இயக்குனர், நகைச்சுவை நாடகங்களில் நடிப்பு என்பன எல்லாவற்றிலும் திறமை மிக்கவராகத் திகழ்ந்தார்.

இலங்கையில் முதல் நாட்டியப்பள்ளியைத் தொடங்கி அதைத் திறம்பட நடத்தி வந்துள்ளதோடு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு கொடிக்கவி இயற்றிக் கொடுத்ததோடு கல்லூரிக்கு மைதானமும் வாங்கிக் கொடுக்கும் பணியையும் செய்துள்ளார். அத்துடன் யாழ் இந்துக் கல்லூரியிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் இசை, நாடகம், நடனம் இவற்றைக் கற்பிக்கும் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

மணி ஐயரின் கதா பிரசங்கள் தமிழ்நாடு, மலேசியா சிங்கப்பூர் ஆகிய வெளிநாடுகளிலும் பிரபல்யமடைந்து "மணிபாகவதர்" எனப் புகழ்பெற்றார். 1966ம் ஆண்டு இவர் தனது இல்லற வாழ்வைத் துறந்து "ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத் தம்பிரான்" சுவாமிகளாகத் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார்.

தம்பிரான் சுவாமிகள் நல்லூரில் மதுரை திரு ஞானசம்பந்தர் ஆதீனத்தின் யாழ் கிளையை ஸ்தாபித்ததுடன் மதுரை ஆதீன குருமகா சந்தானத்திடம் மந்திரோபதேசமும், கஷாயமும் பெற்று ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் என வாழ்ந்துள்ளார்.

## வண்ணார்பண்ணையில் வாழ்ந்த மக்களின் மதம் சார்ந்த பண்டைய வழிபாட்டுத் தலங்கள்.

வண்ணார்பண்ணைப் பகுதியில் முற்காலத்தில் இந்துக்களுக்குரிய சைவ, வைஷ்ணவ ஆலயங்களும், கிறீஸ்தவ தேவாலங்களும், இஸ்லாம் சமயத்தவர்களது பள்ளிவாசல்களும் இருந்துள்ளதை வரலாறுகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

ஒல்லாந்தர் காலத்தின் ஆரம்பத்தில் பிற சமயத்தவர்களது மத வழிபாட்டை அவர்கள் தடைசெய்திருந்தனர். எனினும் தமது ஆட்சியில் இறுதிக் காலப்பகுதியில் வழிபாட்டு சுதந்திரத்திற்கு அனுமதி வழங்கினார்கள் என்று கூறப்படுகிறது.

### வண்ணை வெங்கடேசப் பெருமாள் ஆலயம்

வண்ணார் பண்ணையின் பழமை வாய்ந்த ஒரு வைஷ்ணவ ஆலயமாகும். ஒல்லாந்தர் காலத்தில் நெசவுத்தொழில் செய்வதற்கான கி.பி 1665 ஆம் ஆண்டளவில் தென்னிந் தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் குடியமர்த்தப்பட்ட பண்டாரவாளச் செட்டிப் பிள்ளைகள் என்றழைக்கப்படும் பத்மசாலிச் செட்டிப் பிள்ளைகளால் ஸ்தாபிக்கப்பட்டது. இம் மக்கள் வைணவ மதத்தைச் சார்ந்தவர்களாக காணப்பட்டமையினாலே தமது வழிபாட்டிற்காக வண்ணார்பண்ணையில் ஒரு சிறிய வைணவக் கோயிலை அமைத்ததுடன் வழி பாடியற்ற ஆரம்பித்தார்.

ஒல்லாந்தர் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப பெருமுயற்சிகள் செய்து யாழ்ப்பாணத்தில் வசித்த சைவர்களை ஞாயிற்றுக் கிழமைகளில் கிறிஸ்தவ ஆலயத்திற்குச் செல்ல வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், கிறிஸ்தவ பாடசாலைகளில் கிறிஸ்தவ மதத்தைக் கற்க வேண்டும் என்றும் பல கட்டுப்பாடுகளை செயற்படுத்தியுள்ளதுடன் கிறிஸ்தவ மத விரோதியாகக் காணப்பட்டால் அவர்களுக்கு கடும் தண்டனையையும் நிறைவேற்றி வந்தனர். இவ்வாறான சூழ்நிலையில் பத்ம சாலிச் செட்டிப் பிள்ளைகளால் அமைக்கப்பட்ட ஆலயத்திற்கோ வழிபாட்டிற்கோ எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை. ஒல்லாந்தருக்கு நெசவுத்தொழிலை விருத்தி பண்ணவும், அதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் இம் மக்களின் ஆதரவு தேவைப்பட்டதால் கிறிஸ்தவ குருமாரால் செய்யப்பட்ட குற்றச் சாட்டுக்களைக் கண்டும் காணாதவர்களாய் வாளாவிருந்தனர்.

கி.பி 1820 ஆம் ஆண்டிலிருந்து இக் கோயிலுக்கு நிலங்கைத் தருமசாசனம் செய்துள்ளனர். இக் கோயில் உள்ள நிலத்தையும் கோயிலுக்கு அருகிலுள்ள நிலங்களையும் அடியார்க்கு நல்லான் வரம்பு என்று குறிப்பிடுவர்.

1835ம் ஆண்டு தொடங்கிப் பல காணிகளை தேவஸ்தானத்தின் வளர்ச்சிக்காக பத்மசாலிச் செட்டிகள் வம்சத்தினர் தருமசாசனம் செய்துள்ளதோடு நெசவுத்தொழில் மூலம் பெறப் பட்ட வருவாயில் ஒரு தொகையை தேவஸ்தானத்தின் வளர்ச்சிக்கு வழங்கி வந்துள்ளனர் என அக்காலத்து தேவஸ்தான குறிப்பேடுகளில் சான்று பகர்கின்றது. கி.பி 1820 ஆம் ஆண்டளவில் ஒரு கும்பாபிஷேகம் நடைபெற்றதாகவும் குறிப்பேடில் கூறப்பட்டுள்ளது. கி.பி 1840 தொடங்கி 1878ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆலயத்தின் மண்டபங்கள், கிணறு, யாகசாலை முதலியவற்றை பொழியப் பெற்ற காட்டுக்கற்களினால் உருவாக்கி பூந்தோட்டம் , சந்திர புஷ்கரணி என்ற தீர்த்தக்கேணி ஆகியவற்றையும் நிர்மாணித்தனர். கி.பி 1878ம் ஆண்டளவில் இக்கோயில் பிரமோற்சவம் ஆரம்பிக்கப்பட்டது என குறிப்பேடு கூறுகின்றது.

**வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்**

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் இற்றைக்கு இருநூற்றுப் பதினொரு வருடங்களுக்கு முன் (கி.பி 1790) கோபாலச் செட்டியார் என்பவரின் மகனான வைத்திலிங்கச் செட்டியார் என்பவரினால் கட்டப்பட்டது.

ஒல்லாந்தர் அரசுசெய்யும் காலத்தில் கோபாலச் செட்டியார் தனது மனைவியாரோடு சோழ நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்து ஒல்லாந்த அரசின் மொழி பெயர்ப்பாளராக இருந்த கொச்சிக் கணேசையர் என்னும் பிராமணரிடம் உத்தியோகம் பார்த்து வந்தார். சில காலத்தின் பின்னர் அவர் உத்தியோகத்திலிருந்து விலகி பல சரக்கு வியாபாரம் செய்து வந்தார். ஒல்லாந்த தேசாதிபதி வீட்டிற்கும் பல சரக்குகளைக் கொடுத்து வரும் வழக்கத்தையும் கொண்டிருந்தார்.

செட்டியாருக்கு வைத்திலிங்கம் என்ற பெயருடன் ஒரு மகன் இருந்தான். ஒல்லாந்து தேசாதிபதிக்குப் பிள்ளைகள் இல்லாமையால் அவரது மனைவியின் விருப்பத்திற்கிணங்க 12 வயுது பராயத்தையுடைய வைத்திலிங்கத்தை சுவீகாரப் புதல்வனாக ஏற்று தனது அரண் மனையிலேயே 18 வயது வரை வளர்த்து வந்துள்ளார்.

அக்காலத்தில் ஒருநாள் தேசாதிபதி முத்துக்குளிப்பை குத்தகைக்கு விடப்போவதைக் கேள்விப்பட்ட வைத்திலிங்கம் ஆளுனரின் அனுமதி பெற்று குத்தகையை ஏற்று முத்து வியாபாரம் செய்து வரலானார். அது மட்டுமன்றி யானை வாங்கி வியாபாரம் செய்யும் நிறுவனம் ஒன்றையும் ஏற்றுக் கொண்டதற்கான டச்சு மொழியிலான ஆவணம் சான்றாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் ஒல்லாந்தர் மத்தியில் சைவத்தையும், தமிழையும் வளர்க்க முற்பட்ட வைத்திலிங்கச் செட்டியார் தனது செல்வாக்கினைப் பயன்படுத்தி வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலைக் கட்டுவதற்கு ஒல்லாந்த அரசிடம் அனுமதி பெற்றார்.

1787ஆம் ஆண்டில் கோயில் கட்டும் வேலைகளை ஆரம்பித்து 1790 இல் வேலையினைப் பூர்த்தி செய்து வாலாம்பிகாசமேத வைத்திலிங்க பெருமானுக்கான பரிவாரக் கோயில்களையும் அமைத்து அதே ஆண்டிலேயே (1790) சாதாரண வருடம் சித்திரை மாதம் பூர்வ பட்ச சப்தமியோடு கூடிய புனர் பூச நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இவ்வாலயமானது 1805 ஆம் ஆண்டு வரையப்பட்ட சாசனத்தின்படி கோபாரச் செட்டியார் வைத்திலிங்கச் செட்டியார் அவர்களது வழித் தோன்றல்களால் தொடர்ந்து பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

**வண்ணை வைத்தீஸ்வரனின் பரிவாரக் கோயில்கள் வேம்படிப் பிள்ளையார் கோயில்**

ஒல்லாந்தர் காலத்திலிருந்து வைத்தீஸ்வரன் கோயிலின் ஆரம்ப கர்த்தாவான கோபாலன் செட்டியார் சோழநாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்த காலம் தொட்டே பூசித்து வந்த விநாயகப் பெருமான் குடிகொண்டிருக்கும் இடமே வேம்படிப் பிள்ளையார் (கடைத்தெருப் பிள்ளையார்) ஆலயமாகும்.

**ஐயனார் கோயில்:-**

இக் கோயில் வண்ணார் பண்ணை மேற்கில் அமைந்துள்ளது. ஸ்ரீ பூரணை புட்கலை சமேத அரிகர புத்திர ஐயனார் அல்லது அரிகர புத்திர ஐயனார் என்றழைக்கப்படுகிறது. வைத்தீஸ்வரன் கோயில் மகோற்சவத்தின் போது கோயிலிலுள்ள ஐயனார் எழுந்தருளி ஐயனார் கோயிலுக்குச் சென்று காப்புக்கட்டும் நிகழ்வு நடைபெறும்

**காளி கோயில்:-**

வண்ணை மேற்கில் ஐயனார் கோயிலுக்கு அருகாமையில் பிடாரி அல்லது பத்திரகாளி என்றழைக்கப்படும் கோயில் அமைந்துள்ளது. நவராத்திரி விழாவின் போது விஜயதசமி அன்று சிவன் ஆலயத்திலிருந்து சந்திரசேனரர் எழுந்தருளி காளிகோயிலில் வாழைவெட்டித் திரும்பும் நிகழ்வு நடைபெறும்.

**முத்துமாரி அம்மன் கோயில்**

வண்ணை வைத்தீஸ்வரனின் கோயிலின் எல்லைக் கோயிலாக அமைந்துள்ளது. இக் கோயிலை பண்ணை முத்துமாரி அம்மன் கோயில் எனவும் மீனாட்சி அம்மன் கோயில் எனவும் அழைப்பர்.

**கற்கட்டு வைரவர் கோயில்:-**

இக்கோயிலானது வேம்படிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ளது. வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்று ஒருங்கமையப் பெற்றுள்ளது. இத் தலத்திற்குரிய தீர்த்தம் வண்ணை மேற்கிலுள்ள வில்லூன்றி என்னும் சமுத்திர சங்கம தீர்த்தமாகும்.

( நன்றி:- நினைவுமலர்- திருமதி சரோஜா ஆச்சி கந்தப்பச் செட்டியார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வண்ணை வீரமாகாளி அம்மன் கோயில்**

வண்ணை வடக்கு வீரமாகாளி அம்மன் கோயிலானது தமிழர்களால் அமைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாகும். பண்டைய தமிழரசர்கள் வீரம் வேண்டி வீரமாகாளி அம்மனை காவல் தெய்வமாக வழிபட்டு வந்துள்ளனர். பண்டைய அரசர்கள் போர்க் காலங்களில் தமது வீரவாள்களை இவ்வாலயத்தில் வைத்து அம்மனை வழிபட்டு வாளை எடுத்து போர்புரிய செல்வது வழக்கமாயிருந்தது எனக் கூறப்படுகிறது. இன்னும் பண்டைய அரசரது வீரவாள் இவ்வாலயத்தில் வன்னி வாழை வெட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கி.பி 1470 ம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசனாகிய பரராசசேகரன் வீரமாகாளி அம்மன் கோயிலை அமைத்தான் என்றும் சான்றுகள் உள்ளன. வரலாற்றுப் பெருமை வாய்ந்த இவ்வாலயத்தின் முன்றலிலே யாழ்ப்பாணத்து அரசனாக இருந்து செகராசன் என்னும் தமிழரசனுக்கும் பெருவீரன் வித்திய பண்டாவிற்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தை களுக்கிடையில் ஏற்பட்ட தப்பிப்பிரயாங் காரணமாக ஏற்பட்ட கைகலப்பு வாள் விளையாட்டில் வித்தியபண்டாவின் தலை உருண்டு விழுந்தது என வரலாறுகள் உள்ளன.

இக் கோயிலே பாரம்பரியமாக சைவக் குருமார்களே பூசை புரிந்து வந்தார்கள் முன்னர் அரசர்க்குரிய நிலமாக இருந்த இடம் அரசர்கள் மறைந்த பின் ஆலயத்திற்குரிய நிலமாயிற்று. இதற்கு ஆவணம் என்னும் உறுதியோ, தோம்போ கிடையா. பூசை செய்பவர்கள் மாத்திரம் ஆலய வளவுகளில் குடியமர்ந்திருக்கிறார்கள். (வழிபட்டோர் வாழ்வும் வரலாறும், வண்ணை வடகிழக்கு வீரமாகாளி அம்மை - 1989 வெளியீடு)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைப் பகுதியில் மேலும் கன்னாதிட்டிப் பகுதியில் பழைமை வாய்ந்த காளிகோளில் அமைந்துள்ளது. காங்கேசன்துறை வீதியில் நாச்சிமார் கோயிலடியில் காமாட்சி அம்மன் (நாச்சிமார்) ஆலயமும் பழைமை வாய்ந்ததாகும். மற்றும் கலட்டி அம்மன் ஆலயம், தலையாழிப்பகுதியில் ஞான வைரவர் ஆலயமும், நீராவியடிப் பகுதியல் நீராவியடிப் பிள்ளையார் ஆலயமும், சாந்தையர்மடம் பிள்ளையார் ஆலயம் போன்ற ஆலயங்களும் தொன்மை வாய்ந்த இந்து ஆலயங்களாக வண்ணார் பண்ணைக் கிராமத்தில் உள்ளன. அத்துடன் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் நாட்டுக் கோட்டை நகரத்தார் (நாட்டுக் கோட்டைச் செட்டியார்) கட்டிய கதிரேசன் கோயில் கே.கே.எஸ் வீதியில் சிவன் கோயிலுக்கு அருகில் உள்ளது.

## வண்ணார்பண்ணையில் இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவர்களது வழிபாட்டுத் தலங்கள்

முற்காலத்திலிருந்து முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகளாக மேற்கே நாவாந்துறை, வடக்கே ஓட்டுமடம் காரைநகர் வீதி, கிழக்கே வண்ணார்பண்ணை கே.கே.எஸ் வீதி, தெற்கே கொட்டடி வீதி என அமைந்துள்ளது. வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்குப் பின் உள்ள காணி ஒன்றின் பெயர் இன்றும் சோனகன் தரவு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1713 இன் முன் முஸ்லிம்கள் சிலர் வாழ்ந்த பகுதியாக புலப்படுத்துகின்றது. இன்றும் சிவன் கோயில் மேற்கு வீதியில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஆதனங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது

(யாழ்ப்பாண முஸ்லிம்கள் வரலாறும் பண்பாடும் எம்.எஸ்.ஏ. ரஹீம்)

ஒல்லாந்தர் காலத்தில் நல்லூரிலிருந்து இடம் பெயர்ந்து நாவாந்துறை கிழக்கு, வண்ணார் பண்ணை போன்ற இடங்களில் முஸ்லிம்கள் குடியேறினர். ஏற்கனவே போர்த்துக்கேயர் காலத்திலும் அலுப்பாந்தி, சின்னக்கடை, கோட்டைப்பகுதிகளிலிருந்தும் முஸ்லிம்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணார் பண்ணையில் குடியேறியிருந்தனர். அக்காலத்தில் சோனகதெருவில் பள்ளிவாசலை அமைத்தார்கள்.

### வண்ணார்பண்ணையில் பழமைவாய்ந்த பள்ளிவாசல்கள்

#### பெரிய பள்ளி வாசல்

வண்ணார்பண்ணை சோனகதெருவில் தற்போதுள்ள பள்ளிவாசளே காலத்தால் முற்பட்ட பெரிய பள்ளிவாசல் ஆகும். 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 1715ம் ஆண்டளவில் கட்டப்பட்ட இப் பள்ளிவாசல் காட்டுப்பள்ளி என அழைக்கப்பட்டு வந்தது. காடு என்பதற்கு இடுகாடு (மையவாடி) என்பதைக் குறிப்பதாகும். அருகே ஜனாஸா அடக்கம் செய்யும் இடமும் சேர்ந்திருந்ததனால் காட்டுப்பள்ளி என அழைக்கப்பட்டு வந்துள்ளது. ஆரம்பத்திலுள்ள பள்ளி சிறிதாக கல்லில் கட்டப்பட்டிருந்தது. பழைய பள்ளியானது தற்போது மிஹ்ராப் உள்ள பகுதியாகும். ஆரம்பத்தில் ஜும்மா இங்கு மட்டுமே நடைபெற்று வந்தது என்று கூறப்படுகிறது.

#### சின்ன முஹியித்தீன் பள்ளிவாசல்

போர்த்துக்கேயர் காலத்தில் நல்லூர், சின்னக்கடை பகுதியில் முஸ்லீம்களால் அராபியரின் கட்டிடக்கலையை அடியொற்றிக் கட்டப்பட்ட பள்ளிவாசல்களை போர்த்துக் கேயரினால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட அவர்கள் நாவாந்துறைக்கு கிழக்கிலும் வண்ணார் பண்ணை மேற்கிலும் குடியேறினர். இக்காலத்திலே தான் முஹியித்தீன் பள்ளிவாசல் கட்டப் பட்டது. இது கி.பி 1700 காலப்பகுதியாகும்.

இப்பள்ளிவாசல் அந்நிய ஆட்சியாளர்களினால் தொடர்ந்தும் அசம்பாவிதங்கள் ஏற்படாதிருப்பதற்காக கட்டிட அமைப்பானது. அராபிய கட்டிடக் கலையிலிருந்து வேறுபட்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

#### காமால் பள்ளிவாசல்

போர்த்துக்கேயர் காலத்தில் வண்ணார்பண்ணை மேற்கில் குடியேறிய முஸ்லிம்கள் தங்கள் பாதுகாப்புக் கருதி சிறியதொரு நிலையத்தை அமைத்து "காவலமால்" என்ப் பெயரிட்டனர். காலப்போக்கில் அம்மை நோயினால் பாதிக்கப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தி வைப்பதற்கான ஒரு நிலையமாகவும் இது விளங்கியது. தொடர்ந்து வந்து காலங்களில் தொழிலாளர்கள் ஒன்று கூடுமிடமாகவும் இருந்ததுடன் தொழுகைகளும் நடத்தப்பட்டு வந்துள்ளது.

மேலும் 1800 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிவலைப் பள்ளிவாசல் பாரிய முருகைக் கற்களினால் கட்டப்பட்டுள்ளது. இப்பள்ளிவாசல் சிவந்த நிறமுடைய ஒருவரினால் கட்டப் பட்டதனால் சிவலைப்பள்ளி என அழைக்கப்பட்டதாகக் கூறப்பட்டு வருகிறது. 1856ல் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சம்மால் (காயல் பட்டினம்) பகுதி மக்கள் பதனிடப்பட்ட தோல் வியாபாரத்தில் ஈடுபடுத்துவதற்காக வந்து கஸ்தூரியார் வீதியில் குடியேறினர். அவர்கள் தொழுவதற்காக ஜும்மா பொஸ்கோ லேன் ( செம்மாதெரு) பள்ளிவாசலை ஆரம்பத்தில் சிறு கொட்டிலாக அமைத்து அக்காலத்தில் தொழுகை செய்து வந்தனர. அத்துடன் 1885ல் புதுப்பள்ளிவாசல் (முகம் மதியா ஜும்மா பள்ளி) கட்டப்பட்டது. இப் பள்ளிவாசல்களைச் சார்ந்தவர்களே பெரிய பள்ளிவாசலையும் கட்டிப் பராமரித்தார்கள். மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1890 ல் நாவலர் வீதியில் அல்லா பிச்சை அவர்களால் அவரது சொந்தக் காணியில் முஹம்மதியா (அல்லா பிச்சை) பள்ளிவாசல் சிறியதொரு அமைப்பில் பள்ளி வாசலும் மதரஸாவும் கட்டப்பட்டன.

இத்தகைய பழமை வாய்ந்த பள்ளிவாசல்கள் வண்ணார்பண்ணை முஸ்லிம்கள் வாழும் பகுதியில் முற்காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. (யாழ் முஸ்லிம் வரலாற்றுப் பார்வை JMRO வெளியீடு)

## வண்ணார் பண்ணையில் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த மக்களின் வழிபாட்டுத் தலங்கள்

வண்ணார்பண்ணைக் கிராமத்தில் முற்காலத்தில் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள் அதிகமாக நாவாந்துறைப் பகுதியிலேயே செறிந்து வாழ்ந்துள்ளனர் என அறியப்படுகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் அவர்கள் ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு "நாவாய்" என அழைக்கப்படும் சிறிய படகுகளை பாவித்துள்ளதோடு அப்படகுகளை கட்டி வைக்கப்பட்ட கரையோப் பகுதியானது நாவாய்த்துறை என அழைக்கப்பட்டு காலப் போக்கில் நாவாந்துறை என வருகின்றது.

போர்த்துக்கேயரின் ஊடாட்டம் இவ்வூரின் வழியாக அடிக்கடி நிகழ்ந்தமையாலும், தீவுப்பகுதிகளுக்கும் குடா நாட்டிற்கும் இடையே பயணம் செய்யும் குருமார்களும் இவ்வூரின் வழியாகவே பயணம் செய்து வந்தமையால் கத்தோலிக்க சமயமானது விரைவாகவும் வேகமாகவும் இவ்வூரில் பரவ வாய்ப்பாய் அமைந்தது.

ஒல்லாந்தர் ஆட்சி செய்த காலத்தில் கத்தோலிக்க சமயத்திற்கெதிரான தடைச் சட்டங்களை (ஆலயங்கள் அமைத்தல் உட்பட) மிகவும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தினாலும் கத்தோலிக்க சமயத்தின் வளர்ச்சியையும், குருமார்கள் வருகை நடமாட்டம் என்பனவற்றை கட்டுப்படுத்த முடியாதிருந்தபடியால் 18ம் நூற்றாண்டில் நடுப்பகுதியிலிருந்து ஒல்லாந்தர் அவற்றை இறுக்கமாக நடைமுறைப்படுத்தவில்லை. எனவே கத்தோலிக்கர் படிப்படியாக தமது மதத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கினதாக வரலாறுகள் சான்று பகர்கின்றன.

### வண்ணார்பண்ணையில் பழமை வாய்ந்த கிறிஸ்தவ ஆலயங்கள் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயம்

போர்த்துக்கேயர் காலப்பகுதியில் நாவாந்துறை என அழைக்கப்பட்ட இவ்வூரில் குடியேறி வாழ்ந்தவர்களால் புனித நீக்கிலார் ஆலயமானது ஓலையால் வேயப்பட்ட ஒரு சிற்றாலயமாகக் கட்டப்பட்டு தமது வழிபாடுகளை மேற்கொண்டு வந்தனர் என ஒரு பாரம்பரியம் உண்டு. கடற்கரையிலிருந்து சற்று தொலைவில் போர்த்துக்கேயரால் ஆலயத்திற் கென வழங்கப்பட்ட இடத்தில் ஆரம்பகாலத்தில் மருதமரக் கூடல்களும் அருகிலேயே ஒரு குளமும் உள்ள பகுதியாக காணப்பட்டது.

சிறிய ஓலைக் கொட்டிலாக இருந்த இவ்வாலயமானது மக்களின் உதவியுடன் செங்கற்களாலும், சுண்ணாம்புகளாலும் தியான சம்பிரதாய குருமாரின் (ஒறற்றோரியன்) காலத்தில் கட்டப்பட்டதாகும். இவ்வாலயத்தில் காணப்படுகின்ற சிம்மாசனம் இலங்கையில் காணப்படுகின்றதும், போர்த்துக்கேயரின் மரபு சார்ந்ததுமான கீழைத்தேயக்கலையின் ஒரேயொரு உதாரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிம்மாசனம் இவ்வாலயத்திற்கென முகவரியிடப்பட்டு ஒரு பிரமாண்டமான பெட்டகத்தில் அடைக்கப்பட்டு ஊர்காவற்றுறை பெரும் கடற்பரப்பினூடாக மிதந்து வந்து நாவாந்துறை கடற்கரையை வந்தடைந்தது. இதில் உள்ள வேலைப்பாடுகளும், கலை நுட்பங்களும் கொச்சின் மாநிலத்தின் கலை அம்சத்தினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இச் சிம்மாசனம் 1990 ஆம் ஆண்டு வரைக்கும் புனித நீக்கிலார் ஆலயத்தின் பீடத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டது. பின்னர் அது பழைமை வாய்ந்த வழிபாட்டு உபகரணங்களுடன் யாழ் மறை மாவட்ட வழிபாட்டு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது. இது போலவே இவ்வாலயத்திலிருந்த பதினாறு தூண்களும் இவ்வாறான கலைஅம்சம் பொருந்தியதாகவே காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### நாவாந்துறை தூய விண்ணக அன்னை ஆலயம்

இவ்வாலயமானது 1940ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் அன்னை மரியாளின் விண்ணேற்புத் திருநாளன்று கிராமத்தின் வடக்குப் பக்கமாக அமைந்திருந்த வயல்வெளியில் சிறிய ஓலைக் கொட்டில் ஒன்றைக் கோவிலாக அமைத்து தமது சன்மார்க்க சங்கப் பணிமனையில் இருந்த பரலோகமாதா சுரூபத்தை அங்கு வைத்து அவ்வூர் மக்கள் வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர்.

இந்தக் கொட்டில் கோயிலானது அமைந்துள்ள நூறு ஏக்கர் வயற்காணி மக்களின் உழைப்பில் இருந்து பெறப்பட்டு பெரியோர்களால் பொதுத் தேவைக்கென்று சேமித்து வைக்கப்பட்டிருந்த பணத்தைக் கொண்டு வாங்கப்பட்டிருந்தது.

1942ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் யாழ் ஆயர் த.ய கியோமார் அ.ம.தி ஆண்டகையால் பெரியதொரு கோயில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு மக்களது ஒத்துழைப்பினாலும், ஊதியமற்ற தியாகப்பணியினாலும் விரைவில் தூய விண்ணக அன்னை ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது.

### தூய ஆரோக்கிய அன்னை ஆலயம்

இவ்வாலயமானது கஸ்தூரியார் வீதி அஞ்சனந் தாழ்வு என்ற இடத்தில் 1906ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஓலைக் கொட்டிலாக இருந்து வந்துள்ளது. அதன் பின்னர் பெரிய ஆலயமாகக் கட்டப்பட்டுள்ளது.

### வெஸ்லி மெதடிஸ்த திருச்சபை

இவ்வாலயமானது ஒல்லாந்தர் காலத்து பிலிப்பு பால்டெயஸ் என்பவரால் வண்ணார் பண்ணை ஒட்டுமடம் பகுதியில் கட்டப்பட்டது. கைவிடப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட இவ்வாலயமானது 1835 ஆம் ஆண்டு பீற்றர் பேரரிவல் பாதிரியாரின் முயற்சியால் வண்ணார் பண்ணை மெதடிஸ்த திருச்சபை ஆரம்பிக்கப்பட்டு அதற்கு வழங்கப்பட்டது. 1921ம் ஆண்டு காலப்பகுதியில் அருள் திரு ஜேம்ஸ் மேதர் என்பவரால் புதிய ஆலயம் வண்ணார்பண்ணையில் ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணார்பண்ணையின் வரலாற்றில் கல்விச் சாசனங்கள்

## வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை

1848ஆம் ஆண்டு ஆவணி மாதம் அந்நியர் ஆட்சிக் காலப்பகுதியில் வண்ணார் பண்ணையில் ஆறுமுக நாவலர் அவர்களால் சைவ, சன்மார்க்க நெறிமுறைகளுக்கமைய "சைவப் பிரகாச வித்தியாசாலை" ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பகாலத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையானது வண்ணை சிவன் கோயிலுக்கு முன் உள்ள வீட்டில் ஏழுமாதமும், பின்பு கோயில் மடத்திலும் நடைபெற்று வந்தன. பின்னர் வண்ணை அ. ஆறுமுகச் செட்டியார் தானமாக வழங்கிய நிலத்திற் கட்டிடம் கட்டுவித்து 1851 ஆம் ஆண்டிலே நிரந்தரமான இடத்தினைப் பெற்றது.

1852 ஆம் ஆண்டில் ஆசிரியருக்கு வேதனம் கொடுக்க இயலாத நிலையிலே அரசாங்கத்திற்கு உதவிகோரி விண்ணப்பித்தபோதும் 1870 வரை அரசாங்கத்தின் உதவி கிடைக்கப் பெறாமையால் கொழும்பைச் சேர்ந்த இ.நன்னித்தம்பி முதலியார் முதலாம் ஔதாரிகளின் பொருளுதவியாற் செய்யப்பெற்ற வியாபாரத் தலங்களின் வருமானத்திலிருந்து 1858 முதலாகவே ஆசிரியருக்கு வேதனம் வழங்கப்பட்டு வந்தது. (நன்றி. இந்து கலைக் களஞ்சியம்)

முற்காலத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயருடன் ஆரம்பித்த இப் பாடசாலை நாவலரால் தாபிக்கப்பட்டதன் காரணமாக "நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை" என்ற பெயருன் வழங்கப்பட்டு தற்சமயம் "வண். நாவலர் மகா வித்தியாலயமாக வண்ணார் பண்ணை நாவலர் வீதியில் இயங்கி வருகின்றது.

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலக் கல்வியை தமிழ்ச் சைவ மாணவர்கள் கட்டணம் செலுத்தி கிறிஸ்தவ பண்பாட்டுச் சூழலிலே கற்க வேண்டியிருந்தது. இலங்கையில் உயர் பதவி பெறுவதற்கு ஆங்கிலக்கல்வி கட்டாயம் தேவைப்பட்ட நிலையிலேயே நாவலர் உள்ளிட்ட பல நல்லறிஞர்களால் ஆங்கிலப் பாடசாலைகள் பலவும் உருவாக்கப்பட்ட போதும் ஆங்கிலப் பாடசாலை நிறுவும் முயற்சி கைகூடவில்லை.

1887ம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினது முதன்மையான அடித்தளம் இடப்பட்ட ஆண்டாகும். அக்காலத்தில் திரு. வில்லியம் நெவின்ஸ் முத்துக்குமார் சிதம்பரப் பிள்ளையினால் பிரதான வீதியில் இயங்கிய சுதேசிய பட்டின மேல் நிலைப் பள்ளியுடன் இணைந்து உருவாக்கப்பட்டது.

1889 இல் இப்பாடசாலைக்கு நிதி பற்றாக்குறைவின் விளைவாக அட்வகேட் நாகலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் பாடசாலையை சைவர்கள் அதிகமாக வசித்த வண்ணார்பண்ணைக்கு இடம்மாற்றினார். அட்வகேட் நாகலிங்கம் அவர்கள் பிரசித்தமான வழக்கறிஞராகவும், தேசிய உணர்வும், வள்ளன்மையும் கொண்டவராக அங்கீகாரம் பெற்றிருந் ததனால் அப்பாடசாலை "நாகலிங்கம் பட்டினப் பாடசாலை" என அழைக்கப்பட்டது. அவர் பாடசாலையை மென்மேலும் திறம்பட முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு சைவபரிபாலன சபையிடம் ஒப்படைக்கப்பட்டபோது இந்து உயர் பாடசாலை என அழைக்கப்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.05.1891 ல் நிரந்தர கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு 1895ல் முதலியார் பொ. குமாரசாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 18.02.1982ல் இருந்து உயர்பாடசாலை என்ற பெயரிலிருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்ற நிலைக்கு உருவாவதற்கு தலைமையாசிரியராக விருந்த திரு. நெவின்ஸ் செல்லத்துரையின் உழைப்பும், உண்மையான ஈடுபாடும் பெரும் பங்காற்றியது எனப்படுகிறது. (நன்றி Jaffna Hindu College OBA Sydney)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைப்பகுதியில் வைத்தீஸ்வர வித்தியாலயம் பெரியார் தம்பு நாகலிங்கம் அவர்களால் 1913 இல் ஆரம்பிக்கப்பட்டு 1918 ஆம் ஆண்டு தொடக்கம் இராமகிருஷ்ண மிசன் நிர்வாகத்தினரால் பொறுப்பேற்று 47 வருஷங்களின் பின்னர் அரசாங்கள் நிர்வாகத்தில் இயங்கி வருகின்றது.

யாழ் நாவாந்துறைப் பகுதியில் 1871ம் ஆண்டிலிருந்து யாழ் நாவாந்துறை றோ. க.பாடசாலை இயங்கிவருகிறது.

1834ம் ஆண்டு காலப்பகுதியில் வண்ணார்பண்ணையில் ஜோன் கில்னர் பாதிரியாரினால் மேற்பார்வை செய்யப்பட்ட கல்லூரியாக கில்னர் கல்லூரி இயங்கி வந்துள்ளது.

மேலும் அக்காலத்தில் சேணிய தெருவில் சன்மார்க்க ஆங்கில போதன வித்தியா சாலையும், கே.கே.எஸ் வீதியில் பாரதிபாஷைய வித்தியசாலை, கொட்டடியில் நமசிவாய வித்தியாசாலை போன்ற பாடசாலைகளும் இயங்கி வந்துள்ளன.

## வண்ணார் பண்ணையில் அச்சு இயந்திர சாலைகள்

1849ம் ஆண்டு ஆறுமுக நாவலர் அவர்களினால் இந்தியாவிலிருந்து அச்சு இயந்திரம் கொண்டு வந்து வண்ணார் பண்ணையில் வித்தியாநுபாலன யந்திரசாலை" என்னும் அச்சகம் நிறுவப்பட்டது.

விவேகானந்தா அச்சகம் - வதிரி வித்துவான் தாமோதரம் பிள்ளையால் தாபிக்கப்பட்து.

ஆனந்தா அச்சகம், ஸ்ரீலங்கா புத்தகசாலை, அச்சகம்- பதிப்பகம்

திருமகள் அழுத்தகம் - சண்முகநாதன் புத்தகசாலை, அச்சகம்

சைவப்பிரகாச அச்சுயந்திரசாலை,
மகேஸ்வரன் அச்சகம்
ஸ்ரீலங்கா புத்தகசாலை, ஸ்ரீலங்கா அச்சகம் - பதிப்பகம் என்பன 1933ம் ஆண்டு குமாரசாமி தெய்வேந்திரம், குமாரசாமி கந்தசாமி ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்திலும் அதன் பின்னர் வந்த ஆங்கிலேயர் காலத்திலும் வண்ணார்பண்ணைக் கிராமத்தைச் சேர்ந்த மூவின மக்களும் இக் கிராமத்தில் சமயம், பண்பாடு, கலாச்சாரம், கல்வி கேள்வி எல்லாவற்றிலும் மேன்மையுற அரும்பாடுபட்டுள் ளார்கள்.

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் வண்ணார்பண்ணைக் கிராமமானது மொழி ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் பல மாறுதல்கள் ஏற்பட இன்றைய காலகட்டத்தில் கிராமசேவகர் பிரிவிலுள்ள ஏழு கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியதாக வண்ணார்பண்ணை இருந்த போதிலும் J-82 கிராம அலுவலர் பிரிவு மட்டுமே வண்ணார் பண்ணை எனும் தோற்றத்தினை எம்மில் பலருக்கும், இளம் சமுதாயத்தினர் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது என்பது புலப்படக்கூடியதாக உள்ளது.

**இக்கட்டுரையில் தகவல் பெற உதவிய நூல்கள்**


யாழ்பாடி மலர்

இந்துக் கலைக்களஞ்சியம்- பேராசிரியர் பொ. பூலோகசிங்கம்

யாழ்முஸ்லிம் வரலாற்றுப்பார்வை

நாவாந்துறை தூய விண்ணக அன்னை ஆலயம் - பவளமலர்

நாவாந்துறை புனித நிக்கிலார் ஆலயம்- திறப்புவிழா மலர்


**இக் கட்டுரையின் தகவல் பெற உதவியோர்**

டி. பரமேஸ்வரம்

ர. சுகாஜனன்

ம. மேர்ஸி சுஜந்தினி

சி. சர்வேஸ்வரன்.

தோல்விக்கு இரண்டு காரணம்

ஒன்று : யோசிக்காமல் செய்வது


இரண்டு: யோசித்த பின்னும் செய்யமால் இருப்பது.

- ஸ்ரீ கிருஸ்ணர்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தங்கள் ஆயிரம்



**அபீர்ராஜன் அன்ரனி பீற்றர்**
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்

பொன்விளையும் அபிவிருத்தியென்று தேடுகின்றோம்
என்னவளமில்லை எம்மண்ணில் ஏன்கையை ஏந்துகின்றோம்
பொன்னைப் பூட்டிவைத்தால் அழகு தெரிந்திடாது
மின்னல் இடையாளின் மேனியில் அணிந்திடணும்
கன்னல் மொழிபேசும் காதல் கனிந்தாலே
கணவன் மனைவியாகும் காலம் உருவாகும்
செந்நெல் வயல் வரம்பில் தென்றல் நடந்தாலே
சேர்ந்திடும் செல்வமாய் வாரியும் பொலிந்திடும்.

துரவில்லாத் தோட்டங்கள் துடுப்பில்லாப் படகுபோல
தூரத்தே தெரியும்நீர் தொடர்ந்திடக் கானலாகும்
தாரத்தைக் குருவை மதித்தால் தடம்புரளாது வாழ்க்கை
நேரத்தை வீணேகழித்தால் மீண்டுமது கிடைத்திடாது
வீரத்தை மட்டும்கொண்டு விவேகத்தைக் கைநெகிழ்ந்தால்
மண்குதிரை நம்பி ஆற்றிலிறங்கியது போலாகும்
சாரமில்லா உப்புக்கள் ஓரமாய்க் கொட்டப்படும்
ஈரமில்லா நெஞ்சங்கள் இருந்தும் பயனிராது.

போரடிக்கும் மாட்டின் வாயைக் கட்டிடாதே
புரிந்தபணி யாளின் கூலியைப் பிடித்திடாதே
காரணமின்றி எவரையும் வீணாக வதைத்திடாதே
கடவுளை வதைக்கிறாய் என்பதையும் மறந்திடாதே
வேர்தறித்து விடுதலை தருவோ மென்போர்
எவரென்றாலும் அவர்களை நம்பி ஏமாந்திடாதே
நேரடியாய் இறைவன் வந்து சொன்னதுமில்லை
நேராமல் மரணத்தை எவரும் தடுத்ததுமில்லை.
செருக்களத்தில் சமராடி மார்பினில் அம்புபட்டோன்
தோற்றுவிட்ட கோளையல்ல அவனே வீரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களின் சொல்லாடல் விடுதலையல்ல விடுகதையே
கருத்தில்லா வரிவடிவம் கவிதையுமல்ல புனைகதையே
சிறகுகள் வெட்டப்பட்டால் வளர்ந்திடாது மொழியின்வளம்
உறவுகள் முறிக்கப்பட்டால் ஊசலாடும் சொந்தங்கள்
வரவைமீறிச் செலவுசெய்தால் வாழ்வெல்லாம் அவலங்கள்

போலிகள் மலிந்தாலும் நிலையாய் நிலைப்பதில்லை
பொய்யான புண்ணுக்கு மருந்து தேவையுமில்லை
வேலியில்லாப் பயிர்கள் விளைவதும் கடினம்
நாதியில்லா உயிர்கள் வாழ்வதும் கடினம்
வாலறிவன் பாதம் தொழா அ ரெனின்
நூலறிவால் கிடைத்த பயனும் வீணதே
ஆலம்விதை போல நன்மை செய்தாலும்
காலம் முழுவதும் கடவுளருள் தொடர்ந்திடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டுத் தொன்மைகளின் அடையாள உருவாக்கம்




**I.L.அன்சலீன் பெகின்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்துறை


**(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புதிய நுழைவாயில் கட்டடத்தின் மீதான பண்பாட்டு, அடையாளம் என்ற கருத்தாக்கத்தை விவாதித்தல்.)**

இன்று 400வது அகவையைக் கடந்து கொண்டிருக்கும் யாழ். கோட்டையை மையமாகக் கொண்ட நவீன யாழ்ப்பாண நகரின் தொன்மையானது அதையும் தாண்டி பலகாலம் முந்தையதாகும். அண்மைய போர்ச்சூழலாலும், இன்றைய உலகமயமாதல் என்ற நவீன கருத்தாக்கங்களின் தாக்கத்தால் அழிந்து வரும் யாழ்ப்பாணத்தின் தொன்மைகளை அடுத்த தலைமுறையினருக்கு ஞாபகப்படுத்தும் விதமாக அவற்றை அதன் இடத்திலேயே பேணிப்பாதுகாத்தல் என்பது சவாலானது. நவீன வடிவங்களில் அவற்றின் சாரம்சங்களை அடையாளப்படுத்துதல் என்ற சிந்தனையில் யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய அலங்கார நுழைவாயிலை விவாதிக்க கூடியதாக உள்ளது.

**I.அறிமுகம்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு மேற்கே 100m தொலைவில் பரமேஸ்வரா ஆலயத்திற்கு நேராக புதிதாக அலங்கார நுழைவாயில் ஒன்று 2017ல் அமைக்கப்பட்டுள்ளது. புதிய நுழைவாயிலானது 15.08.2016ல் அடிக்கல் நாட்டப்பட்டு 14.02.2017ல் இதன் நிர்மாணப்பணிகள் நிறைவுற்றது.

இக்கட்டட நிர்மாணிப்பிற்கு பிற்பாடாக இக்கட்டடக் கலைமரபு, அமைப்பு தொடர்பாக மக்களிடையே எழுந்த கருத்தாடல்கள் அவர்களின் வெகுஜன நம்பிக்கையை பிரதிபலிப்பதாக அமைந்தன. இதன் அமைப்பு சிங்கள மரபு என்று சிலரும், சிலர் சீன முறையில் உள்ளது என்றும் இன்னும் சிலர் மரவேலைப்பாடுகள் கேரளா முறையில் உள்ளது என்றவாறான பெரும் கருத் தாடல்கள் பார்வையாளரின் நிலையில் பரவி உள்ளது. மக்கள் எதை பார்க்கின்றார்களோ அதையே நம்புகின்றார்கள். தாம் நம்புகின்றதையே இதில் பிரதியிடுகின்றார்கள். என்ற சிந்தனையே இங்கு செயற்படுகிறது. இதைச் சற்றே திரைவிலக்கி பார்க்க வேண்டிய தேவை உள்ளது.

இதன் அடித்தளம் திராவிடக் கட்டடக் கலைமரபைப் பின்பற்றி ஒரு மதிலின் உயரத்திற்கு ஆதி ஸ்தான கலை வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளது, அதற்கு மேல் தமிழர்களின் வீட்டு அமைப்புடன் ஒன்றிணைந்த அடையாளமான திண்ணை அமைப்பை அடிப்படையாக கொண்டுள்ளது. வீடுகளில் காணப்படும் சங்கரப்படலை போன்ற பெரிய மரப்பலகைகளால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட வாயிற்கதவுகள்,அப்படலையில் காணப்படும் பனை ஓலைவெட்டி சீர்செய்யப்பட்ட பனை மட்டையின் வேல்போன்ற பகுதி, இது இரும்பு உலோகம் பாவனைக்கு வந்த பிற்பாடு வேல் அல்லது ஈட்டி போன்ற வடிவங்களாக மாற்றம் பெற்றன. இவ்வாறாக தமிழரின் குறிப்பாக யாழ்ப்பாண மரபுரிமைத் தொன்மங்களை ஞாபப்படுத்தும் முகமாக இவ்விடயங்கள் இணைக்கப் பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கலை என்பது பற்றி "பால் அன் பைசனின் கலை வரலாற்று அணுகுமுறையானது". 'கலை என்பது குறிகளாற் கட்டியமைக்கப்படும் அல்லது குறியியலூடாகப் பொருள் கூறும் தொழிற்பாட்டை மேற்கொள்வதாகக் கருதுகிறார். இவ்வணுகுமுறையானது சிக்கலான கேள்விகளின் வரிசை யொன்றுக்கு பதில்தர முயற்சிக்கிறது. கலையாக்கங்களின் பல்லர்த்தம், ஆசிரியத்துவம் தொடர்பான கேள்விகள், பார்வையாளர்களுக்கும், கலையாக்கங்களுக்கும் இடையிலான நிலைமைகள் தொடர்பான கேள்விகள் மீது இவ்வணுகுமுறை கவனம் செலுத்துகின்றது.' (Bal & Bryson1991: 174-208).

கலை பற்றி சில அறிஞர்களின் விபரிப்பானது பின்வருமாறு அமைகிறது. ஹெகல் என்ற அறிஞர் "கலை என்பது உள்ளார்ந்த சாரமொன்றின் வெளிப்பாடு." என்றும், ரி.ஜே.கிளாக் "கலை யென்பது சமூக வரலாறு தொடர்பான வெளிப்பாடு." என்றும், போலோக் "கலையாக்கங்கள் என்பது சூழமைவு சார்ந்த உற்பத்தி." என்றும் வரையரை செய்கின்றனர்.

**2. அடித்தளம்**



எமது பொதுப் பார்வையில் அல்லது இதுவரை நாம் பார்த்த வெகுஜன அபிப்பிராயப்படி இதன் அடித்தளம் ஒரு இந்துக் கோயிலின் ஆதிஸ்தான கட்டடக்கலைக் கூறுகளைக் கொண்டு பிரமாண்டமாக உருவாக்கப்பட் டுள்ளதாக காணலாம். இந்து கோவில்களின் அடித்தளமாகிய உப பீடத்துடன் கூடிய அதிட்டான வடிவமைப்பானது ஆதிஸ்தனா (Adhisthana) என்றும் அழைப்பர் இது குமுதா, பத்மா போன்ற பல வளைவு வேலைப்பாடுகளைக் கொண்டிருக்கும். கீழே இருந்து உபான வரி (Upana) அல்லது உபதாலா (Upatala) என்பது அடிப்பகுதி, பத்மா (Padma) என்பது தாமரை இதழ்களைக் கொண்ட பகுதி. ஜகதிவரி (Jagathi) என்பது நேராகவும், மென்மையாகவும் அலங்கரிக்கப்பட்ட பகுதி, குமுத வரி (Kumuda) வளைந்த ஒரு சுற்று, காந்தா (Kanta) என்பது கழுத்து பகுதி போன்ற கண்டக வரி மற்றும் கபோலபாலிகா (Kapolapalika) என்பது தாமரை இதழ்களின் இரட்டை அடுக்கு போன்றது. பட்டிகை வரி, வேதிகை போன்ற வரிகள் காணப்படுகின்றன.



ஒரு இந்துக் கோயிலில் உப பீடம், தாங்குதளம், பாதசுவர் என்பன அமைக்கப்பட்டால் அக்கோவிலின் அடிப்படையான விடயங்கள் பூர்த்தியாகி விட்டது என்று அர்த்தப்படும். மேற்கொண்டு கோபுரம் அமைப்பதுதான் பாக்கி என்பது கிராமங்களில் மக்கள் மத்தியில் உள்ள மனப்பதிவு. இதை இங்கு சொல்வதற்கான காரணம் பல்கலைக்கழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியானது மாணவர்களின் எதிர்காலத்திற்கு தேவையான அடிப்படையான விடயங்களை பூர்த்தி செய்து விட்டது இனி எவ்வளவு உயரமான கோபுரம் அமைப்பது என்பது தனது உயர்வு எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது அவர் அவரின் முயற்சியில் தங்கி உள்ளது என்பதை அடையாளப்படுத்துவதாக உள்ளது.

ஷில்பா சாஸ்திரங்களின்படி ஆதிஸ்தானம் தெய்வீக வாசஸ்தலத்தை அதன் எல்லா மகிமையிலும் உயர்ந்த பீடத்தில் இருப்பதைப் போலவே ஆன்மீகத் தன்மையின் வலிமையையும் மேம்படுத்தவும் உதவும் பாதுகாப்பு சக்தியாக செயல்படுவதாக சொல்லப்படுகின்றது. யாழ். பல்கலைக்கழக அலங்கார நுழைவாயில் இத்தகைய ஆதிஸ்தான அமைப்பில் கட்டப்பட்டது திராவிடக் கட்டடக் கலைக்காக மட்டுமல்லாது இத்தகைய தெய்வீக மகிமைகளுக்காகவும் தான் என அறியமுடிகின்றது.

இவ்விடத்தில் இது இந்து மதம் சார்ந்த மரபா அல்லது தமிழர் இனம் சார்ந்த மரபா அல்லது திராவிட மரபா என்ற கேள்விகள் எழுகின்றன. இத்தகைய மரபுகள், பாணிகள் சார்ந்த முரண்பாடுகளை களைவதற்கு பாணிகளின் ஆய்வு அணுகுமுறையை வசாரி, வின்கல்மான், ஜேகப் புக்ஹார்ட்ர் (1818-1879) போன்றவர்களின் கருத்துக்களை அடிப்படையாக கொண்டு பார்ப்போமானால் கலையாக்க ஆய்வுகளில் இருந்து அவற்றின் பாணி சார்ந்த பண்புகளை பிரித்தெடுத்துக் கொண்டு அதன் வழியால் பிராந்திய, பிரதேச மற்றும் காலகட்டங்களின் போக்குகளை கட்டியமைத்தலும். கலைப்பாரம்பரியங்களின் தொடக்கம், எழுச்சி, சரிவு தொடர்பான கூற்றுக்களை இதனூடாக உருவாக்குதலும் இது சார்ந்த அணுகுமுறையாகும். பாணிகளை ஆய்வு செய்வதன் ஊடாகக் கலைதொடர்பான கூற்றுக்களைப் பின்னுதல் என்பது இன்றும் கூடக் கலை வரலாறு, ஆவண முயற்சிகளில் காணக்கூடியதாக உள்ளது.

இலங்கையின் தொல்லியல் வரலாற்றாய்வாளர் கா.இந்திரபாலா அவர்கள் தமது ‘இலங்கையில் திராவிடக் கட்டடக்கலை’ என்ற நூலில் தமிழ்நாட்டில் பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகரத்தார், நாயக்கர் ஆகியயோரின் ஆட்சியில் இந்தியாவில் வளர்த்தெடுக்கப்பட்ட திராவிடக் கட்டிடக்கலையின் தாக்கம் இலங்கையில் சமகாலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களிலும் கணப்பட்டதை ஆராய்கின்றார். அவர் தமது நோக்கத்தில் இங்கே வளர்ந்த திராவிடக் கட்டடக்கலையின் நுட்பங்கள் குறித்த ஆய்வுகளைத் தவிர்த்து அதன் வரலாறு பற்றி மட்டுமே கவனத்தில் கொள்கின்றார்.

கி.பி 6ம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழ்நாட்டுக்கு வடக்கே உள்ள பிரதேசங்களில் இன்றைய ஆந்திரப் பிரதேசத்தின் பகுதிகளில் திராவிடக் கட்டிடக்கலை தோன்றியதாகவும். ஆகவே, தான் எடுத்துக்கொண்ட காலப்பகுதிகளை பிற்காலத் திராவிடக் கட்டடக்கலை என்றே எடுத்து கொள்ள வேண்டும் என்கிறார். அவர் திராவிடக் கட்டடக்கலையின் வளர்ச்சிக் கட்டங்களை பல்லவர் பாணி, சோழர் பாணி, பாண்டியர் பாணி, விஜயநகரப் பாணி, நாயக்கர் பாணி என்னும் ஐந்து பாணிகளின் அடிப்படையில் ஆராய்கின்றார்.

பல்லவர் காலத்திற்கு முன்னர் தமிழ்நாட்டில் நிரந்தரமான கட்டிடங்களை கட்டும் கட்டுமானங்கள் எதுவும் காணப்படாததால் இக்காலத்திற்கு உரியதான தமிழ்நாட்டுக் கட்டடக்கலையின் தாக்கங்கள் குறித்து எதுவும் அறியமுடியாதுள்ளது என்று குறிப்பிடுகின்றார். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே தமிழ்நாட்டுக்கும், இலங்கைக்குமான வணிக தொடர்புகள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு தொடர்புகள் இருந்திருக்கும் என்பதால் கட்டடக்கலையின் தாக்கம் இடம்பெற்றி ருப்பதில் ஐயம் இல்லை என்கிறார். இதற்கு அனுராதபுரத்தில் அழிபாடுகள் இடையே கண்டு பிடிக்கப்பட்ட கட்டடம் வணிகத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் வணிகக் குழுவொன்றினால் அமைக் கப்பட்ட கட்டடமாகும் என்கின்றார்.

திராவிட கலை மரபின் பரவல் தொடர்பாக கவனத்தில் கொள்வோமானால் 'திராவிட கலை தொடர்பான காலணித்துவ வரலாற்றாசிரியர்களும், கலை வரலாற்றாளர்களும், மத்தியகால இந்தியாவின் கோயில் அமைப்பினையும் அவற்றின் பாணியையும் அவை அமைந்துள்ள பிரதேசத்தினையும் தொடர்புபடுத்தி நாகரம்,வேசரம், திராவிடம் என வரையறை செய்தனர். திராவிடம் என்பதை வரையரை செய்யும் போது விமானம், கோபுரம் என்ற அம்சங்களும், தூண்கள், போதிகள் என்பவற்றுடன் அதிஷ்டானம், பாதம், மஞ்சம், கண்டம், பட்டிகை தூபி என்ற அங்கங்களின் ஒழுங்கமைவினாலும் பெறப்பட்ட ஒரு பாணி அல்லது அடையாளம் என எளிமையாக வரையரை செய்கின்றார்.' (சனாதனன்,2018,ப.201)

இந்த அங்கங்களுக்கு இடையிலான அளவு வேறுபாடுகள், நுணுக்க வேறுபாடுகள் என்பன இவற்றை மேலும் பல உபபாணிகளாகப் பிரிக்கின்றன என்கிறார். சாணக்கியர் தொடங்கி பாண்டியர், பல்லவர் சோழர், விஜய நகர் நாயக்கர் வழியாகக் கைமாற்றப்பட்டுச் செதுக்கி யெடுக்கப்பட்ட இப்பாணியிலமைந்த கட்டிடங்கள் தமிழ்நாடு உள்ளடங்கலாகத் தென் இந்தியா முழுவதும் பரந்து காணப்பட்டதுடன் சமண, பௌத்த, இந்து மதங்கள் சார் கட்டிடங்கள், அரண்மனைகள், பொதுக்கட்டிடங்கள் என அனைத்தும் இப்பாணியைத் தழுவியே அமைக்கப் பட்டுள்ளன என்கிறார்.

திராவிடக் கட்டடக் கலைமரபானது இந்தியாவின் காவிரி நதிக்கு கீழ் உள்ள பல பிராந்தியங்களிலும் பரவி இருந்தது. பின்நாளில் மொழிவாரி மாநிலங்கலாக அப்பிரதேசங்கள் பிரிக்கப்பட்ட போது திராவிட என்ற சொல் தமிழ் நாட்டிற்குரியதாக மாறிவிட்டதால் திராவிடக் கட்டடக்கலைமரபும் தமிழ்நாட்டிற்கு மட்டும் உரியதாக ஒதுங்கிவிட்டது.

காலனிய காலத்தின் இறுதிக் கட்டத்தில் மேலெழுந்த தேசியவாத சிந்தனைகளும், தமது தொல் சீர் மரபுகளை மீளுருவாக்கம் செய்தல் போன்ற முயற்சிகளும். இனம் சார்ந்த பிரக்ஞையின் தோற்றமும் திராவிடக்கட்டடக்கலையைத் தமிழர்களின் இன அடையாளத்தின் குறியீடாக நிலைநிறுத்தியதுடன் திராவிடக் கட்டடக்கலை மட்டுமே தமிழரது அடையாளம் என்னுமளவிற்கு அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. அதே வேளை இப்பாணியானது இந்துக் கோயிலமைப்புடன் மட்டுமே தொடர்புடையாதாக மேலும் குறுக்கப்பட்டு விட்டது.

றோமன் கத்தோலிக்க திருச்சபையின் 2ம் வத்திக்கான் சங்கத்தின் தீர்மானங்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட கொள்கைகளுடாக றோமன் கத்தோலிக்க திருச்சபையானது தன்னை பண்பாட்டு மயமாக்கலுக்கு உட்படுத்திய வேளையில் திராவிடக் கட்டடக்கலை பாணியில் தமது புதிய தேவாலயங்களை அமைத்தார்கள். இதை அடிப்படை இந்துத் தத்துவவாதிகள் இந்துக் கோவில் மரபுகளை றோமன் கத்தோலிக்க திருச்சபை பின்பற்றுகின்றது என்ற விமர்சனங்களும் எழுத்தது. இத்தகைய சந்தேக கண்ணோடு பார்ப்பது கத்தோலிக்க அடிப்படை வாதிகளிடமும் உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய தென்பிராந்தியங்களில் பரவியிருந்த திராவிடக் கட்டடக்கலை மரபானது எவ்வாறு தமிழ் இனம் சார்ந்த அடையாளமாக பார்க்கப்பட்டு இன்று அது இந்து மதம் சார்ந்த அடையாளமாக பரிணமித்துள்ளது என்பதை கலையாக்கங்கள் என்பது சூழமைவு சார்ந்த உற்பத்தியொன்றாகும் என்ற கலை வரலாற்று கோட்பாட்டு அணுகுமுறையில் பார்ப்போமானால். கலையாக்கங்களின் அர்த்தம், இருத்தல் மற்றும் அவற்றினை உருவாக்கிய சமூக, அரசியல் சார்ந்த நிலைமைகள் மற்றும் அந்த நிலைமைகளின் கருத்தாடல்கள், கருத்துநிலைகளுடன், தொடர்புபடுத்தி ஆய்வு செய்தல் இம் முறைக்கு உரியதாகும். (Pollock 1998)

இலங்கை, இந்தியாவில் காணப்படும் திராவிடக் கட்டடக்கலை பாணியில் அமைந்த கட்டடங்கள் சிலவற்றை உதாரணத்திற்கு பார்ப்போமானால் வள்ளுவர் கோட்டம், காந்தி மண்டபம், தஞ்சாவூர் பல்கலைக்கழகம், கர்நாடக சட்டமன்றம், இலங்கை சுதந்திர சதுக்கம், இலங்கை இலங்கா திலக விகாரை, யாழ்ப்பாண புகையிரத நிலையம், இலங்கை திரித்துவ கல்லூரி, இந்தியா அண்ணா அறிவாலயம், யாப்பகூவ அரண்மனை, நாலந்த கெடிகே என்பனவாகும்.

### 3. திண்ணை

திண்ணை என்றதும் இன்றைய தலைமுறைக்கு ஞாபகத்திற்கு வருவது திண்னை சுற்றுலா விடுதியைத்தான். அந்த வகையில் திண்ணை என்ற சொல் ஒரு வியாபார நாமமாக மாறியுள்ளது.



திண்ணை என்பது மரபுவழி வீடுகளின் வாயில் கதவுக்கு வெளிப்புறமாக நடைபாதைக்கு இருமருங்கிலும் அமைக்கப் பட்ட இரண்டு அடி உயரமுள்ள மேடை போன்ற அமைப்பாகும். இருக்கையாக மற்றும் படுத்து இளைப்பாற பயன்படுத்தகூடிய வகையில் அமைக்கப்பட் டிருக்கும். காலைக் கீழே வைத்துக் கொண்டு இருப்பதற்கு வசதியான உயரத்தைக் கொண்டிருக்கும். இருபகுதிகள் சுவரை அண்டியதாகவும் இருபகுதி வெளிப்புறமாகவும் இருக்கும். நடை பகுதியை விட இது உயரமாகவும், குந்து என்பதை விட இவ்விடம் விசாலமாகவும் இருக்கும் என்பதால் வெளியிலிருந்து வரக்கூடிய அழுக்குகள் திண்ணைகளில் சேராது சுத்தமாக இருக்ககூடியதாக இருக்கும்.

திண்ணை பல்வேறு சமூக பண்பாட்டு செயற்பாடுகளுடன் தொடர்புடையது. தனிப்பட்ட பயன்பாட்டுக்கான உட்பகுதிக்கும், பொதுப் பயன்பாட்டுக்கான வெளிப்பகுதிக்கும் இடைநிலையில் அமைந்து மாறுநிலைப் பகுதிகளாக செயல்படுகின்றன. குடும்பத்துடன் அதிகம் நெருக்கம் இல்லாத வெளியாரை உபசரிக்கும் பகுதியாகவும், தொழில் ரீதியான வெளியார் தொடர்புகளை போணும் பகுதியாகவும், சிறுவர்களுக்கு கல்வி புகட்டும் இடமாகவும்,



நண்பர்களுடன் அரட்டை அடிக்கும் இடமாகவும், தூரப் பிரயாண வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறி செல்லும் இடமாகவும் பயன்பட்டுள்ளது. திண்ணைப் பள்ளிக்கூடம், திண்ணைப் பேச்சு, திண்ணைத் தூங்கி போன்ற சொற்றொடர்கள் மூலம் திண்ணையின் சமூக பயன்பாட்டை அறியமுடிகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பண்பாட்டு தொன்மையை எதிர்கால சந்ததியினருக்கு ஞாபகப்படுத்தும் விதமாக இந்நுழைவாயிலில் உயரமான திண்ணை அமைப்பு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வீட்டின் திண்ணையில் அமர்ந்து நண்பர்களுடன் பொதுவான விடயங்களை கதைப்பது போல்இந்த உயரமான திண்ணையில் அமர்ந்து மாணவர்கள் உயர்ந்த விடயங்களை கதைப்பார்கள், உயர்வான சிந்தனைகளை பகிர்ந்து கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பு இப்படைப்பின் ஆசிரிய குழாமிற்கு இருந்திருக்கலாம்.

**4.மரத்தூண்**

தமிழர்கள் வீட்டுக் கட்டுமானங்களில் பாவிக்கும் மரங்களை ஆண், பெண், அலி என்றவாறு பயன்படுத்துவது உண்டு. விட்டங்கள், கூரைகளுக்கு ஆண் மரங்களையும், தூண்களுக்கு பெண் மரங்களையும், ஏனைய தேவைகளுக்கு அலி மரங்களையும் பாவிப்பார்கள்.



இக்கட்டடத்தில் கையாளப்பட்டுள்ள மரவேலைப்பாடுகள் கேரளா பாணியில் அமைந்துள்ளதாகவும் மேலும் இதற்கே உரிய மரங்கள் பாவிக்கப்படவில்லை என்பதான விமர் சனங்கள் காணப்படுகின்றது.

இலங்கையில் காணப்படும் தமிழ் கடவுள் முருகனின் எம்பக்கே தேவாலயத்தின் கட்டுமானமானது மரவேலைப்பாடுகள் நிறைந்த ஒன்று. அந்த வகையில் மரவேலைப்பாடுகள் நிறைந்த கட்டமைப்பு என்பது தமிழர் கட்டட மரபில் காணப்பட்ட ஒன்றாகும். இவற்றை எடுத்துக் காட்டும் விதமாக இம்மரவேலைப்பாடுகளுடனான அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எழுந்த விமர்சனங்கள் வெகுசன அபிப்பிராயங்களே தவிர ஆய்ந்த கருத்துக்கள் இல்லை என்பது வெளிப்படுகிறது.




**5. கூரை அமைப்பு**

இதன் கூரை அமைப்பானது தமிழர்கள் சாதாரணமாக முன்னைய காலங்களில் மண் குடிசை களுக்கு தென்னை ஓலையில் பின்னிய கிடுகால் வேய்ந்த கூரைகள் போன்ற அமைப்பை ஒத்ததாகவே அமைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதானமான முன், பின் பகுதிகள் உடன் இணையும் இரண்டு பக்க வாட்டு கூரைகளுக்கு இடையில் முக்கோணமான இரண்டு பக்கமும் விடப்படும் இடைவெளிகள் காற்றோட்ட வெளிகளாக இருக்கும். இது வெப்பமண்டல பிரதேச மண் குடிசைகளுக்கு உரியதாக உள்ளது. தென் மாகாணங்களில் உள்ள சிங்கள மக்களுடைய வீட்டுக்கூரை அமைப் புகளில் முக்கியமாக கண்டி பிரதேச கூரை அமைப்புக்களில் இத்தகைய இடைவெளி காணப்ப டமாட்டா அதற்கு காரணம் அப்பிரதேசங்கள் குளிர்வலயப் பிரதேசங்களாக காணப்படுவதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**6.வாசற்கதவு**

யாழ்ப்பாணத்து சாதாரண மக்கள் தொடங்கி பொருளாதார மேல் நிலையில் உள்ளவர்கள் என பெரும்பாலானவர்களின் வீடுகளில் காணப்படும் சங்கடப்படலையை ஒத்ததாகவும் சற்றே பெரிதாகவும் இவ்வாயில் கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இது சாதாரண மக்களின் வீட்டுஅமைப்புக்களுடன் தொடர்புடைய அம்சங்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற காரணத்தினாலாக இருக்கலாம்.



படலையின் கிடுகுகளை பிணைத்து கட்டியிருக்கும் பனை மட்டையின் பகுதியை இதில் காணப்படும் வேல் போன்ற அமைப்பானது குறிக்கின்றது. ஓலை வெட்டி சீர் செய்யப்பட்ட பனை மட்டையின் கூரான வேல் போன்ற அமைப்பே இவ்வாறு மரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வடி வமைப்பே இரும்பினாலான வேலிகளில் காணப்படும் வேல் போன்ற அமைப்பிலும் காணப்படுகின்றது.

**7.மரச்சிற்பங்கள்**



கி.பி 10ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 13ம் நூற்றாண்டு வரை பொலன்னறுவையை தலைநகராக தெரிவுசெய்து ஜனநாதபுரம் என்று பெயரிட்டு சோழர்கள் 52 ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்தார்கள். அக்காலப்பகுதியில் இந்தியக் கலை மரபுகளின் செல்வாக்கு இலங்கையில் காணப்பட்ட போதிலும் இலங்கையில் காணப்படும் வட்டதாகே சிற்பங்கள் பண்டைய இலங்கையின் தனித்துவமான கட்டடக்கலை அமைப்பை கொண்டுள்ளது. இவ் வட்டதாகே அரசர்கள் மந்திரிகளுடன் ஆலோசனைகள் நடத்தும் கூடங்களாக விளங்கியது என்ற கருத்து காணப்படுகின்றது. ஆனால், தற்போது காணப்படும் நான்கு பக்கங்களும் அமர்ந்த நிலையில் உள்ள புத்த சிலைகள் பிற்காலத்தில் வந்த அரசுகளால் வைக்கப்பட்டு இருக்கலாம்.

வட்டதாகேயில் காணப்படும் ஆதிஸ்தானத்தை ஒத்த வேலைப்பாடுகளில் இரண்டு கண்டக வரிகள் காணப்படுவதுடன் அதில் மேல்வரியில் சித்திரகுள்ளரின் சிற்பமும், கீழ்வரியில் சிங்கத்தின் உருவமும் தொடர்ச்சியாக சம இடைவெளியில் காணப்படுகின்றன. அதைப் போன்றே இப் புதிய அலங்கார நுழைவாயிலிலும் இரண்டு கண்டக வரிகள் காணப்படுவதுடன் அவற்றில் மரச்செதுக்கு வேலைப்பாடுகள் உயர் புடைப்பு சிற்பங்களாக சமமான சதுரங்களில் செதுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன. அவற்றில் மரச்செதுக்கு வேலைப்பாடுகள் உயர் புடைப்பு சிற்பங்களாக சமமான சதுரங்களில் செதுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன.

தமிழரின் தொன்மை பண்பாட்டினை கட்டமைக்கும் பனுவல்களான திருக்குறளின் கல்வி, கல்லாமை என்ற இரண்டு அதிகாரங்கள், தமிழரின் 64 கலைகள், நன்னூல், புறநானூற்று பாடல்களில் சில, யாழ்ப்பாணத்து தேசவழமைச் சட்டங்கள், யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம் பரியம் வளர்ந்த வரலாறு என்பன மரச்செதுக்கு சிற்பங்களாக காட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நுழைவாயிலின் முன்பகுதியில் கீழ்வரிசையில் வாயிலின் இரண்டு பங்கங்களிலும் தமிழரின் வரவேற்பு பாரம்பரியம் முறையே காட்டப்பட்டுள்ளது. வரவேற்பு நிகழ்வில் பங்கெடுக்கும் குடை, கொடி, ஆலவட்டம் பிடித்தல், சாமரம் வீசுதல், பன்னீர் தெளித்தல், பூத்தூவுதல், தூபம் காட்டுதல், சங்கு ஊதுதல், எக்காளம், நாதஸ்வரம், தவில், யாழ் போன்ற இசைக்கருவிகளை மீட்டும் இசைவாணர்கள். நாட்டியக் கலைஞர்கள் என முறையே இருபக்கமும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. மேலும் குளை தள்ளிய வாழைமரம் வாசல் இருமருங்கிலும் கட்டும் மரபும் தம்பதிகளாக இருகைகூப்பி வணக்கம் சொல்லி வரவேற்கும் முறையும் காட்டப்பட்டுள்ளது.



நுழைவாயிலின் முன்பகுதியில் மேல் வரிசையின் இடப்புறத்தில் கல்வி கற்பதனால் உண்டாகும் சிறப்பைக் கூறும் திருக்குறளின் கல்வி அதி காரத்தின் 10 பாடல்கள் பத்து மரச்சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளது. அது போன்று வலப் புறத்தில் கல்வி அறிவு இல்லா மாந்தரின் நிலைபற்றி கூறும் கல்லாமை அதிகாரத்தின் 10 பாடல்கள் உருவகங்களாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக கல்வி அதிகாரத்தின் 398வது குறள் “ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து” என்பதற்கான சிற்பமாக ஒருவர் மேல் ஒருவராக ஏழு பேர் அமர்ந்திருப்பதும், அவர்கள் பக்கத்தில் புத்தகங்கள் அடுக்கி இருப்பதாகவும் காட்டப்பட்டுள்ளது.

நுழைவாயிலின் இரண்டு பக்கவாட்டு பகுதிகளின் மேல்வரிசை மற்றும் கீழ்வரிசைகளில் தமிழரின் 64 கலைகள் செதுக்கப்பட்டுள்ளன. யாழ் இசைக்கருவி மீட்டுதல், நடனமாடுதல், ஓவியம் வரைதல், அழகுகலை, பூமாலை கட்டுதல், சிற்பம் செதுக்குதல், சித்த மருத்துவம், மாந்திரிகம், யோகாசனம், ஜோதிடம், தச்சு வேலை, கொல்லர் வேலை, கூத்து, பாய் பின்னுதல், தொழில்நுட்ப கல்வி, தையல் என்பன சில வலது பக்கவாட்டிலும். இடது பக்கவாட்டில் விவசாயம், வணிகம், வர்மகலை, எண்கள், எழுத்துக்கள், போர்க்கலை, நெசவு, செக்கு ஆட்டுதல், கள்ளு சீவுதல், வில்வித்தை, கடல் தொழில், வான சாஸ்திரம், குதிரை ஏற்றம், யானை ஏற்றம், வேள்வி வளர்த்தல் போன்ற 64 கலைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.



நுழைவாயிலின் பின்பகுதியில் உள்ள மேல் வரிசைகள் நன்னூல், புறநானூறு போன்ற இலக்கியங்களில் உள்ள கல்வி, அறநெறி கருத்துக்கள் உடன் தொடர்புடைய தெரிவு செய்யப்பட்ட நீதி நெறிக்கதைகள் காட்டப் பட்டுள்ளன. பின்பகுதியின் இடப்புறமுள்ள கீழ்வரிசையில் யாழ்ப்பாண தேசவழமைச் சட்டம்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதநேயம், பெண்களுக்கான சம உரிமை என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக சுமைதாங்கிக்கல், ஆவுரஞ்சிக்கல், பயன்தரு மரத்தின் மூன்றில் ஒரு பங்கை பறவைகளுக்கு வழங்குதல், திண்ணை பாரம்பரியம் போன்றவை காணப்படுகின்றன.

பின்பகுதியின் வலப்புறமுள்ள கீழ்வரிசையில் யாழ்ப்பாண கல்விப் பாரம்பரிய வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது. திண்ணை பள்ளிகள், கத்தோலிக்க மிசனெறிகளின் கல்விப்பணி, பெண்களுக்கான கல்வி, ஆசியாவின் முதலாவது பெண்களுக்கான பாடசாலையாக உருவாக்கப்பட்ட உடுவில் மகளிர் கல்லூரியின் முகப்பு தோற்றம், யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி வாய்ப்பை உருவாக்க, யாழ்ப்பாண கல்வி மேன்நிலை அடைய யாழ்.பல்கலைக்கழக உருவாக தமது சொத்துக்களை அதன் பெயரில் வாரிவழங்கிய சேர்.பொன் இராமநாதன் அவர்களின் வீட்டின் முன்பகுதி காட்டப்பட்டுள்ளது.

**8.முடிவுரை**

இற்றைக்கு 400வது அகவை கடந்து கொண்டிருக்கும் யாழ்.கோட்டையை மையமாகக் கொண்ட யாழ்ப்பாண நகரத்தின் தொன்மை என்பது அதையும் தாண்டி முற்பட்டதாகும். அந்த வகையில் யாழ்ப்பாணத்தின் சாதாரண மக்களின் வீட்டுக்கட்டடக்கலை, உள்ளூர் அடையாளங்கள் தொடங்கி திராவிட கட்டடக்கலைமரபு வேலைப்பாடுகள், மற்றும் தமிழ் இலக்கியம், அறநூல்களின் கல்வி, அறநெறி சார்ந்த கருத்துக்கள், யாழ்ப்பாண கல்வி பாரம்பரியம் போன்ற பல தொன்மைகளின் பிழிசாறாகவும் அத்துடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு மட்டுமே உரியதான ஒரு தனித்துவமான அடையாளத்தை உருவாக்கும் முயற்சியாக இந்நுழைவாயில் அமைந்துள்ளது. இது வேறு ஒன்றை போலச் செய்தல் போல் அல்லாமல் தனக்கான தனித்துவமான அடையாளமாக உருவாக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண கல்விப் பாரம்பரியம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவில்லை அது பல நூறு வருட பாரம்பரியம் என்று சொல்ல முயற்சிக்கின்றது. இதனை ஆக்கியோர் உள்ளூர் அளவிலும் சிந்திக்கின்றனர், உலகலாவிய ரீதியிலும் சிந்தித்துள்ளனர். யாழ்ப்பாண பண்பாட்டின் அடையாளமாக இந் நுழைவாயில் உருவாக்கப்பட்டுள்ளது. “நாங்கள் கட்டடங்களை வடிவமைக்கின்றோம், பின்னர் கட்டடங்கள் எம்மை வடிவமைக்கின்றன” என்று வின்சன் சேர்ச்சில் 2ம் உலகமகா யுத்தத்தின் பின்னர் அழிவடைந்த தமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப மக்களை அழைத்தபோது கூறிய பிரபல்யமான வார்த்தைகள் இப் புதிய அடையாள உருவாக்கத்திற்கு மணிமகுடமாக விளங்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“நாங்கள் கட்டடங்களை வடிவமைக்கின்றோம்,**
**பின்னர் கட்டடங்கள் எம்மை வடிவமைக்கின்றன.” – வின்சன் சேர்ச்சில்**

**உசாத்துணை:**


1. சனாதனன்.தா,‘புதிய அடையாளத்தின் உருவாக்கம்: நல்லூர்க் கந்தசாமி கோயில் முகமண்டபம்’, சிங்கை ஆரம், பிரதேச மலர், நல்லூர், 2018.
2. இந்திரபாலா .கா, ‘இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை’, விஜயலட்சுமி புத்தகசாலை, கொழும்பு, 1970.
3. ஆர்ட் லாப், 2ம் இதழ், கரிகணன் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம், 2005.


## “கல்வி”

**கருவில் இருக்கும் போதே ஆரம்பிப்பது...**
**பிறந்ததிலிருந்தே நம்முடன் பிணைந்து இருப்பது...**
**வளரும் போது நம்மை வழி நடத்திச் செல்வது...**
**யாரும் நம்மிடம் இருந்து அபகரிக்க முடியாதது...**
**சங்கடங்கள் வரும்போது சமயோசிதமாக**
**யோசிக்க வைப்பது...**
**எந்த சூழ்நிலையிலும் நம்மை விட்டு பிரியாதது...**
**கல்லறை செல்லும் தருவாயிலும் நம்மால்...**
**மறக்க முடியாதது... நாம் கற்ற கல்வி .....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிதல்




**இந்துமதி வரதராசன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்


போலியாகப் பேசி போலி அன்பு காட்டும்
உறவுக்காகக் கலங்காதே
சண்டை போட்டாலும் உண்மையாகப் பேசி
உரிமையோடு வாழுகின்ற
உறவுக்காகப் போராடு......

அருகில் இருப்பதனால் அன்பு அதிகரிப்பதில்லை
தூரமாய்ப் போவதால் உண்மையான அன்பு
என்றும் குறைவதுவும் இல்லை
அன்பைத் தீர்மானிப்பது இடங்கள் அல்ல
இதயங்களில் உள்ள நம் எண்ணங்களே

புரிதல் என்பது இல்லை என்றால்
உறவில் சந்தோசம் என்பது கிடையவே கிடையாது
சண்டையும் சமாதானமும் வாழ்வதற்கான
தேடல்கள் தான்......
போராடிப் பார்த்தால் தான்
வாழ்க்கையின் நிலை புரியும்
பொறுத்துப் பாருங்கள் நம்
விருப்பங்கள் நிறைவேறும்
சில நொடி சிந்தியுங்கள் புரியும்
இவ் உலகில் எதுவும் நிரந்தரம் இல்லையென்று
இது தான் நம் வாழ்வின் புரிதலின் முதலிடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கர்னாடக இசை ஒரு நோக்கு



**செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம்**
ஓய்வு நிலை உதவிக்
கல்விப்பணிப்பாளர் (அழகியல்)

யாழ்ப்பாணம் என்றவுடன் இசைக்கருவியாகிய யாழின் தோற்றம் எம் மனக்கண் முன் தோன்றுகின்றது. சோழ மன்னனான சிங்கை நகர் அரசன் செயவீரசிங்கராசன் எனும் மன்னன் முன்பாக அந்தகக் கவிஞனான வீர ராகவன் என்பவர் யாழ் மீட்டி திறம்பட இசைத்ததைக் கேட்டு இன்புற்ற மன்னன் அவனுக்குப் பரிசாகக் கொடுத்த நிலப்பகுதிதான் 'யாழ்ப்பாணம்" என்பது வரலாறு.

கர்னாடக இசை என்பது பழமையான இசை. இன்று மெல்லிசை, பொப்பிசை, குத்துப் பாட்டு, கானா இசை, கிராமிய இசை என்பனவும் ஐரோப்பிய இசை, ஹிந்துஸ்தானி இசையுடன் கலப்புற்ற இசை எனப் பலவிதமான இசை வகைகள் வழக்கில் உள்ளன. எனினும் எல்லா வகையான இசைக்கும் அடிப்படையாக அமைந்த இசை கர்னாடக இசையாகும். இது தெய்வீக இசை. தேவார முதலிகள் காலத்தில் பிரபலமடைந்த பக்தி இலக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு கர்னாடக இசை வளர்ச்சி பெற்றது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலே கர்னாடக இசை மிகவும் உன்னத நிலையில் இருந்தது. இன்று யாழ்ப்பிரதேசத்தில் சற்று வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இசை ஆர்வலர்கள் இவ் விடயத்தில் அக்கறை செலுத்துவதன் மூலம் முன்னைய நிலைக்குக் கொண்டு வர முயற்சிக்க வேண்டும் என்பது எமது வேண்டுகோள். குறிப்பு: கர்னாடக இசை - பழமையான இசை, கர்னாடக சங்கீதம் - பாகம் 4, P.சாம்பமூர்த்தி, கர்னாடக இசை - கர்னாடக தேசத்து இசை ஆதாரம்.

கர்னாடக இசையைக் கற்பதனால் அன்பு, அடக்கம், பணிவு, தலைமைத்துவம், நுண்ணறிவு போன்ற நற்பண்புகள் வளர்க்கப்படுகின்றன. தூய கர்நாடக இசையைக் கேட்பதனால் மரங்கள் செழித்து வளர்கின்றன. நல்ல பயன்களைத் தருகின்றன. பசுக்கள் கூடிய பாலைச் சுரக்கின்றன. மனிதனுக்குப் பலமருத்துவ குணங்கள்களைக் கொண்டிருக்கின்றன.

அடுத்து யாழ் பிரதேசத்தில் அன்றிலிருந்து இன்று வரை நர்நாடக இசையை வளர்த்த பெரியோர்களையும் நிறுவனங்களையும் நோக்குவோம்.

கொழும்புத்துறையில் வில்வம் தெருவீதியில் "சபாபதிப்பிள்ளை அண்ணாவியார்" அவர்கள் வாய்ப்பாட்டு, வயலின் என்பவற்றைப் பல மாணவர்களுக்குக் கர்நாடக இசையில் கற்பித்து வந்தார். அத்துடன் இசை நாடகங்கள் நெறியாள்கை செய்வதிலும் அரங்கேற்றுவதிலும் பல வருடங்களாக ஈடுபட்டுப் புகழீட்டி வந்தார். இவருடைய புதல்வர்களில் அமரர் "சங்கீத பூஷணம் S. பாலசிங்கம்" (1929-2017) அவர்கள் கர்னாடக இசைக்கு அரும்பாணியாற்றிய ஒருவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் Super grade பாடகராக விளங்கியதுடன் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் செயலாளராகவும் ஆசிரியராகவும் இருந்து பல இசை ஆசிரியர்களையும் வித்துவான்களையும் உருவாக்கியவர். சில கீர்த்தனைகளை இயற்றி இசையமைத்துப் பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவியாருடைய கடைசிமகள் "செல்வி. இராதாதேவி சபாபதிப்பிள்ளை" (1939) அவர்கள் நல்லாசிரியையாக விளங்கியவர். இவர் கர்னாடக இசையில் வாய்ப்பாட்டிசையைப் பல மாணவர்களுக்கு இசை நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும் கற்பித்தார். தனியார் வகுப்புகளையும் திறம்பட நடாத்தி, பல இசை ஆசிரியர்களையும், இசை வித்துவான்களையும் உருவாக்கியவர். இவரது இசைச் சேவையைப் பாராட்டி 'யாழ் ரத்னா' விருதை யாழ் பிரதேச செயலகம் 2011ஆம் ஆண்டு வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

"திரு. புத்துவாட்டி சோமு" எனும் நாகலிங்கம் சோமசுந்தரம் என்பவர் வண்ணார் பண்ணையில் வாழ்ந்து வயலின் வாத்தியத்தில் பிரபல ஆசிரியராக விளங்கினார். இவர் வாய்ப்பாட்டு, வயலின் வாத்தியத்தில் பல மாணவர் பரம்பரையை உருவாக்கியவர். சாரங்கி வாத்தியத்தை பண்ணிசைக்குப் பக்க வாத்தியமாக இசைத்த இசைக் கலைஞர் இவர் புல்லாங்குழல், வீணை, ஆர்மோனியம், மிருதங்கம் என்பனவும் வாசிக்கக் கூடியவர். இவர் காலத்திலேயே வாய்ப்பாட்டு இசை அரங்குகள் இடம்பெற ஆரம்பித்தன. இவர் 1895 ஆம் ஆண்டிலிருந்து 1955 வரை வாழ்ந்தவர். இவருடைய பிரதம சிஷ்யர் K.V தம்பு, தமது தந்தையின் ஞாபகார்த்தமாக 'நாகலிங்கம் சங்கீத நிலையம்' எனும் இசை மன்றத்தை ஆரம்பித்து நடத்தினார். பல இசை மாணவர்களை உருவாக்கினார்.

புத்துவாட்டி சோமு அவர்களின் மாணவியாகிய "செல்வி. சாந்தநாயகி சுப்பிரமணியம்" சிறந்த வயலின் வித்துவானாவார். இவர் வாய்ப்பாட்டிசையிலும் தேர்ச்சி பெற்றவர். இவரும் வண்ணார் பண்ணையிலே வாழ்ந்தவர். இந்தியாவில் அடையாறு இசைக்கல்லூரியில் கற்று சங்கீத வித்துவான் பட்டம் பெற்றவர். இவர் 1940ஆம் ஆண்டிலிருந்து 2018ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இசை ஆசிரியராகக் கடமையாற்றி 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2003ஆம் ஆண்டு வரை யாழ் பல்கலைக்கழகத்தில் நுண்கலைப் பிரிவில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். M.Phil பட்டத்தையும் பெற்றார். ஏராளமான இசைக் கச்சேரிகளுக்கு வயலின் வாசித்துச் சிறப்பித்தார். சாந்தமாக மாணவர்களுடன் பழகி பெருந் தொகையான இசை மாணவர் சமுதாயத்தை உருவாக்கினார். பல இசை ஆசிரியர்களையும் வயலின் வித்துவான்களையும் உருவாக்கினார்.

புத்துவாட்டி சோமு அவர்களின் முதன் மாணவரான "க.வை. தம்பு" அவர்கள் 05.02.1915 இலிருந்து 18.11.1995 வரை வாழ்ந்தார். இவர் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட பொழுதிலும் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியை வசிப்பிடமாகக் கொண்டது மட்டுமல்லாமல் "ரசிக ரஞ்சனசபா" எனும் இசை நிறுவனத்தை ஆரம்பித்து வளர்த்து அதற்கென ஒரு கட்டடத்தையும்அமைப்பதற்குப் பெரும்பாடுபட்டவர். 1976ஆம் ஆண்டு ரசிகரஞ்சன சபாவின் வெள்ளிவிழாவை நண்பர்களுடன் இணைந்து சிறப்புற நடத்தி வைத்தார். அங்குதான் அவருக்குக் கானகலாதரர் எனும் விருது வழங்கப்பட்டது. ஹிந்தோளம் தம்பர் என்று சிறப்பாக அழைக்கப்பட்டார்.

11.03.1920 ஆம் ஆண்டு குருநகரில் "அமரர் அல்வின் தேவசகாயம்" அவர்கள் பிறந்தார். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம் பட்டம் பெற்றவர். இசை ஆசிரியராகக் கடமை புரிந்தவர். இவர் கலாபூஷணம் திலகநாயகம் போல் அவர்களின் மாமனா ராவார். இளைப்பாறிய பின்பும் இசைத் தொண்டுபுரிந்து 21.03.1986இல் இயற்கையெய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் பழம்பெரும் கர்நாடக இசை வித்துவான் பரம் தில்லைராஜா அவர்கள் வண்ணார் பண்ணை நகரில் வாழ்ந்தவர். இவர் பாடசாலை அதிபராகவும் திறம்பட சேவையாற்றியார். இவர் சிறந்த வாய்ப்பாட்டிசைக் கலைஞர் எண்ணற்ற இசைக்கச்சேரிகளை நடாத்தியுள்ளார். பிற்காலத்தில் லண்டன் நகரில் வாழ்ந்தார்.

அடுத்து வண்ணார் பண்ணையைச் சேர்ந்த "ஞானாம்பிகை பத்மசிகாமணி" அவர்கள் புத்துவாட்டி சோமுவின் மாணவி சிறந்த வயலின் வித்துவான் ஆவார். இவருடைய வயலின் நாதமே தனிச்சிறப்பு வாய்ந்தது. நுணுக்கம் நிறைந்த வாசிப்பு. சிறந்த பக்க வாத்தியக் கலைஞராகத் திகழ்ந்த இவர் லண்டன் மாநகரில் வாழ்ந்து வருகின்றார்.

சங்கீத பூஷணம் "அமரர் அ. சோமசுந்தரம்" அவர்கள் 13.04.1918 இல் பிறந்து 1945 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றார். யா/ வசாவிளான் ம.வி, யா/கனகரத்தினம் ம.ம.வி உட்பட பல பாடசாலைகளில் இசை ஆசிரியராக கடமை புரிந்தார். இலங்கை வானொலிக் கலைஞராகவும் திகழ்ந்தார். இவர் சரசாலையில் பிறந்தாலும் திருமணம் செய்ததிலிருந்து கொழும்புத்துறையில் வசித்து வந்தார். இசையரசு, கலாபூஷணம் விருதுகள் பெற்றவர். இவர் யோகசுவாமிகளின் அருளில் வசப்பட்டு சுவாமிகளின் பாடல்களைப் பாடுவதில் தன் பிற்காலத்தைக் கழித்து 20.10.2010 இல் இறையடி சேர்ந்தார்.

சங்கீதபூஷணம் "திருமதி ஞானாம்பிகை கணபதிப்பிள்ளை" அவர்கள் கொழும்புத்துறையில் 05.12.1925 பிறந்து 11.01.2001 வரை வாழ்ந்தவர். வயலினைப் பிரதான பாடமாகக கொண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம் பட்டம் பெற்று யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இசை ஆசிரியராக 1952ஆம் ஆண்டிலிருந்து 1982 வரை கடமையாற்றினார்.

வயலின் வாசித்துக் கொண்டே பண்ணிசை பாடுகின்ற வயலின் வித்துவான் வேலுப்பிள்ளை சிவஞானம் அவர்களும் பிறந்த இடம் யா/ கொய்யாத்தோட்டம் ஆகும்.

யாழ்ப்பாண நகரப்பகுதியில் 1919-1993 வரை வாழ்ந்த "நாதஸ்வரமேதை P.S. ஆறுமுகம்பிள்ளை" அவர்கள் கர்நாடக சங்கீதத்தை எங்கும் நாதஸ்வரத்தில் வாசித்து மக்களைத் தன்வசமாக்கியவர். இவர் நாதஸ்வரத்துடன் முகவீணை, கடம், புல்லாங்குழல், கெஞ்சிரா எனும் வாத்தியங்களையும் திறம்பட வாசித்த கலைஞர். இசை ஞானஜோதி, இசை நாத வாரிதி, பல்லிசைப் புலவர், இசை அரசு, இசை நாதலயமணி, தேவகால இசைத்திலகம் போன்ற இன்னும் பல பட்டங்களையும் பெற்ற பெருங்கலைஞர்.

இவருடைய மாணவர்களில் சிறந்து விளங்கிய "கலாசூரி N.K பத்மநாதன்" அவர்களும் இப்பகுதியைச் சேர்ந்து 1931-2003 வரை வாழ்ந்தவர். இவரது பிறப்பிடம் அளவெட்டியாக இருந்த பொழுதிலும் இவர் யாழ் நகரப் பகுதியிலேயே அதிக காலம் வாழ்ந்துள்ளார். இவர் கர்னாடக இசையை நாதஸ்வரத்திலே வளர்த்து வந்தவர்களில் குறிப்பிடக்கூடிய ஒருவர். இவர் இலங்கையில் மட்டுமல்லாது இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிலும் நாதஸ்வர இசைக்கச்சேரி நடாத்திப் பலரதும் பாராட்டுக்களைப் பெற்றவர்.

அனைவரது நெஞ்சங்களிலும் இடம்பிடித்த மகான். இவருக்கு கலாசூரி, நாதஸ்வர கலாநிதி, ஏழிசை வேந்து எனும் விருதுகள் கிடைத்துள்ளது. 2003ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தினால் கௌரவ கலாநிதிப்பட்டம் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது மகள் கனகாம்பரி - சிவனேஸ்வரநாதன் இசை ஆசிரியராகக் கடமையாற்றுவதுடன் பல இசைக்கச்சேரிகளை நடாத்தி வருகின்றார். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று இசைக் கலைமாமணிப் பட்டம் பெற்றவர்.

வண்ணார்பண்ணையில் 1906-1944 வரை வாழ்ந்த திரு.வி.காமாட்சி சுந்தரம் அவர்கள் தவில், கெஞ்சிரா வாத்தியங்களைத் திறம்பட வாசித்து இசைக்குப் பணியாற்றியுள்ளார். யாழ் பற்றிக்ஸ் கல்லூரி வீதியில் வாழ்ந்த அமரர் கலாபூஷணம் லயன்ஸ் திலகநாயகம் போல் அவர்களைத் தெரியாதவர்கள் இசை உலகில் இருக்கமாட்டார்கள் என்றே கூறலாம். இவர் 1941 இல் பிறந்து 06.12.2009 வரை வாழ்ந்தவர். யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளராகத் திறம்படக் கடமையாற்றியவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசை பயின்று முதற் பிரிவில் சித்தி பெற்று சங்கீத பூஷணம் பட்டம் பெற்று இலங்கையில் மன்னார், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி போன்ற இடங்களில் ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்பு சேவைக்கால ஆலோசகராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணிபுரிந்தார். சிறந்த இசை வித்துவான். ஏராளமான இசைக்கச்சேரிகளை நிகழ்த்தியவர். பல்லவிபாடுதல், ஸ்ருதிபேதம் செய்துபாடுதல் போன்ற நுணுக்கமான இசைப்பகுதியைக் கையாண்டு பலரையும் கவரும் வகையில் இசைக்கச்சேரிகளை நிகழ்த்தினார். இவர் பெற்றவிருதுகள், கலைச்செம்மல், ஸ்வரராகலய வினோதசுரபி, இசைத்திலகம், கலாபூஷணம், வடமாகாண ஆளுநர் விருது ஆகியன குறிப்பிடத்தக்கது. யாழ் பல்கலைக்கழகத்தில் சில காலம் பகுதிநேர விரிவுரையாளராகக் கடமையாற்றினார். ஜேர்மனி நாட்டில் இசை கற்கும் மாணவர் களுக்காக இராக ஆலாபனை மட்டும் ஒரு கசற்றில் (Cassatte) பதிவு செய்தார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் Super grade பாடகராகத் திகழ்ந்தார். அக் காலத்தில் பல மெல்லிசைப் பாடல்களையும் பாடினார். பல நடன அரங்கேற்றங்களுக்கும் பாடினார். 'செந்தமிழ் செவ்விசைப்பாக்கள்' எனும் நூலை வெளியீடு செய்தார். இவற்றில் பாடல்களைத் தானே இயற்றி இசையமைத்துள்ளார். இதில் 75பாடல்கள் வரையில் உள்ளன. கீதம், வர்ணம், கீர்த்தனை, இராகமாலிகை எனப்பல இசை உருப்படி களையும் தூயதமிழில் பிறமொழிக்கலப்பின்றி எழுதினார். இவற்றில் சில இறுவெட்டுக்களும் வெளியிடப்பட்டன. 'பஞ்சபுராணம்' எனும் தலைப்பில்2 ஒலி நாடாக்களை வெளியிட்டார். கிறிஸ்தவப் பாடல் எனும் ஒலிநாடாவையும், இராகம், தானம், பல்லவி எனும் இறுவட்டு க.பொ.த (உ.த) பாடல்கள் இறுவட்டு என்பன இவரால் வெளியிடப்பட்டவை. அத்துடன் உயரப்புலம் பிடாரி அம்மன் கோவில் மீது பாடல்கள் பாடி இறுவட்டாக வெளியீடு செய்தார். இவ்வாறு இலங்கையின் இசை வளர்ச்சியில் இவர் மிகவும் பணியாற்றிய ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து "றீற்றா ஞானதீபம் - சுகந்தநாதன்" (நிர்மலா) என்பவர் 1948.11.06 இருந்து 2011.03.21 வரை வாழ்ந்தவர். இவர் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர். வீணை வாசிப்பதில் வல்லவர். யாழ்ப்பாணம் டேவிட் றோட்டில் வாழ்ந்தவர். குறிப்பாக கிறிஸ்தவதேவாலயங்களில் உற்சவங்களின் பொழுதும் திருமறை வைபவம், குருத்துவப் பட்டமளிப்பு விழா என்பனவற்றில் தவறாது கலந்து கொண்டு வீணை வாசித்தார். இவர் ஒரு இசை ஆசிரியை சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் தனது இறுதிக் காலத்தில் 25 வருடங்களாக சேவை செய்தவர். பல வாத்திய பிருந்தா நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பித்துள்ளார். இவரைப் பாராட்டி சென் ஜேம்ஸ் வித்தியாலயம் 'இசை மேதை" வீணா சரஸ்வதி எனும் பட்டத்தினை வழங்கியது. பல மாணவர்களை உருவாக்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீச்றோட்டில் வாழ்ந்த "தம்பித்துரை பாக்கியநாதன்" அவர்கள் சிறந்த மிருதங்க வித்தவான். பல இசைக்கச்சேரிகளுக்கும் நடன கச்சேரிகளுக்கும் பக்க வாத்தியமாக மிருதங்கம் திறம்பட வாசித்தார். இவர் 1928இல் பிறந்து பிற்காலத்தில் நோய்வாய்ப்பட்டு அமரத்தவம் அடைந்தார்.

"அமரர் கிருஷ்ணசாமி பத்மநாதன்" அவர்கள் 05.09.1950 ஆம் ஆண்டிலிருந்து 2017 வரை வாழ்ந்த வயலின் வித்துவான் ஆவார். இவர் சங்கீத கலாவித்தகர், சப்தஸ்வர ஞானபூபதி இசை ஞானமணி போன்ற விருதுகளையும் 2014இல் 'யாழ்ரத்னா' விருதையும் பெற்றார். அதிககாலம் யாழ் இந்துக் கல்லூரியில் இசை ஆசிரியராகக் கடமையாற்றி நன்கு சேவை செய்தவர். பல இசைக் கச்சேரிகளுக்குப் பக்கவாத்தியம் வாசித்ததுடன் இறுவட்டுகளிலும் பக்கவாத்தியமாக வயலின் வாசித்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் அத்தியடியில் வசித்து வந்தார்.

"செல்வி விஜயலட்சுமி சண்முகராஜா" அவர்கள் 1950.02.09 இல் பிறந்து எம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பவர். இவர் யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலே வசித்து வருகிறார். வீணை வாத்தியத்தைப் பிரதான பாடமாகக் கொண்டு சங்கீத கலாவித்தகர் இசைக்கலைமாமணி பட்டம் பெற்றுள்ளார். இவர் 'வீணை விஹார்' எனும் நிறுவனத்தின் மூலம் பல இசை மாணவர்களை உருவாக்கி வருகின்றார். இவருடைய இசைச் சேவையைப் பாராட்டி யாழ் பிரதேச கலாசார பேரவை 2008ஆம் ஆண்டு 'யாழ்ரத்னா' எனும் விருதையும் இலங்கை அரசு 2014 ஆம் ஆண்டில் 'கலாபூஷண விருதையும் 2019ம் ஆண்டின் கலைக்குரிசில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவரது மாணவர்களில் பலர் கலைஞர்களாகவும், விரிவுரையாளராகவும் இசையாசிரியர் களாகவும் கடமையாற்றி வருகின்றனர். அந்த வகையிலே யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பிரிவில் சிரேஷ்ட விரிவுரையாளராக விளங்குகின்ற திரு தவநாதன் றொபட் அருட்சேகரன் அவர்கள் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகக் கொண்டவர். இவர் தலை சிறந்த பாடகர்களில் ஒருவராகக் கணிக்கப்படுகின்றார். இவர் ஆக்கிய 'பல்லவி' எனும் ஸ்வரசாகித்தியமாக அமைந்த சிறுநூல் நிறைந்த புலமையை விளக்குவதாக அமைந்துள்ளது. அப்பல்லவிகளிற் சில இறுவட்டாக வெளியிடப்பட்டன. இத்துடன் 'உள்ளம் உருக' எனும் இறுவட்டும் சிறந்த இறுவட்டு வெளியீடாகும். பல இசை உருப்படிகளை தாமே இயற்றி இசை அமைத்துப் பாடியுள்ளார். அநேக நடன அரங்கேற்றங்களுக்கும், நடன நிகழ்ச்சிகளுக்கும் திறம்படப் பாடிப் பலரது பாராட்டுக் களையும் பெற்றுள்ளார். யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு மூலம் பல இசை ஆசிரியர்களையும், இசை வித்துவான்களையும் உருவாக்கியுள்ளார். இன்னும் பல இறுவட்டுக்களை வெளியீடு செய்ததுடன் இவரது இசைப்பணி தொடர்கின்றது. இவர் BFA (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் MA. M.Phil (Madrass University) பட்டங்களைப் பெற்றுள்ளார். phd தொடர்ந்து கொண்டிருக்கின்றார்.

திரு. நாகரட்ணம் மாதவன், திருமதி பிரவீனா மாதவன் இருவரும் எமது பிரதேசத்தில் காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் வசிக்கின்றார்கள். இருவரும் கிழக்குப் பல்கலைக்கழகம் சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கை நிறுவகத்தில் விரிவுரையாளர்களாக விளங்குகின்றார்கள். திரு மாதவன் அவர்கள் மிருதங்க பாடத்தில் BFA (யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்) MA, M.Phil (Madrass University, மிருதங்கக் கலாவித்தகர், Dip.in.Education போன்ற தகைமைகளைப் பெற்றுள்ளார். தற்போது phd தொடர்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“திருமதி பிரவீனா மாதவன்” அவர்கள் வயலின் பாடத்தைப் பிரதான பாடமாகக் கொண்டு BFA, MA (Madrass University) சங்கீத கலாவித்தகர் போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளார். இவரும் Phd தொடர்கின்றார்.

அடுத்து “திருமதி பிறிஸில்லா” அவர்கள் குருசோ வீதியில் வாழ்ந்து வருகிறார். இவர் கிழக்குப் பல்கலைக்கழகம் சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார். இவர் புலமைப்பரிசில் பெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் B Music பட்டமும் MA (மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்) இலும் பெற்றுள்ளார். கீத சுரபி விருதும் 2014 ஆம் ஆண்டில் கலாசாரப் பேரவையினால் இளம் கலைஞர் விருதும் பெற்றுள்ளார்.

இசை ஆசிரியர்களாகக் கடமை புரிபவர்களாக கொழும்புத்துறையைச் சேர்ந்த “திருமதி கிருஷ்ணாலினி அகிலன்” அவர்கள் BFA (வயலின்) சங்கீத கலாவித்தகர் (வயலின் புல்லாங்குழல்) MA வயலின் (Madrass University) கீதசுரபி போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த “திருமதி.ருஷாந்தி பிரதீபன்” வயலினைப் பிரதான பாடமாகக் கொண்டு BFA. MA (Madrass University) கீத சுரபி பட்டங்களைப் பெற்றுள்ளார்.

“செல்வி தயாளினி நடேசு” அவர்கள் கொழும்புத்துறையைச் சேர்ந்தவர் இவர் Dip in Music, B Music (வயலின்) Dip in Education சங்கீத கலாவித்தகர் போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளார்.

“திருமதி சர்வலோகேஸ்வரி சிவானந்தம்” என்பவர் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் இசைக் கலைமணி பட்டம் பெற்றவர். சிலகாலம் தனியார் வகுப்பும் நடாத்தியுள்ளார்.

“திருமதி நாகேஸ்வரி சுந்தரலிங்கம்” அவர்கள் இளைப்பாறிய இசை ஆசிரியை. இவர் இசைக்கலைமணி பட்டம் பெற்றுள்ளார்.

“திருமதி N.M.A மெடோனா மனோகரன்” மவுண் கார்மல் வீதியில் வசிப்பவர். Dip in Music, Dip.in.Education ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். இவரும் ஓய்வு பெற்ற இசை ஆசிரியராவார்.

“திருமதி இந்துமதி தயாபரன்” அவர்கள் மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த இசை ஆசிரியர் இவர் Dip.in. Music, Dip in Education சங்கீத கலாவித்தகர் (வாய்ப்பாட்டு) எனும் பட்டங்களைப் பெற்றுள்ளார்.

தரிருமதி ரஜிதா சுந்தரகுமார்” அவர்கள் குட்செட்வீதி, யாழ்ப்பாணத்தில் வசிப்பவர். இவர் Dip in Music Dip in Education பட்டங்களைப் பெற்றுள்ளார்.

செல்வி. பகீரதி சுப்பிரமணியக்குருக்கள் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். BA (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சங்கீதம் ஒரு பாடம் வ.இ.ச.சபை ஆசிரியர் தரம் சித்தி Dip in Education பட்டங்கள் பெற்றவர். கீதவாஹினி இசைக்கல்லூரியின் கிளை நிறுவனத்தை நல்லூரில் நடத்துபவர்.

வண்ணார் பண்ணையைச் சேர்ந்த “சுபத்திராதேவி சுரேந்திரன்” இசை ஆசிரியர் இவர் Dip. in. Music பட்டம் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்வி தர்ஷிலா பொன்னுத்துரை" இசை ஆசிரியர், Dip in Music Dip in Education பட்டங்கள் பெற்றவர்.

"திருமதி தேவமனோகரி, உருத்திரசிங்கம், திருமதி தேவலோஜினி சிவகுமார்" இருவரும் இசை ஆசிரியர்கள். இவர்கள் வண்ணார் பண்ணையில் வளர்ந்தவர்கள். இருவரும் Dip. in. Music, Dip. in. Education பட்டங்கள் பெற்றவர்கள்.

"திருமதி நிஹால் நிரோஜினி ராஜசேகரன்" என்பவர் Press வீதியில் வசிப்பவர். இவர் BFA பட்டதாரி.

"திரு இரத்தினசிங்கம் ஜெயகாந்தன்" பிரதானவீதி யாழ்ப்பாணத்தில் வசிப்பவர். இவர் BFA, Dip.in. Education பட்டங்களைப் பெற்றுள்ள இசை ஆசிரியர் ஆவார்.

"திருமதி உதயகுமார் சுரேஸ்குமார் என்பவர் நாவலர் வீதியில் வசிப்பவர். Dip in music Dip in Education பட்டங்கள் பெற்றவர்.

"திருமதி. தயாழினி ரகுநாதன்" கன்னாதிட்டியில் வசிப்பவர். Dip. in. Music பட்டம் பெற்றவர். "திருமதி சகாயதேவி குலேந்திரன்" குருநகரில் வசிப்பவர். இவர் Dip. in. Music Dip in Education பட்டங்கள் உடையவர்.

"திருமதி யாழினி கணேசராஜா" அத்தியடியில் வசிப்பவர். இவர் நுண்கலைமாணி, கீதசுரபி பட்டங்கள் பெற்றவர்.

"திருமதி ஜெயகௌரி JE ரெவல்" அவர்கள் ஈச்சமோட்டையைச் சேர்ந்தவர். இவர் Dip in Music (veenas Dip. in. Education பட்டங்களைப் பெற்றுள்ளார்.

"திருமதி தேவகி கந்தவனச் செல்வன்" வண்ணார் பண்ணையில் வசிப்பவர். இவர் Dip in music Dip. in. Education பட்டங்கள் பெற்றுள்ளார்.

"திருமதி ஜீவானந்தி அமிர்தநிரஞ்சன்" Dip in music Dip in education பட்டங்கள் பெற்றவர். இவர் கொழும்புத்துறையில் வசிக்கின்றார்.

"திருமதி கொலஸ்ரிக்கா றெஜினா கோபாலசிங்கம்" கொழும்புத்துறையில் வசிப்பவர். இவர் விஷேட பயிற்சி (சங்கீதம்) ஆசிரியர் ஆவார்.

"செல்வி தர்சினி ஞானேந்திரன்" ஈச்சமோட்டையைச் சேர்ந்தவர். இவர் BFA கீதசுரபி பட்டங்களைப் பெற்றவர். ஹம்சப்பிரியா இசைக்கல்லூரியை நடாத்தி வருகிறார். செல்வி ஜெஸ்லின் வினித்தா சாள்ஸ் சௌந்தரராஜா BFA சங்கீத கலாவித்தகர். கீதசுரபி பட்டங்களைப் பெற்றுள்ளார். 2020ம் ஆண்டு யாழ்.பிரதேச கலாசார விழாவில் இளம் கலைஞர் விருது கிடைத்தது. என் 'ஆத்ம நேசரே' எனும் பக்திப்பாடல் இறுவட்டைத் தானே எழுதி இசை அமைத்துப்பாடினார். தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தராக உள்ளார். இவர் கொழும்புத் துறையைச் சேர்ந்தவர்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த "திருமதி மதிவதனி விஜிந்தன்" அவர்கள் BFA சங்கீத கலாவித்தகர் (வயலின்) கீதசுரபி ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். தற்பொழுது அபிவிருத்தி உத்தியோகத்தராக உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களை விட இன்னும் பலர் கர்னாடக இசையில் பல பட்டங்களைப் பெற்றவர்கள் தற்போது வெளிநாடுகளில் வசிக்கின்றார்கள். ஒருசிலர் எனது தகவல் சேகரிப்பில் அகப்படாமலும் இருக்கக்கூடும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அமைந்துள்ள இசைமன்றங்கள் பற்றி நோக்குவோம்.

**01. ரஸிக ரஞ்சனசபா**

யாழ்ப்பாணத்தில் மணிக்கூட்டு வீதியில்1965இல் ரஸிக ரஞ்சன சபா ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் யா/ சன்மார்க்க வித்தியாலயத்தில் இசை வகுப்புக்கள் நடைபெற்றன. அமரர் க.வை.தம்பு அவர்களின் சேவையினால் அரசடிவிநாயகர் ஆலய நிர்வாகத்தின் அனுசர ணையுடன் 1968ஆம் ஆண்டில் ரசிகரஞ்சன சபாகட்டிடம் கட்டப்பட்டு சிறப்பாக இயங்கியது. இம் மண்டபத்தில் இசை வகுப்புக்கள், பஜனைகள், இசை விழாக்கள் என்பன 1979 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றன. 1995ஆம் ஆண்டு வரை 27 வருடங்கள் இசை வகுப்புகள் நடைபெற்றன. பின்னர் ஏற்பட்ட இடப்பெயர்வுடன் இசைவகுப்புகளோ இசை விழாக்களோ இங்கு நடைபெற வில்லை. திருமண வைபவங்களும் வேறு வைபவங்களும் தான் நடைபெற்றன.

இதனைக் கருத்திற்கொண்ட யாழ்ப்பாணப்பிரதேச செயலகத்தின் கலாசாரப்பிரிவு 23.08.2020 இல் வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம் எனும் கற்கை நெறிகளை ஆரம்பித்தன. 85 மாணவர்கள் இணைந்து கொண்டனர். இங்கே மாணவர்களுக்கு இலவசமாகக் கற்பிக்கப்படுகின்றன. ஆசிரியர்களும் ஊதியம் பெறாமலே சேவை செய்கின்றனர்.

**02. கீதவாஹினி இசைக்கல்லூரி**

1973இல் தனியார் நிறுவனமாக ஆரம்பித்து 1980இலிருந்து கீதவாஹினி இசைக் கல்லூரியாக இயங்கி வருகின்றது. இங்கு வாய்ப்பாட்டு, வயலின், புல்லாங்குழல், வீணை என்பன கற்பிக்கப்படுகின்றன. ‘இசை கற்று இன்புறுவோம்’ எனும் மகுடவாக்கியத்துடன் இயங்கும் இக்கல்லூரி க.பொ.த (சா.த) (உ.த) வகுப்புகளுடன் வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சைகள் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தல், கோவில்கள், இசைவிழாக்கள், சனசமூக நிலையங்கள் போன்ற பொது இடங்களில் இசை நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கி வருகின்றது. இசைப் போட்டிகளிலும் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்றுள்ளனர்.

வருடா வருடம் வாணி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. 100க்கு மேற்பட்ட மாணவர்கள் கற்கின்றனர். 7 ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். இங்கு கற்று வ.இ.சங்கீத சபையின் ஆசிரியர் தரம் அல்லது பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களுக்குப் பிரத்தியேகமாக அவைக்காற்றுகைப் பரீட்சை நடாத்தி ‘கீத சுரபி’ எனும் விருது 2015 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படுகின்றது.

கீதவாஹினி இசைக் கல்லூரியின் வெளியீடாக கர்நாடக சங்கீதம் (தரம்10 க.பொ.த (சா.த) க.பொ.த (உ.த) பரீட்சை வினாவிடைகள், புல்லாங்குழல் எனும் நூல், பக்திரசக் கீர்த்த னைகள் எனும் நூல்களும் தரம் 6-13 வரையான வகுப்புகளுக்குரிய இசைப்பாடல்கள், தரம் 6-11 வரையுள்ள தோத்திரப்பாடல்கள், பக்திரசக் கீர்த்தனைகள் என்பன இறுவட்டுக்களாக வெளியிடப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதவாஹினி இசைக் கல்லூரியின் கிளை நிறுவனங்களாக நல்லூர் செட்டித் தெருவில் நல்லூர்க்கிளையும் கொழும்பில் கொட்டஹேனாவிலும், லண்டனில் 2 கிளைகளும், நோர்வேயில் 2 கிளைகளும் இயங்குகின்றன.

இங்கு கற்று 63பேர் ஆசிரியர் தரச் சித்தி பெற்றுள்ளனர். 32பேர் சங்கீத கலா வித்தகராகவும், 21பேர் கீதசுரபி பட்டத்துடனும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இசை பரப்பி வருகிறார்கள். சிறப்பாக இயங்குகின்ற இசை நிறுவனங்களுக்கான பரிசு கீதவாஹினி இசைக் கல்லூரிக்குக் கிடைத்துள்ளது.

**03. திருமறைக் கலாமன்றம்**

இம் மன்றமானது 1966ஆம் ஆண்டில் வண பிதா மரிய சேவியர் அடிகளால் யாழ் பிரதான வீதியில் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு 35 கலைப்பிரிவுகளை முன்னெடுத்துச் செல்கின்றது. 1989 ஆம் ஆண்டு 'கவின் கலைப் பயிலகம்' எனும் பெயரில் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

அந்த வகையில் யாழ்ப்பாணம் டேவிட் றோட்டில் அமைந்துள்ள கலைத்தூது அழகியற் கல்லூரியில் வாய்ப்பாட்டு, வீணை. புல்லாங்குழல், வயலின், மிருதங்கம், கிற்றார், ஓர்கன், நடனம், சித்திரம் எனும் வகுப்புகள் சிறப்பாக நடைபெறுகின்றன. மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 241. ஆசிரியர்களின் எண்ணிக்கை 18. 2006ஆம் ஆண்டிலிருந்து சிறப்பாக இயங்கி வருகின்றது. இந்தியாவின் கலைக் காவேரி கலைக்கழகத்துடன் இணைந்து MA (Dance) பட்டம் கொடுக்கப்பட்டது. பலர் இதில் இணைந்து பட்டம் பெற்றுக் கொண்டனர்.

சர்வதேச ரீதியில் ஜேர்மன், இங்கிலாந்து, பிரான்ஸ், ஹொலண்ட், இத்தாலி, டென்மார்க், சுவிற்சலாந்து, இந்தியா, நோர்வே, கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், அவுஸ்ரேலியா போன்ற இடங்களில் மன்றத்தின் கிளைகளை உருவாக்கியுள்ளார்கள். இந்தக் கிளை நிறுவனங்களுக்குச் சென்று கலை நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது.

சஞ்சிகைகள், நூல் வெளியீடுகள், கருத்தரங்குகள், தமிழ் நாடகங்கள், இலக்கிய அவைக் கூட்டங்கள் சிறுவர் கலைக்கூட நிகழ்வுகள், கலைப்பயிற்சிப் பட்டறை என்பனவும் நடாத்தப்படுகின்றது. 25 நாடகநூல்கள் வெளியிடப்பட்டது.

வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சையில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றி சித்தியடைந்து வருகின்றனர். இம் மன்றம் நிரந்தரமான சிறந்த அரங்கைக் கொண்டுள்ளது. சிறப்பாக இயங்குகின்ற மன்றங்களுக்கான பரிசு திருமறைக்கலா மன்றத்திற்குக் கிடைத்துள்ளது.

**04. வீணா விஹார்**

இந் நிறுவனம் 165, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் கலாபூஷணம் விஜயலட்சுமி சண்முகராஜா அவர்களினால் 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பல மாணவர்கள் இங்கே வீணை வாத்தியம் பயின்று வந்தனர். திருமதி விஜிதா பரணீதாரசர்மா என்பவர் ஆசிரியர் தரம் வரை பயின்று சித்தி பெற்று கொழும்பில் இசை ஆசிரியராக உள்ளார். லண்டன், கனடாவிலும் இவரது மாணவிகள் கற்பிக்கின்றனர். 1990ஆம் ஆண்டிலிருந்து தியாகராஜ உற்சவம் சிறப்பாக நடைபெற்று வந்தது. வ.இ.ச. சங்கீத சபைப் பரீட்சையில் பல மாணவர்கள் சித்தி பெற்றனர். தற்போது சிறிய தொகை மாணவர்கள் மட்டுமே பயின்று வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**05. கம்சப்பிரியா இசைக்கல்லூரி**

இந்த இசை நிறுவனம் ஈச்சமோட்டை வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. இதன் நிறுவுநராகவும், ஆசிரியராகவும் பணி புரிபவர். செல்வி தர்சினி ஞானப்பிரகாசம் அவர்கள் இந் நிறுவனம் 2005 ஆம் ஆண்டு ஆரம்பித்து வாய்ப்பாட்டு, வயலின், புல்லாங்குழல், வீணை, கிற்றார், ஓர்கன் எனும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இவருடன் இணைந்து இவரது சகோதரியும் கற்பிக்கின்றார். வட இலங்கைச் சங்கீதசபை நடாத்தும் இசைப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துதல், பிரதேச மட்டப் போட்டிகளுக்குத் தயார் செய்தல், சமூக மட்டத்தில் நிகழ்ச்சிகளை வழங்குதல் என்பன இந்நிறுவனத்தின் பணிகளாக விளங்குகின்றன.

**06.இசைகானம் கலை மன்றம்**

இம் மன்றம் ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. இந் நிறுவனம் காயத்திரி சண்முகநாதன் அவர்களினால் 2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இங்கு வாய்ப்பாட்டு, வீணை, நடனம், சித்திரம், வயலின், புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய பாடங்கள் 6 ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது. தற்போது 60மாணவர்கள் கற்று வருகின்றார்கள். 2019ஆம் ஆண்டு 'இசை ஆரம்' என்ற சஞ்சிகை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பல நிறுவனங்களும், பல இசை வித்துவான்கள், ஆசிரியர்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இருந்த பொழுதிலும் இன்று கர்நாடக இசை கற்று வீழ்ச்சியடைந்தே காணப்படுகின்றது. சினிமாவில் இடம் பெறுகின்ற கர்நாடக இசைப் பாணியில் அமைந்த பாட்டுக்களைப் பலர் விரும்பிக் கேட்கின்ற பொழுதிலும் இவ்விசையில் நாட்டம் முன்பு இருந்ததைவிடக் குறைந்தே காணப்படுகின்றது. இசை கற்கும் மாணவர்களும் 1995க்கு முன்பு இருந்ததைவிடத் தற்போது குறைவாகவே உள்ளனர். ஆனால் வெளிநாடுகளில் வசிக்கின்ற எமது பிரதேச மக்களின் பிள்ளைகள், பெருமளவானோர் இசை கற்கின்றார்கள். கொழும்பிலும் கூடக் கணிசமான மாணவர்கள் கற்கின்றனர்.

இசை பயிலுவதனால் கேட்பதனால், ரசிப்பதனால் மனிதனின் உள்ளம் பண்படுத் தப்படுகின்றது. பல நோய்களினால் வருந்தும் நோயாளிகளை 'நல்ல கர்னாடக இசை, வாத்திய இசையைக் கேளுங்கள்' என்று வைத்தியர்கள் கூறுகின்றார்கள்.

ஆண் பிள்ளைகளை மிருதங்கம் பயிற்றுவதனால் அவர்கள் குழப்படி இல்லாதவர்களாக வளருகின்றார்கள். புலம் பெயர்ந்த வெளிநாட்டவர்களிடம் ஏன் உங்கள் பிள்ளைகளை இவ்வளவு பணம் செலவு செய்து கற்பிக்கின்றீர்கள் என்று கேட்டால், பிள்ளைகளை நல்ல குணமுள்ள வர்களாக வளர்ப்பதற்குக் கலைகளைப் பயிலச் செய்வது தான் வழி' என்று கூறுகின்றார்கள்.

எனவே எமது பிரதேசத்தில் நல்ல பிரஜைகளை உருவாக்க வேண்டுமென்றால் அவர்களுக்குக் கலை ஆர்வத்தைத் தூண்ட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பெரியகடை கெங்கா சத்திரம் இன்றில்லை. ஞானவைரவர் ஆலயமும் சத்திரச்சந்தி நன்னீர்க் கிணறும்




**கலாபூஷணம் நயினை நாகமணி கோபாலகிருஷ்ணன்** (J.P)
சமாதான நீதிவான்
யாழ் கலாசார பேரவை ஆயுட்கால உறுப்பினர்
முன்னால் கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் (J/83) கொட்டடி


யாழ்ப்பாணம் பெரியகடை சத்திரத்து ஞானவைரவர் ஆலயம் தோற்றுவிக்கப்பட்ட காலம் 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியாக இருக்க வேண்டும் என்பதே வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாக இருக்கின்றது. சரியான திகதியைக் குறிப்பிட முடியாதுள்ளது.

மிட்டாசுக்கடை வல்லிபுரத்தார் எனப்படும் கனதனவான் கெங்கா சத்திரத்தை அதே காலப்பகுதியில் ஞானவைரவரைக் காவற் தெய்வமாக்கி வழிபாடியற்ற வழிசமைத்தார். இந்த வல்லிபுரத்தார் மிட்டாசுக்கடைச் சந்தியில் கடை வைத்து அந்தக் கடைக்கு அருகாமையில் நாற்சாரம் வீட்டில் வாழ்ந்து வந்தார். இவருடைய கடையில் கணக்குப்பிள்ளையாக பணியாற்றியவர் நயினைவரகவி நாகமணிப்புலவர். இவரைப்பற்றி வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "பெருவிளக்கு கலைகளெல்லாம் தெளியக் கற்றோன் பெரிது கவியியற் கையினிற் பாடம் நாவான் தருவிளக்கு கரமுடையான் நீதிமிக்கோன் சகம் போற்றும் நாகமணிப் புலவன்றானே". இவர் வல்லிபுரத்தார் வெள்ளைக் கல்லால் சத்திரத்தை அழகாகக் கட்டி முடித்துச் சிறப்புச் செய்த பரோபகாரச் சிந்தையை மெச்சி "சத்திரத்தைப் பார்ப்பமடி பெண்ணே, சற்று நடவாய் என் கண்ணே" என்று தொடங்கும் வழிநடைச் சிந்து ஒன்றைப் பாடினார். இப்பாடல் அறுபதுகளில் "ஸ்ரீலங்கா" என்ற சஞ்சிகையில் வெளியாகியது.

இந்தக் கெங்கா சத்திரத்திற்கு அருகாமையில் இருந்த நன்னீர்க்கிணறே இன்றும் பெரியகடைச்சந்தியில் காணப்படுகின்றது. இது அந்தப் "பேரறிவாளன்திருவாக" இன்றும் காட்சியளிப்பது மகிழ்ச்சி தருகிறது. கெங்கா சத்திரம், தூர இடங்களிலிருந்து யாழ்ப்பா ணத்திற்கு கால் நடையாக வந்தவர்களுக்கு இளைப்பாறும் இடமாகவும், பசிப்பிணிதீர்க்கும் இடமாகவும் பல ஆண்டுகள் பணியாற்றி வந்தது. அறுபது எழுபதுகளில் முன்பு இருந்த பெரியகடைச் சந்தைக் கட்டிடங்களை அகற்றிப் புதிய நவீன சந்தைக் கட்டிடத்தை அமைக்க முயற்சித்த யாழ் மாநகரசபையினர் கெங்கா சத்திரத்திற்கும் புதிய வடிவம் கொடுக்க முயற்சித்து அதனை அகற்றினர். புதிதாக அமையும் நவீன சந்தைக் கட்டிட மேல் மாடியில் சத்திரத்தின் நினைவாக அதே இடத்தில் மண்டபம், தங்குமிட அறைகள் அமையுமென நகரசபை முதல்வர்களும், உறுப்பினர்களும் உறுதியளித்தனர். எனினும் காலத்தின் கோலத்தினால் அது கைகூடவில்லை. எனவே அப்பகுதியில் புதிய சந்தைக் கட்டிடம் அமையும் போது முந்திய உறுதிமொழிக்கு அமைவாக புதிய யாழ் மாநகர முதல்வரும் உறுப்பினர்களும் ஆணையாளரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் கவனமெடுத்து நம் முன்னோர் விட்டுச் சென்ற அருஞ்செல்வத்தின் ஞாபகமாக உரிய நடவடிக்கை எடுப்பது சாலவும் பொருந்தும்.

கெங்கா சத்திரத்தை மேற்பார்வை செய்து வந்த வல்லிபுரத்தாரின் மகன் முறையான விசுவநாதன் என்பவர் எழுபதுகளில் காலமாகிய பின்னர் அவருடைய பிள்ளைகளும் தூரதேசம் சென்றுவிட்டனர்.

கடையிற் சாமியார் என்ற ஞானவான் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது பெரிய கடை சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தையே தனது தங்குமிடமாக மாற்றியிருந்தார். அவருக்கு சகல உதவிகளையும் செய்வதில் முதன்மையாக இருந்தவர். பொன்னம்மா என்ற வாணிபப் பெண்ணாவார். இவரின் பிள்ளைகள் தான் C.S.K கந்தையா செட்டியார். C.S.K ஆறுமுகம் செட்டியார் என்பவர்கள் கடையிற் சாமியாரின் ஞான தீட்சையாலும் ஆசீர்வாதத்தினாலும் தான் பொன்னம்மா என்ற பெண்மணி பெரும் நிதியம் பெற்றுப் பொன்னம்மா மில் என்ற பாரிய நிறுவனத்தை அமைத்துப் பிள்ளைகளை அந்த நிறுவனத்தை நடத்த உரிமையாக்கினார் என்பதை ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட யாழ்ப்பாணத்தை அறிந்தவர்கள் அறிவர். கடையிற் சாமியார் ஆலயம் இருக்கும் இடத்தில் தங்கியிருந்தார் என்றும் தெரிகின்றது.

நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாவையொட்டி சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாயத்தினால் நடைபெறுகின்ற நயினை நல்லூர் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரையின் போது சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தை மேற்பார்வை செய்த ஆ.சி பரமசாமி அவர்கள் பாத யாத்திரை அடியார்களை பக்திபூர்வமாக வரவேற்று வழிபாடியற்றி வந்துள்ளமை முன்னைய தொடர்பை அடியொற்றிய எப்பவோ முடிந்த காரியம் என்ற செல்லப்பா சுவாமிகளின் அருள்வாக்கிற்கமைய ஏற்பட்ட தொடர்பு என்றுதான் கூறவேண்டும். பெரியகடை வீதியில் வலம் வந்தமையினால் கடையிற் சுவாமிகள் அவரின் சீடர் செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகளின் நல்லைக்கந்தன் நல்லைத் தேரடித் தொடர்பை நயினை நல்லூர் பஜனைப் பாதயாத்திரை சத்திரத்து ஞானவைரவர் ஆலய ஞானபூமித் தொடர்பை நல்லைத் தேரடியோடு இணைக்கின்றது. யாழ் வர்த்தகர்கள் செயற்கரிய பெரியதொண்டை செய்தனர் என்றால் பூர்வீகக் கொடைதான். கடையிற் சுவாமிகள் வாழ்ந்த கோயிலை பெருங்கோயில் ஆக்கிய பெருமை யாழ் வர்த்தகர்களைச் சார்ந்ததே.

பெரியகடை ஞானவைரவர் ஆலயத்தைப் பொறுத்தமட்டில் பிற்காலத்தில் சண்முகம் என்ற வீர சைவகுலத்தைச் சேர்ந்தவர் பூசைகளைச் செய்து வந்ததாகவும் பின்னர் அவர் இல்லாத காலத்தில் பிராமணர்கள் பூசைகளைக் கையேற்றனர். சத்திரத்திற்குப் பொறுப்பாக இருந்த முன் கூறிய விசுவநாதனும் பெரியகடைச் சந்தையில் உள்ளவர்களும் ஆலயத்தை நிர்வகித்தனர். சத்திரத்தையும் ஆலயத்தையும் உள்ளடக்கிய ஏழு அல்லது எட்டுப் பரப்பளவான காணி வல்லிபுரத்தாரால் ஆலயத்திற்குத் தர்மசாதனம் செய்யப்பட்டிருந்தது. பின்னர் நவீன சந்தை அமைப்பதற்காக அக்காணி எடுக்கப்பட்டது. எனினும் இறுதிவரை ஆலயம் அப்படியே இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்செயல்கள் இடப்பெயர்வு காரணமாக பூசை வழிபாடுகள் ஒழுங்காக நடைபெறாமல் இருந்தது. மீளக்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சிவனேயச் செல்வர்களான வணிகர் பெருமக்கள் ஒன்றுகூடி ஆலயத்தைப் புதுக்கிச் செப்பனிட முன்வந்து ஒரு நிர்வாகக் குழுவினை அமைத்து செயற்பட்டனர்.

இந்த வைரவர் ஆலயம் சிறப்பாகச் செயற்பட்ட காலத்தில் பெரியகடைச் சந்தையில் தேசிக்காய் வியாபாரம் செய்தவர்கள் வைரவர்க்கு குதிரை வாகனம் ஒன்றைச் செய்து வாகனக் கொம்புகளையும் செய்து அன்பளிப்புச் செய்தனர். அந்தக் காலத்தில் வைரவ சுவாமியை அந்த வாகனத்தில் எழுந்தருளச் செய்து பண்ணையிலுள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு வீதிவலமாக எடுத்துச் சென்று கன்னிவாழை வெட்டும் திருவிழா பல ஆண்டுகளாக கோலாகலமாக நடைபெற்று வந்தது. சத்திரம் அழிவுற்ற போது இந்த நடைமுறையும் கைவிடப்பட்டு வாகனமும் அழிந்து போயிற்று.

என்றாலும் புது ஆலயச் செயற்பாடுகள் நடைமுறைக்கு வரும்போது மீண்டும் இத்தகைய திருவிழாக்கள் தொடருமென நாம் நம்புவோமாக. வன்முறைகளாலும், இடம்பெயர்வுகளினாலும் உளவளம் குன்றிப் போயிருக்கும் மக்கள் அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற நம்பிக்கையில் நம்பகமாக ஊன்றி இருப்பதை நாம் இன்று எங்கும் பரவலாகக் காண்கின்றோம். இதன் வெளிப்பாடே பெரியகடை ஞானவைரவர் ஆலயப் புனரமைப்பாகும்.

யாழ் கோட்டை அடிபாடு அதைத் தொடர்ந்த போர்க் காலத்தில் சத்திரத்தோடு அமைந்த நன்னீர்க் கிணறு மணலால் நிரப்பப்பட்டு பதுங்கு குழிகளாகப் பாவிக்கப்பட்டது. 1996ம் ஆண்டில் யாழ் நகரம் வழமையான செயற்பாட்டிற்கு வந்ததைத் தொடர்ந்து பெரியகடை பகுதி மற்றும் அண்டிய பகுதியான கொட்டடி மக்களின் குடிநீர் தேவைக்காக யாழ் பெரியகடை வகுப்புத் தொழிலாளர்கள் மக்கள் தொண்டாகக் கருதி கூலி பெறாமல் கிணற்றில் போடப்பட்ட மண்ணை அகற்றித் தந்தனர். கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக ஆரம்ப தலைவர் அடியேன் தெரிவு செய்யப்பட்டேன். யாழ் பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அனுசரணையோடு U.N.H.C.R உதவி மூலம் சத்திரக்கிணறு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கிணற்றின் மேல்தட்டு மூடி மறைக்கப்பட்டு குடிநீருக்காக அன்று பாவிக்கப்பட்டது. பொன்னம்மா மில்லில் பாவிக்கப்பட்ட கருங்கல் தொட்டி கிணற்றின் அடியில் பதிக்கப்பட்டு கோமாதாவாம் பசுவிற்கு தண்ணீர் வாருங்கள் வாசகம் பொறிக்கப்பட்டது. வர்த்தகர்களின் வியாபாரப் பொருள் வைக்கும் தேவைக்காக தற்போது பாவிக்கப்படுகின்றது.

யாழ் பெரியகடை சத்திரத்தை நினைவூட்டும் வரலாற்று சின்னமாக ஞானவைரவர் ஆலயமும் சத்திரச் சந்திக் கிணறும் சத்திரச் சந்தியும் திகழ்கின்றது. சத்திரம் இல்லை சத்திரச் சந்தி இருக்கின்றது. சத்திரமும் இல்லை சத்திரச் சந்தியில் இருந்த திருவள்ளுவர் சிலையும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கனகி புராணம் காட்டும் யாழ்ப்பாணத்தின் அடையாளங்கள்



**செல்வி றஜிதா அரிச்சந்திரன் (முதுகலைமாணி)**
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்.

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழத்தில் எழுந்த இலக்கியங்களுள் பிரபந்த இலக்கியங்களுக்கு முக்கியமான இடமுண்டு. அந்தவகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வண்ணார் பண்ணையில் வாழ்ந்து வந்த நட்டு வச்சுப்பையரால் வண்ணார் பண்ணையினை சேர்ந்த தேவதாசி கனகியை கதைத் தலைவியாகக் கொண்டு பாடப் பட்டதே கனகிபுராணம் ஆகும். இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாக விளங்கி அது எழுந்த காலப்பகுதிக்குரிய பண்பாடு, பழக்கவழக்கங்கள், வரலாறு என்பவற்றை வெளிப் படுத்தும் ஊடகமாக திகழ் கின்றது. அந்த வகையில் கனகிபுராணம் எழுந்த காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தின் ஊர்கள், தொழில்கள், வழிபாட்டுமுறைகள், சாதிப்பாகுபாடுகள், போன்றவற்றினைஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.



**அறிமுகம்**

இது நானூறு விருத்தப்பாக்களைக் கொண்டிருந்தது என்று அறிகின்ற போதிலும் இருபத்தொரு பாடல்களே கிடைக்கப்பட்டுள்ளன. இது பிள்ளையார்காப்பு, நாட்டுப்படலம், சுயம்வரப்படலம், வெட்டைகாண்படலம் என்ற நான்கு பகுதிகளை கொண்டமைந்துள்ளது. இப் புராணம் அங்கதச் சுவையினை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ள இவ்விலக்கியமானது யாழ்ப்பாணத்தின் அடையாளங்களை சிறப்பாக விளக்குகின்றது.

**ஊர்கள்**

யாழ்ப்பாணத்தில் காணப்படும் பல ஊர்ப்பெயர்கள் இங்கு காணப்படுகின்றது. முதலாவது படலமாகிய பிள்ளையார் காப்பில் கனகிபுராணத்திற்கு அராலிப்பிள்ளையாரை காப்பாக வைத்து "பித்தனாயுலா மராலிப் பிள்ளையார் காப்பதாக" எனப்பாடியுள்ளார். தொடர்ந்து சுயம்வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலத்தில் கனகியை கூடி மகிழ பற்பல ஊர்களிலிருந்தும் பல பெரியமனிதர்கள் வந்திருந் தார்கள் இவர்கள் குறித்து தோழி தலைவிக்கு ஆற்றுப்படுத்துவதாக அமைகின்ற பகுதிகளில் யாழ்மாவட்டத்தின் பல ஊர்களும் அவ் ஊர்களின் சிறப்புக்களும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் மானிப்பாய், மல்லாகம், நவாலி, புத்தூர், ஊர்காவற்றுறை, சரவணை, கோப்பாய், ஆனைக்கோட்டை, உடுவில், எனப்பல ஊர்கள் குறித்து சுயம்பர காண்டத்தில்

"பூட்டுந்திறனுடன் இருப்போர்
மல்லாகத்தின் வீரரிவர்
மற்றோர்நவாலியூராரே" 6ம் பாடல்
"புத்தூர் மணியம்......" 7ம் பாடல்
"நீராற் பொலிந்தசரவணைவளர்
நெய்தல் நிலத்தான் வங்கநிறை
ஊராத்துறைக்குமணியமிவன்" 11ம் பாடல்
".... கோப்பாய் முத்துகுமாரு....."ஷ 13ம் பாடல்
ஆனைக்கோட்டைவேளாளர்
ஆறுமுகன்..." 17ம் பாடல்
"தானை சூழுடுவில் வாழும்" 21ம் பாடல், இவ்வாறாக ஊர்கள் பற்றி கூறப்பட்டுள்ளது.

**வழிபாடு**

யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் சிறப்பாக இருந்துள்ளது. மக்கள் கடவுள் பக்தி கொண்ட வர்களாக வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதனை கனகிவாழ்நத வண்ணார் பண்ணையின் சுற்று சூழலினூடாக அறிந்துகொள்ள முடியும். இங்குவேதம் ஓதுபவர்கள், நட்டுவாங்கம் வாசிப்போர், தேவரடியார்கள் என வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு சேவை செய்வோர்கள் வாழ்ந்து வந்தமையினை "சித்திர மறையோர் வீதி சிறந்திடும் காத்தனாம் வைத்தீசர்.." என நாட்டுப் படலத்தினூடாக கூறப்படுவதினூடு அறியலாம்.

இதை விட மடாதிபதிகள் பலர்மடம் அமைத்து சைவம் வளர்த்து வந்தனர் என்பதனையும் சுத்த சைவர்களாக சிவபூசை செய்து வாழ்ந்து வந்தனர் என்பதனை "சுத்த சைவரெல்லாம் மடந்தானடைத்து சிவபூசையும் கட்டிவைத்தார்" என சுயம் வர காண்டத்தில் பாடுவதனூடாக அறிந்து கொள்ளலாம்.

**சாதிப்பிரிவுகள்**

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் தொழில் அடிப்படையில் சாதிப்பிரிவுகள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் வெள்ளாளர், செட்டி, பண்டாரம், நட்டுவர், அந்தணர் போன்ற சாதிகள் குறித்து இங்கு கூறப்பட்டுள்ளமையும் இன்றும் இச்சாதிப்பிரிவுகள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

**தொழில்கள்**

அக்காலப்பகுதியில் வாழ்ந்துவந்த மக்கள் பலவகை தொழில்களை புரிந்து வந்தன. அந்தவகையில் வைத்திய தொழில் சிறப்பாக இருந்தது வெட்டைகாண் படலத்தில் கனகியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியபலரும் வெட்டைநோயில் வாடி வைத்தியர்களை அணுகி தம் நோயினை மாற்றினார்கள் என்ற குறிப்புண்டு "செட்டிதெரு தேவடியார்களுள் மெட்டுக்காரிகனகியை மேவியோர் முட்டுப்பட்டனர்" என்பதூடாகவும் சுயம்வர படலத்தில் கனகியைசேர வந்தோரில் வைத்தியனும் இருந்துள்ளான் "...................பெரியதம்பி வரத்தால் வந்த வைத்தியனே" (18ம் பாடல்) என்பதனூடாக அறிந்து கொள்ளலாம்.

**அரசர்கள்**

யாழ்ப்பாணத்து அரசர்கள் குறித்தும் சில தகவல்களை காணக் கூடியதாகவுள்ளது அந்த வகையில் மாராசகேசரி எனும் மன்னன் ஆண்ட யாழ்ப்பாணம் என்பதனை சுயம்வர காண்டத்தில் ".............மாராசகேசரி நாட்டில்" (21ம் பாடல்) என பாடியுள்ளதுடன் கனகியைக் கூடி மகிழவந்த உடுவில் பகுதியினை சார்ந்த கையில்லாத மன்னன் குறித்து

"தானை சூழுடுவில் வாழும்
தன் கையொன்றில்லா வேந்தே" எனவும் பாடியுள்ளார்.

**முடிவுரை**

இவ்விலக்கியமானது யாழ்ப்பாணத்தில் எழுந்த சிறந்த இலக்கியமாக திகழ்கின்ற போதும் இதனைப் பற்றி அறிந்துள்ளோர் சிலரே, இது யாழ்ப்பாணத்து பண்பாடு, ஊர்கள், வழிபாடு, தொழில்கள், சாதிப்பிரிவுகள், மன்னர் பரம்பரை என்பன குறித்து சிறப்பாக எடுத்தியம்பு கின்றமையும் அன்றைய காலத்தின் கண்ணாடியாக திகழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.


உசாத்துணை :

1. கனகிபுராணம் பதிப்பு வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம் 1961
2. தமிழின் நவயுகம் ( பக்க இல 76-77) இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 2005
3. ஈழத்திலக்கிய வரலாறு - பேராசிரியர் சி.சிவலிங்கராசா2001


**வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால்,**
**நல்ல நண்பர்கள் தேவை**
**வாழ்நாள் முழுவதும் வெற்றி பெற வேண்டுமானால்,**
**ஒரு எதிரியாவது தேவை**

**A.P.J.அப்துல்கலாம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணக் கூத்துக்கள் ஒரு கண்ணோட்டம்



**புயல் ஸ்ரீகந்தநேசன்,**
முதுதத்துவமாணி, தலைவர்,
புதுமை எழுத்தாளர் ஒன்றியம்.

**அறிமுகம்: –**

கூத்து என்ற சொல் தமிழ் மொழியில் மிகப் பழைய காலத்திலிருந்தே பயன்பாட்டில் இருந்து வருகின்றது. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, வசனம், பாட்டு, அடவுகள், முதலியவற்றைக் கொண்டு அதிக அளவு புராண, இதிகாசக் கதை மரபுகளைத் தழுவி நடிக்கப்படும் நாட்டார் கலை கூத்து என்று கூறும். இயல், இசை, நாடகம் ஆகிய தமிழின் மூன்று பிரிவுகளில் கூத்து பற்றிய நூல்கள் எமக்குக் கிடைக்கவில்லை.[1] சிலப்பதிகாரம் கடலாடு காதை பகுதியில் அக்காலத்தில் ஆடப்படும் கூத்துக்கள் பற்றிக் கூறப்படுகின்றன. இதன் மூலம் கடவுள்களை வேண்டி பாடி ஆடுவது தமிழர் வாழ்வியலாக இருந்துள்ளது என்பதை அறியலாம். கொடுகட்டி, பண்டுரங்கம், அல்லியம், மல்லாடல், துடிக்கூத்து, குடைக்கூத்து, பாவைக்கூத்து முதலிய கூத்துக்களை மாதவி மாறுவேடங்கள் மூலம் ஆடியமையையும் காணலாம்.[2] வட இலங்கையில் ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரையும் கூத்துக்களின் பாரம்பரியம் எவ்வாறு உள்ளது எனவும் அதன் பரிணாம வளர்ச்சியையுமே இச் சிறிய ஆய்வுக் கட்டுரை அலசும்.

**உள்ளடக்கம்:–**

வடக்கு மாகாண மக்களின் மரபு வழியான கலைகளுள் கூத்து வடிவங்கள் மிகப் பழைமையானவை. கூத்தர்கள், கூத்தாடி, நாடக வழக்கு, நடனம், கூத்து, உலகியல் வழக்கு, பாடல் சார்ந்த புலநெறி வழக்கு, நாடக மகளீர் முதலிய சொற்களின் பிரயோகங்களைச் சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியத்திலும் காணலாம்.[3] ஈழத்தமிழர்களுக்கு என ஒரு நாடக வடிவம் தோற்றம் பெற்றது கூத்தின் வழியே ஆகும். வடக்குப் பிராந்தியத்திற்கே உரித்தான தனித்துவம் மிக்க கூத்துக்கள் பல வகைப்படும். வடமோடி கூத்து, தென்மோடிக் கூத்து, வசந்தன் கூத்து, சிந்து நடைக் கூத்து, கோவலன் கூத்து, கண்ணன் கூத்து, கர்ணன் கூத்து, வெடியரசன் கூத்து, வாள பீமன் கூத்து, சௌந்தரி கூத்து, நொண்டிக் கூத்து, சுபத்திராக் கலியாணக் கூத்து, சகுந்தலா கூத்து, அரிச்சந்திராக் கூத்து, சத்தியவான் சாவித்திரி கூத்து, கிருஷ்ண லீலா கூத்து, அல்லி யர்ச்சுனை கூத்து, அபிமன்னன் சுந்தரி கூத்து, மார்க்கண்டேயர் கூத்து, சம்பூர்ண ராமாயணக் கூத்து, பாதுகாபட்டாபிசேகக் கூத்து, பாஞ்சாரி சபதக் கூத்து, பண்டாரவன்னியன் கூத்து, தணியாத தாகம் கூத்து, சேரன் செங்குட்டுவன் கூத்து, மார்க்கண்டேயர் கூத்து என்பன அவற்றுள் சிலவாகும். இன்றைய காலக்கட்டதில் பல கூத்துக்கள் அழிவடைந்துவிட்டன. சில கூத்துக்கள் போர்த்துக்கேயர் காலம் தொடக்கம் இன்றுவரை கத்தோலிக்க செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டன. பயன்படுத்தப்படுகின்றன. இன்று பூர்வீக தென்மோடிக் கூத்து மரபு முற்றாக அழிந்து, கத்தோலிக்கரால் பயன்படுத்தப்படும் கூத்தே தென்மோடி என அழைக்கப்படுகின்றது. இக் கூத்தை கத்தோலிக்கக் கூத்து என்று அழைக்கும் மரபு யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உருவாயிற்று[4].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கோவலனார் கதை, முல்லைத்தீவுப் பிரதேசத்தில் சிலம்பு கூறல் என சில கதை மரபு இருந்ததாக சில ஆய்வாளர்கள் கருதுவர். தமிழ் மன்னர்களான சோழர் காலத்தில் ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து என இரு வகையான கூத்துக்கள் இருந்தன. இக் கூத்துக்கள் பற்றி சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார். சோழப் பேரரசு காலத்திலேயே கூத்துக்கள் ஈழத்திற்கு வந்துவிட்டன என வேறு சில ஆய்வாளர்கள் கருதுவார்கள்.[5] விலாச நாடகங்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் கூத்து வடிவத்தை அடிப்படையாக வைத்தே தோன்றின.

கி.பி. 17 ஆம் நூற்றாண்டிலிருந்து வடமோடி, தென்மோடி மரபுக் கூத்து நூல்கள் தோன்றுவதைக் காணலாம். இலங்கையின் தமிழ்க் கூத்து நூல்களின் பிதாமகனாகத் திகழ்பவர், யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கணபதி ஐயர் ஆவார். இவரது வாளபீமன் நாடகமே இன்று கிடைக்கும் கூத்துப் பிரதிகளில் மிகப் பழைமையானதாகும்[6]. இலங்கையின் கூத்து மரபு இக் காலத்தில் இந்து மரபு, கத்தோலிக்க மரபு என இரண்டாகப் பிரிந்தது.[7] கத்தோலிக்க மதம் சார்ந்த கருத்துக்களை மக்கள் மத்தியில் இலகுவாகப் பரப்புவதற்கு போர்த்துக்கேயர் கூத்து வடிவத்தைக் கையாண்டு அதில் வெற்றியும் கண்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறப்பாகக் காணப்படுகின்ற கூத்து மரபுகளாக:- தென்மோடி, வடமோடி, சிந்து நடை, வசந்தன் நடை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் மிகத் தொன்மையான கூத்தாக இருப்பது தென் மோடியாகும். வட்டுக்கோட்டை, சுழிபுரம், அராலி, ஆகிய இடங்களில் வடமோடிக் கூத்தும் பருத்தித்துறைப் பிரதேசத்தில் நாட்டைக் கூத்தும், குரும்பசிட்டி, கட்டுவான் ஆகிய பகுதிகளில் வசந்தன் கூத்தும் காணப்படுவதுடன், தென்மோடிக் கூத்தும் சிந்து நடைக் கூத்தும் யாழ்ப்பாணத்தில் பல பிரதேசங்களில் பரந்து காணப்படுகின்றன.

தென்மோடிக் கூத்தில் கதைக்கரு - கத்தோலிக்கம், சுவை, ஆடல்கள், பாடல்கள், அரங்கம், பாத்திரங்கள், கதை சொல்லும் முறை, முதலியவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன. யாழ்ப்பாணத்தில் இன்று உள்ள தென்மோடிக் கூத்து பூர்வீகமான தென்மோடி வடிவமில்லை. காதல் - சோகம் - வீரம் - வரலாறு - தியாகம் முதலிய கருப் பொருள்கள் - சுவைகள், ஆரம்பம் மங்களமாகவும் முடிவு அவலமாகவும் இருத்தல், ஆடலை விடப் பாடல் அதிகம், புனிதர்களுக்கும் குருமார்களுக்கும் ஆடல்கள் இல்லை, 160 தரு வகைகள், யாப்பு வகைகள், பாடல் மெட்டுக்கள், பாத்திரப் பயன்பாடுகள், வேட உடைகள், திறந்த வெளியரங்கு முதலியவை பழைய கூத்து மரபில் காணப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளிலும் சில நடுப்பகுதிகளிலும் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, முதலிய மாவட்டங்களிலும் தென்மோடிக் கூத்து காணப்படுகின்றது. இலங்கையின் கூத்துப் பாரம்பரியத்தில் மிகவும் பழைமையானதும் தனித்துவமானதும் தென்மோடி ஆகும். இன்று இவ் வகைக் கூத்துக்கள் பெரும்பாலும் குருநகர், பாசையூர், இளவாலை, நாவாந்துறை, கொழும்புத்துறை, சுண்டிக்குளி முதலிய பகுதிகளில் பிரதேச கலைஞர்களால், பேணப்பட்டு வருகின்றன.

தற்காலத்தில் மிக இனிமையான குரலில் சுருதி மாறாமல், தாளம் தவறாமல், மொட்டு தவறாமல் பாட்டுக்கள் பாடப்பட்டும் ஆடப்பட்டும் வரும் தென்மோடிக் கூத்தில் மத்தளம், தாளம், ஆர்மோனியம் முதலிய இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இருந்த போதிலும் சமூகம் சார்ந்த கருத்துக்களும் சிக்கல்களும் மிகக் குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றன. பழைய கூத்து வடிவத்தில் சமூக கருத்துக்களைக் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்குச் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகமும் செலவு குறைந்த கலையாகவும் உள்ள போதும், இன்றைய நிலையில் நவீன முறைகளுக்குள் சிக்கி வியாபாரக் கலையாகவும் மதம் பரப்பும் சாதனமாகவும் உள்ளது.

வடமோடிக் கூத்து வேகமும் விறுவிறுப்பும் தாளத்துடன் கூடிய கனதியும் ஆட்ட முறையும் கொண்ட வீரம் செறிந்தது. இவ் வகைக் கூத்து யாழ் வட்டுக்கோட்டைப் பிரதேசத்தின் சிந்துபுரம் கிராமத்தில் இன்றும் நிலைத்திருப்பதைக் காணலாம். வட இந்தியாவின் சிந்துவெளிப் பகுதியிலிருந்து இக் கலை வடிவம் இங்கு வந்திருக்கலாம் என வரலாற்று ஆய்வாளர்கள் கூறுவார்கள். பல காலமாக இக் கூத்து இப் பகுதியில் ஆடப்பட்டு வருகின்றது. இக் கூத்து அன்று தொடக்கம் இன்று வரை மேடையொலி தாளவொளியை விஞ்சிடும் என்ற காரணத்தால், பலகைச் சட்ட மேடைகளில் ஆற்றுகை செய்யப்படுவதில்லை. இக் கூத்து வட்டக்களரி மேடைகளில் ஆடப்படுகின்றது. ஆரம்பகாலத்தில் 12 - 14 மணித்தியாலயங்கள் ஆடப்பட்டு வந்த இக் கூத்து ஓரிரண்டு மணி நேரக் கூத்தாக சுருக்கப்பட்டு ஆடப்படுகின்றது. எதுகை, மோனை, இராமாயண பாரத கிளைக்கதைகள், தாங்கும் வில், வாள், மரத்தினால் செய்யப்பட்ட யாழ், மரத்தினால் செய்யப்பட்ட கரப்பு ஆடைகள் என்பவற்றைக் கொண்டு காணப்படும்.[8] தற்காலத்தில் ஒப்பனைக்குச் சீலைகளும் பயன்படுத்தப்படுவதுடன், சில நவீன ஆயுதங்களும் இசைக் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இக் கூத்தைப் பராமரிப்பவர்கள் யாரும் இல்லாததால் அழிவடையும் நிலையில் உள்ளது வேதனைக்குரியது. வடமோடிக் கூத்தையும் அதன் மூலம் வெளிப்படும் எமது பண்பாட்டையும் பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு கையளிப்போம்.

யாழ்ப்பாணத்தில் ஆடப்பட்டு வரும் கூத்துக்களில் சிந்து நடைக் கூத்தும் ஒன்று. பெரும்பாலும் மாரியம்மன் கதையை அடியொற்றியதாக இக் கூத்து ஆடப்பட்டு வருகின்றது. இக் கதை பிரதேசத்திற்கு பிரதேசம் சிறிய வேறுபாடுகளுடன், ஆற்றுகை செய்யப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் நீண்ட நேரம் ஆடப்பட்ட இக் கூத்து இன்று 2 - 3 மணி நேரக் காட்சிகளாக அரங்குகளில் ஆடப்படுகின்றது.9 இக் கூத்து அம்மனுக்கு நேர்த்திக் கடன் வைத்தே ஆடப்பட்டு வந்தது. யாழ்ப்பாண பகுதியிலிருந்தே வன்னிப் பகுதிக்கு இக் கூத்து வந்ததாக கருதுவர். இக் கூத்தில் முக்கியமானது காத்தவராயன் கூத்தாகும். வேகமான ஆட்டங்களைக் கொண்டது. இன்று ஆலயங்களில் இக் கூத்து நவீன வடிவத்தில் குறுகிய நேரத்துக்குள் ஆடப்படுகின்றது.

வன்னிப் பிரதேசத்தில் கோவலன் கூத்து, கண்ணன் கூத்து, கர்ணன் கூத்து, வெடியரசன் கூத்து, வாள பீமன் கூத்து முதலியன சிறப்பாக ஆடப்பட்டன, சில ஆடப்பட்டும் வருகின்றன. கிறிஸ்தவ மதம் இலங்கைக்கு வந்ததும், யாழ்ப்பாணத்திலிருந்து அண்ணாவிமார் அழைத்து வரப்பட்டு முல்லைத்தீவு, சிலாவத்தை முதலிய பிரதேசங்களில் பாரம்பரியமாக ஆடப்பட்டு வந்த சௌந்தரி, தொண்டி முதலிய கூத்துக்களில் கிறிஸ்தவ கதைகளைப் புகுத்தி கூத்துக்களாக ஆடப்படுவதுடன், மேடையேற்றமும் செய்தனர். இவை மேடைகளில் திரைகட்டி நடிக்கப்பட்ட கூத்துக்களாகும்.[10] மன்னாரில் மாதோட்டப்பாங்கு அல்லது தென்பாங்கு, யாழ்ப்பாணத்துப் பாங்கு அல்லது வடபாங்கு என இரண்டு வகையான கூத்து மரபுகள் உள்ளன[11]. தென்பாங்கில் கடவுள் வாழ்த்து வெண்பாவிலும் வடபாங்கில் விருத்தப்பாவிலும் பாடப்பட்டன. மன்னார் பிரதேசத்தில் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்கு தென்மோடிக் கூத்தும் 1505 ஆம் ஆண்டுக்குப் பிறகு பயன்படுத்தியமையைக் காணலாம்.

வன்னிப் பிரதேசத்தில் மிகப் பழங்காலந்தொட்டு சிலம்பு கூறல் வரலாற்றைக் கூறி வருவது கோவலன் கூத்தாகும். தமிழ் மக்கள் மத்தியில் இக் கூத்து ஒரு நேர்த்திக்கடனாகவே அம்மனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் ஆடப்பட்டது. இக் கூத்து புராதன காலம் தொடக்கம் முள்ளியவளை, தண்ணீரூற்று, வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு, வட்டுவாகல், மணற்குடியிருப்பு, சிலாவத்தை, செம்மலை குமுல முனை முதலிய பிரதேசங்களில் ஆடப்படுகின்றன[12]. கோவலன் கூத்தே முல்லைத்தீவுக்குரிய சிறப்பானதும் தனித்துவமானதும் ஆகும். திங்கட்கிழமைகளிலும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆண்டுப் பூசையின் போதும் கோவலனார் கூத்து ஆடப்படும்.

த.பொன்னம்பலம் அண்ணாவியார் 1926 ஆம் ஆண்டளவில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கோவலனார் கூத்தை மேடையேற்றியதாக செவி வழிக்கதைகள் கூறும். இக் கூத்தில் நடித்தவர்கள் பலர் பிற்காலத்தில் அண்ணாவிமார்களாக செயற்பட்டுள்ளனர். இக் கூத்து வட்டக்களரி கட்டப்பட்டு ஆடப்படும். வன்னிப் பிரதேசத்தில் இன்று வரை ஆடப்படும் கூத்தாக இருப்பதனால், (இக் கூத்தே வன்னிக்குரிய சிறப்பான -தனித்துவமான - கூத்தாக கருதப் படுகின்றது. பேராசிரியர் ம. இரகுநாதன் அவர்கள் கோவலன் கூத்து பற்றியே பட்டப்படிப்புக்கு ஆய்வு செய்துள்ளதுடன், கூத்தின் முழுப்பகுதியையும் நூலுருவாக்கம் செய்துள்ளார்[13]. இக் கூத்துப் பற்றி பட்டப்படிப்புக்கு இவர் செய்த ஆய்வு நூலுருவாக்கம் பெறாதது மனத்திற்கு வேதனை அளிக்கின்றது.) இந்த கூத்து முல்லைத்தீவுப் பிரதேசத்தின் பல பகுதிகளில் ஆடப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் உள்ள அருவி வெட்டுப் பாடல்கள், பள்ளுப் பாடல்கள், சிலம்பு கூறல் பாடல் மெட்டுக்கள் முதலியவை இக் கூத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

கோவலனார் கூத்தின் மூலப்பிரதி ஏட்டுப்பிரதியாகவே உள்ளது. ஏட்டுப் பிரதிகளில் உள்ள எழுத்துக்களுக்குக் குற்றுக்கள் இல்லை. கோவலனார் கூத்தின் பாத்திரங்கள் முழுவதும் ஆண் பாத்திரங்கள் ஆகும். கூத்தானது பாடல் பாடும் முறைகள், காப்பு, தோடயம், சபை விருத்தம், புகுமுக ஆட்டம், ஆட்டத் தரு, சம்பாஷனைத் தரு என வகுக்கப்பட்டுள்ளது. இக் கூத்தில் முதலில் வரும் பாத்திரம் கட்டியக்காரனாவார். பக்க வாத்தியங்களாக மத்தளம், கைத்தாளம் ஆகியன உபயோகிக்கப்படும். ஆனால் அண்மைக்காலங்களில் ஆர்மோனியம் பயன்படுத்தப்படு கின்றது. அலங்கார அமைப்பும் வித்தியாசமானது. ஆரம்பத்தில் வெளிச்சத்திற்குப் பந்தங்கள் பயன்படுத்தப்பட்டது. பின்னர் லாம்புகள், பெற்றோல்மெக்ஸ், மின் விளக்குகள் என்பன பயன் படுத்தப்பட்டன. அண்ணாவியாருக்குக் கூத்து தெட்சணை கொடுத்து ஆரம்பிப்பது வழக்கம். ஆரம்ப காலத்தில் இக் கூத்து விடிய விடிய ஆடப்படும்.[13] இப்போது இக் கூத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டாலும் குறிப்பிடத்தக்களவுக்குப் பாரம்பரியம் பேணப்படுகின்றது என்பது நிதர்சனம்.

முல்லைத்தீவில் உள்ள வட்டுவாகல் என்ற இடத்தில் கண்ணன் கூத்து பழக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது. இக் கூத்து வடமோடிக் கூத்து வகையைச் சேர்ந்தது. கோவலன் கூத்தில் உள்ள சில பாடல்களை இக் கூத்தில் வரும் பாடல்கள் ஒத்திருக்கின்றன. இப் பிரதேசத்தில் நிகழ்த்தப்படும் லவகுச கூத்துக்கும் இக் கூத்துக்கும் தொடர்பு உண்டு. கண்ணன் கூத்தில் கதை இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையில் நடைபெறுகின்றது. வெள்ளாம் முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு, முதலிய கிராமங்களில் கோவலன் கூத்துப் பாணியில் ஆடப்படுவது வெடியரசன் கூத்தாகும். இக் கூத்தின் கதை வாய்வழியாகவே கடத்தப்பட்டு வருகின்றது. கோவலன் கூத்துப் பாணியில் ஆடப்படும் இன்னுமொரு கூத்து வாளபீமன் கூத்தாகும். வட்டுவாகல், வெள்ளாம் முள்ளிவாய்க்கால் முதலிய பிரதேசங்களில் ஆடப்படுகின்றது. இக் கூத்தின் கதையும் செவி வழியாகவே பேணப்படுகின்றது. வன்னியர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்ததாக குறிப்புக்கள் உள்ளன. மகாபாரதக் கதையுடன் சம்பந்தப்பட்ட கூத்து. முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு முதலிய பகுதிகளில் கோவலன் கூத்து பாணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடப்படும் இன்னுமொரு கூத்து லவகுச கூத்து. இவ் மாவட்டத்தில் இக் கூத்துடன் மட்டுமே இராமாயணக் கதை சம்பந்தப்பட்டுள்ளது.[14]

ஞான சௌந்தரி - கிறிஸ்தவக் கூத்து முல்லைத்தீவு, அளம்பில், செம்மலை, இரணைப்பாலை முதலிய இடங்களில் யாழ்ப்பாணத்தில் ஆடப்பட்ட பாணியில் மேடையில் திரைக் கட்டி அரங்கேற்றப்பட்டது. என்றிக் எம்பிதோர் கூத்து முல்லைத்தீவுப் பகுதியில் ஆடப்படுவதுடன், இரணைப்பாலை வலையன் மடப்பகுதியில் தொண்டி என்ற பெயரிலும் ஆடப்படுகின்றது. இக் கூத்தில் எம்பறர் ஹென்றி என்ற மன்னனின் வாழ்க்கை வரலாறு ஆடிக்காட்டப்பட்டுள்ளது. காத்தவராயன் கூத்து - சிந்து நடைக் கூத்து முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் ஆடப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள மாதனை என்னும் பகுதியைச் சேர்ந்த கலைஞர்கள் இவ் மாவட்டங்களுக்கு வந்து இக் கூத்தை மேடையேற்றினார்கள் என்பது வரலாறாகும்.[15]

கூத்து என அழைக்கப்படும் ஈழத்தின் தமிழ் மரபு வழி நாடகங்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், சிலாபம், புத்தளம் மலையகம், முல்லைத்தீவு, வவுனியா முதலிய பிரதேசங்களில் இன்றும் ஆடப்பட்டு வருகின்றன. சிறப்பாக மட்டக்களப்பில் வடமோடி, தென்மோடி, விலாசம் கூத்துக்களும் மன்னாரில் வட பாங்கு, தென் பாங்கு கூத்துக்களும் யாழ்ப்பாணத்தில் தென்மோடி, வடமோடி கூத்துக்களும் முல்லைத்தீவில் கோவலனார் கூத்தும் மலையகத்தில் காமன், அருச்சுனன் தபசு கூத்துக்களும் ஆடப்படுகின்றன. மலையகத்தில் உள்ள கூத்துக்களில் தப்பு பிரதான மேளவாத்தியக் கருவியாக இருப்பது சிறப்பம்சமாகும்.16 இப் பிரதேசங்களில் ஆடப்படும் கூத்துக்கள் பல்வேறு வேற்றுமைகளையும் ஒற்றுமைகளையும் கொண்டுள்ளன. இவ் விடயம் பரந்த ஆய்விற்குரிய பகுதியாகும். வடக்கு மாகாணத்தின் எல்லையும் வன்னி மாவட்டத்தின் எல்லையும் யாழ்ப்பாண மாவட்டத்தின் எல்லையும் வரலாற்று அடிப்படையில் காலத்திற்குக் காலம் வேறுபட்டுள்ளன. வன்னிப் பிராந்தியம் வன்னி எனப் பெயர் பெறும் முன்னர் அடங்காப்பற்று என்ற பெயரில் திகழ்ந்ததாகவும் இதற்குள்ளேயே யாழ்ப்பாணமும் அனுராதபுரமும் அடங்கியிருந்ததாக கலெக்டர் ரேணர் குறிப்பிடுவர்.[17] இதனால் கூத்துக்கள் நிலவிய பிரதேசங்களைப் பகுப்பாய்வு செய்வதில் சில சிக்கல்கள் உள்ளன. இது ஆய்வுக்குரிய பகுதியாகும்.

**முடிவுரை:-**

ஈழத்தில் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், மலையகம் ஆகிய பகுதிகளில் தமிழ்க் கூத்து மரபுகள் சிறப்பாக காணப்பட்டன. வடக்கில் யுத்தம் நிலவிய காலத்தில் கூத்துக்களின் சில வடிவங்கள் மாற்றங்களுடன் தெரு கூத்துக்களாக ஆடப்பட்டு, சமூகச் செய்திகளைக் கூறின. இன்று வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் கோவலன் கூத்தும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தென்மோடிக் கூத்தும் சில மாற்றங்களுடன் ஆடப்படுகின்றன. அண்மையில் நவீன நாடகங்கள், சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள், குறுந்திரைப்படங்கள், தொடர் நாடகங்கள் முதலியவற்றின் தோற்றத்தினால், கூத்துக் கலைகள் பின்னடைவை சந்தித்துள்ளன. இருந்தும் இவற்றில் கூத்துக்களின் தாக்கங்கள் உண்டு. இளைஞர்கள் கூத்துக் கலையில் ஆர்வம் காட்டாமையும் அண்ணாவிமார் அடுத்த தலைமுறைக்குச் சொல்லிக் கொடுக்காமையினாலும் பல கூத்துக்கள் அழிவடைந்து செல்கின்றன. ஆரம்ப காலத்தில் நிலக் கிழார்கள், கூத்துக்கள் மூலம் பாமரமக்களின் பொருளாதாரத்தைச் சுரண்டினார்கள் இன்று கூத்துக்களை இழிசனரின் கலையாக கருதி அக் கலையை வளர்க்க முன் வருவதில்லை. இன்று கூத்துக்ளைப் பாதுகாக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலரணாக திருமறைக் கலாமன்றம் திகழ்கின்றது. தமிழ்ப் பண்பாட்டுடன் காலா காலம் இணைந்து வரும் கூத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷங்கள் ஆகும்.

முற்றும்.

**அடிக்குறிப்புக்கள்**

1. அகராதிக் குழு, (2010), க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, இரண்டாம் பதிப்பு, சென்னை. பக்-417.
2. இளங்கோவடிகள், (2005), சிலப்பதிகாரம், ராமையா பதிப்பகம், சென்னை. பக்.-70 -74, 163 – 167.
3. மணிமாறன்,க., (2012), கவின் தமிழ், "நம்மவர் அடையாளங்களே கூத்துக்கள்," தொகுப்பாசிரியர், தி. தர்மலிங்கம், தமிழ் மொழித் தினக்குழு, வடக்கு மாகாணம், பக்-95.
4. செல்லத்துரை, அருணா., (2000), வன்னிப் பிராந்தியக் கூத்துக்கள், அருணா வெளியீட்டகம், கொழும்பு. பக்-25-37.
5. செல்லத்துரை அருணா., மேலது, பக்-15.
6. மனோகரன், துரை., (1997) இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி, கலைவாணி புத்தக நிலையம், கண்டி. பக்-54.
7. மௌனகுரு, சி., (1993), ஈழத்து தமிழ் நாடக அரங்கு, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். பக்-58.
8. மணிமாரன், க., (2012), மேலது. பக்- 97-98.
9. செல்லத்துரை, அருணா., (2000), மேலது, பக்-26.
10. செல்லத்துரை, அருணா., (2000), மேலது, பக்-25.
11. வித்தியானந்தன், சு., (1990), நாடகம் நாட்டாரியற் சிந்தனைகள், தமிழகம் வெளியீடு, தெல்லிப்பளை. பக்-23.
12. செல்லத்துரை, அருணா., (2000), மேலது, பக்-38-39.
13. செல்லத்துரை, அருணா., (2000), மேலது, பக்-46-59.
14. இரகுநாதன், ம., பதிப்பாசிரியர், (2006), கோவலன் நாடகம் (முல்லை மோடி), யாழ்-பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.பக்-எணை.
15. செல்லத்துரை, அருணா., (2000), மேலது, பக்-40-44.
16. செல்லத்துரை, அருணா., (2000), மேலது, பக்-44-45.
17. பிரபாகரன், பொன்., (2015), காமன் கூத்து, புதிய பண்பாட்டு அமைப்பு, மலையகம். பக்.-1-16.
18. செல்லத்துரை, அருணா., (2000), மேலது, பக்-01.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே எம் யாழமுதம்?
# முறியுமா எம் கற்பகதரு?



செல்வி. தங்கராசா தமயந்தி

**அன்றும். இன்றும்**

அஸ்பெஸ்டஸ் கூரையும்
அண்ணார்ந்து பார்க்கும் சுண்ணாம்புக் கட்டிடமுமின்றி
ஆழமாய் வேரூன்றிய விருட்சங்களும்
காலங்காலமாய் உறுதியாய் உயரம் பெற்று
அள்ள அள்ளக் குறையாது அடிமுதல் நுனிவரை
அக்ஷய பாத்திரமாய் பயன்பல தரும்
கற்பகதருக்கள் அநியாயமாய் அழிக்கப்படுவதேன்?

இயற்கை அன்னையவளின் மேனி களங்கமுறாவண்ணம்
இயற்கை உரத்தால் உரமூட்டியே பெற்ற
குரக்கன், சாமி, திணை குறைவு பெற்றே
ஆரோக்கியத்தை ஆட்டுவிக்கும்
அதிவேக உணவுகளால்
அகஞ்சுரக்கும் சுரப்புக்களும் நிலைகுலைந்தே
அகங்களும் அகற்றப்படுவதேன்?

கணக்கிட முடியா கற்பகத்தருக்களை உருவாக்கினாலும்
பதமான ஒரு பனைக் கள் காவலிருந்து பருகியே
நொங்கு, கிழங்கு எனும் பனம் பண்டங்களோடு
ஆச்சி காய்ச்சிய கூழ் குடித்து
துலாமிதித்து வயல் விதைத்து
உடல் உஷ்ணம் தீர நல்லெண்ணெய் குளியல் என
அரிய ஆரோக்கிய வாழ்க்கை முறை எங்கே?

கொக்கேயன் கலந்த குளிர்பானங்களும்
புதிது புதிதாய் முளைத்தே
கொடிய தாண்டவமாடும் போதைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் இளையோரின் வாழ்வைக் குடித்தே
உடலின் உடனிருந்தே கொன்று
வக்கிரங்களும் வன்புணர்வுகளுக்கும்
மூல காரணமாகும் நிலை ஏன்?

யாழ்பாணர் பாடி பரிசு பெற்ற பூமியில்
தென்மோடி, வடமோடிக் கூத்துக்கள்
வரலாற்றுக் கதைகளை பராமரித்த பூமியில்
மரபுவழி, எம் பாரம்பரிய கலைகள்
காணாமல் தேடுவாரின்றி மறைய
வாசிப்போடு, எழுத்தாற்றலும், ஏடுகளும் மறைய
கணினியும், இரவல் கலைகளும் இரண்டற கலப்பதேனோ?

தொண்ணூறு வயதான கொள்ளுப்பாட்டியின்
பாதம் பணிந்து ஆசீர் பெற்று
நல்லது, கெட்டதை
நாலு பெரியவர்களுடன் கலந்துரையாடி
தாய், தந்தை பேணி
நடை உடை பாவனையில்
எம் கலாசாரம் பிரகாசித்த காலம் எங்கே?

இயற்கையை உதாசீனம் செய்து அழித்தே
செயற்கை நவீனத்தை வலிய விதைத்தே
ஆக்கபூர்வங்களை அலட்சியம் செய்தே
எம் யாழமுதத்தில் நஞ்சினை கலக்காமல்
எஞ்சியிருக்கும் எம் கற்பகதருக்கள்
யாழின் பெருமைகளை பாதுகாக்கும்
பாரிய பொறுப்பினை கரமேற்றி
இயற்கையோடு இணைந்தே இனிதே வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நகரச்சிறப்பு



சைவப்புலவர்
சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்
B.A, M.A. M.ED, PGDE, PGDEM, SLEAS II
ஓய்வு நிலை திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர்.

ஆரியச் சக்கரவர்த்திகள் (யாழ்ப்பாண மன்னர்கள்) 1621 வரை யாழ்ப்பாணத்தை யாழ்ப்பாண இராச்சியம் என்ற பெயரில் ஆட்சி செய்து வந்தனர். அதன் தலைநகராக நல்லூர் விளங்கியது. நல்லூரை இராசதானியாகக் கொண்டு யாழ்ப்பாண மன்னர்கள் ஆட்சி செய்து வந்தமையை நாம் இலக்கியச் சான்றுகள் நூலாதாரங்கள் ஏனைய சான்றுகளூடாகக் காண்கின்றோம்.

1505இல் இலங்கைக்கு போர்த்துக்கீசர் வந்து கரையோரங்களில் தமது செயற் பாடுகளை மேற்கொண்டனர். யாழ்ப்பாணம் அவர்களினால் 1621 இல் கைப்பற்றப்பட்டதாக அறிய முடிகிறது. அவர்கள் காலத்தில் நிர்வாக நகரமாக யாழ்ப்பாணத்தை அமைத்து இங்கிருந்து அவர்களது செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1621இல் உருவாகிய யாழ்ப்பாண நகரம் காலத்துக்கு காலம் உலக நடைமுறைகள் கால தேசமாற்றங்களைக் கடந்து காலத்துக்கேற்ற மாற்றங்களைப் பெற்றுள்ளன. யாழ்ப்பாண நகரத்தின் இட அமைவானது தீவுப் பகுதிகளுக்குச் செல்லும் நுழைவாயிலாகவும் ஏனைய இடங்களுக்குப் போக்குவரத்துச் செய்யக்கூடிய கேந்திர முக்கியத்துவம் உடைய அமைவி டமாகவும் அமைந்துள்ளது. யாழ்ப்பாண நகரத்தினூடாக உள்ளூர் வெளியூர் வீதிப்போக்கு வரத்து, கடல்போக்குவரத்து, புகையிரதப் போக்குவரத்து, என்பன மிக நீண்டகாலமாக நடைபெற்று வருகின்றன.

விவசாயத்தை வாழ்வாதாரமாகவும் அடிப்படையாகவும் கொண்ட் தனிக்கலைப் பண்புடைய யாழ்ப்பாணத்தின் முக்கியமாக பூவுலக கற்பகதரு எனப்படும். பனை வளம் தற்போது அருகி வருகிறதெனினும் அதன் பெருமையை வாய் வார்த்தைகளில் கூறிவிட முடியாது. ஏனைய பயிர் வகைகள் நட்டுப் பராமரிக்கச் செலவிட்ட வருமானம் என்னும் நிலையில் நடுவதன் மூலமாகவும் தானாகவும் வளர்ந்து பலபயன் தந்து யாழ் வாழ் மக்களை உயர்வடையச் செய்வதில் பனை மரத்திற்கு முக்கிய இடமுள்ளது.

விவசாயப் பயிர்ச்செய்கைக்கு மண்வளமும் தரைக்கீழ் நீரும், இயந்திரங்கள் பயன்படுத்த முன்னரான காலத்தில் கிணற்றில் இருந்து நீரைப் பயிர்களுக்கு இறைக்கும் துலா இறைப்பு. சூத்திர இறைப்பு முறைகளும் தனித்துவமானதாகும். இயற்கைப் பசளைகள் மனித முயற்சி சுற்றாடலைப் பாதிக்காத செயற்பாடுகள் விவசாயத்தில் அன்றுதொடக்கம் இன்றுவரை, சிறப்பாக அமையும் எனினும் நவீன விஞ்ஞான விவசாய உபகரணங்கள் இயந்திரப் பாவனைகள் மூலம் முன்னைய நிலைகளிலிருந்து இன்றைய நிலைக்கு வளர்ச்சியடைய வழிவகுத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நகரம் உருவாகக் காரணமாக இருந்த போர்த்துக்கீசர் 1658 வரை ஆட்சியிலிருந்தார்கள். அதன் பின்னர் ஒல்லாந்தர் வசம் ஆட்சி அதிகாரம் சென்றது. அது வரையில் போர்த்துக்கீசர் யாழ்ப்பாண நகரத்தை உருவாக்கி நிர்வாகத் தேவைகளுக்காக சில கட்டடங்களைக் கட்டியிருந்தனர். 37 வருட ஆட்சியில் இலக்கிய வளர்ச்சியோ வேறு குறிப்பிடக் கூடிய வளர்ச்சிகளோ ஏற்படவிட்டாலும் யாழ்ப்பாண நகரத்தை உருவாக்கியமை சிறப்புக்குரிய விடயமாகும். அவர்களைத் தொடர்ந்து ஆட்சி செய்த ஒல்லாந்தர் காலத்தில் மதச்சுதந்திரம் இலக்கியம் படைக்கும்சுதந்திரம் இருந்தமையினால் பல இலக்கியங்கள் தோற்றம் பெற வழிவகுத்தன. அத்துடன் கட்டடக்கலை சார்ந்து வளர்ச்சி பெறவும் வழிவகுத்தது.

யாழ்ப்பாண நகரில் கட்டடக்கலை வளர்ச்சியின் முக்கிய அம்சமாக விளங்குவது யாழ்ப்பாணக் கோட்டையாகும். நான்கு பக்கமும் அகழிகள் அமைத்து மிகப்பெரிய அளவிலான கோட்டை கட்டப்பட்டது. மிக நீண்ட காலத்தின் பின்னர் இன்றும் கோட்டையின் பல்வேறு புனரமைப்புக்களுடன் காணப்படுகின்றது.

பெரியளவிலான முற்றவெளி, விளையாட்டு மைதானம், இயற்கைச் சூழலுடன் இசைவாக அமைந்துள்ள தனியார் நிறுவனங்கள் புகழ் பெற்ற பல பாடசாலைகள், நகர அமைப்பு நேர்த்தியான கட்டட அமைப்புக்கள் என்பனவும் எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

கட்டட அமைப்புச் சிறப்புடன் பல சிறப்பான நூல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் யாழ்ப்பாண பொது நூலகம் தென் ஆசியாவில் சிறந்த நூலாகமாகத் திகழ்வது யாழ் நகரச் சிறப்பிற்குச் சிகரமாக அமைகிறது. இந்த நூலகம் 1933இல் ஆரம்பிக்கப்பட்டது. 1983ல் இனரீதியாக சிதைக்கப்பட்ட போதும் மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தரைத் தொடர்ந்து ஆங்கிலேயர் 1796இல் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தனர். முன்னையவர்களைத் தொடர்ந்து இவர்களது காலத்தில் யாழ்நகரம் பல்வேறு மாற்றங்களைப் பெற்று மேலும் வளர்ச்சியடைந்தது. கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மக்கள் ஆர்வத்துடன் கல்வி கற்க முன்வந்தனர். இதற்குப் பாடசாலைகள் கட்டப்பட்டமை முக்கிய காரணமெனலாம். இன்று பல புகழ்பெற்ற பாடசாலைகள் அன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட வையாகும். ஏட்டில் எழுதியும் படித்தும் வந்த மக்களுக்கு அச்சியந்திரத்தின் வருகை பல்வேறு வளர்ச்சிக்கும் அடித்தளமாகியது. 1841 இல் வெளியிடப்பட்ட “உதயதாரகை” பத்திரிகை தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்தன. இப்பத்திரிகை இலங்கையில் முதலாவது பத்திரிகையாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். யாழ் நகரத்தில் இருந்து அச்சிட்டு வெளியிடப்பட்டமை யாழ் நகரத்திற்குச் சிறப்பாக அமைந்தது எனலாம்.

உதயதாரகை பத்திரிகையைத் தொடர்ந்து, சைமன்காசிச் செட்டியின் உதயாதித்தன் வைமன் கதிரவேர் பிள்ளையின் வித்தியா தர்ப்பணம், வில்லியம் சின்னத்தம்பியின் பாலிமர் நேசன், சத்திய வேத பாதுகாவலன், இலங்காபிமானி, இலங்கை காவலன், இலங்கை நேசன், சைவ உதயமானது சைவாபிமானி, இந்து சாதனம், இந்து ஒசன், சைவசமய போதினி, விஞ்ஞான வர்த்தனி, முஸ்லீம் நேசன், சர்வஜன நேசன், இஸ்லாம் மித்திரன்,இஸ்லாம் பாதுகாவலன், சைபுல் இஸ்லாம் பத்திரிகைகள் 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1849 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வித்தியானுபாலன யந்திரசாலையை நிறுவி பதிப்புத்துறையை யாழ்ப்பாண நகரத்தில் ஆரம்பித்து வைத்தார். இதனூடாகப் பல புதிய நூல்களும் பழைய நூல்களும் பதிப்பித்து வெளியிடப்பட்டன. இதனால் பல நூல்கள் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டு மக்கள் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளல் சாதகமாய் அமைந்தன.

யாழ் நகரத்திலே வீதி ஓரங்களிலே, சந்திகளுக்கருகில் கிணறுகள் வெட்டப்பட்டு, தண்ணீரைப் பெறுவதற்குரிய வழக்குகள் செய்யப்பட்டிருந்தன. மடங்களும், சத்திரங்களும் அமைக்கப்பட்டிருந்தன. கந்தர்மடம், சத்திரச்சந்தி இன்றும் காணப்படுகின்றன. போக்குவரத்துச் சாதனங்கள் குறைவாக இருந்த அந்தக் காலத்தில் நடைப்பயணம் செய்த மக்கள் நலன் கருதி இவை அமைக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாண நகரை மையமாகக் கொண்டு பல குடிசைக் கைத்தொழில், சிறு கைத் தொழில், பொருள்களை உற்பத்தி செய்யும் உள்ளூர் நிறுவனங்களாகச் செயற்பட்டன. மில்க்வைற் சவர்க்கார நிறுவனம், அண்ணா கோப்பி நிறுவனம், கூரைத்தகடுகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், அச்சுவேலி கைத்தொழில் பேட்டை என்பனவும் யாழ்ப்பாண நகரைச் சுற்றவுள்ள இடங்களில் இயங்கிய கைத்தறி நெசவுசாலைகள் நகர வளர்ச்சிக்கு பல பயன் பாடுடையனவாக விளங்கின. இவற்றில் சில காலப்போக்கில் வளர்ச்சி பெற்று இன்று வரை வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண வைத்தியசாலை, கச்சேரி மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் அமைவிடங்கள் சிறப்பாக அமைந்த காரணத்தால் இன்றுவரை நகர விரிவாக்கத்துக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் அபிவிருத்தியடைகின்றன.

யாழ்ப்பாண நகரிலுள்ள பாடசாலைகள் சிறப்பும் பெருமையுமுடையனவாக விளங்கு வதோடு நவீனகால வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கக் கூடிய வகையில் வளர்ந்து வருவதைக் காணலாம். 100 வருடங்களுக்கு முன்னர் சேர் பொன் இராமநாதனால் கட்டப்பட்ட பரமேஸ்வரா கல்லூரி இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக வளர்ந்து கல்விச் சேவையை மிகச்சிறப்பாகச் செய்து வருகிறது.

யாழ்ப்பாண நகரத்தைப் பார்த்தால் ஒவ்வொரு நிறுவனமும் பொருத்தமான இடங்களில் அமைந்துள்ளமையும் இன்று வரை நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கக் கூடிய வகையிலும் அமைந்துள்ளதோடு எதிர்வரும் காலங்களிலும் மேலும் வளர்ச்சியடையக்கூடிய பின்னணியைக் கொண்டு விளங்குகின்றன.

யாழ் நகரத்திலுள்ள பாடசாலைகள் கட்டட அமைப்புக்களில் மட்டுமன்றி கல்வி வளர்ச்சிலும் முக்கிய இடம் பெறுவதைக் காணலாம். புலமைப்பரிசில் பரீட்சை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை, க.பொ.த உயர் தரப் பரீட்சைகளில் யாழ் நகரப் பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதோடு அதற்குரிய பலாபலன்களையும் பெறுகின்றனர். பெருமளவிலான உயர்தர மாணவர்கள் சிறந்த பெறுபேறு பெற்று பல்கலைக்கழகம் செல்வதைக் காணலாம். அது மட்டுமன்றிப் பாடசாலை மாணவர்களது ஒழுக்க விழுமியப் பண்புகள் பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர்களது வழிகாட்டல்களினால் சிறந்து விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் செயற்பாடுகளுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளான விளையாட்டு மற்றும் இசை நடனம், நாடகம் போன்ற துறைகளிலும், மாணவர்கள் சாதனை செய்வதைக் காண முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வட இலங்கை சங்கீதசபை மாணவர்களது திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு பல போட்டிகள் நடத்திச் சான்றிதழ்களை வழங்குவது மாணவர்களது இசை சார்ந்த செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்றமை 80 வருடங்களுக்கு மேல் நடைபெற்று வருகிறது.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச்சங்கம் சைவ பரிபாலனசபை போன்ற நிறுவனங்கள் கல்வி சார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டு பாடசாலைக் கல்விக்குப் பின்னரான கல்வி வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றன. ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதிலும், யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் கடந்த நூற்றாண்டிலிருந்து செயற்பட்டுக் கொண்டிருந்தன. அவை ஆசிரியர்களாகச் சேர்ந்த பின்னர் பயிற்சி வழங்கின. தற்போது பயிற்சிக்குப் பின்னரான ஆசிரியர் சேவைக்குத் தயார்படுத்தும் வகையில் தேசிய கல்வியியல் கல்லூரிகள் இயங்குகின்றன. அந்த வகையில் கோப்பாயில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி இயங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து கல்விமான்கள் பலர் யாழ்ப்பாணத்தில் அன்று தொடக்கம் இன்றுவரை பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். இதனால் கல்வித்துறை வளர்ச்சியும் இலக்கிய வளர்ச்சியும் ஏற்பட்டு வருவது நாம் நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் 1974 ஆம் ஆண்டு நடைபெற்றது. அவ்வாறு நடை பெற்றமை யாழ்ப்பாணத்திற்குப் பெருமையான நிகழ்வாகும். இதற்கான காரணகர்த்தாவாக தவத்திரு தனிநாயகம் அடிகளார் விளங்குவதும் பெருமையானது.

யாழ்ப்பாண நகரச் சிறப்பிற்கு யாழ்ப்பாண மாநகர சபையின் செயற்பாடுகளும் குறிப்பிடக்கூடிய பங்களிப்பைச் செய்கிறது. நகரத்தை உரிய முறையில் பேணுவதில் அக்கறை கொண்டு அதன் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இலங்கையிலுள்ள மாநகரசபைகளில் யாழ்ப்பாண மாநகரசபையும் மிக நீண்டகாலமாக செயற்பட்டுவரும் உள்ளூராட்சி நிறுவனமாக விளங்குகிறது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கச்சேரி மாவட்ட மக்களுக்கான பல பணிகளைச் செய்து வருகிறது. அத்தோடு யாழ்ப்பாண பிரதேச செயலகமும் யாழ் நகரத்தின் ஒழுங்கமைப்புக்கும் நிர்வாக செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக அமைந்துள்ளது. யாழ் நகரம் தோற்றம் பெற்ற காலத்தில் கோவிற்பற்றுக்கள் மூலமாக நிர்வாக செயற்பாடுகள் இடம் பெற்றமையை அறிகிறோம். அதன் தொடர்ச்சியான வளர்ச்சியாக மாவட்டச் செயலகம். (கச்சேரி அரசாங்க அதிபர் செயலகம்) பிரதேச செயலகம் (உதவி அரசாங்க அதிபர் பிரிவு) என்பவற்றின் ஊடாக கிராம சேவையாளர்கள் பிரிவுகளினூடாக நிர்வாகச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இந்த வகையில் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் அலுவலகம் உரிய முறையில் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து சிறந்த சேவையினைச் செய்து வருவது யாழ்ப்பாண நகரத்திற்குப் பெருமையாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்கள் தமது மூதாதையரிடம் பெற்ற சமூக, சமய, விழுமியப்பண்புகளைப் பேணிப் பாதுகாப்பதுடன் சமய நிகழ்வுகள் விழாக்கள் என்பவற்றை வளர்ந்துவரும் உலகிற்கு ஈடு கொடுக்கக் கூடிய வகையிலும் பாரம்பரிய பழக்க வழக்கங்களாய் பேணுவதிலும் அக்கறையாக உள்ளனர். மக்கள் நடை, உடை, பாவனை வாழ்க்கைமுறை உணவுப் பழக்க வழக்கங்கள் விருந்தோம்பல் பண்பு என்பன சிறந்து விளங்குவதை நாம் காண்கிறோம். மனித முயற்சி வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கு உறுதுணையாகிறது. அதனை யாழ்ப்பாணத்திலுள்ள மக்களது முயற்சி எடுத்துக்காட்டுகிறது. அரச தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் ஓய்வு போன்ற செயற்பாடுகளைச் செல்வதனால் வருமானம், தன்னிறைவு, உடற்பயிற்சி, ஆரோக்கிய வாழ்வு, மனமகிழ்வு என்பன ஏற்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளில் பெரும்பாலோனோர் ஈடுபடுவதை இன்றும் காண முடிகிறது.

ஆலயங்களில் அதிகாலையில் ஒலிக்கும் மணி ஓசை, மக்களை நேரத்துடன் நாளாந்த கடமைகளைச் செய்வதற்கு வழிவகுக்கிறது. மாணவர்கள் காலையில் எழுந்து படிப்பதற்கும் பின்னர் உரிய நேரத்திற்குப் பாடசாலைகளுக்குச் செல்வதற்கும் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்கின்றனர். இது காலப்போக்கில் வழக்கமாகி விடுகிறது. கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சில காலத்துக்கு முன்னர் பாடசாலைக்குச் செல்லாதவர்கள் சிலர் இருந்தனர். இன்று அனைவரும் பாடசாலைக்குச் செல்வதும் கல்வியில் கவனம் செலுத்தவதும் அதற்கான கண்காணிப்பை கிராம சேவையாளர்கள் கவனிப்பதும் நன்மை பயக்கின்றது. பல விடயங்களிலும் சிறப்பாகவும் நல்ல முறையிலும் இயங்கிய யாழ்ப்பாணம் இவ்வருடத்தில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொரோனா (கொவிட் 19) வைரஸ் தொற்றினால். செயற்பாடுகளில் கட்டுப்பாடு கவனத்துடன் செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. மக்கள் செயற்பாடுகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய முறையில் செயற்பட்டவர்கள் தேவையற்ற நடமாட்டத்தைக் குறைத்தனர், நோய் வராமல் தடுக்கக்கூடிய வழிவகைகளைக் கையாண்டனர்.

பாரம்பரிய உணவுப்பழக்க வழக்கங்கள் மூலமாக நோய் வராமல் தடுக்கலாம் என்ற நம்பிக்கையில் அதனைக் கடைப்பிடித்தனர். உலகம் முழுவதும், இலங்கை முழுவதும் இந்நோய்த்தாக்கம் இருப்பதைப் போல் யாழ்ப்பாணத்திலும் நோய்த்தாக்கம் ஏற்படாதிருக்க மக்களும் மக்களை வழி நடத்தக்கூடிய சுகாதார வைத்தியத்துறையினர், அரச நிர்வாகத் துறையினர், ஊடகங்கள் என்பன கண்ணுங் கருத்துமாகச் செயற்படுவதனால் நோய்த்தாக்கம் குறையும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் ஏற்பட்டு வந்ததுடன் செயற்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கையின் முதற்பத்திரிகை உதயதாரகை வெளி யிடப்பட்டமை சிறப்பானது. இன்றைய பத்திரிகைகள் பல கொழும்பிலிருந்து வெளிவரும் நிலையில் பல பத்திரிகைகள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் பல்வேறு ஒளி பரப்புக்களையும் யாழ்ப் பாணத்திலிருந்து நடத்துகிறது. இலங்கை வானொலியின் யாழ் பிராந்திய சேவை ஆக யாழ் FM சேவை இடம்பெறுகிறது.

யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததாக இருப்பது துவிச் சக்கரவண்டி. இதன் துணையுடன் மக்கள் தமது நாளாந்தப் போக்குவரத்தை செய்வதுடன் பொருள்களைத் தம்முடன் எடுத்துச் செல்வதற்கும் பயன்படுகிறது. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்சாலை உள்ளூர் சேவைகளையும் வெளிமாவட்டங்களுக்கான சேவையையும் இணையாக வழங்குகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 வருடங்களுக்கு முன்னர் பத்திற்கு மேற்பட்ட திரை அரங்குகள் யாழ் நகரத்திலிருந்தன. இன்று ஒரு சில திரை அரங்குகள் மட்டும் இயங்குகின்றது. மாட்டு வண்டியின் பயன்பாடும் குறைந்துள்ளது.

பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற கருத்தின்படி விடயங்கள் கால மாற்றத்திற்கேற்ப மாறி வருகின்றமை யாழ்ப்பாணத்திற்கும் விதிவிலக்கல்ல. அந்த வகையில் மக்கள் செயற்பாடு வீதி அபிவிருத்தி, வீதிகளில் சமிக்ஞை விளக்குகள், வைத்தியசாலை விரிவாக்கம், வைத்தியத்துறை வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, தொடர்பாடல் ஊடகத்துறை வளர்ச்சி, கல்வித் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சி, விவசாய கைத்தொழில் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சி என்பவற்றை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நானூறு வருடங்களுக்கு முன்னர் வடிவமைக்கப்பட்ட யாழ் நகரம் இன்று பல்வேறு வகையிலும் சிறப்புப் பெற்று விளங்குகிறது. இலங்கையின் எப்பகுதியிலுள்ளவர்களுக்கும் யாழ்ப்பாணம் என்றால் இலகுவில் அறியக்கூடிய வகையில் பிரபல்யம் பெற்று விளங்குகிறது. வெளிமாவட்ட மக்களோ, உள்ளூர் மக்களோ தமது வேலைகளைச் செய்யவும் பொருள்களை வாங்கவும் வேறு பல தேவைகளுக்கும் யாழ்ப்பாணத்திற்குச் சென்று செய்வோம் என்று கூறுவது அன்று தொடக்கம் இன்று வரை நாம் காண்கின்றோம். பல்வேறு செயற்பாடுகளுக்கும் மத்திய நிலையமாக விளங்கும் யாழ்ப்பாணம் இயற்கைச் சிறப்புக்களுடனும் செயற்கை மெருகூட்டலுடனும் வளம்மிக்கதாக விளங்குவது பெருமைக்குரியதாகும்.

இத்தகு சிறப்புக்களுடன் விளங்கும் யாழ் நகர் எதிர்காலத்தில் மேலும் பல்வேறு சிறப்புக்களைப் பெற்றுப் பெருமை அடைவதற்கு மக்கள் எல்லோரும் சேர்ந்து யாழ் நகரைக் கட்டி எழுப்ப வேண்டும். சீர்திருத்தங்களை மேற்கொண்டு மேம்பாட்டுக்கான சிறந்த திட்டமிடல் ஒழுங்கமைப்புகள் மூலம் அனைவரும் சாதகமான செயற்பாடுகளை மேற்கொண்டால் யாழ்ப்பாணம் தலைசிறந்த நகரமாக வளர்ச்சியடையும்.

**உசாத்துணை நூல்கள்**


1. குணராசா.க.கலாநிதி யாழ்ப்பாண வைபவமாவை கமலம் பதிப்பகம் யாழ்ப்பாணம் 2001.
2. சிற்றம்பலம் சி.க. கலாநிதி யாழ்ப்பாண இராச்சியம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு 1992.
3. சிற்றம்பலம் சி.க. கலாநிதி யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு 1993.
4. துரைசிங்கம் த. கவிஞர் ஈழத்துத்தமிழ் இலக்கிய வரலாறு உமாபதிப்பகம் கொழும்பு 2004.
5. சிற்றம்பலம் வி. மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை மாதகல் கல்வி அபிவிருத்திச்சங்க வெளியீடு 2005.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகைகளின் மகத்துவம்



*Dr.(Mrs.)Vidhya Milano Prasad,*
*Lecturer (Probationary),*
*Unit of Siddha Medicine,*
*University of Jaffna.*

'மரம் வளர்ப்போம் மழைபெறுவோம்' என்ற வார்த்தையை நாம் அடிக்கடி கேட்டிருக் கிறோம். இருப்பினும் நம்மில் எத்தனைபேர் இதனை செயல்படுத்தியுள்ளோம். இன்று பல இடங்களில் மரம் நடுகை விழாவில் நாட்டப்படும் மரத்திற்குதண்ணீர் கூட ஊற்றுவதில்லை. மரம் இறந்துவிடும், மீண்டும் அதே இடத்தில், அடுத்த வருடமும் மரம் நட்டு புகைப்படம் எடுப்பவர்கள் தானே நாங்கள். இது நமக்கு தொடர் கதையாகிறது. தாவரங்களின் முக்கியத்துவம் மழைக்காகமட்டுமல்ல, மனிதனின் பல தேவைகளை தாவரங்கள் தான் நிவர்த்தி செய்கிறது. மனிதன் தோன்றிய நாள்முதல் தன்னைச் சுற்றியுள்ள தாவரங்களைத் தன் சுயதேவைகளான உணவு, உடை, இருப்பிடம், மருத்துவதேவைகள் முதலியவற்றிற்காக ஆராயத் தலைப்பட்டான். ஆதிமனிதன் உணவிற்காக கிழங்குகளையும் பழங்களையுமே பயன்படுத்தியிருக்க முடியும். மருத்துவத்திற்காக பச்சை இலைகளையும் வேர்களையுமே பயன்படுத்தியிருக்க வேண்டும். அறிவியல் அடிப்படையில் உலகிலுள்ள அனைத்துசெடி, கொடி, மரங்களுமே மருத்துவப் பயன் உடையவை. ஒவ்வொரு தாவரத்திலும் நோய் நீக்கும் ஏதாவது ஒருவேதிப்பொருள் (Phytochemical) உண்டு. ஒரு குறிப்பிட்ட தாவரத்தை மருத்துவச் செடி இல்லையென சொல்வோமேயானால் அந்தத் தாவரத்தின் மேல் இதுவரை அறிவியல் அடிப்படையில் முழு ஆய்வுகள் நடைபெறவில்லை என்பது தான் உண்மையாக இருக்கமுடியும். ஒரு தாவரத்தின் இலைகள், பட்டைகள், கட்டைகள், வேர், தண்டு, காய், கனி, விதை, பூ, புற்று எனஅனைத்து பாகங்களுமே, அவற்றிலுள்ள வேதியற்பொருளின் அடிப்படையில் வெவ்வேறு நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது. அனைத்து மருத்துவ முறைகளிலும் மூலிகை முக்கிய பங்கு வகிக்கிறது.

**ஆயுர்வேத மருத்துவத்தில் மூலிகைகள்:**

ஆயுர்வேதமருத்துவத்தில் பழமையான நூலாக கருதப்படும் ரிக் வேதத்தில் மூலிகைகளின் மருத்துவப் பயன்கள் பற்றிய செய்திகள் உள்ளன. ஆயுர்வேத நூலான 'சுஸ்ருதாசம்ஹிதா'வில் அறுவை மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் பல மூலிகை மருந்துகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆயுர்வேத மருத்துவரான சுஸ்ருதர் தான் தற்கால விஞ்ஞான உலகின் அறுவை மருத்துவத்தின் "father of surgery" என்று அழைக்கப்படுகிறார். மற்றொரு ஆயுர்வேத நூலான 'சரகசம்ஹிதா' ஆயுர்வேத மருத்துவ முறையில் முதல் மூலிகைப் பொருட்பண்பு நூல் (Materiamedica) ஆகும். இம் முறையில் பூக்கும் தாவரங்களே அதிகமாக மருந்திற்குப் பயன்படுகிறது.

**யுனானிமருத்துவத்தில் மூலிகைகள்:**

யுனானி மருத்துவம் கிரேக்கநாட்டில் தோன்றியது. கிரேக்கநாட்டில் கி.மு.460ல் வாழ்ந்த மருத்துவரான ஹிப்போகிராட்டஸ் மற்றும் கேலன் என்பவர்களின் மருத்துவக் கோட்பாடுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் உருவான இம்மருத்துவம் பின் அரேபியர்களால் வளர்ச்சியுற்றது. இயற்கையில் வளர்ந்துவரும் மூலிகை மருந்துகளையே மனிதர்கள் தங்கள் நோய்களைக் குணமாக்க பயன் படுத்தவேண்டும் என யுனானி மருத்துவம் வலியுறுத்துகின்றது.

**ஓமியோபதி மருத்துவத்தில் மூலிகைகள்:**

சாமுவேல் கிறிஸ்டியன் ஹனிமன் என்ற ஜேர்மனிய மருத்துவர் 200 ஆண்டுகளுக்கு முன்பாக உலகுக்கு கொடுத்த மருத்துவமுறை ஓமியோபதி முறையாகும். இதன் அடிப்படைநெறி இலத்தின் மொழியில் 'Similia Similibus Curanter' என்பதாகும். அதனை 'நோயில் குறிகுணங்களை உண்டாக்குவனவே அவற்றின் மருந்துமாகும்' என்றுபொருள் கொள்ளலாம். இம்மருத்துவத்தில் மூலிகைகளின் வெவ்வேறு பாகங்களிலிருந்து கரைப்பான் (Solvent) எனப்படும் அல்கஹால் (Ethanol) வகைகளிலிருந்து சாறு (Extract) எடுக்கப்பட்டு, அந்தச்சாறு பன்மடங்கு நீர்த்தல் (Dilute) செய்யப்பட்டு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. எழுபத்தைந்து சதவிகி தத்திற்கும் மேலான ஓமியோபதி மருந்துகள் மூலிகைகளிலிருந்தே தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக தாவரவேதியற் பொருளான ஆல்கலாய்டுகள் அதிகமுள்ள அதிவிடயக்குடும்பம் (Cucurbitaceae), கத்தரிக்குடும்பம் (Solanaceae), வெங்காயக்குடும்பம் (Liliaceae) ஆகிய குடும்பங்களைச் சார்ந்தபல மூலிகைகள் ஓமியோபதி மருத்துவத்தில் மருந்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**அலோபதி மருத்துவத்தில் மூலிகைகள்:**

17ஆம் நூற்றாண்டிலும், அதற்கு முன்பும் பலபூக்கும் தாவரங்களும் அவற்றின் பாகங்களும் அலோபதி மருத்துவத்தில் மருந்தாக ஏற்கப்பட்டுள்ளன. இன்றும் நரிப்புகையிலை (Foxglove), சீமை நிலவாகை (Senna), அபினி(Opium), சீமை நிலவேம்பு (Gential root), சர்ப்பகந்தா (Rauvolfia), சடாமாஞ்சில் (Valerian rhizome) ஆகிய மூலிகை இன மூலப்பொருட்கள் (Crude drugs) அலோபதி மருத்துவத்தில் மருந்தாகப் பயன்படுத்துகின்றன. பொதுவாக மூலிகை மருத்துவத்தின் விலை அதிகம் எனக் கருதப்படுவதால் நவீன மருத்துவத்தில் மூலிகை மருந்துகளுக்கு மாற்றாக விலை குறைவான செயற்கை வேதியற் பொருள் மருந்துகள் (Synthetic drugs) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் தற்காலத்திலும் சிலநோய்களைக் குணமாக்க அலோபதி மருத்துவத்திலும் மூலிகைகளையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது. சான்றாக மாரடைப்பு நோய்க்கு பயன்படுத்தப்படும் நரிப்புகையிலை Extract மற்றும் மலமிளக்கியாக பயன்படுத்தப்படும் சீமை நிலவாகை ஆகியவற்றிற்கு மாற்றாக இன்னும் செயற்கை வேதிமருந்துகள் கண்டுபிடிக்கமுடியவில்லை. அலோபதி மருத்துவத்தில் மூலிகை இன மூலப் பொருட்களான (Crude drugs) வேர், இலை, பட்டை, கனி மற்றும் விதைகளிலிருந்து நோய் நீக்கும் தன்மையுடைய (Therapeutic value) சில குறிப்பிட்ட வேதிப்பொருட்களை மட்டும் பிரித்தெடுத்து மருந்தாக பயன்படுத்துகின்றனர்.

பூவாத் தாவரங்களான பூஞ்சையின் ஒரு பேரினமான பெனிசீலியத்திலிருந்து பெனிசிலின் எனும் உலகத்தின் முதல் கிருமிகொல்லி மருந்தை (Antibiotic) 1929ஆம் ஆண்டில் அலெக்ஸாண்டர் பிளமிங் என்பவர் கண்டுபிடித்தார். அதன்பின் பூவாத் தாவரங்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு பூஞ்சைத் தாவரங்களின் பல பேரினங்கள் மற்றும் சிற்றினங்களிலிருந்து பல கிருமி கொல்லிமருந்துகள் தயாரிப்பதற்கு பல தொழிற்சாலைகள் உலகநாடுகளில் தோன்றின. பின்னாளில் பெனிசிலின், குளோரோமைசிடின் போன்ற கிருமிக்கொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்துகளுக்கு மாற்றாகச் செயற்கை வேதி மருந்துகள் (Synthetic drugs) கண்டு பிடிக்ககப்பட்டுள்ளன.

**உலகநாடுகளில் மூலிகைகள்:**

உலகில் இப்போது வாழ்ந்துவரும் பூவாத்தாவரங்கள் மற்றும் பூக்கும் தாவரங்கள் ஏறத்தாழ 3,63,730 தாவரப் பேரினங்களில் அடங்கும். பூக்கும் தாவரங்களில் மட்டும் 96,680 பேரினங்கள் உலகெங்கும் வளர்கின்றன. சிறந்த மருத்துவ சத்துக்களையும், நோய் எதிர்ப்பு சக்தியுமுடைய கீரை வகைகளையும், மற்றும் காய்கறிகளையும் நமது அன்றாட உணவில் அதிகஅளவில் சேர்த்து நமது உடல் நலத்தைக் காக்கவேண்டும் என்பது உலக முழுவதுமுள்ள மருத்துவ அறிஞர்களால் இந்த நவீனகாலத்தில் வலியுறுத்தப்படுகிறது.

**சித்தமருத்துவத்தில் மூலிகைகள்:**

உலகின் மிகப் பழமையான நாகரிகம் தமிழர் நாகரிகம் எனக் கருதப்படுகிறது. சித்தமருத்துவம் தமிழ் மருத்துவம். தமிழர் நாகரிகத்துடன் ஒன்றியது. சித்த மருத்துவத்தில் நோய் தடுப்புமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நோய் வராமல் தடுக்க, மனித உடலில் நோய் எதிர்ப்புசக்தி உருவாக நோய் எதிர்ப்புசக்தியுடைய மூலிகை மருந்துகள் சித்த மருத்துவத்தில் உள்ளன. இம்மருத்துவத்தில் காயகற்ப மூலிகைகள் மிகவும் சிறப்பாக வலியுறுத்தப்படுகிறது. காயம் என்றால் உடல், உடலைநரை, திரை, மூப்பு ஏற்படாமல் பாதுகாக்க உதவும் மூலிகைகளே காயகற்ப மூலிகைகளாகும். சித்த மருத்துவத்தில் மருந்துகள் தயாரிக்க நான்கு வகை இயற்கை மூலப்பொருட்கள் (crude drugs) பயன்படுத்தப்படுகின்றன, அவை, மூலிகை இன மூலப் பொருட்கள், விலங்கின மூலப்பொருட்கள், கனிமங்கள் அல்லது தாதுப்பொருட்கள் மற்றும் உலோகங்கள். இவற்றுள் மூலிகை இன மூலப்பொருட்கள் சேர்ந்த மருந்துகள் தாம் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. இவற்றில் நோய் கட்டுப்படவில்லையென்றால் மட்டுமேமற்ற மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் பற்பம், செந்தூரம் போன்றவை பயன்படுத்தப்படும்.

அலோபதி மருத்துவத்தில் மூலிகைகளிலுள்ள வேதிப்பொருட்களான அல்கலாய்ட்டுகள். கிளைக்கோசைட்டுகள், டானின்கள், ஸ்டீராய்ட்கள் ஆகியவைகளைப் பிரித்தெடுத்து மருந்தாக பயன்படுத்துகின்றனர். ஆனால் சித்த மருத்துவத்தில் பலவகை வேதிப்பொருட்களையுடைய மூலிகைகளின் வேர்களையோ, பட்டைகளையோ, அல்லது கட்டைகளையோ அல்லது கனிகளையோ முழுமையாக வேதியற் பொருட்களைப் பிரித்தெடுக்காமல் மருந்தாகப் பயன் படுத்துகின்றனர்.

எமது நாட்டு மக்கள் அதிகமாக அன்றாட உணவில் மூலிகைகளை உணவாக எடுத்துக் கொண்டதால் தான், உலகமே பயந்த கொரோனாவைரஸ் போன்ற தொற்றுநோயைக் கூட எமது நோய் எதிர்ப்பு சக்தியால் வெல்ல முடிந்தது. சான்றாக நாம் உணவில் சேர்க்கும் மிளகு உணவிலுள்ள நஞ்சினை நீக்குகிறது. சீரகம் பித்தத்தை நீக்கி உணவின் சீரணசக்தியை அதிகரிக்கிறது. உள்ளி அகட்டுவாய் அகற்றி (Carminative) செய்கையுடையது. உடலிலுள்ள கொலஸ்ரோலை குறைக்கிறது. மஞ்சள் கிருமிநாசினி போன்று தொழிற்படுகிறது. வெந்தயம், கடுகு, பெருஞ்சீரகம், கறிவேப்பிலை போன்ற அனைத்திலுமே மருத்துவச் சத்துக்கள் அதிகமுள்ளன மற்றும் கீரைகள், காய்கறிகள், பழங்கள் இவற்றிலும் அதிகமாக மருத்துவச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துக்கள் (phytochemicals) நிறைந்துள்ளது. எமது சமவிகித உணவில் அறுசுவையும் இருக்கவேண்டும். இந்த அறுசுவை தாவரங்களிலிருந்து மட்டுமே எமக்கு கிடைக்கும். "உணவே மருந்து மருந்தே உணவு" என்பது சித்த மருத்துவத்தின் கோட்பாடு ஆகும்.

மனிதர்களுக்கு அனைத்து வகைகளிலும் நன்மை மட்டுமே தாவரங்கள் செய்கின்றன. தாவரத்தை நாம் காயப்படுத்தினால் கூட அவ்விடத்திலிருந்து மனிதன் பயன்படுத்தக்கூடிய நல்லமருத்துவ குணமுள்ள சுரப்புக்களைத் தாவரங்கள் தருகின்றன. உதாரணமாக பெருங்காய தாவரத்தின் வேரைக் கீறிவிட்டால் அதிலிருந்து அத்தாவரம் ஒரு விதபாலைச் (Gum resin) சுரக்கின்றது. இதுவே மருத்துவகுணமிக்க பெருங்காயம் ஆகும்.

இவ்வாறு மருத்துவத்திலும் நமது ஆரோக்கியத்திலும் மட்டும் தாவரங்கள் முக்கிய பங்கு வகிக்கவில்லை. மேலும் பல தேவைகளுக்காக நாம் தாவரங்களைப் பயன்படுத்துகின்றோம் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். நாம் ஒரு இடத்தில், ஒரு தாவரத்தை அழிக்க நேரிடுமேயானால், மற்றுமொரு இடத்தில் இரண்டு தாவரங்களை நாட்டிவிட வேண்டும். வீட்டுத் தோட்டத்தில் துளசி, கற்றாளை, கற்பூரவள்ளி மற்றும் வல்லாரை போன்ற கீரை வகைகள், பழ மரங்கள் போன்றவற்றை வளர்க்கலாம். குழந்தைகளின் பிறந்த நாட்களில் உங்கள் தோட்டத்தில் அவர்களை வைத்தே மரம் நடுவதை அவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் அன்பளிப்பாக இருக்கட்டும்.

தாவரங்களின் மகத்துவத்தை உணர்ந்து அவற்றைப் பாதுகாப்போம். எமது தமிழ் மருத்துவத்தையும் பேணிக்காப்போம்.

## வெறும் வயிற்றில் இளநீர் கூடாது

இளநீரை வெறும் வயிற்றில் குடிக்கும்போது கொஞ்சம் சூடாக இருக்கும். வயிற்றில் இளநீரில் உள்ள அமிலத்தன்மை புண்களை ஏற்படுத்தவோ, ரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கூட்டவோ செய்யலாம். மேலும், அதில் உள்ள பொட்டாசியம், குளுக்கோஸ் போன்ற தாதுக்கள் வெளியேற முடியாமல் சிறுநீரகத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளது. எனவே, காலை உணவுக்கு ஒருமணி நேரம் கழித்தோ அல்லது முற்பகல் வேளைகளிலோ இளநீர் அருந்துவதால் நல்ல பலன் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது யாழ்ப்பாணம்



செல்வி சிவரம்யா சிவநாதன்

இலங்கையில் வடக்கு மாகாணத்தில் அமைந்திருக்கும் யாழ்நகரானது தனக்கென்று தனித்துவத்தைக் கொண்டது. இப்பிரதேசத்தில் தமிழர்கள், முஸ்லீம்கள், மற்றும் சிங்களவர் வாழ்ந்து வருகின்றனர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட யாழ்ப்பாணமானது தமிழ்மொழி வளர்ப்பதிலும், காப்பதிலும் முன்னின்று செயற்படுகின்றது என்று கூறின் மிகையாகாது. இந்நகரிற்கு வருவோரை யாழ்ப்பாண வளைவு வருக வருக என வரவேற்கிறது. இது தமிழ் கலாசாரத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது.

யாழ்குடா நாட்டைச்சூழ கடற்கரையும் ஓங்கி வளர்ந்த கற்பகதரு எனப்படும் பனைமரங்களும், தென்னை மரங்களும் இயற்கை வனப்பைத் தருகின்றது. யாழ்நகரில் அமைந்துள்ள சுப்பிரமணிய பூங்கா, பொதுசனநூல்நிலையம், மணிக்கூட்டுக்கோபுரம், யாழ்ப்பாண நுண்காட்சியகம், கோட்டை அரண், விளையாட்டு அரங்கு, கிறிஸ்தவ, கத்தோலிக்க தேவாலயங்கள், இந்துக்கோயில்கள், பௌத்த நாகவிகாரை, இஸ்லாமிய பள்ளிவாசல்கள், ஆங்கிலேயர் அமைத்த பிரபல கல்லூரிகள் என பலதரப்பட்ட கட்டடங்கள் கண்ணிற்கும் கரத்திற்கும் பல கதைகள் சொல்கின்றன. யாழ்ப்பாணச் சரித்திரம் நூல் பின்வருமாறு கூறுகின்றது. யாழ்ப்பாணம் அது யாழில் வல்ல ஒரு பாணுக்குப் பரிசாகக் கொடுக்கப் பட்டமையின் யாழ்ப்பாணமெனப்படுவதாயிற்று.

மணற்றி என்பது அதன் பூர்வநாமம். அது பின்னாளில் மணற்றிடல் எனவும் வழங்கிற்று. இம்மணற்றி என்னும் பெயர் இறையனார் அகப்பொருள் உதாரணச் செய்யுட்களில் வருகின்றது. அதன் வடக்கும் கிழக்கும் வங்காளகுடாகடலும், தெற்குப் பூநகரிக்கடல், பண்ணைக் கடல்களும், மேற்குக் கோடிக் குடாக்கடலும் எல்லையாம்.

அது இலங்கையின் வடபாகத்தேயுள்ள ஒரு துவீபகற்பம். அதன் அயலிலே காரைதீவு, வேலணைத்தீவு, புங்குடிதீவு, அனலைத்தீவு, நயினாதீவு, நெடுந்தீவு, முதலிய தீவுகளுமுண்டு. இவைகளெல்லாம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தனவேயாம்.

மேலும் நிலவளம் பற்றி குறிப்பிடும் போது சிலபாகம் மணற்பாங்காகவும், சிலபாகம் களிப்பாங்காகவும், சிலபாகம் செம்மண்பாங்காகவும், சிலபாகம் சொரிகற்பாறையாகவும் உள்ளது. இங்கே ஐந்து முதல் இருபது முழம் வரையும் ஆழமாகத் தோண்டப்பட்ட கிணறுகளிலே நன்னீருமுண்டு. மழை ஆவணி முதல் மார்கழி வரையும் காலமழையும், பங்குனி சித்திரையிலே அகாலமழையும் பெய்யும். கால மழைக்காலத்திலே நெல் வரகுகளும், மற்றக் காலங்களிலே தினை, குரக்கன் முதலிய தானியங்களும் விளைவிக்கப்படும். வாழை, கமுகு, கிழங்கு, காய்கறி, புகையிலை முதலியவைகள் தோட்டங்களிலே கிணற்றுநீரால் வளர்க்கப்படும். மணற்பாங்கான பகுதிகளில் தென்னந்தோப்புக்களும், மற்றவிடங்களிலே பனந்தோப்புக்குளும் வளர்க்கப்படும். மேலும் கடல்வளமானது; கடலிலே சங்கும், மற்றெத்தேயத்திலும் அரிதாகிய வலம்புரிச்சங்கும், தெளிந்துருண்டு பிரகாசந்தரம் முத்தும் குளிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வரலாற்று நூல் கூறுவது ஆனால் தற்போது மக்களின் நடவடிக்கைகளால் நிகழும் கடல் அரிப்பும், நிலத்திற்கு கீழ் உள்ள நீர் மாசும், நீர் நஞ்சாதலும், சூழல் மாசடைதலும், கட்டட அதிகரிப்பும், வாகனப்புகையும், இயற்கை மரங்கள் வெட்டுதலும் குறையுமாயின் எழில் மிகு சிங்கார நகரம் உருவாக வாய்ப்புள்ளது. தெருக்களில் இருமருங்கிலும் வானுயர வளர்ந்து மரங்களும், பலவிதமான செடி கொடிகளையும் நாம் தினம் காண்கின்றோம். இவற்றை எமது முன்னோர்கள் நாட்டி வளர்த்து எமக்காக வாழ்வளித்திருக்கிறார்கள்.

இந்து சைவ ஆலயங்களும், திருவிழாக்களும், பண்டிகைகளும் எமது வாழ்க்கையின் அர்த்தத்தை உணர்த்துகிறது. அவற்றை எம் சமூகத்தவர் மனநிறைவுடன் அதற்குரிய முறைகளை அனுஸ்டித்து வருவது கண்கூடு. குடிசைக் கைத்தொழில், கைவினைப் பொருட்கள் செய்தல், இலக்கியங்கள் படைத்தல், எழுத்துப்பணி, ஆசிரியப்பணி, சமூகசேவைகள், அச்சுப்பதிப்பு, கோயிற்கதாப்பிரசங்கங்கள், பேச்சுக்கள், நடனம், இசை, கூத்து, நாடகம், சிற்பம், ஓவியம், வைத்தியம் என பல துறைகளும், பணிகளும் இன்றும் எம்மத்தியில் வாழ்கின்றது. இவை வளர அடிகோலியவர்கள் போற்றத்தக்கவர்கள்.

எமது நகர் பலமான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகைதந்த போது யாழ்ப்பாண அரசும் அமைந்திருந்தது. இக்காலத்தில் யாழ்ப்பாண அரசின் அரசியல், சமூக, பொருளாதாரத் துறையிலான தாக்கம் வன்னியிலும் ஏற்பட்டது. இதனால் யாழ்ப்பாண அரசின் வருகை தனித்துவமான அரசியல், கலாசார, சமூக, பொருளாதார நிறுவனங்களின் வளர்ச்சியை எடுத்துக்காட்டி நின்றது.

ஒல்லாந்தர் காலம் முதல் அதன் பொருளாதார நிலைப்பட்ட நிர்வாக நடவடிக்கைகள், அப்பிரதேசத்துக்குரிய "தேசவழமை" முறைப்படியே நடைபெற்றது. இதனால் யாழ்ப்பாணச் சமூகத்தின் தனித்துவம் தொடர்ந்து பேணப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் மிஷனரி மார்களின் நடவடிக்கைகளில் இங்கு குறுகிக்காணப்பட்டன. இதனால் காலனித்துவ ஆட்சிக்கு வேண்டிய இடைநிலை உத்தியோகங்களில் யாழ்ப்பாணத் தமிழர்கள் நிறைய இடம்பெற்றனர். இதன் காரணமாகவே எம்மக்கள் தமக்கே உரிய சமூக, பொருளாதார கட்டமைப்பை வேண்டி வாழவிரும்பினர். இன்றும் தமது வாழ்வு சுதந்திரமாகவும், தன்னிறைவாகவும் அமைய வேண்டி பல வழிகளைப் பின்பற்றுகின்றனர்.

முன்னைய காலங்களில் நாம் வாழ்ந்த வாழ்வு பலவித காரணங்களால் குழப்பமுற்றதை எம்மக்கள் மறக்கவில்லை. ஒரு பலமான கட்டமைப்பைக் கொண்டு தமிழ் விழுமியங்கள், பண் பாடுகள், கல்வித்துறை என்பன அமையவேண்டும் என முயற்சி செய்கின்றனர். கல்வித்துறை பல மாற்றங்களையும், ஏற்றங்களையும், இறக்கங்களையும் கொண்டுள்ளமை அவதானிக்க கூடியதாக உள்ளது. ஒரு சிறந்த உறுதியான கல்விப்பாரம்பரியம் தற்போது உள்ளதா என்பது கேள்விக்குறியே.

எம்மக்கள் விவசாயம், கடற்றொழில், வாணிபம், சிறுவியாபாரம் மற்றும் அரசாங்க, தனியார் வேலைகளை மேற்கொள்கின்றனர். உழைத்து வாழ்வதும், ஆக்கபூர்வமான செயற் பாடுகளை மேற்கொள்வதும், உண்மையாய் தொழில் புரிவதும் வரவேற்கத்தக்கதே. மண்ணை நம்பி, மழையை நம்பி, இறைதுணையை வேண்டி, வல்லமை வேண்டி, விடாமுயற்சி கொண்டு கல்வி வித்தை நாடி நேர்மையாய் வாழ்தல் நலமே.

**உசாத்துணை நூல்கள்**


1. யாழ்ப்பாணச் சரித்திரம்- ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை
2. யாழ்ப்பாண இராச்சியம்- கலாநிதி. சி.க. சிற்றம்பலம்
3. இலங்கைத் தமிழர் யார், எவர்?- பேராசிரியர். கார்த்திகேசு சிவத்தம்பி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுக்குள் தேனூறும்



**கலாபூஷணம்**
**யாழ். அஸீம்**



பிறந்த மண்ணை நினைக்கையில்
மனம் சிட்டுக்குருவியாய் பறக்கிறது
உடல் பூரித்தொருகணம் சிலிர்க்கிறது
நினைத்தால் இனிக்கும் நினைவுகள்
நெஞ்சில் தெவிட்டா இன்பக் கனவுகள்!

யாழ் மண்ணின் பலகாரம்
வாழ்வினிலே மறக்காது
தேனோடு பால் கலந்த
தெவிட்டாச் சுவையமுது!

இடியப்பம், தோசையுடன்
இட்லியுடன் பிட்டு
பூப்போன்ற உழுந்துவடை

பொரித்தெடுத்த பூரி
இப்போது நினைத்தாலும்
இதயம் பூரிக்கும்

மல்லிகைப்பூப் போன்ற
மலாயன் கபே இட்லியும்
சுடச்சுடச் சம்பலுடன்

தாமோதர விலாஸ் தோசையும்
ஊர்மணக்கும் சாம்பாரும்
உள்ளம் மறந்திடுமோ?

கட்டிச்சம்பலுடன்
கந்தசாமி கடலைவடை
இடியப்பம் சொதியுடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதமான உழுந்துவடை
எண்ணெய் முறுகலும்தான்
இப்போதும் இனிக்கிறது!

எங்கள் புட்டில்தான்
எத்தனை ரகங்களப்பா!
கோதுமைபுட்டு, குரக்கன்புட்டு
அரிசிமாபுட்டு, கீரைப்புட்டு
ஒவ்வொன்றும் ஒரு சுவை
ஒவ்வொன்றும் ஒரு வாசம்!

பொன்னிறமாய் வறுத்தெடுத்து
பூவாக அதைக் கொத்தி
தேங்காய்பூக் கலந்து
குழல் தன்னில் போட்டவித்தால்
ஆவி மண்ணின் வாசமன்றோ!

இத்தனைக்கும் மேலாக
இரசம், மோர், தயிர்
இதரைப்பழம், பீடா
இந்த மன நிறைவு

இப்போது கிடைக்குமா?
கயல்மீன் கணவாயோடு
வெள மீனும் விளையும்

நாவாந்துறை மீனென்றால்
சட்டியிலும் துடித்திடுமே!
தங்கப்பவுண் மீன்மான்
கறுப்பரிசிச் சோறோடு
கயல்மீன் கறி சுவைத்த
கணங்களை நினைக்கையில்
கனவிலும் நாவூறும்!
பொன் விளையும் பூமி– எங்கள்

மண்ணின் உணவுவகை
ஒன்றிரண்டோ உரைப்பதற்கு
அறுசுவை எத்தனையோ
அத்தனை சுவைகூறும்

பலகாரம் பலவுண்டு!
பச்சரிசி மாவிடித்து
பாங்காய் அரித்தெடுத்து

முற்றிய தேங்காயின்
முதல் பால் தனைக் கலந்து
எண்ணைய்த் துணி தடவி

சட்டியிலே சுட்டெடுத்தால்
பாலாடை வாசம்
பசியினை அழைத்திடுமே!

பாத்தும்மா தாத்தாவின்
பக்கத்தில் தானிருக்க
தலைப்பால் தனையூற்றி

ஒவ்வொன்றாய் சுட்டிறக்கி
தருகின்ற பாலப்பம்
எத்தனையும் தின்னலாம்

எவ்வளவும் கொடுக்கலாம்!
பனம்பழம் பொறுக்கி வந்து
பாதிதனை பிரித்தெடுத்து

பதமாக மாக்கலந்து
பொன்னிறமாய்ப் பொரித்தெடுத்து
பனங்காப் பணியார

சுவைக்கென ஈடாகும்?
இராசவள்ளிக் கிழங்கரிந்து
ஏலமுடன் தேங்காய்ப்பாலும்
சவ்வரிசி சீனி சேர்த்து
ஆறவைத்து வெட்டித் தின்னும்
வண்ணப் பலகாரம்

எண்ணும் போதினிக்கிறதே!
பாகான சர்க்கரைக்கு
பால்போன்ற பச்சரிசி

பச்சைப்பயறுமிட்டு
பானையில் பொங்கலிட்டு
வாழையில் பகிர்ந்து வைத்தால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயெல்லாம் தேனூறும்!
மொறு மொறுவென நொறுங்கும்
பருத்தித்துறை வடையும்

வாகாகக் காய்ந்த
வரணியூர் ஒடியலும்
வல்வெட்டி எள்ளுப்பாகும்

வாழ்வினில் மறந்திடுமோ!
கால் தழுவும் அலைகளாய்
இதயமதில் நினைவலைகள்

தேனலையாய் இனித்திட
மனமொன்றிப்போகும் மண்ணில்!
புட்டோடு தேங்கய்ப்பூ

உணவில் மட்டுமல்ல
உணர்வோடும் கலந்த வாசமிது!
வாசத்தை மட்டுமல்ல

எங்கள் தமிழ்– முஸ்லிம்
நேசத்தையுமல்லவா கூறும்!
குரக்கன் புட்டுடனே

கோழிக்குருமாக்கறி
கோதுமைப் புட்டுடனே
குழம்போடு மீன் பொரியல்

அரிசிமாப் புட்டுடனே
சொதியோடு சம்பலும்
பிறந்திடும் ஆனந்தம்!
கருவாட்டுச் சம்பலுடன்
இறைச்சிச் சம்பல், சூப்
கமகமக்கும் புட்டுடனே

மொக்கன் கடைக் குருமா
அது போலொரு சுவை வருமா
அந்த நாள் இனி வருமா?

செம்மண் பூமி– எங்கள்
மண்ணிலே விளைகின்ற
முக்கனிகள் அத்தனையும்

இசைந்திடுமே புட்டுடனே!
கரும்பு நிகர் இனிப்பான
கறுத்தக் கொழும்பானுக்கும்

கனிந்து பழுத்த
கப்பல் வாழைப்பழத்துக்கும்
முற்றிப்பழுத்த

தேனொழுகும் பலாச்சுளைக்கும்
புட்டோடுள்ள பொருத்தம்
பிட்டு வாயிலிட்டு

புசித்தவருக்கன்றோ புரியும்!
பிஸ்ஸாவும் பர்கரும்
பாணும் பணிஸும்– எங்கள்


அறுசுவை உணவுக்கு
அருகிலும் வந்திடுமோ?
சுவையறியா நாவுக்கு
இவையெல்லாம் பிரியாணிதான்!

சிவப்பரிசிச் சோறோடு
இறால், கணவாய், மீன்பொரியல்
பப்படமும் பால்சொதியும்

கத்தரிக்காய் குழம்போடு
கலந்துண்ணும் இனிமைக்கு
வேறென்ன நிகராகும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழிய யாழ்நகர்



சிறீ சிறீஸ்கந்தராஜா

**பல்லவி:**

வாழிய யாழ்நகர் வாழிய யாழ்நகர்
வாழிய வாழிய வே!
வையகம் புகழ்ந்திட வானகம் வியந்திட
வாழிய வாழிய வே!

**சரணம்:**

சீர்பெறு வளங்கள் சிறப்புடன் கொண்ட
யாழ்நகர் வாழிய வே!
நீர்வளம் யாவும் நிறைந்து விளங்கும்
நிலமகள் வாழிய வே!

கார்வளம் சூழ்ந்த கடல்வளம் மிகுந்த
யாழ்நகர் வாழிய வே!
ஏர்வளம் சிறக்கும் எழில்நலம் அமைந்த
இந்நகர் வாழிய வே!

அவனியில் சிறந்த அறிவியல் நூலகம்
அமைந்ததும் இந்நாடே!
ஆயிரம் யுகங்கள் ஆயினும் எங்கள்
அன்னையரின் திருநாடே!

ஆரிய மன்னர்கள் ஆண்டதும் இந்த
அருமைத் தமிழ் மண்ணே!
சீரிய குணங்கள் சிறந்திட விளங்கும்
செந்தமிழ்த் தாய்நாடே!

சங்கிலி மன்னன் செங்கோல் ஏந்திய
செந்தமிழ்த் திருநாடே!
எங்களின் மன்னன் எல்லாள வேந்தன்
ஆண்டதும் இந்நாடே!
களம்பல கண்ட காவிய நிலமே
கண்கள் சொரியாதே!
காலம் ஒருநாள் தேசம் விடியும்
காயம் கொள்ளாதே!

எத்தனை யுகங்கள் ஆயினும் என்ன
எங்களின் மண்ணிது தான்!
எத்தனை தடைகள் இனி வந்தாலும்
எங்களின் தலை நகரே!

அவனியில் நாங்கள் அறநெறி நின்றோம்
அருந்தமிழ் இனமே வாழ்க!
ஆயிரம் தலைமுறை போற்றிட வாழ்வோம்
அருந்தமிழ் மண்ணே வாழ்க!

போர் முரசறைந்த மறவர்கள் பிறந்த
புண்ணிய நிலமே வாழி!
பொன்னடி பணிந்தோம் பூமலர் சொரிந்தோம்
செந்தமிழ் மண்ணே வாழி!

வாழிய வாழிய, வாழிய எங்கள்
தமிழினம் வாழியவே!
வாழிய வாழிய, வாழிய எங்கள்
தமிழ்மொழி வாழியவே!!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடித்துறையில் யாழ்ப்பாணப் பொருளாதாரத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் ஓர் கண்ணோட்டம்




**திரு. கொ. ஜெகன்**
முகாமையாளர்,
இலங்கை வடக்கு பனிக்கட்டித் தொழிற்சாலை

இலங்கையின் அமைவைப் பொறுத்தவரையில் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பு அழகையும், இயற்கைசூழ் அமைப்பையும் கொண்டது. வடமுனையைப் பொறுத்தவரை கடல்வளமும் வணிகமும் விவசாயமும் அன்றைய காலங்களில் மிகவும் செல்வாக்கு செலுத்தி வந்தது. கடல் வளம் வடபகுதியின் வளங்களில் மிக முக்கியமானது. அரச ஆட்சிகளுக்கும் செல்வாக்கு மிக்க கடல் வாணிபம் இன்று பல்வேறு பரிமானங்களைக் கொண்டு சிறப்புற்று விளங்குகின்றது. அந்த வகையில் இலங்கைத்தீவில் வடபுலத்தே வொட்ஸ்பாங், பீட்றுபாங் என்ற இரு மீன்பிடித் தளங்களை கொண்ட யாழ்.குடாநாட்டின் கடல் நீரேரிப் பகுதியில் அமைந்துள்ள கரையோரப்பிரதேசங்களான கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், நாவாந்துறை யாழ் குடாநாட்டில் மீன்பிடிக் கைத்தொழிலில் பெரிதும் செல்வாக்கு செலுத்தும் பிரதேசங்களாகும். யாழ்.கடல் நீரேரி ஆழம் குறைந்த கண்ட மேற்பரப்பாகக் காணப்படுவதால் இப் பகுதியில் அதிகளவு மீன் உற்பத்தி காணப்படுகின்றது. இப் பிரதேசத்தில் வாழும் மக்களின் செழிமைமிக்க வரலாறு, சிறப்பான வாழ்வியல் விழுமியங்கள், போரும்,அரசியலும் ஏற்படுத்திய மாற்றங்களுக்கு இசைவாக அவர்கள் மேற்கொண்ட பொருளாதார முயற்சிகள், ஆட்கொண்ட சிறப்புக்கள், மனதாலும், உடலாலும், ஆன்மபலத்தாலும் இயற்கையோடு போராடும் வலிமை படைத்த இம் மக்கள் சமூக பொருளாதார வளர்ச்சியில் சளைத்தவர்கள் அல்ல.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரம் (Economy) என்பது நாட்டின் அறியப்பட்ட பொருளாதார அமைப்பையோ அல்லது இதர நிலப்பகுதியையோ கொண்டுள்ளது. அப்பகுதியின் சமூக ரீதியாக உற்பத்தியில், பரிமாற்றத்தில், விநியோகத்தில் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வில் பங்கேற்கும் பொருளாதாரக் காரணிகளையும் கொண்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட பொருளாதாரம் என்பது அதன் தொழில்நுட்ப பரிமாணம், வரலாறு மற்றும் சமூக நிறுவனம் ஆகியன அடங்கியுள்ள ஒரு வழிமுறையின் இறுதி விளைவுகளையும் அதேபோல அதன் புவியியல், இயற்கை வளக் கொடை மற்றும் சூழல், உள்ளடக்கம் மற்றும் பொருளாதார நிலைகள் மற்றும் அளவீடுகள் ஆகியவற்றைக் கொடுக்கின்றன. ஒரு நாடு நிலைத்து நிற்கக்கூடிய நீண்டகால பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு பொருளாதார வளர்ச்சியுடன் சமூக முன்னேற்றங்களும் ஏற்படவேண்டும் என்பது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாக காணப்படுகின்றது. இலங்கையில் சுதந்திரத்தைத் தொடர்ந்து தொடர்ச்சியாக மாறிமாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் யாவும் நாட்டின் நலன் கருதி சமூக பொருளாதார முன்னேற்றத்தில் கூடிய கவனம் செலுத்தி வந்துள்ளன. இதன் பின்னணியில்,

19ம் நூற்றாண்டின் காலப்பகுதியில் இப் பிரதேசத்தில் 90% ஆன மக்கள் கடற்தொழிலை தமது பூர்வீக தொழிலாகக் கொண்டுள்ளனர். யாழ்ப்பாணக் கடல்நீரேரிப் பிரதேசம் தனித்துவமானதொரு புவியியல் பிரதேசமாகும். ஆழம் குறைந்த கடல் நீரேரியாகவும், பல்லுருவ வெளியுருவ அம்சங்களையும் வேறுபட்ட பண்புகளையுடைய கடல்நீரேரியாகவும், கடல்நீரேரியை ஒட்டிய நிலங்களையும் கொண்டுள்ளது. அத்துடன் பருவகால நிலமைகளுக்கு ஏற்ப வேறுபட்ட வளிமண்டல தோற்றப்பாடுகளின் செல்வாக்கிற்குட்படுகின்றது. பௌதீக சூழலுக்கு அமையவே தாவர மற்றும் உயிர்ச்சூழல் அமைந்துள்ளது. பருவகாலரீதியாக மாற்றத்திற்கு உள்ளாகும் பௌதீக சூழல் நிலமைகள் ஏரியில் வாழும் உயிர்ச்சூழல் ஒழுங்கை நிர்ணயிக்கின்றது. பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப காற்றின் திசை, வேகம், அமுக்கம், வெப்பநிலை மழைவீழ்ச்சி போன்ற கடல்சூழல் நிலமைகளும், வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களும் ஏரிவாழ் உயிரினங்களின் வாழ்க்கை வட்டத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெருமளவு செல்வாக்கு செலுத்துகின்றது. கடல்நீரேரியின் மாறு தன்மைக்கு காரணமாயிருக்கின்றன. அத்துடன் கடல்நீரேரியின் சூழல் நிலமைகள் அதன் வளத்தை நிர்ணயிக்கும் காரணியாகும். எனவே அவற்றை ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் வளத்தில் தங்கி யிருப்பவர்களை மட்டுமல்ல, கடல் வளங்களையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

வடகீழ்பருவக்காற்று காலங்களில் ஒப்பீட்டு ரீதியில் வற்றுப்பெருக்கு மட்டம் உயர்வாகவும், தென்மேற்கு பருவக்காற்று காலப்பகுதியில் வற்றுப்பெருக்கு மட்டம் தாழ்வாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதற்கு காரணம் பருவக்காற்றுக்களின் உராய்வினால் அலைகள், நீரோட்டங்கள் தூண்டப்படுதலும், மழைப்பொழிவுகள், வறட்சி நிகழ்வுகளும் ஆகும். இவ்வற்றுப்பெருக்கு நிகழ்வுகளையும், பருவக்காற்றுக்களையும், நீரோட்டங்களையும் சாதகமாக கொண்டே இவ்வேரிப்பகுதியில் பிரதானமாக மீனுக்கான பாச்சுவலை, தூண்டில்வலை, கரவலை, சிறகுவலை, இறாலுக்கான சிறகுவலை, இழுவைமடி, இறால்மடி, பறிக்கூடு, வீச்சுவலை ஆகிய தொழிற்முறைமைகள் இடம்பெற்று வருகின்றன. இதில் சிறகுவலை மீன்பிடி பிரதேச வாரியாக பிரதானமாக பெருமளவில் இடம்பெறுகின்றது. சிறகுவலை மீன்பிடி பொறிமுறையானது வற்றுப்பெருக்குகளையும், நீரோட்டங்களையும், வாய்ப்பாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளது. கடல் உயிரிகள் வற்றுப்பெருக்கு ஓட்டத்தின்போது ஒன்று சேருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான இடங்களில் சிறகு வலைகள் அமைக்கப்பட்டு மீன்கள் சேகரிக்கும் நிலையங்களாக தொழிற்படுகின்றன. பின்னர் கடிப்புவலைகள் கொண்டு மீன்கள் சேகரிக்கப்படுகின்றன. பாச்சுவலை, கரவலை, துண்டில்வலை செய்வோர் ஊர்காவற்துறை, எழுவைதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, மேற்குக்கரை வரை பனங்கானிமுனைக்கும் அப்பாலும் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். 1950ம் ஆண்டு காலந்தொட்டு இன்று வரை யாழ்ப்பாணத்தில் காலை மீன் சந்தை மாலை மீன் சந்தையென இருநேரச்சந்தைகள் நடைபெற்றன. இக் கால கட்டத்தில் 4000 மெற்றிக் தொன்னுக்கு மேல் மீன்பிடி யாழ். மாவட்டத்தில் இருந்தது. பின்னர் 1980-1983 வரையில் 40,000 மெற்றிக் தொன்னுக்கு மேல் மீன்பிடியிருந்தது. குறிப்பாக குருநகர் பகுதி இதில் பெரும் பங்கு வகிக்கின்றது.



21ம் நூற்றாண்டிலே ஜீவனோபாயத் தொழிலான கடற்தொழிலை மட்டும் நம்பியே இம் மக்கள் தமது வாழ்வியலை ஓட்டிவருகின்றனர். எனினும் யாழ்ப்பாண மீன்பிடிநிலைமைகளினை அவதானிக்குமிடத்து 30 வருட போர்நிலைமைகள், இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றால் பின்தங்கி காணப்பட்டது. குறிப்பாக ஆரம்பகாலத்தில் சுதந்திரத்துக்கு முன்னர் வீச்சுவலை, கட்டுவலை, கரைவலை மூலம் மீன்கள் பிடிக்கப்பட்டன. அத்துடன் படகுகளின் எண்ணிக்கையும் குறைவாக காணப்பட்டது. இதன்பின்பு ஓரளவு வளர்ச்சி பெற்றாலும் 1981-1984 களில் ஈழப்போர் இதன் முடிவு 2009 ஆகும். இவ்வாறு 1981-2006 வரையான போர் சூழலினால் மீனவர்கள் இடப்பெயர்வு , பாதுகாப்பு சட்டங்கள் ஆகியன காரணமாக மீன்பிடித்தொழில் பாதிக்கப்பட்டது. அத்துடன் 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாகவும் யாழ்ப்பாண மீன்பிடி கைத்தொழில் நடவடிக்கை பாதிக்கப்பட்டது. இது தவிர தென்பகுதி மீனவர்களின் அத்துமீறிய வருகை காரணமாகவும் வடபகுதியில் மீனினங்கள் அருகுகின்றமை குறிப்பிடத்தக்கது. இது தவிர உயர்பாதுகாப்பு வலயங்கள் இருப்பதனால் அப்பகுதியில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மீன் உற்பத்தி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைகின்றன. ஆரம்பத்தில் பலாலி, மயிலிட்டி, இரணைதீவு, சேந்தன்குளம் ஆகிய பகுதிகள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டன. இன்று பலாலி, மயிலிட்டி, காங்கேசன் துறை சேந்தன் குளம் ஆகிய பகுதிகள் மீண்டும் மீனவர்கள் பாவனைக்காக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை கொஞ்சம் ஆறுதலாக அமைந்துள்ளது.

இவ்வாறு வீழ்ச்சியடைந்த யாழ்ப்பாண மீன்பிடி நிலைமைகள் யுத்தத்தின் பின்னர் விருத்தி பெற தொடங்கின. குறிப்பாக மீனவர்களுக்கான மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் 117 கூட்டுறவு சங்கங்கள் காணப்படுகின்றன. இது தவிர மீன்களை பழுதடையாமல் பாதுகாக்க பனிக்கட்டி பதனிடல் தொழிற்சாலைகள் உருவாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் 09 தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிதாக அதிகளவிலான படகுகள் கொள்வனவு செய்யப்பட்டு தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 6676 படகுகளும், ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான விருத்தி நிலைமைகள் காரணமாக யாழ்ப்பாண மீன் உற்பத்திகள் அதிகரித்துள்ளன. உடன் மீன்பிடி உற்பத்திகள் 2019ம் ஆண்டு தரவுகளின்படி யாழ்ப்பாணத்தில் 50476 மெட்ரிக்தொன் பிடிக்கப்பட்டுள்ளது. உலர்மீன் உற்பத்திகளை அவதாக்குமிடத்து 2019ம் ஆண்டு தரவுகளின்படி யாழ்ப்பாணத்தில் 1721.51 மெட்ரிக்தொன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமான மீன்பிடி உற்பத்தியினை அவதானிக்குமிடத்து யாழ்ப்பாணத்தில் 50% உற்பத்தி செய்யப் பட்டுள்ளன.

1980-1983 காலப்பகுதியிலிருந்த மீன்பிடி உற்பத்தியை 2022ம் ஆண்டிலாவது துரித அபிவிருத்தியால் அடைய வேண்டியுள்ளது. கரையோரம் பேணல், கரையோர புனர் நிர்மானம், உல்லாசப்படகுகள், பந்நாள் கலங்கள் கடன் அடிப்படையில் பெற்று ஆழ்கடல் வளங்களைப் பெறுதல் இப்பிரதேசங்களில் உள்ள இறங்குதுறைகளை நவீன வசதிகளைக் கொண்டு புனரமைத்தல், வெளிச்சவீடு, வள்ளச்சாலைகள் அமைத்தல், வீதிகளைப்புனரமைத்தல், கடலுணவுபதனிடும் தொழிற்சாலைகள் அமைத்தல், பனிக்கட்டித் தொழிற்சாலைகளை அமைத்து இளையோர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதனூடாக யாழ் மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

இன்றைய காலகட்டத்தினை பொறுத்தமட்டில் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. உலகமயமாக்கல் காரணமாக உலக பொருளாதாரமே இன்று ஆட்டம் கண்டுள்ளது. அதற்கு மிகப் பெரும் சவால் அமைந்தது கொவிட் -19 என்ற வைரஸ் இன்று உலகையே ஆட்டங்கண்டுள்ளது. இன்று யாழ்ப்பாண மக்களை குறிப்பாக கரையோர மக்களின் ஜீவனோபாயத் தொழிலான கடற்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்தியாவில் இருந்து வரும் இழுவைப் படகுகள் இவ்வாறான சிறுதொழில்களில் பெரிதும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றனர். அதுமட்டுமல்லாது அரசாங்கங்களின் சட்டதிட்டங்கள் ஒருபுறம், அரசியல் தலையீடுகள் என்பவற்றால் மீன்பிடியில் பாரிய வீழ்ச்சி இன்று காணப்படுகின்றது. அன்றே உழைத்து அன்றே தங்கள் வாழ்வாதாரத்தை போக்குபவர்கள் பலர் இப் பிரதேசத்தில் காணப்படுகின்றனர். தெரிவு செய்யப்பட்ட கடல் உணவுகள் தென்னிலங்கை மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் கடலுணவு கொள்வனவு முகவர் நிலையங்கள் உருவாகியுள்ளன. அவற்றின் ஏற்றுமதியால் உள்ளூர் மக்களுக்கு போஷாக்கான அல்லது உடனடி வளம் கிடைப்பதில் போதாமை உள்ளது. அந்தவகையில் இப்படியான பிரச்சனைகள் ஒரு சவாலாக காணப்படுகின்றது. குறிப்பாக கடல் வளங்கள் மிகமிக அரிதாக கொண்டு செல்வதால் இப்படியான சவால் நிறைந்த காலம் நீண்டு செல்லுமாயின் யாழ்ப்பாண கரையோர மக்களின் பொருளாதாரம் இனி வருங் காலங்களில் கேள்விக்குறியாகவே காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றம்



**திருமதி. யூட் அல்போன்சஸ் மேவிஸ் ஜீன்சியா**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்.

கோடை காலத்திலே வெயில்
கொடி காட்டி உயர்ந்து நிற்கும்
நீரோடை எல்லாம் பொங்கி
நீர் கொதிக்கும் கிண்ணங்களாகும்
விருட்சங்கள் வரட்சியிலே
வியர்வைகளை வியர்த்துக் கொட்டும்
அருந்த நீர் இன்றி
அந்தோ விலங்குகள் அலைந்து திரியும்

அகோர வெயிலுக்குப் பயந்து–நீர்
நிலத்தினுள் பதுங்கிக் கொள்ளும்
சிறுதுளி நீருக்காய் அலையும் சிங்கத்தைக்
கண்டு சிறுநரியும் சிரிக்கும்
சிலநேரங்களில் ஆங்காங்கே மழை
கோடையிலும் கொட்டித் தீர்க்கும்
மரம்செடி கொடிகளிலே பழங்கள்
பருவம் மாறி வெம்பிப் பழுக்கும்

மேகமூட்டம் விலகி ஓட
மேற்காவுகையும் பொய்த்துப்போகும்
மலையிடையில் மழையும் ஒழிய– மண்ணில்
பயிர்கள் மழைக்காய் ஏங்கும்
ஆடவரின் அழகுகாண
ஆதவனும் இறங்கி வருவான்
வெண்மதி தன் இயல்பிழந்து
வெட்கத்தில் முகில் ஒழிவாள்

ஓசோனும் ஓட்டையாக
ஓழவரும் ஊதாக்கதிர்கள்
மண்டலத்தில் உயிர்க்கெல்லாம்
மரணபயம் வந்துபோகும்

அண்டமதும் அமுக்கத்தால்
அகண்டவாய் பிளந்து நிற்கும்
ஈனம்புரி மானிடரால்
இயற்கை வளம் அழிந்து போகும்

மண்குன்றும் மலைபலதும்
மனிதர்களால் மாசாய்ப் போச்சு
மரங்களுடன் செடிகொடியும்
மண்ணில் தீயால் கருகிப் போச்சு
சுற்றிவரும் தென்றல் காற்றும்
சூறாவளியாய் மாறிப்போச்சு
சத்தமின்றி சலனமின்றி
சகலமுமே அழிஞ்சு போச்சு


நிலம் பிளந்து கடல் பிளந்து
கண்டங்கள் நகர்ந்து போக
கருணையாம் கடலன்னை
கோரமுடன் சீற்றம் கொள்ள
குமுறி எழும் எரிமலைகள்
குன்றுகளை உடைத்துவர
கொந்தளிக்கும் செந்தணல்கள்
கந்தகத்தைக் கொண்டுவரும்

புரிந்துணர்வும் பாதுகாப்பும்
புவியின் ஆயுள் கூட வைக்கும்
பசுமை தரும் காடாக்கம்
பாரின் மேன்மை பேண வைக்கும்
அனர்த்தங்களும் விளைவுகளும்
அனைத்தையுமே புரிய வைக்கும்
விழிப்புணர்வும் சட்டங்களும்
விடியல் நோக்கிச் செல்லவைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்நகர் - நானூறு



மாணிக்கம் ஜெயராசா

கால வெள்ளத்தால் அழியாத வரலாற்று ஆக்கங்களையும் அதன் விழுமியங்களையும் எமக்களித்த யாழ்நகர் நானூறெனும் கட்டுரையை ஆராய்வதே எனது கட்டுரையின் நோக்கமாகும்.

யாழ்பாடி என்பவன் தன் திறமையால் யாழ்வாசித்து யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெற்றானென்று கர்ணபரம்பரைக்கதைகள் கூறுகின்றன. ஆகவே யாழ்ப்பாணத்தைப்பற்றி அறியவேண்டுமானால் மயில்வாகனப்புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலையென்னும் நூலைப்படித்தால் யாழ்ப்பாணத்தின் தனிச்சிறப்பை அறிய முடியும். யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன் சங்கிலி குமாரன் ஆவான். அவனைச் சங்கிலியனென்றே எல்லோரும் அழைப்பார்கள். யாழ்ப்பாண இராச்சியத்திற்கு நல்லூர் இராசதானியாக விளங்கியதெனலாம் சங்கிலியன் தோப்பு இராசாவின் தோட்டம், கோட்டை போன்ற இடங்கள் சங்கிலியன் காலத்தில் எழுச்சிபெற்று விளங்கியது. 1630ம் ஆண்டு கோட்டை மண் கோட்டையாக விளங்கியது. பின்பு கறுவா வியாபார நோக்கமாக இலங்கைக்குள் காலடி எடுத்து வைத்த போத்துக்கேயர் 1560ம் ஆண்டு தொடக்கம் 1650ம் ஆண்டு வரையும் இலங்கையை ஆட்சிபுரிந்தனர். அப்பொழுது சைவசமயத்துக்கெதிராக கிறீஸ்தவ மதம் வளர்ச்சி பெறலாயிற்று. அடுத்தது போத்துக்கேய ருக்குப்பின்பு ஒல்லாந்தர் 1650ம் ஆண்டு தொடக்கம் 1795ம் ஆண்டு வரைக்கும் இலங்கையை ஆட்சி புரிந்தனர். இந்த ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் தான் 1658ம் ஆண்டு மண்கோட்டையாக இருந்த யாழ்ப்பாணக்கோட்டையை கற்கோட்டையாக மாற்றினார்கள். இவர்களின் ஆட்சிக் காலத்தில் கிறீஸ்தவமதம் வளர்ச்சிகுன்றியது. ஒல்லாந்தர் தமது சமயத்தையே வளர்க்க முற்பட்டனர். குறிப்பாக இந்துக்கோயில்களுக்குள் புகுந்த ஒல்லாந்துப்படைகள் அன்னதானம் வழங்குவதற்கிருந்த வாழையிலைகளைப்பறித்தெறிந்து அட்டகாசம் புரிந்தனர். இதற்கெதிராக ஆறுமுகநாவலர் போன்றோர் கொதித்தெழுந்தனர். தங்கம் தோய்ந்த மதந்தன்னை தாழ்வாய்ப்பேசும் நிலைகண்டு பொங்கியெழுந்தனர், இந்தக்காலகட்டத்தில் ஆறுமுகநாவலர் போன்றோர் சைவசமயத்தை வளர்க்க எவ்வளவோ அரும்பாடுபட்டனர். இத்தகைய நிலமைகள் நடைபெறுகின்ற காலகட்டத்தில் யாழ்ப்பாண இராச்சியம் முடங்கிப்போய் விட்டது. சங்கிலியனின் ஆட்சி ஒல்லாந்துப்படைகளால் தோற்கடிக்கப்பட்டிருந்தது.

பின்பு ஆங்கிலேயர் 1796ம் ஆண்டு இலங்கையை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினார்கள். இவர்களின் ஆட்சி 1796ம் ஆண்டு தொடக்கம் 1948ம் ஆண்டு வரைக்கும் இலங்கையில் நடைபெற்றது. இவர்களாட்சியில் மதச்சுதந்திரம் பேணப்பட்டது. அந்நியரின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகையால் எமது நாட்டில் அந்நியமதங்கள் வேரூன்றின. கலை, கலாசாரங்கள் மாறுபட்டன. செம்புக்கும் கொம்புக்கும் அஞ்சியமக்கள் சிற்றடிமைப்பட்டு அந்நியமதத்தில் சேர்ந்தார்கள். நாம் எதைவேண்டுமானாலும் கூறலாம். ஆங்கிலேயரின் வருகைக்குப்பின் தான் பின்தங்கிய நாடுகள் முன்னேற்றமடைந்தன. குறிப்பாக யாழ்ப்பாணம் இவர்கள் காலத்தில் பெருமிதமடைந்தது. ஆங்கிலேயராட்சிக்காலத்தில் பெரிய கல்விமான்கள் தோன்றியிருந்தார்கள். எங்கும் எதிலும் யாழ்ப்பாணத்தவனுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. அதே போல யாழ்ப்பாண நகரும் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் அழகுபடுத்தப்பட்டிருந்ததென்பதை எவரும் மறுக்க முடியாது. 1934ம் ஆண்டு யாழ்பொது நூலகம் உருவாக்கப்பட்டது. உலகத்தின் தலைசிறந்த நூல்நிலையங்களில் இதுவும் ஒன்றெனக்கணிக்கப்பட்டது. 1974ம் ஆண்டு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரால் திறந்து வைக்கப்பட்ட யாழ்பல்கலைக்கழகமும் யாழ்ப் பாணத்தை அழகுபடுத்திக்கொண்டே இருக்கிறதெனலாம்.

அதே போல யாழ்ப்பாணக்கோட்டைப்பகுதியும், விளையாட்டுவீரர்களின் களமாகத் திகழுகின்ற துரையப்பா விளையாட்டரங்கும், தமிழர்களின் தன்னிகரில்லாத்தலைவனும் அரசியலிலே புதுயுகம் படைத்த தந்தை செல்வா அவர்களின் சதுக்கமும், பாய்மரக்கப்பல்களும், ஓடங்களும் கரையொதுங்குகின்ற பண்ணைக்கடற்கரையும் விரல்விட்டு எண்ணமுடியாத பல நிகழ்ச்சிகளைக்கண்ட வீரசிங்கமண்டபமும் நீதிதேவதையின் கரங்களைப் பலப்படுத்தும் நீதி மன்றங்களும், அதை அண்டியபகுதிகளும் யாழ்ப்பாண நகரை அழகுபடுத்துகின்ற காரணிகளாக விளங்குகின்றன. மணிக்கூட்டுக்கோபுரம் கூட யாழ்நகரை அழகுபடுத்துகின்றதெனலாம்.

அது மட்டுமா, பக்தியின் பரவசமாய் 1450ம் ஆண்டு கட்டப்பட்ட யாழ்ப்பாண நல்லூர் முருகன் ஆலயமும், அழகுபடுத்தி அமைக்கப்பட்ட புகையிரத நிலையமும், யாழ்ப்பாணத்தை நிர்வகிக்கின்ற கச்சேரி செயலகமும், மாகாணங்களின் தலைமைச்செயலகமாய் விளங்குகின்ற ஆளுனர் மாளிகையும், வானளாவி நிற்கின்ற கிறீஸ்தவ ஆலயங்களும் அதனோடிணைந்த சிவாலயங்களும், பிணி தீர்க்கும் அருமருந்தாய் விளங்குகின்ற வைத்தியசாலைகளும், கல்வியையே கடலெனக் கற்றுணர்ந்த கல்விமான்களை உருவாக்குகின்ற கல்விச்சாலைகளும், அன்றாடம் யாழ்ப்பாணநகரை சுத்தம் பேண வைத்திருக்கின்ற மாநகரசபையும் யாழ்ப்பாண நகரை அழகுபடுத்தும் ஓவியங்கள் போல திகழுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவுங்கள் என்றுங்கள் முன்னே வருபவர்க்குதவி செய்வீர்



ச. முருகையா

எங்களின் உலக வாழ்க்கை
எத்தன்மை வாய்ந்ததென்று

என்னுள்ளம் தெ(ரி)ளிந்த வற்றை
இயம்புவேன்- செவிமடுப்பீர் !!

எங்களின் எண்ணம் போன்றே
எம்வாழ்க்கை அமைந்ததுண்டோ?

எங்களின் எண்ணம் போன்றே
எம்வாழ்க்கை அமையுமாமோ?

வாழ்க்கையில் எவர்க்கு எங்கே
என்னதான் நடக்குமென்று

வரையறை செய்து சொல்வார்
வையகத் தெவரும் இல்லை!!

நடப்பவை எவையென்றாலும்
நன்மைக்கே என்றுஎண்ணி

நடப்பதை ஏற்றுக்கொள்ளும்
நல்லுள்ளம் எமக்கு வேண்டும்!!

எதனையும் தாங்கும் உள்ளம்
எங்களுக் கென்றும் வேண்டும்!

எஃகினை ஒத்த உள்ளம்
எங்களுக்கிருக்கவேண்டும்!!

எஃகினை ஒத்த உள்ளம்
இறையன்பால் வாய்க்கும் என்பேன்!

எஃகினை ஒத்த உள்ளம்
பொறையினால் வாய்க்கும் தெ(ளி)ரிவீர்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகையையும் நண்பராக்கும்
நற்பண்பு எமக்குவேண்டும்!

பகைவரின் துயர்கண்டுள்ளம்
துடித்திடும் பண்பும் வேண்டும்!!

காரிருள் எங்கள் வாழ்வில்
தொடருமென் றஞ்ச வேண்டாம்!

கூரொளிஎங்கள் வாழ்வில்
படருமென் றுதிவேண்டும்!!

துன்பத்தை கண்டு உள்ளம்
துவண்டிடல் சிறிதும் வேண்டாம்!

இன்பத்தைக் கண்ட போதும்
துள்ளிடல் என்றும் வேண்டாம்!!

வெற்றியால் எங்க ளுள்ளம்
வெறிகொள்ளல் நன்றேஅல்ல!

தோல்வியால் எங்களுள்ளம்
கிலி கொள்ளல் நன்றே அல்ல!!

"அடுத்தவர்க் குதவி செய்தால்
அவரெமக் குதவி செய்வார்"

என்றுள்ளத் தெண்ணிக் கொண்டு
எவருக்கும் நீ உதவ வேண்டாம்!

உதவிகள் பெற்றார் என்றும்
உதவுவார் என்று எண்ணி

உதவிபெற்றவரின் கையை
எதிர்பார்த் திருப்பவர் மூடர்!

தாம் பெற்ற உதவி மறந்து
உதவிகள் செய்த வர்க்குத்

தரக்குறைவான செயலைச்
செய்குவர்- இயற்கை என்பேன்!

அடுத்தவரிடத்தில் பெற்ற
உதவியை மறந்துஅவர்க்கு

கெடுதல்கள் செய்யா திருந்தால்
அதுபெரும் உதவி யென்பேன்!

எதிர்பாரா நேரம் நாங்கள்
எதிர்பாரா தொருவர்வந்து

எதிர்பார்க்கா துதவி செய்வார்!
எங்களை (மகிழ) வாழவைப்பார்!!

"உதவிடார்" என்றெண்ணி யார்க்கும்
உதவிடா திருத்தல் வேண்டாம்!

"உதவுங்கள்" என்றுங்கள் முன்னே
வருபவர்க் குதவி செய்வீர்!!

உங்களின் சக்திக்கிணங்க
உதவியைச் செய்தல் வேண்டும்!

உங்களின் சக்திக்கப்பாற் சென்று
உதவியைச் செய்தல் வேண்டாம்!!

நான்கண்ட உண்மைஇ∴தை
நானிலம் ஏற்ற உண்மை!

நன்கிதைச் சிந்தை சேர்த்துச்
சிந்திப்பீர்! உண்மை தெ(ரி)ளியும்!!

இவைகளை மனத்திலெண்ணி
செயற்பட்டு வாழ்வீர் நன்றே!

இனியவை வாழ்வில் பொங்க
உறவுடன் வாழ்வீர் நன்றே!!

"நான்பெற்ற அறிவை நீவிர்
பெற்றிடல் வேண்டும்" என்னும்

நல்லெண்ணம் மிகுந்த தாலிப்
பாக்களைப் புனையலானேன்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பியர் கால யாழ் நகர நிர்வாகம் போர்த்துக்கீசர் காலம்



திரு.ந.பரமேஸ்வரன்

### போர்த்துக்கீசர் காலம்

போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தைக்கைப்பற்றியதும் யாழ்ப்பாண இராச்சியத்தை (மன்னார் உட்பட) 32 கோயிற்பற்றுகளாக பிரித்து ஆட்சி செய்தனர். போர்த்துக்கல் அரசனால் நியமிக்கப்பட்ட 32 கத்தோலிக்க மதகுருமார் 32 பற்றுக்களுக்கும் நியமிக்கப்பட்டனர். இதில் யாழ்ப்பாண நகரத்திற்குரிய பாதிரியாரின் பெயரை போர்த்துக்கீசரின் குறிப்புக்களில் காண முடியவில்லை. யாழ்ப்பாண நகரம் (Vicar General) குருமுதல்வரின் நேரடி கட்டுப்பாட்டில் இருந்ததோ தெரியவில்லை.

சங்கிலியனின் ஆட்சியில் முதலியார்களாக இருந்தவர்களே போர்த்துக்கீசராலும் முதலியார்களாக நியமிக்கப்பட்டனர். போர்த்துக்கீசர் ஆட்சியில் சங்கரப்பிள்ளை குடும்பத் தினரான நீக்கலஸ் புவிராஜசிங்க முதலியார் ( Nicholas Purirajasinga Mudaliyar), சந்திரசேகர முதலியார் போன்றவர்கள் போர்த்துக்கீசரிடம் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்ததாக போர்த்துக் கீசரின் குறிப்புக்களில் காண முடிகிறது. இவர்கள் எந்த பிரதேசத்திற்குரிய முதலியார்களாக கடமையாற்றினார்கள் என்பது தெரியவில்லை. யாழ்ப்பாண முதலியர்களாகவும் இருக்கலாம்.

### ஒல்லாந்தர் காலம்

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாண நகர முதலாவது முதலியாராக நல்லூர் முதலியார் பூதத்தம்பியை காட்டிக்கொடுத்த அந்திராசி (Andare) காணப்படுகிறார். இவர் ஒரு சிங்களவர். ஒல்லாந்தர் கால கடைசி முதலியாராக டொன் டீகோ வருணசூரிய அரசுநிலையிட்ட முதலியார் காணப்படுகிறார். இவர் பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்பத்திலும் தொடர்ந்து பதவி வகித்துள் ளார். தென்னிலங்கையில் திசாவை பதவிக்குச்சமனாக இவரது பதவி காணப்பட்டது. இவருக்கு பல்லக்கும் பல்லக்கு தூக்குபவர்களும் ஒல்லாந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒல்லாந்தர் ஆட்சியில் தொழில் அனுமதிப்பத்திரம் இவராலேயே வழங்கப்பட்டது. சிகை அலங்கரிப்பாளர்கள், சலவைத்தொழிலாளர், மாலை கட்டுவோர், மேளம் அடிப்பவர்கள் அனைவரும் இவரிடம் அனுமதி பெற்றே தமது தொழில்களை மேற்கொண்டனர்.

### பிரித்தானியர் காலம்

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அரசாங்க அதிபரின் கீழ் செயற்பட்ட நிர்வாக அதிகாரிகள் மணியகாரன் என அழைக்கப்பட்டனர். மணியகாரன் பதவி பின்னர் DRO என அழைக்கப்பட்டது. District Revenue Officer. பின்னர் AGA Assistant Goverment Agent என அழைக்கப்பட்டது. தற்போது பிரதேச செயலர் பதவி Divisional Secretary என அழைக்கப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாண மணியகாரர்களாகவும் உடையாராகவும் செயற்பட்ட சிலரின் விபரங்கள் கிடைத்துள்ளன. (முழுமையான தகவல்களைப் பெற முடியவில்லை) அவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. டொன் டீகோ வருணசூரிய அரசுநிலையிட்ட முதலியார். Don Diengo Warunasooriya Arasu Nilaiyitta Mudaliyar.
2. டொன் நிக்லஸ் அரசு நிலையிட்ட முதலியார். Don Nicholas Arasu Nilaiyitta Mudaliyar. இவரது பதவிக்காலம் ஜூலை 1825-1839. (இவர் வருணசூரிய முதலியாரின் மகன்; பிரித்தானிய அரசால் நியமிக்கப்பட்ட முதலாவது மணியகாரன் இவரே.)
3. M. தம்பாப்பிள்ளை 1884.
4. அரசு நிலையிட்ட முதலியார் பரம்பரையில் வந்த சந்தியாகுப்பிள்ளை முதலியாரும் மணியகாரனாக பதவி வகித்துள்ளார். இவரது பதவிக்காலம் தெரியவில்லை. இவர் 6.3.1896 அன்று காலமானார்.
5. கணபதிப்பிள்ளை முதலியார் 11.5.1904 வண்ணார்பண்ணை
6. S. சின்னையா 1.2.1907
7. S. சிதம்பரப்பிள்ளை பதில் மணியகாரர் 1908.
8. V.M முத்துகுமாரு 1918.
9. அப்பாத்துரை 1941
10. சுப்பிரமணிய முதலியார் முதலில் உடையாராக பதவி வகித்து பின்னர் மணியகாரனாக பதவி உயர்வு பெற்றார். இவர் ஆராய்ச்சி முத்தர் என அழைக்கப்பட்டார். இவரது மகன் பிலிப்புப்பிள்ளையும் உடையாராக பதவி வகித்துள்ளார்.
11. மாணிக்கவாச முதலியார்.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாண உடையாராக பதவி வகித்தவர்கள்

1. A.B. இராஜகாரியர்
2. ஜோசப்

**உசாவியவை**


1. Biographical sketch of a Mudaliyar Santiyagupillai.
2. Catholic Guardian 14.4.1894
3. Hindu Organ 13.10.1904
4. Hindu Organ 13.10.1919
5. Catholic Guardian 26.71890
6. Hindu Organ 9.11.1910
7. Notes on Jaffna




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழின் பெருமை



திருமதி. செபஸ்ரியாம்பிள்ளை இராஜேஸ்வரி

சூழ்ந்தோடும் கடல்நீர் நடுவே
மாவுரு மலைபோல் மேடு
தீவுதான் என்றிட்டாலும்
இலங்கைதான் எம்தாய் நாடு

இலங்கையின் வடக்குத்திக்கில்
துலங்கும் யாழ்ப்பாணம் தானே
சுழன்றோடும் கடல் நீர் ஏரி
குவிந்தோடி நீந்தும் மீனே

ஆயிரத்தி அறு நூற்றி
இருபதாம் ஆண்டினிலே
யாழ்ப்பாணம் தலை நகராய்
பிரகடனம் ஆனதுவே

நானூறாம் ஆண்டுதனை
நிறைவு செய்யும் யாழ் நகரம்
இரண்டாயிரத் திருபத்தொன்றில்
தடம் தொடர்ந்து செல்ல வேண்டும்

ஆன்மீகத் தலங்கள் யாழில்
மரியன்னை தேவாலயமே
ஆரிய குளத்தில் புத்த
விகாரை தான் பௌத்தர் தலமே

நல்லூரில் கந்தன் கோயில்
கந்தன்தான் மயில் வாகனமே
அல்லாவின் பள்ளி வாசல்
இஸ்லாமிய மதத்தின் தலமே

கலை நாட்டம் கரகாட்டம்
மயிலாட்டம் ஒயிலாட்டம்
பொய்க்காலால் குதிரையாட்டம்
துள்ளி ஆடுவார் கோலாட்டம்

சிலம்பாட்டம் பரதமாட்டம்
கூத்தாட்டம் கும்மியாட்டம்
பந்தாட்டம் பகடையாட்டம்
இறைபவனி தொடர் தேரோட்டம்

நெல் விதைப்போர் கடல் குளிப்போர்
கவி புனைவோன் கலை நயத்தோர்
மருத்துவத்தோன் குருத்துவத்தோர்
சிலை வடிப்போர் தினம் உழைப்போர்

தெங்கு பனை தென்கனிகள்
நிறைந்த யாழ் நகரமென்று
ஓங்காரக்குரல் எழுப்பிச்
சங்கே நீ முழங்கு

பாமரர்கள் தேவையினை
சேவை மனப்பாங்குடனே
அரச பணி புரிபவர்கள்
நற்பணிகள் தொடர வேண்டும்

யாழ்ப்பாணப் பிரதேசச்
செயலகத்தின் பெருமை தனை
பாரிலங்கப் பேர் துலங்க
பார் நிமிர்ந்து சொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொனிப்பொருள் யாழ்நகர் - 400



திருமதி சு. நாகலோஜினி



யாழ்நகராம் யாழ் நகரிதுவாம்
யாழினிமை கொண்ட நகரிதுவாம்

வாழும் வகைகளும் வளங்களும்
தலங்களும் நிறைந்த நகரிதுவாம்

இந்துசமுத்திரத்தின் இனிய முத்தாம்
இனமத பேதமில்லா நகரிதுவாம்

இனியமொழி பேசிடும் நகரிதுவாம்
இதுவே எங்கள் யாழ்நகரம்

யாமறிந்த நகர் தனிலே
நலமிக்க நகர் இதுவாம்

யாமறிந்து ஆங்கிலமும் சிங்களமும்
தமிழ்மொழியும் கலந்தொலிக்கும் நகரிதுவாம்

நானூறு வருடங்கள் நகரமாகி
நானிலமும் போற்றிடும் நகரிதுவாம்

பாமரரும் படித்தவரும் பரந்துவாழும்
வளமிக்க நகர் எங்கள் யாழ்நகராம்

வளம் பல நிறைந்த நகரிதனால்
வள்ளல்கள் வாழும் நகரிதுவாம்

களம் பல கண்ட மன்னர்களும்
பலமுடன் ஆண்ட நகரிதுவாம்.

தலம் பல நிறைந்த நகரிதனால்
தலயாத்திரிகர் சேர்ந்திடும் நகரிதுவாம்

கலைகள் நிறைந்த எம்நகரில்
கலைப் பொக்கிஷங்கள் நிறைந்த யாழ் நகராம்.

மண்ணை நம்பி உயிர்வாழும்
உழவர் தொகையோ ஏராளம்

விண்ணைத் தொடும் பனைகளினால்
உயர்ந்து நிற்கும் நகரிதுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைப் பறிக்கும் கதிரவனால்
ஒளி வீசிடும் அழகே தனியாகும்

எண்ணிப் பார்த்தால் வியப்பாகும்
யாழ்நகர் அழகே தனியாகும்.

மாவும் பலாவும் வாழையுமே
முக்கனிகள் நிறை நகரிதுவாம்

பச்சைப்பசேலென வயல்வெளிகள்
பரந்து கிடக்கும் யாழ்நகராம்.

புலம்பெயர் மக்களும் புகழ்ந்திடவே
புதுமைகள் நிறைந்த நகரிதுவே

உல்லாசப் பயணிகள் வருகையினால்
உயர்வு பெற்ற நகரிதுவாம்.

கடல்வளம் நிறைந்த காட்சியினால்
கைத்தொழில் சிறக்கும் நகரிதுவாம்

மீன்பிடித் துறையும் உயர்ந்ததனால்
மீனவர்கள் வாழ்ந்திடும் நகரிதுவாம்.

தாய்நலன் சேய்நலன் தனைக்காத்து
தனித்துவம் பெற்ற நகரிதுவாம்

தன்னகரில்லா சேவைதனை
தம்மக்களுக்கு ஆற்றிடும் நகரிதுவாம்.

பாரம்பரியம் தனைக்காத்து
பசிப்பிணி அகற்றிடும் நகரிதுவாம்

மூடநம்பிக்கை தனைக் களைந்து
மூத்தோர் வழிநிற்கும் யாழ்நகராம்.

சொல்லெணாத் துன்பம் வந்தபோதும்
துவண்டு வீழாத மக்கள் குழாம்

இயற்கை அனர்த்தம் இடப்பெயர்விலும்
இடிந்து போகாத நகரிதுவாம்.

நானூறு வருடங்கள் நகரமாகி
நாதம் ஒலித்திடும் நகரிதுவாம்

வெற்றிவாகை தனை சூடி
விருதுகள் பெற்ற யாழ்நகராம்.

யாழ்நகரிதுவாம் யாழ்நகரிதுவாம்
யாழ்பாடி வாழ்ந்த நகரிதுவாம்

நானூறு வருடங்கள் நகரமாகி
அகவைதனை கொண்டாடும் யாழ்நகராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலை இலக்கியஜோதி
நசீரா அப்துல் அஸீஸ்



# உயிரது உயர் பண்பாட்டிற்கு கலையே நிலை

ஆய கலை அறுபத்து நான்கு
ஆராய்ந்து அறிந்து கொள்வது
ஆரம்பம் முதல் இறுதிவரை
ஆற்றலின் அபிவிருத்திக்கு ஆதாரமாகும்!

அழகினை அள்ள விரும்பவும்
விரும்பியதை செய்து மகிழவும்
மகிழ்ந்ததை கண்டு வியக்கவும்
அவாவுறுவதே மானுட மனித வாழ்வு!

மனிதத்துக்கு புனிதம் சேர்த்து
மண்ணுலகில் மலர்ந்து விரிந்து
விண்ணுலகு வரை வியாபித்து
மணம் வீசியது கலைமலர்கள்!

உள்ளத்தை ஈர்ப்பதும் கலை
உணவை உண்ணுவதிலும் கலை
உடைகளை உடுப்பதிலும் கலை
உயர்நிலை அன்பு செய்வதிலும் கலையே!

அனைத்து மானுட உயர்வுக்கும்
அணைப்போர் உள்ளப் பண்பாட்டிற்கும்
அடையாளச் சின்னம் மிளிர்ந்து
அகிலத்தை ஆண்டு சிறப்பித்தது கலையே!

ஆதிகால மக்களின் இறை கொள்கையும்
ஆரம்பகால உணர்வதன் இன்ப கொள்கையும்
ஆணி அடித்தாற் போல
நிலைத்திட வாழ்வித்ததும் கலையே!

அழகை ஆனந்தமாக அத்திவாரமிட்டு
அகவாழ்வுதனை இன்பமாக்கியது கவின்கலை
அதிபக்குவமாக வழிகாட்டும் சாதனமாக
வாழ்க்கை பக்குவம் தந்தது பயன்கலை!

உடலுக்கு உயிர் மேன்மை போல
உயிருக்கு கலை மேன்மை என்றே
மனித வாழ்வு பொறுமை பெற்று
கலையையும் வாழ்வையும் பிணைத்து வாழ்கிறது!

இயல் இசை நாடகம் என்ற
முத்தமிழ் கலைகள் தோன்ற
மூத்தோரும் இளையோரும்
முற்றாய் மூழ்கி முத்தெடுப்பது மகிழ்ச்சி

எண்ணும் எழுத்தும் கண்ணென்றே
எழுத்ததை வளர்க்கும் சிலேடக்கலை
சொற்சிறப்பதை பொருட்சிறப்பது சொல்ல
எண்ணியதை எடுத்தோத எழுத்துக்கலை!

பூவுலகு பூரித்து புளகாங்கிதம் பெற
பூரிப்போடு புதுப் பொழிவூட்டியது ஆயகலை
குடும்பகுதூகலத்துக்கு குத்துவிளக்காய்
குடும்பக்கலையும் தத்துவக்கலையும் குறியானது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணால் கண்ட காட்சிகளையும்
எண்ணத்தில் கொண்ட மாட்சிமைகளையும்
கருத்தினில் வந்த வண்ணங்களையும்
சித்தரித்து சிறப்பிக்கின்றது சித்திரக்கலை!

காவியங்கள் பல படைக்கவும்
கருத்தாடல்கள் பல சிறக்கவும்
ஆயகலையதன் அற்புதமோ அபாரம்!
நித்தம் நிதம் நிலைக்க வாழ்வதே ஆதாரம்!

அதனாலயே
தமிழர் வாழ்வதில் தவமோதவமாய்
தழைத்தோங்கி தக்க வைத்து
தவறியும் தவறிழைக்காது வாழ
தாரக மந்திரமாக கலை கலக்குகிறது!

காலத்தால் அழியாத கோலமாக
வாழ்வதில் நிலைத்த காவியமாக
அழகோடும் ஆனந்தத்தோடும் வாழ
அற்புத புரிந்துணர்வை தருகிறது!

யாரும் ஊரே யாவரும் கேளீர் என்ற
யாழெனும் இசையை மீட்டி
யாழ்ப்பாணத்துக்கும் பெருமை சேர்த்து
யாழ்பாடி நூலையும் பிரசவிக்கின்றது!

யாழ் பிறந்து ஆண்டும் நானூறு
யாரும் பட்டு விடக் கூடாது கண்ணூறு
யாழ் மக்கள் கண்ட பெறுபேறு
பல்லாண்டு வாழ யாழை வாழ்த்தி
கலைத்தாய் போற்றி பெறுவோம் நற்பேறு!

Take dance lessons. In a study of nearly 500 people, dancing was the only regular physical activity associated with a significant decrease in the incidence of dementia, including Alzheimer's disease. The people who danced three or four times a week showed 76 percent less incidence of dementia than those who danced only once a week or not at all.



**நடனப்பயிற்சி செய்யுங்கள். 500 பேர்களைக் கொண்ட ஒரு குழுவில் நடத்தப்பட்ட ஆய்வின் படி நடனம் மட்டுமே மறதி நோயை, அல்ஸைமேர்ஸ்யை குறிப்பிடத்தக்க அளவு குறைக்கக் கூடிய உடற்பயிற்சியாகும். ஒரு போதுமே நடனம் ஆடாதவர்கள் அல்லது கிழமைக்கு ஒரு முறையே நடனம் ஆடுபவர்களுடன் கிழமைக்கு மூன்று அல்லது நான்கு தரம் நடனம் ஆடுபவர்களை ஒப்பிடும் போது பின்னவர்களில் மறதி நோய்த் தாக்கம் 76 % னால் குறைவாக காணப்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் ஆடற்கலை



பா. வின்சென்ற்
நடன ஆசிரியர்

ஆயகலைகள் அறுபத்து நான்கு என வகுத்துள்ளார்கள். அவற்றில் நடனக்கலையும் ஒன்று. மனிதன் தோன்றிய காலம் முதல் அவனது அசைவுகள் பாவனைகள், பாவங்கள், பார்வைகள், எனப்பலவும் ஆடலாகக் கணிக்கப்பட்டது. ஆயினும் "யாழ்ப்பாணம் 400" எனும் இவ்வரிய பொக்கிஷத்தில் ஆடலின் சாஸ்திரியவகை நிலையானது 1930 ஆம் ஆண்டிற்குப் பின்னரே வளர்ச்சியடைந்து வந்துள்ளது. பண்டைய காலம் முதலே நுண்கலைகள் வளர்ந்துள்ளன. இந்தியாவிலே தமிழ்நாட்டில் வளர்ந்த நுண்கலைகள் பின்னர் இந்தோனேசியா, கம்போடியா, தாய்லாந்து, இலங்கை, வியட்னாம் போன்ற நாடுகளிலும் பரவியது. இலங்கையைப் பொறுத்தவரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் வடமோடி தென்மோடி நாட்டுக்கூத்து மரபும் வளர்ந்திருந்தது. இலங்கையில் சிங்களவர் பௌத்தத்தினை பின்பற்றிய காரணத்தாலே அன்றி வேறு காரணங்களாலே 11ம் நூற்றாண்டுவரை சாஸ்திரிய இசை, நடனவகை இலங்கையில் வளர்ச்சி அடையவில்லை. சோழ மன்னரின் ஆட்சி ஆரம்பம் முதல் அதாவது 11ம் நூற்றாண்டுவரை சாஸ்திரிய இசை, நடனவகை இலங்கையில் வளர்ச்சி அடையவில்லை. சோழ மன்னனின் ஆட்சி ஆரம்பம் முதல் அதாவது 11ம் நூற்றாண்டு முதல் சில நூற்றாண்டுகள் ஆடற்கலை இலங்கையில் வளர்ச்சி நிலை அடைந்திருந்தன. ஆயினும் 16ம் 17ம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கீச ஒல்லாந்தர் படையெடுப்புக்களாலும் அவர்கள் ஆட்சியில் சுதேசக்கலை அழிப்புக்கொள்கையாலும் இலங்கையின் கரையோரப்பகுதிகளில் இந்து கோவில் கலையாகவே இசை நடனம் போன்ற கலைகள் நிலவி வந்தன. இவ்வகையாகவே இசை நடனம் போன்ற கலைகள் நிலவிவந்தன. இவ்வகையிலே நடனக்கலை தமிழ் மக்களிடையே வளர்ந்திருந்தாலும் ஆட்சிமாற்றங்களால் மறைந்தாலும் ஏதோ வகையிலே குறிப்பாக தேவரடி யாள்களால் கோவில்கள் ஊடாக சிறிது சிறிதாக அரும்பி 1930 ஆம் ஆண்டுக்குப் பின்னரே யாழ்ப்பாணத்தில் சாஸ்திரிய ரீதியான நடனக் கலையாக மிளிரத் தொடங்கியது.

பொதுவாக ஆடற்கலை நாட்டிய சாஸ்திரத்தினை அடியொற்றி ஆடப்பட்டு வருகின்றது. நிராயுத ஆரம்ப காலத்திலிருந்தே ஆடற்கலை ஆடப்பட்டு வந்தாலும் உலகிலுள்ள மக்கள் அவர்கள் தமது தேவைகள், பண்பாடு, மனநிலைகளுக்கு ஏற்ப கிராமிய நடனங்கள் ஆடி வந்து பின் சாஸ்திரிய ரீதியான கலையாக ஆடற்கலையை வளர்க்கத் தொடங்கினார். இந்தியாவில் ஆடற்கலை அந்தந்த மாநிலங்களின் மக்களின் கலாசாரப் பாரம்பரியங்களுக்கு ஏற்ப சாஸ்திரிய ரீதியாக ஆடப்பட்டது. ஆயினும் அனைத்து மாநிலங்களின் ஆடல் வடிவங்களுக்கும் நாட்டிய சாஸ்திரமே அடிப்படை ஆதார நூலகமாக அமைந்துள்ளது. அந்த வகையிலேயே தமிழ் நாட்டிலிருந்து இலங்கையின் தமிழ் பகுதிகளுக்கு சைவ ஆலயங்களுக்கு தொண்டு செய்து அழைத்து வரப்பட்ட தேவதாசிகளால் ஆடற்கலை இங்கும் பரவத் தொடங்கியது. ஆயினும் இதற்கு முன்னர் ஒவ்வொரு இனமக்களும் தத்தமது கலாசார பண்பாட்டுக்கு ஏற்ப கிராமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனங்களை ஆடி வந்தனர். இவ்வாறாக இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் இறைதொண்டாற்றி வந்த தேவதாசிகள் ஆடற்கலையின்ன தமக்கு வருமானம் தேடும் நோக்குடன் ஆலயங்களுக்கு வெளியே வைபவங்களில் சின்ன மேளம் (சதிர்) என்றும் அழைக்கப்பட்டு ஆடப்பட்டு வந்தது. இது மக்களின் ரசனைக்காக கிழுகிழுப்பூட்டும் வகையில் ஆடப்பட்டமையால் பொதுவாக ஆண்கள் சின்ன மேளம் ஆடல் நிகழ்வுகளால் ஈர்க்கப்பட்டாலும் பெண்களாலும் பண்பாட்டாளர்களாலும் அது வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டது. இதன் காரணமாக ஆடற்கலையில் அதிகம் யாருமே ஆர்வங்கொள்ளவில்லை.

20ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள கோயில்களில் மஹோசவ காலங்களில் தமிழகத்திலிருந்து தேவதாசிகள் கொண்டு வரப்பட்டு திருவிழாக்களின் போது நடனம் ஆடினர். பின்னர் அவர்கள் தமிழகம் திரும்பினாலும் சிலர் இங்கு தங்கி விட்டனர். 1930-1940 களில் யாழ்ப்பாணத்திலுள்ள கோயில்களில் மல்லிகாதேவி, செல்லக்கண்டு, குஞ்சம்மாள், சந்திரா, கன்னிகா பரமேஸ்வரி, பண்டுகுறிட்டி, ஆதிலக்ஷ்மி, மற்றும் சில தேவதாசிகள் பரத நடனம் ஆடினர். இவர்களில் சிலர் சினிமாப்பாடல்களுக்கும் ஆடியதால் இவ்வாறானோரின் ஆடல்கள் தமிழ் பண்பாட்டிற்கு பொருத்தமானதாய் அமையாமையால் குறிப்பிட்ட இக் கால கட்டத்தில் பத்திரிகைகளிலும் வேறு பொருத்தமான வழிகளிலும் கண்டங்களையும் எதிர்ப்பினையும் வெளியிட்டனர். ஆறுமுக நாவலர் போன்றோரும் முழுமையாக எதிர்த்தனர். இதனால் ஆடற் கலையின் வளர்ச்சி நலிவடைந்தது.

பண்டைய காலம் தொட்டு நுண்கலைகள் வளர்ந்து வந்துள்ளன. பரதம் என்ற வகையில் இவ் ஆடற்கலை இந்தியா தவிர வியட்னாம், கம்போடியா, இந்தோனேசியா, தாய்லாந்து, இலங்கை போன்ற நாடுகளில் பரவியது. இலங்கையினை பொறுத்த வரையில் இங்கு சிங்களவர், தமிழர் முறையே பௌத்தம், இந்து சமயம், மற்றும் குறிப்பிட்ட அளவு கிறிஸ்தவரும், இஸ்லாமியரும் வாழ்கின்றனர். கி.பி 11ம் நூற்றாண்டுவரை சாஸ்திரிய இசை, மற்றும் ஆடற்கலை என்பன இலங்கையில் பௌத்தம் பின்பற்றப்பட்ட காரணத்தால் வளர்ச்சியடையவில்லை. ஆயினும் குறிப்பிட்ட காலத்திற்கு பின் சோழர் ஆட்சியின் போது இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதிகளில் ஆடற்கலையுடன் சாஸ்திரிய இசைக்கலையும் பரவத் தொடங்கியது. கி.பி.16,17ம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கீச, ஒல்லாந்தர் படையெடுப்புக்களாலும் சுதேச கலைகளை அழித்தல் எனும் அவர்கள் கொள்கையினாலும் சாஸ்திரிய இசை மற்றும் ஆடற்கலையும் மங்கிமறைந்தன.

கி.பி 1344ல் இபிக்பட்டுட்டாவின் குறிப்பில் தேவிநுவரவில் விஸ்ணு ஆலயத்தில் 500 தேவரடியார் இருந்தாரென அறிய முடிகிறது. 16ம் நூற்றாண்டில் பின் யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்கள் ஆடற்கலையினை வளர்த்து வந்துள்ளனர். கைலாயமாலை, வையா பாடல் போன்ற நூல்களிலே நடனக்கலைபற்றிய குறிப்புக்கள் உள்ளன. அவ்வகைகளில் பார்க்கும் போது யாழ்ப்பாணப்பகுதிகளிலிருந்த பெரிய கோவில்களில் தேவரடியார் இருந்து சமய பணியுடன் கலைப் பணியும் செய்திருப்பார் என நம்பலாம். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் சாஸ்திரிய இசையும் ஆடற்கலையும் காணப்பட்டது. வண்ணார் பண்ணை, நல்லூர், இணுவில், மாவிட்டபுரம், அளவெட்டி, போன்ற இடங்களில் தேவரடியார்கள் வாழ்ந்தனர். இதனால் இப்பகுதிகளில் உன்னதமான நிலையில் கலைகளின் வளர்ச்சியை இன்றும் காணமுடிகிறது. கி.பி 19ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த கனகி என்ற தேவதாசி வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் நர்த்தகியாக விளங்கினாள் என அறிய முடிகிறது. இவளை பற்றி நட்டுவ சுப்பையனார் எனும் புலவர் "கனகிபுராணம்" எனும் நூலினை இயற்றியுள்ளார் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியப்பட்டது. 17ம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த நாட்டியக் கலைஞரான தஞ்சை நால்வரின் பாட்டனார் கங்கை முத்துப்பிள்ளை தாம் எழுதிய "நடனாதிவாத்தியரஞ்சனம்" எனும் நூலினை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவலர் முன் பரிசோதித்த பின் தமிழகத்தில் பிரசுரித்ததாக தெரிய வருகிறது. இந் நூற்றாண்டில் முப்பதுகளில் திருவாரூர் ஞானம் என்னும் பெண் நடனக்கலைக்கு தொண்டாற்றிய கலாயோகி ஆனந்தக்குமாரசாமி அவர்கட்கு நடனக்கலை பற்றிய நுணுக்கங்களை அறிவுறுத்தினர் என்றும் நந்திகேஸ்வரின் அபிநயதர்ப்பணம் எனும் நூலுக்கு இருவரும் "துர்க்கிராயர்" என்பவருடன் இணைந்து ஆங்கிலமொழி பெயர்ப்பினை 1917ல் நியூயோர்க்கில் வெளியிட்டார். இதனால் ஆடற்கலையின் சிறப்பை பிறநாட்டவரும் அறிந்து கொள்ளச் செய்தார் என அறிய முடிகிறது.

கடந்த நூற்றாண்டின் நாற்பதுகளில் கதகளி ஆடற்கலையில் பிரசித்தி பெற்ற குருகோபிநாத் மற்றும் அவரின் மனைவி தங்கமணி, பரத நாட்டிய ஆடல் அபிநய அரசி பாலசரஸ்வதி, தாயார் வீணாதனம்மாள், பரத நாட்டிய ஆடல் மேதை பந்தனை நல்லூர் ஜெயலஷ்மி ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து ஆடல் கச்சேரிகளை நடத்திச் சென்றனர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து ஆடல் கச்சேரிகளை நடத்திச் சென்றனர். இக்காலகட்டத்தின் பின்னர் ஆடற் கலையினை குறிப்பிட்ட சமூகத்தினர் மட்டுமன்றி உயர் குடும்ப பெண்பிள்ளைகளும் மத்திய தர வர்க்க வறிய குடும்பங்களைச் சேர்ந்தோரும் பயிலக் கூடிய நிலை தோன்றியது. ஆடற்கலைக்கு சின்னமேளம், சதிர், தேவரடியாள், ஆட்டக்காரி என பலவாறு இழிசொற்களே பயன்படுத்தப்பட்டு வந்தாலும் காலமாற்றத்தின் பின் இழிசொற்கள் அகன்று "பரத நாட்டியம்" எனலாயிற்று. இவ்வகையில் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பரதக்கலையின் மறுமலர்ச்சிக்கு மறுமலர்ச்சியான ஒரு நிலையினை ஏற்படுத்தியவர்களில் திரு. ஏரம்பு சுப்பையா முக்கிய மானவராவார். இவர் தந்தை சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞராவார் திரு. ஏரம்பு சுப்பையா 1940ல் இந்தியா சென்று திருச் செந்தூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பரத நாட்டியத்தை பயின்று 1946-1948 வரை கலாநிதி குருகோபிநாத்திடம் கதகளி நடனத்தையும், கிராமிய நடனத்தையும், கற்று தேர்ச்சி பெற்றனர்.

பின் நாடு திரும்பியவர் அக்காலத்தில் நடனக் கலையினை யாழ்ப்பாணத்தில் வளர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்த திரு.வி.ஆர் இராச நாயகம் அவர்கள் 1948 ஆரம்பித்திருந்த யாழ்ப்பாண நடனக்கல்லூரியில் இணைந்து ஆசிரியராக கடமையாற்றினார். இக்கல்லூரி யாழ்ப்பாணம் 2ம் குறுக்குத்தெருவில் அமைந்திருந்தது இங்கு உயர்தர மத்தியதர வர்க்க பெண் பிள்ளைகள் அதிக அளவானோர் பரதம் கதகளி கிராமிய நடனம் என ஆடற்கலையினை மிகுந்த ஆர்வத்துடன் கற்றனர். இங்கு இந்தியாவின் பல முன்னணி நடனக்கலைஞர்கள் பயிற்சிகளை வழங்கி வந்தனர். இக்கால கட்டமே யாழ்ப்பாணத்தில் பரத நாட்டியம் கதகளி போன்ற சாஸ்திரிய ஆடற் கலைகள் வளர்ச்சியடைந்துள்ளதை நாம் காண முடிகிறது. இதன் பின் இங்கு பல்வேறுபட்ட ஆடற்கலை நிறுவனங்கள், கலைமன்றங்கள் போன்றன உருவாக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் மூலைமுடுக் கெல்லாம் சதங்கையின் ஒலி ஒலித்துக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் அங்கமாக இராமநாதன் நுண்கலைகழகம் இணைக்கப்பட்டு அங்கும் பரத நாட்டியம் கதகளி ஆகிய இரு சாஸ்திரிய ஆடற்கலைகளும் பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. ஆயினும் கதகளி ஆடல் இடைநடுவே நிறுத்தப்பட்டு அதனை மிக ஆவலுடன் கற்று வந்த மாணவர்கள் ஏமாற்றப்பட்டனர். தற்போது பரத நாட்டியம் மட்டுமே பட்டக் கற்கையாக பயிற்றுவிக்கப்படுகிறது. இவ்வாறு கதகளி ஆடல் நிறுத்தப்பட்டது. எமக்குள் உள்ள ஒற்றுமையீனத்தையும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் நிலை யினையும் எடுத்துக்காட்டுவதுடன் இன்று ஈழத்தமிழர்களுக்கான ஒரு ஆடல் வடிவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்க ஆர்வம் கொண்டோருக்கு விழுந்த பேரிடியாக இருந்தது. மிக ஆர்வம் கொண்ட இளம் சமூகத்திடம் அன்று முதல் இன்றுவரை பரதநாட்டியக்கலையினை இந்தியா சென்று கற்று வந்து இன்றைய சமூகத்தினரிடம் ஒப்படைக்கும் கலைஞர்கள் அதாவது தபால்காரர் போன்று அங்கு கொடுப்பதை அப்படியே இங்கு கொடுக்கிறார்களே தவிர எமக்கென தனித்துவமான ஆடற்கலையை உருவாக்க முயலவுமில்லை அது பற்றி யோசிப்பதுமில்லை. இன்று உலகெங்குமுள்ள நாடுகளிலும் அந்தந்த நாடுகளில் உள்ள மக்கள் எவ்வகையிலேயேனும் தமக்கென ஒரு கலை வடிவை உருவாக்கி அதன் மூலம் மகிழ்கின்றனர். ஆனால் நாம் இன்றும் இந்தியாவிலிருந்து பெற்ற கலைகளையே எமது கலை என எண்ணி இறுமாந்திருக்கிறோம். நாம் விழிப்படைய வேண்டும். இன்று யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் ஆடல் வடிவங்கள் கூத்துக்கள் அனைத்தும் இறக்குமதியானவையே. இன்றைய உலக வளர்ச்சியுடன் நாமும் இணைந்து ஈழத் தமிழ் மக்களின் கலை என உலகுக்கு காட்டுவோம். ஒன்றுபடுவோம். கலைகளை மதிப்போம். நம்மை அடையாளப்படுத்துவோம்.

இவ்வகையில் நாம் பார்க்கும் போது ஆசிரியர் ஏரம்பு சுப்பையா அவர்கள் 1953-1957 காலப்பகுதியில் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடன ஆசிரியராக பணியாற்றியபோது அங்கு அவரிடம் நடன பாடம் கற்ற மாணவன் கலைஞர் வேல் ஆனந்தன் பின் 1959-1961 காலத்தில் புதுடில்லி சென்று கேரள கலாகேந்திராவில் கலாநிதி குரு கோபிநாத், பந்தனை நல்லூர் சுப்பராயப்பிள்ளை ஆகியோரிடம் கதகளி பரதநாட்டியம் ஆகியவற்றை கற்றும் பின் 1962-1966 வரையான காலப்பகுதியில் ஆடற்கலையில் உயர்டிப்ளோமா தரத்தை விஸ்வகாலா கேந்திரா திருவானந்தபுரம் கேரளா சுவாதி திருநாள் அரச நுண்கலைக் கல்லூரியின் இணை நிறுவனத்தில் கலாநிதி குருகோபிநாத், சேட்டன்பிள்ளை, உன்னிவாரியார், சுந்தர நாராயண மேனன் ஆகியோரிடம் கதகளி கீழைத்தேய ஆடற்கலை போன்றவற்றை கற்று இலங்கை வந்து இங்கு 1976-1984 வரை யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவில் கதகளி ஆடல் பகுதி நேர விரிவுரையாளராகவும் அதன் பொறுப்பாளராகவும் கடமையாற்றியவர் இக்காலம் முதல் இன்றுவரை இவர் ஈழத்தமிழர்களுக்கென தனித்துவமான ஆடல் வடிவம் ஒன்றினை உருவாக்க அல்லும் பகலும் அயராது முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். ஆயினும் எமது இனத்தின் தனித்துவமான கொள்கை நல்ல தளத்தாலும் செய்யார் அப்படி நல்லதை செய்பவரை நாசப்படுத்துவதே. இதன் காரணமாக இன்றும் நாம் ஈழத்தமிழ் மக்களுக்கென ஈழத்து ஆடற்கலை என கூறக்கூடிய கலை வடிவை எம்மால் உருவாக்க முடியவில்லை. இங்கு எத்தனையோ பெரும் ஆடற்கலைஞர்கள் இருந்தும் நாம் இன்றும் பரத நாட்டியமே எமது நடன கலையென எண்ணி வளர்க்கின்றோம். யாழ்ப்பாண இராச்சியம் இன்று 400 வருடங்களை எட்டிப் பிடித்துள்ள இந்த நாளில் ஈழத்தமிழினம் தனது அடையாளமாக ஆடற்கலையினை அடையாளப்படுத்த முடியாத நிலையானது வேதனைக்குரியது. 1940ம் ஆண்டின் பின்னரே சுதேசிகளினால் ஆடல்கலையை அபிவிருத்தியடைய செய்யப்பட்டாலும் இன்றுவரை அதாவது கடந்து சென்ற 80 ஆண்டுகளிலும் நாம் எமக்கான ஆடற்கலை வடிவத்தினை ஆக்கிக்கொள்ள முடியாதுள்ளது. இன்று இலங்கையில் சகோ இவர்களும் கூட இந்தியா சென்று அங்கு பரத நாட்டியம் கதகளி போன்ற கலைகளைப் பயின்று இங்குவந்து தமக்கென கண்டிய நடனத்தினை முத்திரை பதித்துள்ளார்கள். இவர்களும் கூட இந்தியா சென்று அங்கு பரதம், கதகளி, குச்சுப்புடி, கதக் என பல்வேறு சாஸ்திரியக்கலையும் பயின்று பல பெரும் பட்டங்களையும் பெற்று இங்கு வந்து தமக்கென கண்டிய நடனத்தினை மெருகூட்டி இன்று தேசியக்கலைவடிவமாக் கியுள்ளார்கள். ஆனால் நம்மில் பலர் இந்தியா சென்று அங்கு கற்றதையே அப்படியே எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த சமூகத்திடம் ஒப்படைக்கின்றோம். புதிதாக நாம் எதனை சாதித்தோம் ஏன் எமக்கு எமது கலை என ஒன்றை உருவாக்க முடியவில்லை. இந்த நிலை பற்றி கலைஞர் வேல்ஆனந்தன் சிந்தித்து செயற்பட்டார்.

யாழ்ப்பாண இராச்சியத்தில் 400 ஆண்டின் வரலாற்றில் ஆடற்கலை வரலாற்றை மேம்படுத்த மேன்மை மிகு ஆசான்கள் ஆர்வம் கொள்ள வேண்டும். காலமாற்றத்துக்கு ஏற்ப புதிய பல படைப்புக்கள் உருவாகும் போது தமிழ் மக்களான எமக்கென்று ஏன் ஆடற்கலை வடிவம் உருவாக்கக்கூடாது. ஆடல் வடிவங்களின் அடிப்படையான நூல் நாட்டிய சாஸ்திரம் என்பதை ஏற்று இந்தியாவின் ஒவ்வொரு கலையை கற்போம் ஆயினும் அவற்றின் மூலம் ஈழத்தமிழர் எமக்கென்று ஒரு ஆடல் வடிவை அமைப்போம். கதகளி ஆட்டக் கலையானது வேஷம் கட்டி சுட்டி குத்தி மினுக்கு வேஷம், பச்சைவேஷம், கரிவேஷம், கச்சி வேஷம், சிவப்பு தாடி வேஷம் என்றவாறு ஒப்பனை செய்து ஆடப்படுவது ஆனால் அவ்வகை ஆடல்வடிவை எமது மக்களின் ரசனைக்கு ஏற்றவகையில் எமது மொழி சார்ந்து மண் வாசனையுடன் கதகளி ஆடல் துணுக்குகளை 1970இல் அமைக்கப்பட்ட கலைக்கோவில் நிறுவனத்திலும் ஆசிரிய கலாசா லைகளிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்திலும் கதகளி ஆடல் தனிநபர் மார்க்க வழியினை மிகச்சிறந்த வகையில் அறிமுகப்படுத்தியது மட்டுமன்றி 1972இல் அழகியல் கல்வி பாடநெறியில் இசை, நடனம் உள்வாங்கப்பட்டபோது பரதநாட்டியத்துடன் கதகளி பாடவிதானமும் தமிழ் மொழி பாடசாலைகளில் உள்வாங்கப்படவும் அதேபோல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அழகியல் பாடநெறியினையும் (பரீட்சை இல 111-112) உள்வாங்க செய்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பிரிவில் 1976-1984 வரை கதகளி ஆடலையும் பிரதான பாடநெறியாகவும் முக்கியமாக கலைஞர் வேல் ஆனந்தன் அவர்கள் தாம் இந்தியா சென்று கற்ற கதகளி ஆட்டக்கலையை எமது மக்களின் ரசனைக்கும் எமது சுயம் தென்படக்கூடியதும் எம் மண்வாசனைக்கும் பொருத்தமாக ஆடல் வடிவமாக அறிமுகப்படுத்தி முன்னெடுத்தார். காலம் செய்த மாயையினால் ஆடல் வடிவங்களின் அழகியல் தன்மையினை ரசிக்கத் தெரியாத பேராசானால் கதகளி ஆடல் கற்கை நெறி பல்கலைக் கழகத்தில் முன்னெடுக்கப்படாது தடை செய்யப்பட்டது. இதனால் எமது சுயத்தினை உருவாக்கும் ஆக்க முயற்சியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

கலைஞர் வேல் ஆனந்தன் அவர்களின் முயற்சி தொடர்ந்தாலும் நிறுவன ரீதியிலான ஆதரவு என்பதும் ஆடல் ஆசிரிய பெருந்தகையினரின் ஆதரவும் பொருத்தமான வகையில் இல்லாதுள்ளது. அரசு நியமனங்கள் பெறுவதற்கான சேவையை மேற்கொள்கின்றனர். இந் நிலையை மாற்றி ஒன்றுபடுவோம். ஒன்றாக இணைந்து செயற்படுவோம் எமக்கான செவ்வியல் ஆடல் கலைவடிவை அமைப்போம் இதற்கு ஸ்தாபன ரீதியிலான ஊக்குவிப்பும் பெருமளவு தேவை பதவியைப்பெற்று மேசையில் பதவிப் பெயரை பொறித்து வைக்காது எமக்கான ஆடல் வடிவை அமைக்க உறுதியுடன் செயற்படவேண்டும். அதன் மூலம் நாம் அந்தஸ்தை பெற நகர முடியும். 400 வருட யாழ்ப்பாண இராச்சியத்தின் எழுச்சியில் மகிழ்ச்சி கொள்வோம்.

**உசாத்துணை நூல்கள்**


1. வி. சிவசாமி தெற்காசிய சாஸ்திரிய நடனங்கள்- ஓர் வரலாற்று யாழ்ப்பாணம் 2001
2. திருமதி. கி.ரவீந்திரா யாழ்ப்பாணத்து நாட்டிய மரபு-ஓர் ஆய்வு (யா.ப.க முதுதத்துவமானி (நடனம்) பட்டத்துக்காக சமர்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை) (2001) பிரசுரிக்கப்படாதது.
3. பரதக்கலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணமும் நாட்டார் கலைகளும்



**செல்வி தர்சினி ஞானேந்திரன்**
நுண்கலைமாணி, கலைமாமணி, கீதசொரூபி
இயக்குனர், கம்சப்பிரியா இசைக்கல்லூரி.

குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு நவீனம் வளர்வதற்கு முன்பு நாட்டார் கலைகள் அதீத வளர்ச்சியைக் கண்டுள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஆரம்ப காலத்தில் பல கலைகள் வளர்ச்சி அடைந்துள்ளன. நாட்டார் பாடல்கள் எல்லாத்தேசங்களிலும் காணப்படுகின்றன. இவை அந்த தேசங்களின் சொத்து எனப்படுகின்றது. நாடோடிப்பாடல்களே கர்நாடக இசையின் அத்திவாரமாகும்.

சாதாரண தொழிலாளர்கள் வேலைக்களைப்புத் தெரியாமல் சந்தோஷமாகப் பொழுதைக் கழிப்பதற்காக அவர்களால் யாழ்ப்பாணத்தில் ஆரம்ப காலத்தில் சில பாடல்கள் உருவாக்கப்பட்டன. மனித வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தவை இந்த நாட்டுப்புறப்பாடல்கள் ஆரம்ப கால கட்டத்தில் கிராமப்புற மக்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் படிப்பறிவு அற்ற பாமர மக்களால் காதல் விடயமாக பொது விடயங்களாக அமையும். பாடல்களை எளிய பேச்சுவழக்கு சொற்களாகவோ அல்லது எளிய கவர்ச்சிகரமான இசையமைப்பிலோ அமைத்து பாடினார். இவர்களால் இயற்றப்பட்ட தாளங்கள் சாபு தாளங்களிலும் ஆதி ரூபகம் போன்ற தாளங்களிலும் திஸ்ரம், சதுஸ்ர நடையிலும் பெரும்பாலும் அமையப்பெற்றுள்ளன. அதீத, இராகத எடுப்புக் களிலும் கூட யாழ்ப்பாணத்தில் நாட்டுப்புற பாடல்கள் காணப்பட்டன.

அநேகமான பாடல்கள் 1 அல்லது 1/2 ஸ்தாயிலிலே அமைந்துள்ளன. இதனால் அதிக பாடல்கள் மத்திமஸ்ருதியிலேயே பாடப்படுகின்றன. செய்யுள் நடை, இலக்கண சுத்தம், கமகம், சங்கதி, போன்ற இசை இலக்கணங்களும் நாட்டுப்புறப்பாடல்களில் இடம்பெறாது. இது மிகப்பெரிய சிறப்பாக யாழ்ப்பாண நாட்டார் பாடல்களில் இசையில் காணப்பட்டது. ஆனந்த பைரவி, நாத நாமக்கிரியை, நீலாம்பரி, புன்னகவராளி, குறிஞ்சி, நவரோஸ் போன்ற இராகங்களில் நாட்டுப்புற பாடல்கள் அக்காலத்தில் காணப்பட்டன. இப்பாடல்களில் சிறப்பு இயல்பு என்னவென்றால் பிரதிமத்திமம் இடம்பெறுவதில்லை. வேலை செய்யும் பொழுது உழவுப்பாட்டு, ஒடப்பாட்டு, பூசாரிப்பாட்டு, அரிவு வெட்டுப்பாடல், பொலிப்பாட்டு, ஏற்றப்பாடல், தேயிலை கொய்தல் பாடல் என்பனவும் விஷேட காலங்களில் நலங்குப்பாடல், ஆரத்திப்பாட்டு, ஊஞ்சல் பாட்டு, வாலி என்பனவும் ஓய்வு நேரங்களில் மன உற்சாகத்துக்காகப் புதுப்பாட்டு, பழமொழிப்பாட்டு, கோமாளிப்பாட்டு, கும்மி, கோலாட்டம், என்பனவும் குழந்தைகளை நித்திரையாக்குவதற்காக தாலாட்டுப்பாட்டும், மரணித்த வீட்டில் ஒப்பாரியும், குழந்தைகளின் பாடல்களாக விளையாட்டுப்பாடலும், இறைவனைத் துதித்துக் காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து, போன்றனவும், யாழ்ப்பாணத்து பாரம்பரிய நாட்டார் கலைகளாக காணப்பட்டன.

பாமர மக்களின் நாட்டுப்புற பாடல்களின் பக்க வாத்தியமாக நாணல், குழல், கெச்சை, றேப்பு, வீணைக்குஞ்சு, உடுக்கு, முதலியன வாசிக்கப்பட்டன. ஆதி காலத்தில் தரையைப் பள்ளமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டி சுற்றித் தடிகள் நட்டு ஆட்டுத்தோலை இழுத்துக் கட்டி பக்க வாத்தியம் வாசித்து வந்தனர். இதுவே யாழ்ப்பாணத்து பாரம்பரியமாக இருந்தது.

எமது நகர் பிரதேசத்தின் பாமரர் முதல் அறிஞர் வரை கேட்டு அனுபவிக்கும் நன்மை உடையது. இந்த நாட்டுப்புற பாடல் அப்பியாசம் பெறாத குரல்களிலும் பாடுவதற்கேற்ற அதன் அமைப்பும் ஸ்தாயி எல்லையும் அமைந்துள்ளது. நாள் முழுவதும் வேலை செய்யும் கிராம மக்களுக்குக் களைப்பை நீக்கி உற்சாகத்தை ஊட்டுகின்றது. பாமர மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றது. அவர்களது கற்பனைத் திறனையும் மன எழுச்சியையும் எடுத்துக் காட்டுகின்றது. யாழ்ப்பாண பாரம்பரியத்தில் ஏராளம் நெல் விளைந்து, கண்ணாடி வளையல் போட்டு, மலை நாட்டு சீமையுங்க, முடியோடு தேங்காய் போன்ற பாடல்கள் மிகப் பிரபல்யமாக பாடப்பட்டு வந்தன.

## யாழ்ப்பாண நாட்டார் கலைகளின் பிரிவுகள்

**கொம்புமுறி**

இது ஒரு ஆண்டுக்குரிய விளையாட்டுப்பாடலாகும். இது மட்டக்களப்பு, பிரதேசத்திலுள்ள ஊர்களில் இன்றும் விளையாடப்படுகின்றது. ஊர் முழுவதும் வடசேரி, தென்சேரி என்றோ கீழைச்சேரி, மேலைச்சேரி என்றோ இது கட்சிகளாகும். இரண்டு கட்சிக்காரரும் கொழுவி இழுக்கக்கூடிய வலிமையான மரபுக் கொம்புகளை ஒன்றுடன் ஒன்று கொழுவி இழுப்பார். கொம்பு முறியும் வரை இது தொடரும் தோற்றவர். வென்றவரின் ஏவலாளர் போல நடத்தப்படுவார். இந் நிகழ்ச்சியின் பொழுது பாடப்படும் பாடல் கொம்பு முறிப்பாடலாகும்.

உ+ம் : கோலப்பணிச் சேலை...

**ஊஞ்சல்**

இது பெண்களுக்குரிய விளையாட்டு ஆகும். யாழ்ப்பாண பாரம்பரியத்திலே மிகவும் பிரசித்தம் வாய்ந்தது. மரக்கிளைகளில் கயிற்றைக் கட்டி அதில் பலகையைப் பொருத்தி அதில் அமர்ந்து கால்களால் உன்னி முன் பின்னாக ஆடப்படுவது ஊஞ்சல் விளையாட்டாகும். தற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சங்கிலிகளினால் அமைக்கப்படுகின்றது. சங்க நூல்களிலும் ஊஞ்சல் காணப்படுகின்றது. பெண்கள் தம் தோழியரோடு ஊஞ்சலாடுகையில் பாடுவது ஊஞ்சற் பாட்டாகும்.

**கும்மி**

இது ஆடலும் பாடலும் சேர்ந்த ஒரு கிராமிய நிகழ்ச்சியாகும். கும்முதல் என்றால் கொட்டுதல் என்று பொருள். தமிழ் நாட்டில் மிகப்பழைய காலம் தொடக்கம் இது வழக்கிலுள்ளது. ஏறத்தாழ 1200 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட திவாரகம் என்னும் நிகனண்டில் மகளில் கைகொட்டிப் பாடி ஆடுவது கொம்மை எனப்பட்டது. பின்னர் அருட்பாவில் கொம்மி எனப்பட்டுக் காலப்போக்கில் கும்மி ஆகியது என்று இளம் பெண்கள் குத்து விளக்கு அல்லது திருவுருச் சிலையை நடுவில் வைத்து அதைச்சுற்றி வட்டமாக நின்று குனிந்தும் நிமிர்ந்தும் வளைந்தும் கை கொட்டி ஆடிப்பாடும் நிகழ்ச்சி கும்மி ஆகும். கும்மி என்பது இந்தியாவில் கூர்ஜர நாட்டில் கர்பா என்று அழைக்கப்படுகின்றது. சமய சம்பந்தமான கும்மி விடுதலைக்கும்மி எனக் கும்மிப் பாடல்கள் பல மருத்துவக் கும்மி, விடுதலைக்கும்மி எனக் கும்மிப்பாடல்கள் பல வகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பாரம்பரியத்திலே கும்மி வகைப்பாடல் கும்மியடி தமிழ்நாடு முழுவதும் மற்றும் கும்மியடித்து மகிழ்ந்து கொண்டாடப்படுகின்றது.

**கோலாட்டம்**

இரு சிறுவர்ணக் கோல்களால் தாளத்திற்கோ தட்டி ஆடப்படுவது கோலாட்டமாகும். இதுவும் பெண்களுக்குரிய கிராமிய ஆடல் வகை எனினும் ஆண்களும் கோலாட்டம் ஆடுவது வழக்கம். யாழ்ப்பாண பாரம்பரியத்திலே வழக்கமாக இருந்தது. கும்மி அடிப்பது போன்றே கோலாட்டமும் கோல்களின் உதவியுடன் ஆடப்படுகின்றது. கோலாட்டத்தின் ஒரு வகை பின்னர் கோலாட்டமும் வழக்கத்தில் இருந்து 8 அல்லது 12 கயிறுகள் ஆடும் அரங்கின் உயரத்தில் கட்டப்பட்டு அதன் ஒரு நுனி ஆடுபவரின் ஒரு கையில் சுற்றப்பட்டு இருக்கும். ஆடிக் கொண்டே ஒழுங்கு முறையில் சுற்றி வருவதன் மூலம் கயிறு பின்னப்படும். பின்பு அதே ஒழுங்கில் ஓடிக் கொண்டே அவிழ்க்கப்படும். இவ் ஆட்டத்தை ஆடுவதற்கு அதில் பங்கேற்கும் அனைவருக்கும். மிகுந்த நிதானம் தேவை.

உ+ம் : கோலாடுவோம்

**தாலாட்டுப் பாடல்**

இந்தப் பாடல் எமது கொழும்புத்துறை கிராமத்தில் ஆரம்ப காலத்தில் பாடப்பட்டு வந்தது. குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் பாடப்படும் பாட்டு தாலாட்டு ஆகும். தாலாட்டு நாட்டார் பாடல் வகைகளில் ஒன்று வாய்மொழி இலக்கியங்களாக வழங்கி வந்தார்கள். தாலாட்டின் தொடக்கத்திலும் இடையிலும் முடிவிலும் ஆராரோ, ஆராரோ, ஆரிரரோ என்ற பதங்களை பயன்படுத்தினார்கள்.

நீலாம்பரி என்ற இன்பமூட்டும் இராகத்திலே தாலாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் பாடினார்கள். சகானா, யதுகுலகாம்போதி, சகானா, ஆனந்தபைரவி போன்ற இராகங்களிலும் இசைத்தார்கள். இந்த கிராமத்தில் பயன்படுத்திய தாலாட்டுப்பாடல்கள் விளையாட்டுப் பொருட் கள், மாமன் பெருமை, குலப்பெருமை போன்றவை நிறைந்தவையாக காணப்பட்டுள்ளன.

கொவ்வை இதழ் மகளே – என்
குவிந்த நவரத்தினமே கட்டிப்பசும்பொன்னே – என்
கண்மணியே கண்வளராய்

என்று தொடங்கும் தாலாட்டுப்பாடல் கொழும்புத்துறை பிரதேசத்தில் மிகவும் பிரசித்தம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

**மீனவப்பாடல்**

நாட்டுப்புற பாடல் வகைகளை சேர்ந்த மீனவப் பாடல் பாஷையூர், குருநகர் பகுதிகளில் மீன் பிடிக்கும் தொழிலாளர்களால் கடலில் போகும் போது பாடிய பாடல்
உதாரணம்:-

விடிவெள்ளி நம் விளக்கு– ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் – ஜலசா
அடிக்கும் அலையே நம் தோழன் –ஜலசா
அருமை மேகம் நமது குடை – ஜலசா

என்று தொடங்கும் பாடல் இக்கிராமத்தில் பிரபல்யம் வாய்ந்ததாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பறை ஆட்டம்**

பறை ஆட்டம் என்பது தமிழ்ர்களின் பாரம்பரியமாக இருந்து வந்த நடனம் யாழ்ப்பாணத்திலும் பல இடங்களிலும் வாசிக்கப்பட்டு நடனம் ஆடி வந்தார்கள். கிராமத்தில் வாழும் மக்கள் அதிர்ந்தெழும் பறையின் ஓசைக்கேற்ப ஆடக்கூடியது என்பதால் பறையாட்டம் கிளர்ந்தெழும் உடல் அசைவுகளைக் கொண்டு காணப்பட்டது. இவர்கள் கிராமத்தில் மக்கள் ஒன்று கூடுதலுக்காகவும் குழுவுக்கு ஆபத்துக்களை உணர்த்தவும் விலங்குகளிடம் இருந்து தற்காத்துக் கொள்ளவும் எழுப்பிக்கொண்ட சத்தம் தான் பறையாட்டத்தின் மூலம் எனக் கருதப்படுகின்றது. ஆவேசம், மகிழ்ச்சி, உற்சாகம் என உணர்ச்சிகளை எழுப்பி கேட்போரை ஒரே நேர்க்கோட்டில் இணைக்கும் சக்தி வாய்ந்தது பறை ஆட்டம்.

**ஒப்பாரி**

கிராமத்திலே மனிதர்கள் இறந்தால் அவர்களின் வாழ்க்கையை ஒரு இராகத்திலே அமைத்து இறப்பு வீடு நிகழும் போது ஏதாவது ஒரு இராகத்திலே மாரடித்து பாடுவார்கள். புன்னகவராளி, நீலாம்பரி போன்றவற்றில் பாடுவார்கள். பெரும்பாலும் ஒப்பாரி வசாவிளான், குருநகர், பாஷையூர் மக்களிடத்தில் பாடப்பட்டு வந்தது.

**ஆர்மோனியம்**

பிரெஞ்சு, நாட்டவரான அலெக்சாண்டர் தெபைன் என்பவரால் 1840ஆம் ஆண்டில் முதன்முதலாக இதனை உருவாக்கினார். எனினும் இது போன்ற வேறு இசைக்கருவிகள் வேறு பலராலும் இதே காலத்தில் உருவாக்கப்பட்டன. இருப்பினும் 19ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மேலை நாடுகள் இதன் பயன்பாடு உச்ச நிலையில் இருந்தது. மிகவும் மலிவாகவும் சிறியனவாகவும் அக்காலத்தில் சிறிய தேவாலயங்களிலும் சிற்றாலயங்களிலும் பயன்படுத்தினர். இது சாதாரண கிராமப்புங மக்களிடையே எடுத்துச் செல்வதற்கு மிகவும் இலகுவாக இருந்தபடியால் அக்காலத்து நாட்டார் இசையில் வாசிக்கப்பட்ட இசைக்கருவியாக நிகழ்கின்றது.

**பறை**

பறை ஒரு தமிழிசைக்கருவியாகும். இது தோலால் ஆன மேளமாகும். “பறை” என்ற சொல் பேச்சைக்குறிப்பதாகும். பேசு எனப்பொருள்படும். அறை என்ற சொல்லினின்று பறை தோன்றியது. இது கிராமப்புறங்களில் கோயில் திருவிழாக்கள், மதச்சடங்குகளின் போது பறை இசைக்கப்படும். இது தவிர இறுதி ஊர்வலத்தின் போதும் பறை இசைக்கப்படுகிறது. சிறு தெய்வ வழிபாட்டு ஆலயங்களில் பால்குடம், பூக்குளித்தல், தீச்சட்டி எடுத்தல் போன்ற நிகழ்ச்சிகளில் இக்கலை நிகழ்வதுண்டு இடைக்காலத்தில் பெருவாரியான ஆதி திராவிட மக்கள் கிறிஸ்தவ மதத்துக்கு மாறியதன் விளைவாக செபஸ்தியார் அந்தோனியார் ஆரோக்கியமாதா, வியாகு லமாதா, சந்தியாகப்பர் போன்ற யாழ்ப்பாண கிறிஸ்தவ கோவில்களில் அக்காலங்களில் இக் கலை வாசிக்கப்படுகின்றது.

இவ்வாறு ஆரம்பகால யாழ்ப்பாணத்தில் மக்கள் வாழ்க்கையில் நாட்டார்கலைகளும் நாட்டார் இசைக் கருவிகளும் பின்னிப்பிணைந்து காணப்பட்டன. இன்று இவை அழிவடைந்து கொண்டு செல்கின்றது. அழிவடைந்து கொண்டு செல்லாமல் பாதுகாப்பது எம் கடமை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோலாட்டப்பாடல்**

லல்லால லால லால கோல்கள் ஆடுவோம்
லலித சுகுமாரிகளே கோல்கள் ஆடுவோம்
பஞ்சவர்ண கிளிகள் போல அழகாய் ஆடுவோம்
பக்கம் பக்கம் திரும்பித்திரும்பி கோல்கள் ஆடுவோம்
தஞ்சா மலை அண்ணம் போல அசைந்து அசைந்து
சக்கரம் போல் சுற்றி சுற்றி கோல்கள் ஆடுவோம்.
மயிலைப்போல தோகைவிரித்தாடிடுவோமே
குயிலைப் போல இனிமையாக பாடிடுவோமே
ஒயிலான வண்ணக் கோலை தட்டிடுவோமே
உயர்ந்து தாழ்ந்து கோலைக் கொடுத்து ஆடிடுவோமே..
ஜல் ஜல் என்று தண்டை ஒலிக்க சரசர வென்று
சேலைகள் முழுங்க கலகல கலவென்று
கைகளை குளுங்க படபட என்று பிரிந்து பிரிந்து கோல்கள் ஆடுவோம்.

**கும்மிப்பாடல்**

தன்னாலே தானை தன்னே தானை தன்னே தன்னான தமிழும் இசையும் போல் நல்ல மணமக்களே வாழ்க பகலும் இரவும் போல நீங்கள் ஒன்றிணைந்தே வாழ்க தன்னானெ தானை தன்னே... சாதி மதம் கடந்து வந்து காவல் சேகை ஒழிய ஆணும் பெண்ணும் சமம் என்று வாழ்ந்து காட்டனும்இங்கே தன்னானே தானை தன்னே தானை தன்னே தன்னே தன்னான. கலப்பு மணம் செய்து வரதட்சணையும் ஒழித்தீர் புரட்சி மணம் செஞ்சு நீங்க நீடுழி வாழ்க. தன்னானெ தானை எங்க சீமானே நகரம் காசு பணம் கேட்க சிவப்பு கலர் தேடவென நல்லவராய் தேடினாரு எங்க சீமாட்டியை கை பிடிச்சாரு.

**தாலாட்டுப் பாடல்**

ஆராரோ அரிராரோ
அரிராரோ அராரோ
அரடிச்சு நீயழுதாய்
கண்மணியே கண்ணுறங்கு



கண்ணே யடிச்சாரோ
கற்பகத்தைத் தொட்டாரா
தொட்டாரைச் சொல்லியழு
தோள் விலங்கு போட்டு வைப்போம்
அடிச்சாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்து வைப்போம்

மாமன் அடித்தானோ
மல்லி பூ சென்டாலே
அண்ணன் அடித்தானோ
ஆவாரங் கொம்பாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாட்டி அடித்தாளோ
பால் வடியும் கம்பாலே

ஆராரோ அரிரரோ
அரிரரோ அராரோ
அரடிச்சு நீயழுதாய்
கண்மணியே கண்ணுறங்கு

**மீனவப் பாடல்**

ஏலேலோ ஜலசா... ஏலேலோ ஜலசா...
ஏலேலோ ஜலசா... ஏலேலோ ஜலசா...
ஜலேசா... ஜலசா... ஜலேசா... ஜலசா....

கட்டு மரத்தோணியிலே ஏலேலோ ஜலசா
துடுப்பு போட்டு தோணி ஓட்டி ஏலேலோ ஜலசா
வங்கக் கடலில் வலை வீசி ஏலேலோ ஜலசா
மீன்புடிக்க போகையிலே ஏலேலோ ஜலசா
கைவலிச்சும் பாடலியே ஏலேலோ ஜலசா

இளங்கால சூரியனும் ஏலேலோ ஜலசா
எட்டிப் பாக்கும் நேரத்துல ஏலேலோ ஜலசா
நெலத்துலதா(ன்) நீர பாய்ச்சி ஏலேலோ ஜலசா
பொன் னேரோட்டும் போதுதானே ஏலேலோ ஜலசா
ஒழவனுந்தா(ன்) மறந்ததென்ன ஏலேலோ ஜலசா

அதிகால பொழுது வேள... ஏலேலோ ஜலசா
பட்சியுந்தா(ன்) கூவும் கால... ஏலேலோ ஜலசா
வயலுக்குள்ளே தண்ணி பாய ஏலேலோ ஜலசா
ஏத்தம் எறக்கிறாங்க ஏலேலோ ஜலசா
வலி மறைய பாடலையே ஏலேலோ ஜலசா

**ஒப்பாரி பாடல்**

ஆலமல போல அன்னாந்து நிற்பேனு
நான் ஒய்யாரமா வந்தேனே
இப்ப நீ பட்ட மரம் போல
பட்டு போயிட்டையே

பொட்டு இல்ல பூ வில்லை
பூச மஞ்சலும் இல்ல
நாள் கட்டக ராசாவை
என்ன விட்டுத்தான் போனிங்க
பட்டு இல்லை தங்கம் இல்லை
பரிமார பந்தம் இல்ல
படையெடுது வந்தராசா
பாதியியில் போரிங்கலே
நான் முன்னே போரேன்
நீங்க பின்னே வாருங்கோ
என சொல்லிட்டு
இடம் பிடிக்கப் போயிதங்களா

நான் காக்காவாட்டும் கத்தரனே
உங்க காதுக்கு கேக்கலையா
கொண்டு வந்த ராசாவே
உங்களுக்கு காதும் கேக்கலையா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது யாழ்ப்பாணம்



செல்வி ஆ.பி.கிறேஸ்
K.K.P youth club
யாழ்ப்பாணம்

கலைக்கும்
கலை கொண்ட
என் கவிக்கும்
புகழ் சேர்த்த
என் தாய் மண்

வானுயர்ந்த தென்னைகளும்
பார்க்கும் இடமெல்லாம்
என் ஊரின் பெருமை
சொல்லும் பனைமரங்களும்
என் மண்ணின் பெருமைதனை
கூறிட வந்தனவோ...

பண்பாடு சொல்லவா?
என் ஊரின் பாரம்பரியம்
சொல்லவா?
யாழ்பாடி யாழ்ப்பாணம்
என பெயர் எடுத்த
என் மண்ணின் வரலாறு
சொல்லவா?
இலக்கியமா
இதிகாசமா
என் மண்ணின் இசை
தமிழ் சுவை
சொட்ட சொட்ட
என் மண்ணின்
சிறப்பதனை கொஞ்சம்
கூறிடவா?

யாழ்ப்பாணம்
எனது தாய் மண் மட்டுமல்ல
என் தாயின் தாய் வழி மரபினரை
தத்தெடுத்த என்
தாய் குல மண்

நான் தத்தி தத்தி
நடைபழகி
தவண்டு உருண்டு
விளையாடிக் கொண்டு
தடம் பதித்த
என் தாய் மண்

குடை போல
காட்சியளிக்கும்
பனை மரங்களும்
அலைமோதி அரவணைக்கும்
எனது ஊர் கடலலைகளும்
எம் மேனி யெங்கும்
பரவிக் கிடக்கும்
உப்பளங் காற்றும்
எனது மண்ணின்
அழகு தனை இங்கு
கூறி நிற்கும்.

குட்டி குட்டி வீடுகளும்
பல கூட்டு குடும்பமாய்
வாழும் உறவுகளும்
குடிகொள்ளும் மண்ணடா
என் ஊர் மண்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவிக் கிடக்கும்
உப்பளங் காற்றும்
எனது மண்ணின்
அழகு தனை இங்கு
கூறி நிற்கும்.

குலசாமி பெயர்
சொல்லும் பல குலத்
தெய்வ கோயில்களும்
மாதம் மாதம் இதற்கென
கூடும் திருவிழா கூட்டங்களும்
திரள் திரளாய்
படையெடுத்து
எம் பண்பாடு
கூறி நிற்கும் என்
மக்களினங்களும்
என் மண்ணின்
ஒற்றுமைதனை காட்டி
நிற்கும்

மாரி மழை புயல்
அடித்தாலும்
காற்றோடு கதைபேசி
கடலோடு உறவாடி
எம்மை வாழ வைத்து

பலரை வரவேற்கும்
எம் கரையோர
கடல் அலைகளும்
எம் மண்ணின்
கதைதனை பேசுமடா...

சந்தி சந்தியாய்
முகவரி சொல்லும்
என் மண்ணின்
சாதனைகளை, பல
சரித்திரம் சொல்லும்...

அன்னியர் படையெடுத்தும்
அஞ்சாமல் நின்ற
என் ஊர் இனமடா
ஆண்டியானாலும்
அரசனானாலும்
அனைவரையும் அன்போடு
வரவேற்று நிற்கும்
என் யாழ் மண்ணடா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நகர் 400
# நிகழ்காலத்தில் நிலைத்து நில்

திருமதி M.B பிலிப்

கடந்த காலங்கள் கரைந்து போனவை
எதிர்காலம் என்பது எப்போதும் எதிர்ப்படாதவை
நிகழ்காலமே நிதர்சனமானது – உன்
நிகழ்காலத்தில் நிலைத்து நில்

கற்பனையோடு வாழ்ந்திடுவோம் பாதி வாழ்க்கையை
கனவுகளோடு வாழ்ந்திடுவோம் – மீதி வாழ்க்கையை என்று
இழந்ததை எண்ணி ஏங்கி நிற்கும் எம் மனங்களே
இக்கணமே நின்று நிதானியுங்கள்

எம் தந்தையும் தாயும் பாட்டனும் பாட்டியும்
மகிழ்ந்திருந்த மண்களில் எம்மால் மட்டுமேன் முடியவில்லை
ஏனெனில் நிகழ்காலத்தில் எம்மால் நிலைத்து நிற்க முடியவில்லை
நிஜமாக நாம் வாழவில்லை – சிந்தியுங்கள்

வானத்துப் பறவைகளைப் பாருங்கள் அவை விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை
களஞ்சியத்தில் சேர்ப்பதுமில்லை காவல் காப்பதுமில்லை
அன்றைய வாழ்வை அன்றே வாழ்கின்றனர்
இன்னும் அவை நன்றே வாழ்கின்றன

எறும்புகள் தம் வாழ்வை இனிதாய் அமைக்க
முட்டி மோதி விலகி வழிவிட்டு – உழைக்கின்றன
காலத்தைக் கடந்து கணமும் நினைப்பதில்லை
அன்றைய வேலைகளை அன்றே செய்கின்றன

எம் முற்றத்து மலர்களைப் பாருங்கள்
இன்றைய வாழ்வு இன்றோடு முடியுமென்றாலும்
மணம்பரப்பி மகிழ்வித்து அத்தோடு
தேனிக்கும் மனமுவந்து விருந்தளிக்கின்றன

எம் வாழ்வு மட்டுமே ஏக்கம் நிறைந்ததாய் உள்ளது
இழந்தவைக்காக தேம்புவதும்
எதிர்காலத்திற்காய் ஏங்குவதும் என்று
நிகழ்காலத்தின் நிஜத்தை தொலைப்பதுமாய் உள்ளோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தையர் வாழ்வு நம் யாழ்நகர் மண்ணில்
ஆண்டாண்டுகளாய் விந்தையாய் மலர்ந்தது
சிந்தை குளிரும் அவர் சிறப்புகள் கூற
வாழ்வும் வளமும், வாழ்வு அதுதான் என்றது

புற்கள் கூட நெல்போல உயர்ந்தது
செந்நெல் செழித்து கரும்புபோல் வளர்ந்தது
கரும்பும் உயர்ந்தே கமுகைத் தொட்டது
மக்களின் மனங்களோ தென்னைபோல் உயர்ந்ததே

காலத்தின் கொடுமையோ கடந்த 40 ஆண்டுகள்
மாற்றியது எம் மண்ணை
அடக்குமுறையும் அடங்காமையும் போரிட்டது
அழிந்தது சொத்துக்கள் மட்டுமல்ல எம் சொந்தங்களுமே

கூட்டுக் குடும்பங்கள் பல கூறும் ஆயின
பார்போற்றிய மண்ணில் பலவித துன்பங்கள்
சிதறிப்போன உறவும் சீரழிந்த வாழ்வும்
ஊரூராய் அலைந்து உருக்குலைந்தது எம் வாழ்வு

களத்தினில் மாண்டவர் இன்றும் எம் அகத்தில் வாழ
சொந்தங்கள் பாதி சொர்க்கத்தில் சேர
தொலைந்தவர் என்று தேடுகின்றோம் பலரை
தொலைதூரம் ஓடியே பாதி சேர மீதியாய் நாமே மீண்டவரானோம்

இன்று ஒவ்வொரு வீடும் ஒற்றை ஒற்றையாய் ஆனது காண்பீர்
தந்தையும் தாயும் தனித்திருந்து முதுமையில் ஏங்க
நாம் இருவர் நமக்கொருவர் என்றும் தத்துவம்
வாழப்படுகின்றது கருக்குடும்பமாக

அம்மாவும் அப்பாவும் அனுதினமும் தொழில் என்று ஓர்
அயல் வீட்டிலும் உதவியின்றி பிள்ளைகளும் வாட
உடல் அங்கும் உயிர் இங்குமாய்
பெற்றோரும் ஏங்குகின்றனர்.

வீட்டிலே ரீ.வீ உண்டு இன்ரநெற் உண்டு
கைபேசி ஆளுக்கு ஒன்றுண்டு
காரும் மோட்டார் சைக்கிளும் கலர்கலராய் உண்டு
ஆனாலும் மனம் தேடும் சந்தோசம் எங்குண்டு

பெற்றோரும் பிள்ளைகளும் அரிதாக ஒன்று கூடினாலும்
சமூக வலைத்தளங்களில் ஆளுக்கொரு திசையில் சந்திக்கும் காலம்
முகநூல், யூரியூபும் என்று
இணையத்தில் சென்று உலகப் புதினத்தை உடனடியாய் அறிவோம்
உடனிருப்பவர் விடயங்கள் எதுவென்றும் அறியோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாக விளையாடி தனியாகப் பேசி தனியாகச் சிரித்து
தனிமைக்குள் தொலைகின்றனர் நம் பிள்ளைகள்
அயல்வீடு அறிவதில்லை அவர் விபரம் தெரிவதில்லை
உறவென்று வருவோரும் தொடர்நாடகம் போதும் என
உபசரிப்பதே எம் பண்பாடு

எல்லா வீட்டிலும் எல்லா நேரமும் பிள்ளைக்கு
ரியூசன் என்று பேச்சு
எம் மண்ணின் கல்வி நிலையோ தேசியத்தில்
கடைசி நிலையாச்சு

அறிவு, திறன் மனப்பாங்கில் அறிவை மட்டுமே
கல்வி என்று கொண்டோம்
புலமைப் பரிசில் க.பொ.த சாதாரணம்
உயர்தரம் என்று எல்லா தடைகளையும்
வென்று வந்த பிள்ளை இன்று கையில் வாள்கொண்டு
நடு இரவில் ஜனமாக அலைவதையும் பாரீர்

என்றோ ஒருநாள் என் பிள்ளையின் கைவாள்
எம் வீட்டிலும் தன் கூர்மையை பரீட்சிக்கும் உணர்வீர்
சினிமாவிலும் சீரியலிலும் பார்ப்பதுபோல் வாழ்வதல்ல வாழ்வு
வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதே வாழ்வு

பெற்றோரே விழித்திடுங்கள் கற்றோரே விழித்தே இருங்கள்
நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும்
எதிர்காலத்திற்கு இலக்கணம் வகுக்க வேண்டாம்
நிகழ்காலத்தில் இலக்கணமாய் வாழ்ந்திடலாம்

நம்மை நாமாகவே ஏற்றுக்கொள்வோம்
நல்லதும் தீயதும் நமக்குள்ளேயே உண்டு
நன்மையே வளர்ப்போம் தீயதை தவிர்ப்போம்
அதை இன்றே செய்வோம் நன்றே செய்வோம்

எம் வாழ்வின் மாற்றத்திற்கான நாள் இன்று தான்
இன்றைய விடியல்தான் என்னுடைய கையில் உள்ளது
இன்றைய நாளே நெல்லிக்கனி – இதை
நாம் உணர்வோம் உணர்த்துவோம் எம் தலைமுறைக்கு

எம் வாழ்க்கை என்பது ஓர் சிறப்பு உற்சவம்
பிறப்பு இறப்பு இவற்றுக்கு இடையே சிறப்பு உள்ளது
இன்றைய எனது சிறப்பான பதிவுகள் நாளைய வரலாறு
யாரைப் போலும் நாம் வாழ வேண்டாம்
நாளை எம்மைப் போல பலர் வாழ
நிகழ்காலத்தை நிஜமாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்டத்தை நோக்கிப் புதிய தொழில்களைத் கவரும் காரணிகள்

## யுத்தத்திற்கு பிந்தியகாலத்தை நோக்கும் ஓர் கண்ணோட்டம்



வ. குமரதீபன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சந்தைப்படுத்தல் துறை,
முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

### அறிமுகம்

தற்பொழுது கம்பனிகள் யாவும் புதிய சந்தைகளை நோக்கி நகர்வடைகின்றன. அவர்கள் தங்களுடைய உற்பத்திகள் மற்றும் சேவைகளை மக்களைக் கவரும் வண்ணம் திட்டமிடுகின்றனர்.

கடந்த சில காலப்பகுதியில் நிலவிய தடைகள் மற்றும் சந்தைப்படுத்தலில் ஏற்பட்ட சவால்கள் காரணமாக யாழ்மாவட்டத்தின் சந்தை வாய்ப்புக்களை பல நிறுவனங்கள் கண்டு கொள்ளவில்லை. 2009ம் ஆண்டு உள்நாட்டு யுத்தத்தின் பிந்திய மீளாய்வுகள் அடிப்படையில் இலங்கையின் வர்த்தக முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறிய முடிகிறது. இதன் காரணமாக நிறுவனங்களின் முகாமை புதிய சந்தை வாய்ப்புக்களைக் கவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

கடந்த தசாப்தங்களின் இலங்கையின் வணிகச் சூழலானது புதிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளின் உள்வரவினை பெற்றுக்கொண்டுள்ளது. யாழ்மாவட்டம் உள்ளிட்ட வடக்கு மாகாண பிரதேசங்களில் பல வளங்களும், சந்தர்ப்பங்களும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தும் நிறுவனங்கள் அதனை பயன்படுத்த தவறிவிட்டன என்பதை நிறுவனங்கள் பல உணர்ந்து கொண்டன. எனவே தற்போது நிறுவனங்கள் யாவும் பயன்படுத்தப்படாத வளங்களைப் பயன்படுத்துவதற்கு முனைகின்றன எனக் கூறலாம்.

புதிய சந்தைகளை நோக்கி நகரும் நிறுவனங்கள் எண்ணற்ற சவால்களை எதிர் கொள்கின்றன. புதிய சந்தையின் வெற்றி வாய்ப்பானது வாடிக்கையாளர்களைச் செயற்படுத்தல், பொருட்களை விநியோகித்தல், உற்பத்திகளைப் பராமரித்தல் மற்றும் செயற்பாட்டு நடவடிக் கைகளில் தங்கியுள்ளது.

### ஆய்வுச்சான்றுகள்

பின்வரும் ஆய்வுகளில் நிறுவனங்கள் எவ்வாறு சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதைப் பின்வரும் ஆய்வுகளில் அறியலாம்.

Sheela A , and Sheik,J,L (2012) 'Marketing a dent into new market' என்ற ஆய்வுக் கட்டுரையில் வியாபாரக்குறி/அடையாளம், புத்தாக்கம், சந்தை இடம்மாற்றம் மற்றும் புதிய சந்தைப் பங்காளிகளை பெற்றுக்கொள்வதன் ஊடாக சந்தைப்படுத்தல் செயற்பாடுகளில் வெற்றி கொள்கின்றனர் என கண்டறிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kumar, P (2013), 'Challenges and opportunities of Indian rural market' என்ற ஆய்வுக் கட்டுரையில் புதிய உற்பத்திப் பொருட்களை இணைத்துக் கொள்ளுதல், விநியோக சங்கிலிகளை பயன்படுத்தல், புதிய தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல் போன்ற புத்தாக்க உத்திகளே புதிய சந்தை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள உதவுகின்றன என கண்டுபிடித்தார்.

Abbas Ali, M, D, Thumiki, V.R.R and Khan, N (2012) . 'Factors influencing purchase of FMCG by rural consumers in south India, An empirical study' என்ற ஆய்வுக் கட்டுரையில், நிறுவனங்கள் சந்தைப்படுத்தல் கொள்கைகள் தொடர்பான அறிவினை கல்விகற்காத சில்லறை வியாபாரிகளுக்கு கற்பிப்பதன் மூலம் அவர்களுடைய செயற்பாடுகளை அதிகரிக்கலாம் என கண்டுபிடித்தார்.

Behura, K. C, and Panda, J.K (2012) என்பவர்கள் தமது ஆய்வில், இந்தியாவின் மிகப்பெரிய ஆற்றல் கொண்ட பல சந்தை வாய்ப்புக்கள் தொடர்பாக ஆய்வில் நிதித் தடைகளை மிகவும் கவனமாக கையாண்டால் சந்தையானது பணம் சம்பாதிக்கும் சந்தையாக மாற வழிவகுக்கிறது என வெளிப்படுத்தினார்.

Kavitha. T. (2012), 'A comparative study of growth, Challenges and opportunities in FMCG of rural market' என்ற ஆய்வுக்கட்டுரையில், தனித்து ஒதுக்கப்படாத நுகர்வோருடன் தொடர்பு கொள்வதற்கும் அவர்களுடன் இணைவதற்கும் சந்தைப்படுத்துனர்கள் புதிய உத்திகளை கையாள்கிள்றனர் எனவும் நுகர்வோரின் மனதைக் கவரும் மற்றும் மனதை மாற்றும் ஆற்றல் மூலமும் புதிய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதன் மூலமும் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான கேள்வி அதிகரிக்க செய்யலாம் என கண்டுபிடித்தார்.

## கலந்துரையாடல்

நிறுவனங்களின் யாழ்ப்பாணம் நோக்கிய நகர்வின் பரிமாணத்தையும், அதனை தீர்மானிக்கும் காரணிகளையும் இனங்கண்டு கொள்வதற்காக மேற்கொண்ட தேடலில் யாழ்ப்பாணம் நோக்கிய நகர்வு தொடர்பான பின்வரும் பரிமானங்கள் இனம்காணப்பட்டுள்ளது. அதாவது

1) வாடிக்கையாளர் சேவை உறவுகளின் அமுலாக்கம் (Implemention of Customer Relationship Managemet)
2) உட்கட்டுமான வசதிகள் (Infrastructure facilities)
3) மக்களின் வருமானம் மற்றும் அறிவுமட்டம் (Income and Literacy Level)
4) ஊக்குவிக்கும் உத்திகள் (Motivational techniques)
5) விநியோக வழிமுறைகள் (Distribution Channels)
6) வியாபாரப் பொருட்களின் அடையாளம் பற்றிய விழிப்புணர்வு (Awarenes about the Products and Brands)
7) மக்களின் கொள்வனவு நடத்தை (Consumer Buying behavior)

புதிய சந்தையை நோக்கிய நகர்வில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் மிகவும் அதிகம் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக. **மக்களின் கொள்வனவு நடத்தை** (Consumer Buying behavior), **விநியோக வழிமுறைகள்** (Distribution Channels), **மக்களின் வருமான மற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அளவு மட்டம்** (Income and Literacy Level) ஆகிய காரணிகள் இனம்காணப்பட்டன. அவற்றில் மேலும் சந்தை நோக்கிய நகர்விற்கான மிக முக்கிய காரணியாக **கிராமிய மக்களின் வருமானம் மற்றும் அறிவுமட்டமானது** (Income and Literacy Level) காணப்பட்டது. கிராமிய மக்களின் வருமானம் மற்றும் அறிவுமட்டமானது புதிய சந்தை நோக்கிய நிறுவனங்களின் நகர்வில் மிக முக்கிய செல்வாக்கினை அல்லது தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்று அறியப்பட்டது.

## முடிவுரை

பல்வேறுபட்ட நிறுவனங்கள் புதிய உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்தும் போது அதன் தன்மை பற்றியும், விலைபற்றியும் கவனம் செலுத்துவதில்லை என்றும் மக்கள் நுகர்வு கல்வி இல்லாதவர்கள் போல் நடந்து கொள்கின்றனர். எனவே நிறுவனங்கள் தமது பொருட்களின் தன்மை பற்றி அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.

நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் சந்தைப்படுத்தல் மற்றும் விருத்தி நடவடிக்கைகள் கிராமிய மட்டத்தை நோக்கி சென்றடைவதில்லை. இதற்கு காரணம் நிறுவனங்களின் விருத்தி நடவடிக்கையின் பலவீனத்தன்மை ஆகும். யாழ்மாவட்டத்தை நோக்கி நகர்வடைந்த நிறுவனங்களுள் பல நிறுவனங்கள் கிராமிய மட்டங்கள் நுகர்வோர் தொடர்பாக அறிந்து கொள்ளவில்லை. இந்திய தொலைக்காட்சி சேனலின் ஆதிக்கம் அதிகம் காணப்படுவதால் உள்ளூர் தொலைக்காட்சி சேனலில் காணப்படுவதால் கம்பனிகளால் மேற்கொள்ளப்படும் விளம்பரங்கள் மக்களுக்கு சரியான முறையில் சென்றடைவதில்லை. மற்றும் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு சுவரொட்டிகள் போன்ற கருவிகள் சென்றடைவதில்லை. இதன் காரணமாக மக்களிடம் இது பற்றிய அறிவு இல்லாது போகிறது. எனவே நிறுவனங்கள் தங்களது விருத்தி நடவடிக்கையினை கிராமிய மட்டத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

பல வகையான கம்பனிகள் தமது ஒரு சில கிளைகளை மட்டுமே யாழ்மாவட்டத்தில் கொண்டுள்ளன. இவ் வகையான நிறுவனங்கள் மக்களின் சாதகமான ஆதரவினை பெற்றுக் கொண்ட போதிலும் புதிய கிளைகளை உருவாக்குவதில் அக்கறை கொள்ளவில்லை. இதன் காரணமாக மக்கள் சேவைகளை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஆகவே நிறுவனங்கள் தமது புதிய கிளைகளை உருவாக்குவதில் அக்கறை கொள்ளுதல் வேண்டும்.

## Reference


Abbas Ali, M.D Thumiki, V.R.R and Khan, N (2012) 'Factors influencing purchase of FMCG by rural consumers in South India : An empirical study' International Joual of business research and development, Volume 1

Behura, K.C, and Panda, J.K (2012), 'Rural marketing of FMCG companies in india' VSRD International Joural of business and Management Research, Volume 2

Kavitha T.C (2012) , A Comparative Study of Growth, Challenges and Opportunities in FMCG of Rural Market; Inder science Management Review, Volume 2

Kumar, P (2013) "Challenges and Opportunities of indian rural market ' ,International Joual of marketing studies, Volume 5.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பியர் கால யாழ்ப்பாணம்



திரு. ந. பரமேஸ்வரன்

ஐரோப்பியர் கால யாழ்ப்பாண நகரம் தற்போது உள்ள இடத்தில் இருக்கவில்லை. தற்போது யாழ்ப்பாண நகரமாக காணப்படுகின்ற இடத்திலிருந்து சற்றுத்தள்ளியே யாழ்ப்பாண நகரப்பிரதேசம் அமைந்திருந்தது. போர்த்துக்கேயர் காலத்தில் தாராக்குளம் தொடக்கம் கோட்டை வரையான பிரதேசம் அதே போல் கடற்கரை வீதி தொடக்கம் மூன்றாம் குறுக்குத்தெரு வரையான பிரதேசமே நகரப்பகுதியாக காணப்பட்டது. முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத்தெரு என்பன ஒல்லாந்தர் காலத்தில் உருவாக்கப்பட்டவை. மூன்று குளங்கள் யாழ்ப்பாண நகரப்பகுதியில் காணப்பட்டன. இப்போது அவை மூடப்பட்டு விட்டன. அவையாவன தெரிவிக்குளம் இது ராசாவின் தோட்டத்தில் அமைந்திருந்தது. (முலவைச்சந்தியில் இருந்து ராசாவின் தோட்டப் பக்கமாக) மஞ்சகரிச்ச குளம் இது தற்போது திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கில பாடசாலை இருந்த இடத்தில் இருந்ததாகவும் இக்குளம் மூடப்பட்டே திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கில பாடசாலை கட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவற்றை விட வண்ணான் குளம் திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலைக்கு எதிர்ப்புறமாக இருந்தது.

சப்பல் வீதியில் கச்சேரியில் தோம்பு பராமரிப்பாளராக கடமையாற்றிய திசைவீரசிங்க முதலியாரின் இரண்டு மாடி நாற்சார் வீடு இருந்தது; யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்ட முதலாவது மாடி வீடு இதுவே. ஓடக்கரை வீதி, டேவிட் வீதி, ராசாவின் தோட்ட வீதி என்பன பிரித்தானியர் காலத்தில் உருவாக்கப்பட்டவை.

இப்போது தார் வீதிகளாக காணப்படுகின்ற பல வீதிகள் பிரித்தானியர் காலம் வரை ஒழுங்கைகளாகவே காணப்பட்டன. யாழ் மத்திய கல்லூரி, யாழ் வைத்தியசாலை என்பவற்றைச் சுற்றி தோட்டங்களும் வயல்களும் காணப்பட்டன.

பாசையூர், குருநகர் பகுதியிலும் மூன்று குளங்கள் காணப்பட்டன அவையாவன முதலிக்குளம், மரவைக்குளம், மூண்டுக்குளம் என்பன. இந்த ஆறு குளங்களும் பறவைகள், கால்நடைகள் குதிரைகள் என்பன நீரருந்தவும் நீராடவும் உதவின. நகரப்பகுதியில் காணப்பட்ட பெருமளவு வயல் மற்றும் தோட்டக்காணிகளும் கொழும்புத்துறையிலிருந்த தென்னந் தோட்டமும் திசைவீரசிங்க முதலியாரின் சொத்தாக காணப்பட்டது. ஒரு சில கல் வீடுகளே காணப்பட்டன. ஏனைய வீடுகள் யாவும் மண் வீடுகளாகவே காணப்பட்டன. மண்வீடுகள் பனை ஓலையால் அல்லது கிடுகினால் வேயப்பட்டிருந்தன. இந்த வீடுகள் அநேகமான இரண்டு அறைகளைக்கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத் தமிழில் கலந்த வடமொழிச் சொற்கள்



செ. திருச்செல்வநாதன்
ஆசிரியர் பணி ஓய்வு

| தமிழ் | | வடமொழி | |
|---|---|---|---|
| அகவை | மறைந்து | வயது | ஆனது |
| அமர்த்து | மறைந்து | நியமி | ஆனது |
| அயல் | மறைந்து | அன்னியம் | ஆனது |
| அருமை | மறைந்து | அபூர்வம் | ஆனது |
| அனைத்தும் | மறந்து | சகலம் | பெற்றோம் |
| அக்கறை | மறந்து | சிரத்தை | பெற்றோம் |
| அரியாசனம் | மறந்து | சிம்மாசனம் | பெற்றோம் |
| அப்பொழுது | மறந்து | அக்கணம் | பெற்றோம் |
| அத்தான் | மறைந்து | மைத்துனன் | ஆனார் |
| அந்தணன் | மறைந்து | துறவி | ஆனார் |
| அடிகள் | மறைந்து | சுவாமி | ஆனார் |
| அடியார் | மறைந்து | பக்தர் | ஆனார் |
| அமர்த்தம் | இழந்து | அனுமதி | பெற்றோம் |
| அறம் | இழந்து | தருமம் | பெற்றோம் |
| அறிவு | இழந்து | ஞானம் | பெற்றோம் |
| அடையாளம் | இழந்து | சின்னம் | பெற்றோம் |
| அலுவல் | மாற்றி | உத்தியோகம் | ஆக்கினோம் |
| அருள் | மாற்றி | கருணை | ஆக்கினோம் |
| அதிர்ச்சி | மாற்றி | திகில் | ஆக்கினோம் |
| அரத்தம் | மாற்றி | இரத்தம் | ஆக்கினோம் |
| அல்லல் | மறந்து | ஆபத்து | அடைந்தோம் |
| அழிவு | மறந்து | நாசம் | அடைந்தோம் |
| அடைக்கலம் | மறந்து | சரணம் | அடைந்தோம் |
| ஆகூழ் | மறந்து | அதிஸ்ட்டம் | அடைந்தோம் |
| அழகம்மை | | அபிராமி | ஆனார் |
| ஆசிரியர் | | உபாத்தியார் | ஆனார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஆடவன் | | புருஷன் | ஆனார் |
| ஆண்டவன் | | சாமி | ஆனார் |
| ஆலத்தி | | ஆரத்தி | ஆனது |
| ஆண்டு | | வருஷம் | ஆனது |
| ஆறு | | நதி | ஆனது |
| ஆற்றல் | | சக்தி | ஆனது |
| இறைவன் | மறைந்து | ஈஸ்வரன் | ஆனார் |
| இணையர் | மறைந்து | தம்பதி | ஆனார் |
| இயற்றியான் | மறைந்து | கர்த்தா | ஆனார் |
| இளையவன் | மறைந்து | சேவகர் | ஆனார் |
| இடர் | மறைந்து | சங்கடம் | ஆனது |
| இழப்பு | மறைந்து | நஷ்ட ம் | ஆனது |
| இயம் | மறைந்து | வாத்தியம் | ஆனது |
| இயல்பு | மறைந்து | சுபாவம் | ஆனது |
| இன்பம் | இழந்து | சந்தோஷம் | அடைந்தோம் |
| இழிவு | இழந்து | ஈனம் | அடைந்தோம் |
| இக்கட்டு | இழந்து | சங்கடம் | அடைந்தோம் |
| இரக்கம் | இழந்து | கிருபை | அடைந்தோம் |
| இரண்டகம் | மறைந்து | துரோகம் | பிறந்தது |
| இனம் | மறைந்து | வர்க்கம் | பிறந்தது |
| இனிமை | மறைந்து | இங்கிதம் | பிறந்தது |
| இன்னிசை | மறைந்து | சங்கீதம் | பிறந்தது |
| இசிவு | மறந்து | ஜன்னி | வேண்டினோம் |
| இரத்தல் | மறந்து | பிச்சை | வேண்டினோம் |
| இறைச்சி | மறந்து | மாமிசம் | வேண்டினோம் |
| இனம் | மறந்து | பந்து | வேண்டினோம் |
| உண்மை | மறைந்து | சத்தியம் | பிறந்தது |
| உரிமை | மறைந்து | சுதந்திரம் | பிறந்தது |
| உணர்ச்சி | மறைந்து | சுரணை | பிறந்தது |
| உதிரம் | மறைந்து | இரத்தம் | பிறந்தது |
| உறுப்பினர் | | அங்கத்தவர் | ஆனார் |
| உயர் அலுவலர் | | அதிகாரி | ஆனார் |
| உறவாடி | | சம்பந்தி | ஆனார் |
| உடன் பிறந்தவர் | | சகோதரர் | ஆனார் |
| உடலுறுப்பு | மறைந்து | அவயவம் | தோன்றியது |
| உடம்பு | மறைந்து | சரீரம் | தோன்றியது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| உறுப்பு | மறைந்து | அங்கம் | தோன்றியது |
| உயிர்ப்பு | மறைந்து | சுவாசம் | தோன்றியது |
| உண்ணா நோன்பு | மறைந்து | உபவாசம் | பிறந்தது |
| உரையாட்டு | மறைந்து | சம்பாகூஷினை | பிறந்தது |
| உடல்நலம் | மறைந்து | ஆரோக்கியம் | பிறந்தது |
| உறுதி | மறைந்து | உத்தரவாதம் | பிறந்தது |
| உடல் | மறைந்து | தேகம் | தோன்றியது |
| உயிர் | மறைந்து | ஜீவன் | தோன்றியது |
| உணவு | மறைந்து | ஆகாரம் | தோன்றியது |
| உத்தி | மறைந்து | யுக்தி | தோன்றியது |
| ஊழியம் | குன்றி | சேவை | பெருகியது |
| ஊக்கம் | குன்றி | உற்சாகம் | பெருகியது |
| ஊதியம் | குன்றி | லாபம் | பெருகியது |
| ஊர் | குன்றி | கிராமம் | பெருகியது |
| களிப்பு | மறைந்து | உல்லாசம் | பெருகியது |
| கழுவாய் | மறைந்து | பிராயச்சித்தம் | பெருகியது |
| கட்டளை | மறைந்து | ஆணை | பெருகியது |
| கலைச்சுவை | மறைந்து | கலாரசனை | பெருகியது |
| கண்டோன் | | சாட்சி | ஆகினார் |
| கடவுள் | | சுவாமி | ஆகினார் |
| கற்புடையாள் | | பத்தினி | ஆகினார் |
| கணியன் | | சோதிடன் | ஆகினார் |
| கருவூலம் | மறைந்து | கஜானா | ஆனது |
| கடுமை | மறைந்து | உக்கிரம் | ஆனது |
| கலை | மறைந்து | சாஸ்திரம் | ஆனது |
| கருவறை | மறைந்து | கர்ப்பக் கிருகம் | ஆனது |
| குடிநீர் | குன்றி | பானம் | தோன்றியது |
| குறி | குன்றி | சகுனம் | தோன்றியது |
| குடவம் | குன்றி | பித்தளை | தோன்றியது |
| குலம் | குன்றி | ஜாதி | தோன்றியது |
| குடியானவன் | மறைந்து | சமுசாரி | ஆயினர் |
| குழாம் | மறைந்து | கோஸ்ட்டி | ஆயினர் |
| குடி | மறைந்து | பிரசை | ஆயினர் |
| குலமகள் | மறைந்து | பதிவிரதை | ஆயினர் |
| கூச்சம் | மறந்து | சங்கோஜம் | பிறந்தது |
| கூலம் | மறந்து | தானியம் | பிறந்தது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கூடல் | மறந்து | சந்திப்பு | பிறந்தது |
| கூற்றுவன் | மறந்து | யமன் | பிறந்தது |
| கேள்வி | மறைந்து | சுருதி | தோன்றியது |
| கேடு | மறைந்து | மோசம் | தோன்றியது |
| கொடுமொழி | மறைந்து | சாபம் | தோன்றியது |
| கோள் | மறைந்து | கிரகம் | தோன்றியது |
| தடு | மறைந்து | ஆட்சேபி | பிறந்தது |
| தடை | மறைந்து | ஆட்சேபனை | பிறந்தது |
| தகுதி | மறைந்து | யோக்கியம் | பிறந்தது |
| தலைமுறை | மறைந்து | பரம்பரை | பிறந்தது |
| தாங்கு | மறைந்து | ஆதரி | ஆனது |
| தாளிகை | மறைந்து | பத்திரிகை | ஆனது |
| தாள் | மறைந்து | பத்திரம் | ஆனது |
| தானாய் | மறைந்து | சுயமாய் | ஆனது |
| திருமுழுக்கு | மறைந்து | அபிஷேகம் | பிறந்தது |
| திருவிழா | மறைந்து | உற்சவம் | பிறந்தது |
| திருமணம் | மறைந்து | கல்யாணம் | பிறந்தது |
| திருமுன் | மறைந்து | சந்நிதி | பிறந்தது |
| தீவினை | மறைந்து | பாவம் | ஆனது |
| தீயவர் | மறைந்து | துஷ்ட்டர் | ஆனார் |
| தீவு | மறைந்து | துவீபம் | ஆனது |
| தினம் | மறைந்து | நாள் | ஆனது |
| துவக்கம் | குன்றி | ஆரம்பம் | பிறந்தது |
| துப்பரவு | குன்றி | சுத்தம் | பிறந்தது |
| துறக்கம் | குன்றி | சுவர்க்கம் | பிறந்தது |
| துயரம் | குன்றி | துக்கம் | பிறந்தது |
| தொல்லை | மறைந்து | அவஸ்த்தை | தோன்றியது |
| தொடக்கம் | மறைந்து | ஆரம்பம் | தோன்றியது |
| தொடர்பு | மறைந்து | சம்பந்தம் | தோன்றியது |
| தொண்டு | மறைந்து | சேவை | தோன்றியது |
| நலம் | குன்றி | ஆரோக்கியம் | பெருகியது |
| நன்றி | குன்றி | உபகாரம் | பெருகியது |
| நல்வழி | குன்றி | சன்மார்க்கம் | பெருகியது |
| நட்பு | குன்றி | சினேகிதம் | பெருகியது |
| நடு | மறைந்தது | மத்தி | பிறந்தது |
| நகையாடல் | மறைந்தது | பரிகாசம் | பிறந்தது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| நண்பகல் | மறைந்தது | மத்தியானம் | பிறந்தது |
| நரல் | மறைந்தது | ஜனம் | பிறந்தது |
| நல்லவேளை | மறைந்து | முகூர்த்தம் | ஆனது |
| நல்வினை | மறைந்து | புண்ணியம் | ஆனது |
| நம்பிக்கை | மறைந்து | விசுவாசம் | ஆனது |
| நள்ளிரவு | மறைந்து | அர்த்தசாமம் | ஆனது |
| நாள் | மறைந்து | தினம் | ஆனது |
| நாள்தோறும் | மறைந்து | தினசரி | ஆனது |
| நஞ்சு | மறைந்து | விஷம் | ஆனது |
| நினைப்பு | மறைந்து | ஞாபகம் | ஆனது |
| நிறைமதி | மறைந்து | பௌரணை | ஆனது |
| நீர்க்கோவை | மறைந்து | ஜலதோசம் | ஆனது |
| நடவரசன் | | நடராசன் | ஆனார் |
| நிறுவுனர் | | ஸ்தாபகர் | ஆனார் |
| நீலம்மை | | நீலாம்பிகை | ஆனார் |
| நேர்மையற்றவர் | | அயோக்கியர் | ஆனார் |
| நுகர்வு | மறைந்து | போகம் | வந்தது |
| நெறி | மறைந்து | மார்க்கம் | வந்தது |
| நோய் | மறைந்து | வியாதி | வந்தது |
| நோன்பு | மறைந்து | விரதம் | வந்தது |
| மறை | மறைந்து | வேதம் | ஆனது |
| மங்கலம் | மறைந்து | சுபம் | ஆனது |
| மறைமுகம் | மறைந்து | அந்தரங்கம் | ஆனது |
| மறுப்பு | மறைந்து | ஆட்சேபம் | ஆனது |
| மணிக்கூடு | மறைந்து | கடிகாரம் | வந்தது |
| மஞ்சம் | மறைந்து | கட்டில் | வந்தது |
| மருந்து | மறைந்து | ஔடதம் | வந்தது |
| மணி | மறைந்து | இரத்தினம் | வந்தது |
| மதிப்பு | குறைந்து | மரியாதை | பிறந்தது |
| மதி | குறைந்து | புத்தி | பிறந்தது |
| மறைபொருள் | மறைந்து | இரகசியம் | பிறந்தது |
| மரபு | மறைந்து | சந்ததி | பிறந்தது |
| முதன்மை | மறைந்து | முக்கியம் | பிறந்தது |
| முயற்சி | மறைந்து | பிரயாசம் | பிறந்தது |
| முறைகேடு | மறைந்து | அக்கிரமம் | பிறந்தது |
| முகமன் | மறைந்து | முகஸ்துதி | பிறந்தது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| முதல் | மறைந்து | ஆதி | ஆனது |
| முடி | மறைந்து | கிரீடம் | ஆனது |
| முழுநிறைவு | மறைந்து | சம்பூரணம் | ஆனது |
| முறை | மறைந்து | நியமம் | ஆனது |
| மிகுவளர்ச்சி | மறைந்து | அபிவிருத்தி | வந்தது |
| முன்நிலை | மறைந்து | சந்நிதி | வந்தது |
| முழுமதி | மறைந்து | பூரணச்சந்திரன் | வந்தது |
| மூச்சு | மறைந்து | சுவாசம் | வந்தது |
| மாவேந்தன் | மறைந்து | சக்கரவர்த்தி | ஆனார் |
| மாதொருபாகன் | மறைந்து | அர்த்தநாரீஸ்வரர் | ஆனார் |
| முரடர் | மறைந்து | மூர்க்கர் | ஆனார் |
| மெய்ப்பொருளோதியர் | மறைந்து | தத்துவஞானி | ஆனார் |
| வழிபாடு | மறைந்து | பூஜை | ஆனது |
| வழிப்போக்கு | மறைந்து | பிரயாணம் | ஆனது |
| வழிமொழி | மறைந்து | ஆமோதி | ஆனது |
| வழி | மறைந்து | மார்க்கம் | ஆனது |
| வழிப்போக்கன் | | பிரயாணி | ஆனார் |
| வயவன் | | வீரன் | ஆனார் |
| வல்லுநர் | | நிபுணர் | ஆனார் |
| வணிகர் | | வர்த்தகர் | ஆனார் |
| வணக்கம் | மறைந்து | நமஸ்காரம் | பிறந்தது |
| வருத்தம் | மறைந்து | கஷ்டம் | பிறந்தது |
| வளி | மறைந்து | வாயு | பிறந்தது |
| வழக்கம் | மறைந்து | சகஜம் | பிறந்தது |
| வாழ்நாள் | குன்றி | ஆயுள் | பெருகியது |
| வாழ்த்து | குன்றி | ஆசீர்வாதம் | பெருகியது |
| வாட்டம் | குன்றி | விசனம் | பெருகியது |
| வாரி | குன்றி | சமுத்திரம் | பெருகியது |
| விழிப்பு | மறைந்து | ஜாக்கிரதை | ஆனது |
| வினவு | மறைந்து | விசாரி | ஆனது |
| விலங்கு | மறைந்து | மிருகம் | ஆனது |
| விடுதலை | மறைந்து | முத்தி | ஆனது |
| விருப்பம் | மறைந்து | இஸ்ட்டம் | பெருகியது |
| வேள்வி | மறைந்து | யாகம் | பெருகியது |
| வேறுபாடு | மறைந்து | வித்தியாசம் | பெருகியது |
| வேட்கை | மறைந்து | தாகம் | பெருகியது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வேறுபாடு | மறைந்து | வித்தியாசம் | பெருகியது |
| வேட்கை | மறைந்து | தாகம் | பெருகியது |

**உசாத்துணை நூல்கள்**


01. தேவநேயப் பாவாணர் ஞா.வேர்ச்சொற் கட்டுரைகள். பகுதி 1,2,3,4 தமிழ் மண் பதிப்பகம் சென்னை 600014.

02. தேவநேயப்பாவாணர் ஞா: "தேவநேயம்" பகுதி 1,2,3,4,5,6,7,8 பாவாணர் அறக்கட்டளை, சென்னை 600092.

03. தேவநேயப் பாவாணர். ஞா. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, தேன்மடலம் முதற்பகுதி தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் சென்னை.

04. நடராஜா, சிறிரஞ்சன் "யாழ்ப்பாணத் தமிழ் அகராதி" குமரன் புத்தக இல்லம்", கொழும்பு - சென்னை 2019.


**வலைத்தளங்கள்**


திருஞானசம்பந்தம். கோ. "நல்லதமிழ் அறிவோம்" தமிழ் இணைய கல்விக்கழகம், பகுதி 1,2,3,4,5,6,7,8,9,10, You Tube.


## நல்ல மனது

பணம் சம்பாதிக்க
நல்லவன் கெட்டவன்
எல்லோராலும் முடியும்.....

மனிதர்களை சம்பாதிக்க
நல்ல மனதுள்ள
மனிதனால் மட்டும்தான்
முடியும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்து இலக்கியபரப்பில் சமஸ்கிருத ஆக்கங்களும் சமஸ்கிருதக் கல்விப் பாரம்பரியமும்



**மகீந்தன் மதிவாணி**
உதவி விரிவுரையாளர்
சம்ஸ்கிருதத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

உலகிலே காணப்படுகின்ற மொழிகளிலே பழைமையானதாகவும் வளமுள்ளதாகவும் விளங்குகின்ற மொழிகளில் சமஸ்கிருதமும் ஒன்றாகும். மொழி நூலாரின் கருத்துப்படி இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இம்மொழி தமிழ் இலக்கிய மரபிலே வடமொழி என அழைக்கப்படினும் சமஸ்கிருதம் எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. “சம்” நன்கு “கிருதம்” செய்யப்பட்டது என்னும் கருத்தினையுடைய சம்ஸ்கிருதம் பாணினி என்னும் இலக்கண ஆசிரியரால் இலக்கணம் வகுக்கப்பட்டு நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டதன் பின்பே சமஸ்கிருதம் என அழைக்கப்பட்டது.

இன்று உலகிலே பொது மொழியாக ஆங்கிலம் விளங்குவது போல ஒரு காலத்தில் சமஸ்கிருதம் இந்திய பொது மொழியாக விளங்கியது. பல விதமான அறிவியல் அம்சங்களோடு விளங்குகின்ற வடமொழியாகிய சமஸ்கிருதம் தென்மொழியாகிய தமிழோடு நீண்டகாலம் தொடர்பு கொண்டு விளங்குகின்றது. காலத்தால் முந்திய இருக்கு வேதம் முதலாக ஏனைய வேதங்களும் உபநிடதங்களும், இதிகாச புராணங்கள், தோத்திர இலக்கியங்கள், சமயக்கிரியை நூல்கள், கலைகள் எனப் பல்வேறு நூல்கள் இம் மொழியில் பரந்து காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம் மிக நீண்டகாலமாக கல்விப் பாரம்பரியம் கொண்ட பிரதேசமாகும். இங்கு தமிழும் சமஸ்கிருதமும் முக்கிய இடம் பெற்று வந்துள்ளது. சைவமே இவ்விரண்டிற்கும் பொதுவான பிணைப்பாக விளங்கி வந்துள்ளது. யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியம் பரந்த இந்தியக் கல்விப் பாரம்பரியத்தின் ஒரு பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகவே நிலவி வந்துள்ளது. யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் தமிழ் அறிஞர்கள் வடமொழியையும் கற்றிருந்தனர். என்பதற்கு அக்காலத்தில் எழுந்த நூல்கள் சான்றுதருகின்றன. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு நிலவிய தமிழ் இராச்சியத்தில் கி.பி.13-17ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் தமிழோடு சமஸ்கிருதம் சிறப்புற்றிருந்தது. யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னர்களும் சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்குத் சிறந்த பங்களிப்புச் செய்துள்ளார்கள். பொதுவாக 18ம் 19ம் 20ம் நூற்றாண்டு முற்பகுதிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வடமொழி அறிவில்லாத தமிழறிவுடையோர் கூற்றுக்களை வித்துவான்கள் அங்கீகரிப்பது குறைவு அத்துடன் சமஸ்கிருத அறிவானது சைவசமயம், தமிழ் ஆகியவற்றை கற்றுணருவதற்கும் அவசியமெனக் கருதப்பட்டது. இதன் காரணமாக தமிழ் மொழிக் கல்வியுடன் சமஸ்கிருதம் கற்றவர்களில் சிலர் இம் மொழியை மேலும் கற்று பாண்டித்தியம் பெற்று விளங்கினர். சிலர் தமது சமய நூல்களில் அறிவிற்கும் இலக்கிய ஆர்வத்திற்கும் ஏற்றவகையில் சமஸ்கிருதத்தில் புலமை பெற்று விளங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் காலத்தின் கண்ணாடி ஆகும். எனவே யாழ்ப்பாண சமஸ்கிருத இலக்கியங்கள் சமஸ்கிருத சார்பு நூல்கள் என்பவற்றின் மூலம் யாழ்ப்பாண சமஸ்கிருதப் பாரம்பரியம் எவ்வளவு தூரம் வளர்ச்சியுற்றது என்பதை அறியலாம். பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றின் ஊடான சமஸ்கிருதக் கல்வி மூலமாகவும் அன்று முதல் இன்று வரையான யாழ்ப்பாண சமஸ்கிருத பாரம்பரியத்தை உணரமுடிகின்றது. இலங்கையில் எழுந்த சிறந்த இலக்கிய ஆக்கம் என்றவகையில் சமஸ்கிருத மகாகாவியம் எனக்கருதப்படும். குமாரதாசரின் ஜானகிஹரணம் குறிப்பிடத்தக்கது. இதனைவிட இலங்கையிலுள்ள விஷ்ணு ஆலயங்கள் பற்றிய மரபுவழிச் செய்திகளைக் கொண்டதாக தஷிணகைலாச மாஹாத்மியம் விளங்குகின்றது. இவ்விரு இலக்கியங்களும் யாழ்ப்பாணத்து பிரதேசத்திற்கு மட்டுமன்றி இலங்கை முழுவதற்குமான இலக்கியமாக காணப்பட்டாலும் இவற்றில் யாழ்ப்பாணம் பற்றிய குறிப்புக்கள் வருவதால் யாழ்ப்பாண சமஸ்கிருத பாரம்பரியத்தின் முன்னோடி இலக்கியம் எனக்கொள்ளலாம்.

யாழ்ப்பாண சம்ஸ்கிருத ஆக்கங்களை பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

1. சம்ஸ்கிருத ஆக்க இலக்கியங்கள்
2. இலக்கணமும் அகராதி இயலும்
3. சம்ஸ்கிருத பயிற்சி நூல்கள்
4. தத்துவம் சார்ந்த நூல்கள்
5. சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு சார்பு தொகுப்புக்கள்
   * சமயம்
   * தர்க்கமும் அணியியலும்
   * சோதிடமும் வானிடவியலும்
   * சித்த ஆயுர்வேத மருத்துவம்
   * சம்ஸ்கிருத தொகுப்பு நூல்களும் இலக்கிய வரலாறும்.

## 01. சம்ஸ்கிருத ஆக்க இலக்கியங்கள்

யாழ்ப்பாணத்து சம்ஸ்கிருத ஆக்கங்கள் இலக்கியங்களை இலக்கியம், கீர்த்தனை, ஸ்தோத்திரம், சமரகவி எனும் வகைப்பாட்டில் நோக்கலாம். இலக்கிய ஆக்கங்களை பொறுத்த மட்டில் சீதாராம சாஸ்த்திரிகள் ஆக்கியுள்ள கேதீசநாதர் சுப்பிரபாதம், பீரபக்தி மங்கலம் ஆகியன ஒரு கண்ட காவிய சிறப்புடன் மிளிருவதைக் காணலாம். யாழ்ப்பாணத்து பல்கலைக்கழக பார்வதி பரமேஸ்வரன் மீது கீர்த்தனை ஒன்று பாடப்பட்டுள்ளது. இதனை யாழ் பல்கலைக்கழக சம்ஸ்கிருத்துறை பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள் இயற்றியுள்ளார்.

ஸ்தோத்திரங்களை இயற்றியவர்கள் வண்ணை பகவதீஸ்வர சாஸ்திரிகள் வைத்யநாதாஷ்டகம், பஞ்சாஷரக் ரதிதவைத்யேசகராம்பிதஸ்துதி, நடராஜபுஜங்க ஸ்த்திரம், அஷ்டாசஷரத்திதானந்த பத்மநபாபகராம்பிதஸ்துதி என்பனவற்றையும் கரணவாய் காசிநாதக் குருக்கள் சுவாமி அஷ்டாகத்தினையும் சீதாராம சாஸ்திரிகள் அஷரமாலிகாதேவி சர்ணிகா கடீணச பஞ்சரத்தினம், காமகோடி குரு பஞ்சரத்தினம், இராமேஸ்வரம் கன்னியாகுமாரி மீது பஞ்சரத்தினம் சீதாராமசாஸ்திரிகள் மீது பாடிய குருஸ்சோஸ்திரம் சுப்பிரமணியசாஸ்திரிகள் ஸ்ரீகுருஸ்துதியும் கோபாலகிருஸ்ணஐயர் கைலாசநாதகுரு மீது சிவகுருதோஸ்திர பஞ்சரத்தினமும் சதாசிவசர்மா நெல்லியடி விநாயகர் மீது ஒரு பஞ்சரத்தினமும் ஸ்ரீகணேசாஷ்டகம் ஸ்ரீபார்வதிநாதஸ்டகம் ஸ்ரீலலிதாம்பிகா அஸ்டகம் ஸ்ரீசரவணபாஸ்டகம் ஸ்ரீசேத்திராபாலாஸ்டகம் குருமீது சுப்பிரம்மணி யாங்சலியும் தோஸ்திரங்களாக செய்துள்ளார். சிறந்த பண்பாளர் மீது பாடுவது சமரகவியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வரிசையில் சீத்தாராமசாஸ்திரிகள் சுவாமிநாதகுருக்கள், தியாகராஜக்குருக்கள் சுன்னாகம் சதாசிவஜயர் மயிலணி கார்த்திகேய குருக்கள் மட்டுவில் பொண்ணுசாமி குருக்கள் ஆகிய பல சமரஸ்லோகங்களை பாடியுள்ளனர்.

## 02. இலக்கணமும் அகராதியும்

நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களால் சம்ஸ்கிருத நூலும் அகராதியும் உருவாக்கப்பட்டது ஆனால் அது நமக்கு இன்று கிடைக்கவில்லை. நீர்வேலி சிவசங்கர பண்டிதர் லகுசித்தாந்த கௌமுதியை மையமாக கொண்ட கிரந்த லதியை சப்தசங்கிரகம் எனும் நூலை தொகுத் துள்ளார். அதே போன்று கோப்பாய் பஞ்சரசர்மா கௌமுதிவியாகரணத்தை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அகராதி வரிசையில் சம்ஸ்கிருத கிரந்தலிபி வரிசையில் நீர்வேலி சிவசங்கர பண்டிதர் தாதுமாலை எனும் நூலுக்கு வி.சிவசாமி அவர்கள் சம்ஸ்கிருத தமிழ் அகராதி எழுதியுள்ளார். சுப்பிரமணிய சாஸ்திரிகள் Rational Sanskrit Grammer எனும் இலக்கண நூலையும் எழுதியுள்ளார்.

## 03. சம்ஸ்கிருத பயிற்சி நூல்

யாழ்ப்பாணத்தில் தமிழ்மொழி மூலமாக சம்ஸ்கிருதத்தை கற்கும் மாணவர்கள் ஆர்வ முள்ளவர்களாக விளங்கினார். இதன் காரணமாக பல பயிற்சி நூல்கள் உருவாக்கப்பட்டன. இதன் வரிசையில் நீர்வேலி சிவசங்கரபண்டிதர் முதலாம் சப்தசங்கிரகம் சம்ஸ்கிருத இரண்டாம் பாலபாடம் என்ற நூல்களையும் புலோலி கணபதிப்பிள்ளை பிரதம வாசகபுஸ்தகம் எனும் நூலையும் சுப்பிரமணிய சாஸ்திரி நியாய லகுவீயாகரணம் பயிற்சிப்புத்தகம் நவநீதமஞ்சரி Sanskrit Reader என்ற நூல்களையும் சீதாராம சாஸ்திரிகள் சம்ஸ்கிருத சிராபிரதமசோபனம் என்ற நூலையும் கைலாசநாதக்குருக்கள் சம்ஸ்கிருத இலகுபோதகம் பாகம் 1,2 என்ற நூல் களையும் சிவசாமி ஸ்வபோதலகசம்ஸ்கிருதம் (3 பதிப்புக்கள்) தமிழ் சம்ஸ்கிருத மொழி பெயர்ப்புப் பயிற்சிப் புத்தகம் எனும் நூல்களையும் பஞ்சாட்சரசர்மா அக்ஷர போதினி எனும் நூலையும் கோப்பாய் சிவானந்தசர்மா சம்ஸ்கிருத ஸ்வபோதினி பகுதி 1 எனும் நூல்களையும் ஆக்கியுள்ளனர்.

## 04. தத்துவம் சார்ந்த நூல்கள்

தத்துவம் என்ற நிலையில் யாழ்ப்பாணத்து சமூகத்தில் சைவசித்தாந்த சிந்தனைகளே வளம் பெற்று விளங்கியுள்ளன. இவ்வரிசையில் திருநெல்வேலி ஞானபிரகாச பௌஷ்கராகமவிருத்தி, சித்தாந்த சிகாமணி, பிரமாணதீபிகை, பிரசாததீபிகை, ஜஞ்ஞானவிசேசனம், சிவஜோகசாரம், சிவஜோகரத்தினம், சிவாகமாதீர்மான்னிய சங்கிரகம், ஒமாத்திகற்பம் எனும் நூல்களை இயற்றியுள்ளார். உடுப்பிட்டி ஆறுமுக உபாத்தியர் சித்தாந்த பிரபோபத்தினை ஆக்கியுள்ளார். காசிவாசி செந்தில்நாதஜயர் சைவவேதாந்தம், தேவாரம், வேதசாரம் எனும் இரு நூல்களையும் சம்ஸ்கிருத மூலங்களிலிருந்து தொகுத்து தமிழில் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 05. சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு சார்ந்த தொகுப்பு நூல்கள்

யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருத இலக்கியங்கள் ஏராளமாக தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவை செய்யுள்ளாகவும், உரைநடையாகவும், சாரமாகவும் தமிழுரை செய்யப்பட்டுள்ளன. செய்யுளாக மொழிபெயர்க்கப்பட்டவற்றுள் முதலிடம் பெறுவது அரசகேசரியின் இரகு வம்சமாகும். மாதகல் ஏரம்பையர் நீதிசாஸ்திரத்தை மொழிபெயர்ப்பு செய்துள்ளார். சுன்னாகம் குமாரசாமிப்புலவர் மேகதூதத்தை காரிகையாகவும், சாணக்கிய நீதியை வெண்பாவாகவும் இராமோததந்தத்தை வெண்பாவாகவும் மொழிபெயர்த்துள்ளார். தெல்லிப்பழை சதாசிவஜயர் கிருதசங்காரத்தை காவியமாகவும் நவாலியூர் சோ.நடராஜன் மேகதூதத்தை காவியமாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்த்துள்ளார்கள். இணுவில் வீரமணிஐயர் சௌந்தர்யஹரியை தமிழ் கீர்த்தனையாக மொழிபெயர்த்துள்ளார். வடமொழிப் புராணங்களை தமிழில் மொழிபெயர்த்து பாடிய வரிசையில் அளவெட்டி வைத்தியநாத முனிவர் வியாக்ரபாத மஹாத்மியத்தை வியாக்ரபாத புராணம் என்றும் ஆதிநாராயண கணேசையர் திருகோணமலை மஹாத்மியத்தை திரிகோணாசல புராணம் என்றும் ஆறுமுகநாவலர் சிதம்பர மஹாத்மியத்தை சிதம்பர புராணம் என்றும் வட்டுக்கோட்டை சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் சிவமஹாபுராணத்தை தமிழில் விருத்தமாகவும் பன்னாலை சிவானந்தையர் வியாக்கிர மஹாத்மியத்தை புலியூர்புராணம் எனவும் செய்யுள் நடையில் மொழிபெயர்த்துள்ளார். இதைவிட சிவராத்திரி, ஏகாதசி புராணங்கள் சம்ஸ்கிருத மொழியை தழுவியெழுந்துள்ளன. உரைநடையாக மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் வரிசையில் நாகநாத பிள்ளை தர்மசாஸ்திரம், பகவத்கீதை, மேகதூதம், கீதோபதேசம், சிசுபாலவதம் என்பவற்றை மொழிபெயர்த்துள்ளார். சேர்.பொன். இராமநாதன் பகவத்கீதையையும் நவாலியூர் சோ. நடராஜன் ஹிதோபதேசம், பஞ்சதந்திரம், தசகுமாரசரிதம் முதலிய பல நூல்களை மொழி பெயர்த்துள்ளார். இவை தவிர சம்ஸ்கிருத மூலநூல்களிற்கு தமிழுரை செய்யப்பட்டதுடன் சார்பான சில நூல்களும் மொழிபெயர்க்கப்பட்டன. இதனுடன் பலதுறை சார்ந்த நூல்கள் தோற்றம் பெற்றதுடன் மொழிபெயர்க்கப்பட்டன. அந்த வரிசையில்

**சமயம் :** சைவசமயத்திற்கு மூலமாக அமைபவை வேதங்களும் சிவாகமங்களும் ஆகும். இவை சம்ஸ்கிருத மொழியில் அமைந்து காணப்படுகின்றன. இவற்றிற்கு தொகுப்பு நூலாகவும் சார்பு நூல்களாகவும் இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆகம பத்ததிகள், சண்டி ஹோமம், கணபதிஹோமம், அஷ்டோத்திர திரிசதி சகஸ்ரநாம அர்ச்சனை உள்ளிட்ட நூல்கள் பல யாழ்ப்பாணத்து அறிஞர்களால் உருவாக்கப்பெற்றன.

**தர்க்கமும் அணியியலும் :** யாழ்ப்பாண சம்ஸ்கிருத அறிஞர் பலர் தர்க்கத்தினை கற்றுணர்ந் தவர்கள். சைவப்பிரகாசனம், தர்காமிருத தமிழுரை, தர்க்கிரக தீபிகை, தர்க்கசங்கிரம் உள்ளிட்ட நூல்கள் வெளிவந்துள்ளன.

**சோதிடமும் வானிடவியலும் :** சோமசன்மா செகராசசேகர மாலையையும், அராலி இராமலிங்க முனிவர் சந்தான தீபிகையையும் தோன்றியதுடன் திருக்கணித பஞ்சாங்கம், வாக்கிய பஞ்சாங்கம் என்பன யாழ்ப்பாணத்திலே தோற்றம் பெற்றுள்ளன.

**சித்த ஆயுர்வேத மருத்துவம் :** பரராஜசேகரன் மன்னனால் பரராஜசேகரம் என்ற சித்தமருத்துவ நூல் தொகுத்து வெளியிடப்பட்டது. இதுதவிர சுஸ்ருத சங்ஹிதை, அஷ்டாங்க ஹிருத்யம் முதலிய நூல்களின் சில பகுதிகளுக்கு தமிழ் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**தொகுப்பு நூல்களும் இலக்கிய வரலாறும் :** சம்ஸ்கிருத காவியமாலா, சம்ஸ்கிருத சங்கீத மஞ்சரி, சம்ஸ்கிருத நாட்டிய மஞ்சரி, சம்ஸ்கிருத சனாதன மஞ்சரி, சம்ஸ்கிருத இதிகாச மஞ்சரி, வடமொழி இலக்கிய வரலாறு (செம்மொழிக்காலம், வைதீககாலம்), சம்ஸ்கிருத இலக்கிய சிந்தனை முதலிய பல நூல்கள் யாழ்ப்பாணத்து அறிஞர்களால் எழுதப்பட்டுள்ளன. இன்றும் பல அறிஞர்கள் பல நூல்களை எழுதிவருகின்றனர்.

## சம்ஸ்கிருத கல்விப்பாரம்பரியம்

சம்ஸ்கிருத கல்வி குருகுல பாரம்பரியமாக வளர்ந்தது. அறிஞர்கள் பலரும் தமது இல்லங்களிலும் மடங்களிலும் பாடசாலைகளிலும் கல்விப் போதனைகளை நடத்தி வந்தனர். இவ்வகையில் ஆறுமுகநாவலரால் தோற்றுவிக்கப்பட்ட வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்ஸ்கிருதம் புராண இதிகாசம் ஆகமம் திருமுறை கல்விகள் போதிக்கப்பட்டன. 1842 இல் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய வடக்கு வீதியில் பிச்சுஐயரின் வீட்டிலும் திண்ணைப் பள்ளிக்கூடமாக சம்ஸ்கிருதம் கற்பிக்கப்பட்டது. திருநெல்வேலி ஞானப்பிரகாசர் இருபாலை சேனாதிராயர் நீர்வை சிவசங்கரபண்டிதர் ஆகியோர் திண்ணைப் பள்ளிக்கூடங்களை அமைத்து நடத்தினர். 1844 - 1905 காலத்தில் இணுவில் நடராஜ ஐயர் இணுவில் சைவப்பிரகாச வித்தி யாசாலையில் சம்ஸ்கிருத வகுப்புக்களை நடாத்தினார். 1870ல் கோப்பாய் சைவப்பிரகாச பாடசாலையிலும் 1881களில் அராலி சண்முகரத்தின சர்மாவினால் வண்ணையில் அமைக் கப்பட்ட பிரபோத குணோதய வித்தியாலயத்திலும் சுன்னாகம் குமாரசாமிப்புலவரால் வட்டுக் கோட்டை செமினரி பள்ளிக்கூடத்திலும் சம்ஸ்கிருதம் கற்பிக்கப்பட்டது. சுன்னாகம் குமார சாமிப்புலவரால் ஆரம்பித்த தமிழ் சங்க பரீட்சைகளிலும் சம்ஸ்கிருதம் ஒரு பாடமாக போதிக் கப்பட்டு வந்தது. 1921ல் சுன்னாகம் முகாந்திரம் சதாசிவஐயரால் ஆரம்பிக்கப்பட்ட பரமேஸ்வரா கல்லூரியிலும் சதாசிவ ஐயரால் இதே காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தி சங்கம் பிரவேச பாலபண்டித பரீட்சைகளில் சம்ஸ்கிருதம் ஒரு பாடமாக இருந்தது. சபாரத்தின ஐயரால் சாரதாபீடம் என்ற பெயரிலும், 1907-1937 காலப்பகுதியில் கரணவாய் செவ்வந்திநாத தேசிகரால் சைவ ஆராய்ச்சி என்ற அமைப்பின் மூலமாகவும் வேதாரண்யேஸ்வர வித்தியாசாலையிலும் 1929ல் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிலும் சம்ஸ்கிருதமொழி போதிக்கப்பட்டு வந்தது. 1942ல் வண்ணை வேதாகம பள்ளிக்கூடத்திலும் 1947ல் பிராமன சமாஜத்தால் நடாத்தப்பட்ட வேதாந்தியான பாடசாலையிலும் புங்குடுதீவில் நடத்தப்பட்ட வேதாகம வகுப்புக்களிலும் 1952ல் மல்லாகம் பண்டித மாணவர் கழகத்திலும் சம்ஸ்கிருத கல்வி கற்பிக்கப்பட்டது.

1953ல் சம்ஸ்கிருத மொழியின் சிறப்பான ஒரு வெளிப்பாடாக வட இலங்கை சம்ஸ்கிருத சங்கம், வடமாகாண சம்ஸ்கிருத ஆசிரியர் சங்கம் என்பன ஸ்தாபிக்கப்பட்டன. முதலாவது சம்ஸ்கிருத மாநாடு வடஇலங்கை சம்ஸ்கிருத சங்கத்தினரால் பரமேஸ்வரன் கல்லூரியில் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. 1956ல் கரவெட்டி வாணிக்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு இயங்கியது. இங்கு கற்ற மாணவர்கள் பாரதீயவித்யாபவன் அமரபாரதி ஆரியதிராவிட பாஷா அபிவிருத்தி சங்க பரீட்சைகளில் தோற்றினர். 1957-1962ல் துன்னாலை சிவதர்மவர்த்தினி என்ற அமைப்பு மூலமாகவும் சரஸ்வதி வித்தியாசாலையிலும் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலில் நடைபெற்ற பாடசாலையிலும் சம்ஸ்கிருதம் புகட்டப்பட்டது. ஏழாலை சாதுசங்க மடாலயம் ஞானோதய வித்தியாசாலை நல்லூர் ஸ்ரீகணபதிஸ்வரகுருகுலம் 1981ல் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா குருகுலம் நாயன்மார்கட்டில் அமைந்த ஸ்ரீதேவி குருகுலம் நல்லூரில் 1980களில் பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்களால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீவித்தியாகுருகுலம் திருக்கேதீஸ் வரம் சிவானந்தகுருகுலம் என்பவற்றின் மூலம் சம்ஸ்கிருதம் பயிற்றப்பட்டது. நல்லூர் கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஸ்ரீகணபதீஸ்வரகுருகுலம் ஸ்ரீலங்கா குருப்பிரம்ம வித்யார்த்தசபை சிவானந்த குருகுலம் மூலமாக சம்ஸ்கிருத கல்வியை வளர்த்தார். 1994ல் யாழ் பரமேஸ்வரா கல்லூரி இயக்குனர் சபையால் சேர்.பொன்.இராமநாதன் நிதியத்தின் மூலமாக யாழ் பல்கலைக் கழக பரமேஸ்வரன் ஆலயத்தினை மையமாகக் கொண்டு பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ணஐயர் தலைமையில் நிறுவப்பட்ட சேர்.பொன்.இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம் என்பன சம்ஸ்கிருத கல்வியை போதித்து வருகின்றன. இணுவில் தா.மகாதேவக்குருக்களால் நடாத் தப்படும் தர்மசாஸ்தா குருகுலம் சம்ஸ்கிருதத்தை வளர்த்து வருகிறது. இவை தவிர ப.சர்வேஸ் வரஐயர், மட்டுவில் கி.சதாசிவசர்மா மாவை சுந்தரமூர்த்திக்குருக்கள், திரு.எஸ். செல்வரட்ணம் போன்றோரும் சம்ஸ்கிருத கல்வியை வளர்த்து வருகின்றனர். நியந்திரி அமைப்பும் சம்ஸ்கிருத கல்விக்கு ஊக்கமளித்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து நோக்குகையில் பல பாடசாலைகளில் க.பொ.த.உயர்தரத்தில் ஒரு நெறியாகவும் யாழ் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதம் ஒரு பாடமாகவும் கற்பிக்கப்பட்டு வருகிறது. பல்கலைக்கழக ஆரம்பம் தொட்டு இன்றுவரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருத துறையானது ஒரு சிறந்த துறையாக மிளிர்ந்து வருகின்றது.

## நிறைவுரை

தொகுத்து நோக்கம் போது யாழ்ப்பாணத்திலே வடமொழிக் கல்வி தமிழோடு இணைந்ததாகவே வளர்ச்சி பெற்றுள்ள அதேவேளை அரச ஆதரவையும் பெற்றிருந்தது எனக் கொள்ளலாம். அரச ஆதரவோடு தமிழ் வளர்த்தவேளை அதனூடே வடமொழியும் வளர்ந்தது. இவ்வாறு வளர்ச்சி கண்ட வடமொழி பின் திண்ணைப் பள்ளிகளை தம் வளர்ப்பிடமாகக் கொண்டன. யாழ்ப்பாணத்திலே வடமொழிக்கல்வி பாரம்பரியமுறையிலே வளர்ந்து வந்தாலும் கல்வி மனித மேம்பாட்டுக்கு உதவும் என்ற கருத்திய தளமும், செய்யம் தொழில்களை வளம்படுத்தும் என்ற நடைமுறைத் தளமும் சமூகத்தில் வேர் பதிக்கக்கூடியதாக இருந்தது. அக்காலங்களில் தமிழகத்தைப் போன்று இங்கு நிலவிய தமிழ்க்கல்விப் பாரம்பரியத்தில் சம்ஸ்கிருதத்திற்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டு வந்துள்ளது. கி.பி.18ம், 19ம் நூற்றாண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருத மொழியில் அறிஞர்கள் காலம் தோறும் கல்வி, சமயம், பண்பாடு ஆகியவற்றிற்கும் இலக்கிய பரப்பிற்கும் தங்களாலான பங்களிப்புக்களை மேற்கொண்டு இருக்கின்றனர். இக்காலச் சூழலில் யாழ்ப்பாண கல்விப் பாரம்பரியத்தில் சம்ஸ்கிருத மொழியானது சிறப்பாக வளர்ச்சியடைந்து சம்ஸ்கிருத இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றன.

### உசாத்தணை நூல்கள்


1. பத்மநாதன்.சி, (2005), இலங்கையில் இந்து சமயம், குமரன் புத்தக நிலையம்.
2. நீலகண்டசாஸ்திரி.A.K. (1979), தென்னிந்திய வரலாறு, 2ம் பகுதி, தமிழாக்கம் பெருமாள் முதலியார், மு.ரா.தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், சென்னை.
3. சிவவாமி.வி, (1989), சம்ஸ்கிருத இலக்கிய சிந்தனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
4. நடராசன்.சே,(1964), வடமொழி இலக்கிய வரலாறு செம்மொழிக் காலம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.5. பத்மநாபன்.ச.(பதிப்பாசிரியர்), (2014), ஸ்ரீ கிருஷ்ணானந்த சிந்தனைகள், நியந்த்ரீ, சிவன் கோயில் நல்லூர், யாழ்ப்பாணம்.
6. இலங்கையில் கல்வி (நூற்றாண்டு விழா மலர்), பகுதி i-iv, (1969), கலாசார அமைச்சின் வெளியீடு, கொழும்பு.
7. Pannasara.D,(1958), Sanskrit literature Extant Among the Sinhalese and the on sinhalese, Colombo.
8. Sivasamy.v,(1992), The Sanskrit Tradition of the Sri Lankan tamils-A Historyical perspective, lady leelavathy Ramanathan memorial lecture.
9. சிற்றம்பலம்.சி.க. (1976), இலங்கையில் ஆதிப்பிராமிக்கல்வெட்டுக்கள் காட்டும் இந்துமதம், (மறுபிரசுரம்) சிந்தனை, தொகுதி ஐஇ இதழ் 2 சித்திரை.
10. சதாசிவம்பிள்ளை.அ.(1979), பாவலர் சரித்திர தீபகம், பகுதி 2, கொழும்பு தமிழ்ச்சங்கம்.
11. சதாசிவம்பிள்ளை.அ.(1975), பாவலர் சரித்திர தீபகம், பகுதி 1, கொழும்பு தமிழ்ச்சங்கம்.
12. அப்புத்துரை.சி.(2008), இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்து தமிழ் புவலர் வரலாறு, இரண்டாம் பாகம், தெல்லிப்பழை கலை இலக்கிய கழகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TOPAZ Mall




திருமண பட்டுப்புடவைகள், பட்டு வேஷ்டிகள், மற்றும் புத்தம் புதிய பஞ்சாபி வகைகள், சோளி ஷிட் வகைகள், சீகுயின்ஸ் புடவைகள், புதிய வகையான புடவைகள் மற்றும் சிறுவர்களுக்கான கோட், சூட், சர்ட், சர்வாணி வகைகள்



**No: 195,**
**Power House Road,**
**Jaffna.**

**Tel: 021 222 4933,**
**021 300 3163.**

# NORTHERN TIBER DEALERS



No. 11, Manipay Road,
Jaffna.
**Tel: 0773868675**
**0773944848**
**0777221647**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FLi

# Future Life
Investments Limited

## Giving Life to your Future

136/B, Jaya Mawatha, Kadawatha. + 94 114 238 323
info@futurelifeinvestments.lk www.fli.lk

**Branchs:** Bakamuna | Chilaw | Divulapitiya | Gampaha | Hingurakgoda | Ja-ela | Jaffna | Kadawatha | Kaduwela | Kandy | Kegalle | Kiribathgoda Kuliyapitiya | Melsiripura | Minuwangoda | Nuwara Eliya | Negombo | Nikaweratiya | Polonnaruwa | Puttalam | Wennappuwa.

Director
S. T. MOORTHY
077 6141 374

# திவ்ய மஹால்
Thiveya Mahal

Wedding | Puberty Ceremony | Reception
Birthday Party | Conference | Catering Services


No.1001, Vannarpannai,
K.K.S. Road, Jaffna.
021 222 1022

இல. 1001, வண்ணார்பண்ணை,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
077 614 1374

For Your Occasions



# ஸ்ரீ விநாயகர் பென்சி ஹவுஸ்
SRI VINAYAHAR FANCY HOUSE



245, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
077 486 8104

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ISBN 978-624-607-400-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org